

கண்ணனின் காதல் ஓவியம்

புலிப்பாணி
சுந்தரவரதாச்சாரியார்



ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு 3-7-1930. கல்லூரி வழி அன்றி மரபு வழி இளமையிலிருந்தே வந்த கற்றுத் துறை போகிய தமிழ்ப் புலமை; ஹிந்தி முதுநிலை அளவுப் பட்டம் (M.A. க்கு நிகர்) ஆங்கிலப் புலமை; நடைத்திறன்.

பொறியியல் தேர்ந்து இரயில்வே தொழிற்சாலைப் பொறியியல் நுணுக்கப் பணியாளனாகப் பணி செய்து (Technical Assistant) 1989-ல் ஓய்வு பெற்றவர்.

ஜோதிடம், அதைச் சார்ந்த கலைகள் Tarot Card Reading, Chinese Astrology, Lehing என்னும் சீன ஆரூடம், மேலை நாட்டு ஜோதிட நூற்புலமை: இவை தனித்தகுதி.

பஞ்ச பட்சி, சரம் போன்ற தமிழ்ச் சித்தர் நூல்களில் தேர்ச்சி. 14 சுவடிகளை ஆய்ந்து 'பஞ்ச பட்சி சாத்திரம்' என்ற பெரு நூல் தஞ்சை சரஸ்வதி மஹாலுக்கு எழுதி வெளியிட்டவர்.

சைவ, வைணவ, சைன, பௌத்த சித்தாந்தத் தேர்ச்சி, தெலுங்கு, மராத்தி பயிற்சியும் உண்டு. வடமொழியில் சிறப்புத் தேர்ச்சி உண்டு.

வைணவ வடகலை அந்தணராயினும் சித்தர் மரபு பற்றி அந்தணரல்லாத தச்சரான ஆசானைச் சார்ந்து சித்தர் வழக்காற்று ஒழுகலாற்று முறைகளைக் கற்றுத் தேர்ந்து போகரின் சீடர் புலிப்பாணி சித்தரின் பெயரையே தம் புனைப் பெயராகக் கொண்டவர்.

முல்லை நிலையம்

சென்னை

கண்ணனின் காதல் ஓவியம்

[பிஹாரிலாலின் 'சத்சயீ' எனும் இந்தி நூலின் தமிழாக்கம்]

பன்மொழிப் புலவர்
டாக்டர் 'புலிப்பாணி' சுந்தரவரதாச்சாரியார்

முல்லை நிலையம்
சென்னை

முல்லை நிலையம்
43, புதுத்தெரு, மண்ணடி,
சென்னை-600 001

முதல் பதிப்பு : டிசம்பர், 1992

முல்லை—30

நூல் பற்றிய விவரங்கள்

நூல் பெயர் : கண்ணனின் காதல் ஓவியம்

ஆசிரியர் : டாக்டர் ‘புலிப்பாணி’
சுந்தரவரதாச்சாரியார்

பதிப்புரிமை : முல்லை நிலையம்

தாள் : வெள்ளைத்தாள் 11.6 கி. கி.

நூலின் அளவு : 18.5 செ. மீ. × 12.5 செ. மீ.

பக்கங்கள் : 280

வெளியிடுவோர் : முல்லை நிலையம்
: 43, புதுத்தெரு, மண்ணடி,
சென்னை-1.

விற்பனை உரிமை : பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-108

பொருள் : அகத்துறை இலக்கியம்

அச்சிட்டோர் : ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்,
7/40, கிழக்கு செட்டி தெரு,
பரங்கியமலை, சென்னை-16.

விலை : ரூ. 35-00

பதிப்புரை

'கண்ணனின் காதல் ஓவியம்' எனும் இந்நூல் பிஹாரிலாலின் சத்சயீ எனும் நூலின் மொழியாக்கம். இந்நூலின் தனிச்சிறப்பு, தமிழ் மக்களின் இயல்புக்கேற்ற வாறு எளிமையாக இனிமையாகப் புரிந்து கொள்ளும் வண்ணம் கவிநயம் குன்றாமல் ஆசிரியரால் மொழி யாக்கம் செய்யப்பட்டுள்ளதேயாகும்.

வடநாட்டில் இராதைக்குத் தருவதுபோல் அதிக முக்கியத்துவம் தமிழ் நாட்டில் இராதைக்குத் தரப்படு வதில்லை. அக்குறையை நீக்கக் கருதியே இந்நூல் வெளி யிடப்படுகிறது இந்நூலில் இராதையும், கோபியரும் கண்ணன் மேல் கொண்டுள்ள அன்பையும், பக்தியையும் காதலையும், வேட்கையையும் ஆசிரியர் தன் இனிய கவிதைகளால் எழிலுற விளக்கியுள்ளார்.

இந்நூல் ஆசிரியர் புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியார் அவர்கள் பன்மொழிப் புலவர். இந்தியில் முதுகலைப் பட்டம் பெற்றவர். ஜோதிட விற்பன்னர். பல நூல்களை எழுதியவர். அவருடைய நீண்ட கால உழைப்பே இந்நூல் உருவாகக் காரணமாயிற்று.

இந்நூலை வெளியிட அனுமதி அளித்த அவருக்கும், அழகுற அமைத்துக் கொடுத்த பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கும், அச்சிட்ட ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகத்தாருக்கும் சிறந்த முகப்போவியம் வரைந்த ஓவியர் கண்ணுசாமிக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முல்லை நிலையத்தார்

பொருளடக்கம்

ஆசிரியர் முன்னுரை

திருவருள் பணி கொள்ளும் திறம் நமக்குப் புரியாதது. சென்னைப் புத்தகப் பொருட்காட்சிக்குத் தவறாது நான் செல்லும் போதெல்லாம் பாரி நிலையம் சென்று ஏதாவது நூல் வாங்காது வரமாட்டேன். அடிக்கடி நான் வந்துபோன அளவில், என் புலமையைப் புரிந்து கொண்ட திருமனச் செம்மல் திரு. அமர்ஜோதி அவர்கள், என்னிடம் பன்னாளும் உரையாடுவர். ஓரளவுக்கு நெருக்கம் ஏற்பட்டபின் நான் பன்மொழிப் பயிற்சி உடையவன் என்பதறிந்த அவர், நல்ல இந்தி இலக்கியம் ஒன்றைத் தமிழ்ப்படுத்தித் தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். என்னைக் காணும் போதெல்லாம் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார். நான் தஞ்சை சரஸ்வதி மஹாலுக்கு ஜோதிட இயலைச் சார்ந்த தமிழ்ச் சித்தர்களின் ''பஞ்சபட்சி சாத்திரம்'' என்னும் பெருநூல் ஆய்வுப் பதிப்பில் ஈடுபட்டிருந்ததால் இப் பணி தொடங்க இயலாமல் இருந்தது. அது முடிந்தபின், அவர் வேண்டுதல் தொடர்ந்தது. அவர் அன்புக் கட்டளையையும் அன்னாரின் தந்தையார் திருநிறை நாட் செல்வர் க. அ. செல்லப்பனார் அவர்களின் நல்லாசியையும் மீற இயலாமல் இப் பணியை ஒருவாறு தொடங்கி முடித்தேன்.

நான் தமிழில் கற்றுத்துறைபோகிய மரபு வழிப் புலவன். கம்பனும் வள்ளுவனும் இளங்கோவனும் காளமேகமும் எங்குப் பட்டம் பெற்றனரோ, அங்கே அவர் விட்டுச் சென்ற எச்சிலை நச்சிப் புலவனானவன். இதைச் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

நான் 4-ம் படிவத்தில் (9-ம் வகுப்பு) அடி எடுத்து வைத்தபோது, அன்றே புதிதாக நான் படித்த பள்ளிக்குத் தமிழாசிரியராக வந்த அண்மையில் நம்மை விட்டுப் பிரிந்த இலக்கணத் தாத்தா என்று எல்லாராலும் போற்றப் பட்ட மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள், என்னை நளவெண்பா ஒப்புவிக்கச் சொல்ல, நான் வெண்பாவைச் செப்பலோசையுடன் பாடிக் காட்ட, மற்ற மாண

வர்கள் ஏளனம் செய்தனர். பிள்ளை அவர்கள் மிகவும் மகிழ்ந்து, மற்றவர்களை அடக்கி, ''பிள்ளாய் உங்களுக்குச் செப்பலோசை அமைந்துள்ளது; பெரும் புலவராவீர்; ஏளனத்திற்கு மனம் வருந்த வேண்டாம்'' என்று உவந்து வாழ்த்தினார். எனக்கு வயது 14, அந்த இளவயதில் அவர் வாழ்த்துப் பெற்ற நான் புண்ணியவானே. அப் பொழுதே சிறுவரையும் மரியாதையுடன் அழைக்கும் வழக்கம் அவருக்குண்டு. ஆனால் என் வினை இன்மை யால் அவ்வாண்டே எம் பள்ளியை விட்டு அவர் சென்று விட்டார். நான் படித்துத் தொழில் நுணுக்கப் பணியில் இரயில்வேயில் சேர்ந்துவிட்டேன். ஆனால் புலமைப் பயிற்சி மட்டும் என்னளவில் படிந்தது. ஆர்வத்துடன் இலக்கண இலக்கியங்களைக் கற்று மகிழ்ந்து வந்தேன்.

அதன் பின் அப் பெரியாருடன் பழகும் வாய்ப்பு ஏற் படாவிட்டாலும் அவர் உரை உள்ளத்தில் ஒளி காட்டி என்னைப் புலவனாக்கி விட்டது. என் பள்ளியின் மற் றொரு தமிழாசிரியர். திரு. சொக்கலிங்கனாரும், என் தாய் மாமன் அவர்களும் என் தமிழ்க் கல்விக்கு ஊக்கமளித் தனர் இன்று என் கவிதை நூல் வெளி வரும் போது அவர்கள் இல்லை. பனிக்கும் கண்களுடன் அவர்களைத் திக்கு நோக்கித் தொழுது மனம் நிறைவு பெறுகிறேன்.

அடுத்து எனக்குச் சித்தர் மரபிலும், தமிழிலும், ஜோதிடத்திலும் மேலும் அறிவு புகட்டி, ஞானாசிரியராக அமைந்து கைகாட்டி விட்ட என் ஆசிரியப் பிரான் மகா வித்துவான் திரு. குப்புசாமி ஆச்சாரியார் இணையடிகளில் இந் நூலை வைத்து தொழுவதன்றிக் கைமாறறியேன்.

இவர் இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழ்த் தாத்தாவின் சமகாலத்தவராகச் சென்னையில் வேதாந்த போதகாசிரியராகப் பெயர் பெற்று வாழ்ந்த தமிழ் ஆசிரி யரும், திரு துரையரங்கனார், தெ.பொ.மீ., இராமலிங்கத் தம்பிரான் ஆகியோர்க்கு ஆசிரியருமாகத் திகழ்ந்த திரு. கோ. வடிவேல் செட்டியாரின் மேற்பட்டவர்களின்

ஒரு சாலை மாணாக்கராகத் திகழ்ந்து, இடையில் தச்சுத் தொழிலை மேற்கொண்டவர். எனவே எனக்கு மரபு வழி ஆசிரிய வழித்தொடர் பெருமைப்பட சொல்லிக் கொள்ளும் அளவுக்கு அமைந்து விட்டது என் நல் வினையே.

மரபு வழித் தேர்ந்த புலமையால், கவிதைப் பண்பால் என் உள்ளம் செம்பாகம் பெற்றதால் ஹிந்தியின் மூல நூலின் 700 கவிதைகளில் 502 மட்டும் தேர்ந்து, பெரிதும் மூலத்தின் உருவ எழிலும் சுவையும் குறையாது, அதே போல் பெரும்பாலும் அறுசீர்ச் சந்த ஆசிரியாப்பாவில், ஈரடிப் பாடல்களாக வடிக்க முடிந்தது. இக் கவிதைகள் கிளர்ச்சியையும் உணர்வுப் பொழிவையும் கற்போர் உள்ளத்தில் ஏற்படுத்தினால் அதுவே நான் பெறும் நிறைவாகும். வழிநூல் என்ற உணர்வு தோன்றாமல் இது முதல் நூல் சுவையுடனேயே இருப்பதைக் கற்போர் உணர்வர்.

கடைசியில் மேற்கண்ட பெருமக்கள் யாவருக்கும் என் நன்றியும் வணக்கமும்

என் போன்ற கூழாங்கல்லை இனங்கண்டு, பெரும் புலவர்களை அறிமுகப்படுத்திய கைவினைத் திறனால் பட்டை தீட்டி உலகுக்களித்தும் பாரி நிலையம் திரு. அமர் ஜோதி அவர்களுக்கும் அவர் திருத் தந்தையார் க. அ செல்லப்பனார் அவர்களுக்கும் என் நன்றியும் வணக்கமும்.

குற்றங்கள் நீக்கிக் குணம்கண்டு வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

10, ஆர்டிசான்
சண்முகம் தெரு,
அயன்புரம்,
சென்னை-600 023.

ஜ்யோதிஷ வாசஸ் பதி
திருமலை நல்லான் சக்கரவர்த்தி
Dr. புலிப்பாணி
சுந்தரவரதாச்சாரியார்

ஆராய்ச்சி முன்னுரை

1. புகுமுகம்

இலக்கியம்

வாழ்க்கை என்பது மனிதனின் அடிப்படை உணர்வுகளின் நிறைவு பெறுதலிலேயே முழுமை அடைகிறது. வாழ்க்கையின் குறை நிறைகளை இயல்பான முறையில் படம்பிடித்துக் காட்டி, அது எப்படி இருந்தால் முழுமை பெறும் என்று வழி முறைகளையும் கூறி, கற்பார்க்கு அதே உணர்வுகளை எழுப்பி மன நிறைவை அளிப்பதே உண்மையான இலக்கியமாகும்.

இவ்வகையில் உலகமொழிகள் அனைத்திலுமே உயர்ந்த இலக்கியங்கள் தோன்றி இருந்தாலும், தமிழ் இலக்கியங்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. மிகப் பழையதாயினும் இன்றும் வழக்கொழியாமல் புதுமைப்பொலிவுடன் விளங்குவது. காலவேறுபாட்டால் அந்த அந்த நாடுகளின் மொழிகளிலும் வரலாற்றுப் பாதிப்புகள் அதிகமாக ஏற்பட்டிருக்க, தமிழ் நாட்டின் அமைப்பு காரணமாக, தமிழ் தோன்றி ஏறக்குறைய இன்று வரை 6000 ஆண்டுகள் வரையுள்ள காலப்பகுதியில், ஒரு ஆற்றொழுக்கான உயர்ந்த பாதிப்பில்லாத இலக்கியப் பாரம்பரியம் தமிழுக்கு உண்டு. சங்ககாலம் முதல் 500 ஆண்டுகள் முன்வரை அகவல், விருத்தம், பல்வகைச்சந்தம், யாப்பு வடிவங்கள் என்று அமைப்புகள் ஏற்படினும், அவற்றினூடே ஒரு பொதுத் தொன்மை, புதுமை, எல்லாக் காலத்தும் உய்த்துணரக்கூடிய எளிமை எல்லாம் தமிழ் இலக்கியத்திற்கு உண்டு. ஏன் பாரதி புதுமைக்கும் பழமைக்கும் பாலமாக அமைத்திருக்க, இன்றுள்ள புதுக்

கவிதைப் பாணி நெஞ்சில் நிலைகொள்ளாமல் தவித்தாலும் கருத்துச் செறிவில் கண்ணாய் இருப்பனவாம்.

இந்த வாய்ப்பு வடநாட்டு மொழியான ஹிந்திக்குக் கிடைக்கவில்லை. முதலில் வைதீக வடமொழி, அதன்பின் செப்பம் செய்யப்பெற்ற கடின இலக்கண வரம்பு பெற்ற வடமொழி (சம்ஸ்க்ருதம்), இது மக்கள் மனத்தில் நிலை கொள்ளாதபோது மக்கள் மொழியாகிய பிராக்ருதம் என்பவை முக்கியமானவை. பின்னைய மொழியும் இலக்கண விதிகளால் கடினமாகும்போது வழக்கொழிய, வெளிநாட்டினர் படையெடுப்பு முதலியவற்றால் அங்கங்கே உள்ள மொழி இணைந்து, ''அபப்பிரம்சம்'' எனப் பல மொழிகள் மாநிலங்களில் தோன்றின. இந்தக் கலப்புகளே ராஜஸ்தானி, புந்தேல்கண்டி, சத்தீஸ்கடி, மாகதி, அர்த்த மாகதி, அவதி, விரஜ பாஷை என்பவைகளே இன்றுள்ள ஹிந்தியின் முன்னோடிகள் என்னலாம். இவற்றில் தனித் தனி இலக்கியங்கள் தோன்றியுள்ள போதிலும்எல்லாமே ஹிந்தியின் மொழிவடிவங்களே, இவை ''ப்ராசீன்'' (பழைய) ஹிந்தி என்று ஒட்டு மொத்தமாகப் பெயர் பெற்றன.

இஸ்லாமியர் தாங்கள் வந்து குடி புகுந்த நாட்டு மக்களின் அமைப்பையும் தங்கள் அரபு மொழியின் மூலத்தையும் கலந்து ஒரு பாசறை மொழியாக 'உருது' என்ற மொழியை உருவாக்கினர். இதனுடன் 'பிராசீன்' என்ற முன்னர்ச் சொன்ன மொழிகளின் இணைப்பால் தேசிய மொழியாக இன்று உருவாகியுள்ள 'கடிபோலி' என்ற ஹிந்தி அமைந்துள்ளது.

ராஜபுத்திரர்கள் மீது படை யெடுப்பு ஏற்பட்டபோது, வீரத்தையே காட்டும் இலக்கியங்கள் படைக்க வேண்டிய தாயிற்று.

மற்ற இடங்களில் அயோத்தியிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் தனித்தன்மை பெற்று 'அவதி'

என்ற ஹிந்தியின் வடிவம் ஏற்பட்டது. இதில்தான் துளசிதாசரின் இராமாயணமான 'ராம சரித மானம்' அமைந்தது.

கோகுலம், மதுரா போன்ற கிழக்குப்பகுதி வட நாட்டில் 'விரஜ பாஷை' என்ற ஹிந்தி வடிவம் ஏற்பட்டது. அந்த மாநிலப்பகுதிகளே 'வ்ரஜதேசம்' என்று வழங்கியதால் இதன் பெயரும் 'வ்ரஜபாஷை' ஆயிற்று. இதில்தான் 'சூர்தாஸரின்' 'சூர்சாகர்' என்ற இலக்கியம் ஏற்பட்டது. ராஜஸ்தானி சம்பந்தப் பட்ட இலக்கியம் 'வீரகாதா' என்றும், 'அவதி' சம்பந்தப்பட்ட இலக்கியம் 'ராமபக்தி இலக்கியம்' என்றும் பெயர் வழங்கின. இந்தக் கால எல்லைக்குள் படையெடுப்புகள் எல்லாம் முடிந்து, முஸ்லீம் பேரரசு ஏற்பட்டு, அமைதியும் ஏற்பட்டதால் அங்கங்கே உள்ள சிற்றரசர்கள் உள்ள நிறைவுக்காக மிகுதியும் 'இன்பச் சுவை' அதாவது 'சிருங்காரம்' உள்ள கவிதைகளைக் காவியமாகப் படைத்தனர். இதற்கு 'ரீதி' இலக்கிய காலம் என வழங்கப்பட்டது. நாம் மொழிபெயர்க்க எடுத்துக்கொண்ட நூலின் ஆசிரியரான 'பிஹாரிலால்' என்பவரும் 'ரீதி' கால இலக்கியக் கவியே யாவர். இன்பச் சுவையைப் பெரிதும் குழைத்துக் கற்போர்க்குக் காதலை, மேல் நிலை உணர்வுகளை ஏற்படுத்தும் 700 கவிதைகளில் தொகுத்தளித்த இவர்தம் நூலே முழுவதும் காதல் சுவை கொண்ட 'பிஹாரி சத்சயீ' என்பதாகும். இதன் மொழி முன்சொன்ன மதுரா, கோகுலம், விருந்தாவனம் போன்ற வடகிழக்கு இந்தியப் பகுதி மொழியான விரஜ பாஷை யாகும். நம் புலவரும் 'மதுரா'விலும் சுற்றியுள்ள மாநிலங்களிலும் பெரிதும் வாழ்ந்தவர் ஆதலால் இம் மொழியில் இவருக்கு இயல்பான, ஆனால் மிக உயர்ந்த புலமை ஏற்பட்டது.

தமிழன் வாழ்க்கையை அகம் புறம் என்று பிரித்து, காதலை அகமாக்கியும், வெளி வாழ்க்கையைப் புறம்

என்றும் வகைபடுத்தி இலக்கியம் படைத்தான். இலக்கணமும் அப்படியே அமைந்தது. இதில் தொல்காப்பியம் தலைசிறந்து விளங்குவதாகும். சங்க இலக்கியங்கள் இந்த வகையிலேயே அமைந்தன.

காதலின் உள்ளுணர்வுகளுக்கேற்ப உளவியல்படி ஐந்து நிலப்பகுதிகளில், அவை குறிஞ்சியில் சேர்தல், மருதத்தில் ஊடுதல் அல்லது காதலில் தோன்றும் நயமான பிணக்குகள், முல்லையில் பிரிந்த கணவனை எதிர்பார்த்திருத்தல், நெய்தலில் அவன் பிரிவுக்காக இரங்குதல், பாலையில் அவன் பிரிவே பெரிதாக வருந்து தல் எனக் காதலை முன்வைத்து, காமத்தை அதைத் தூண்டும் கருவியாகப் பின்னணியில் வைத்து. இயற்கை இன்ப இலக்கியம் தமிழுக்கு ஏற்பட்டது. வாழ்க்கையில் எல்லா மக்களுக்கும் மேற்கண்ட காதற்கூறு உணர்வுகள் எல்லாமும் வெவ்வேறு நிலைகளில் ஏற்படத்தான் செய்கின்றன. ஆனால் இலக்கிய வரம்பு அப்படியேதான் உள்ளது.

ஆனால் வடபுலத்தில் மேற்கண்ட உணர்வுகள் மனித இனத்திற்கே அவை பொதுவாதலால், எல்லாம் அமைந் தாலும் அக இலக்கிய வரம்பு அவர்களுக்கு ஏற்பட வில்லை. மாறாக அதற்கு 'சிருங்கார ரசம்'-இன்பச் சுவை என்று பெயர் ஏற்பட்டு, சேர்தல், பிரிதல், வருந்து தல் எல்லாம் உட்கொண்டு, பெரும்பாலும் காமத்தை முன் வைத்துக் காதலைப் பின்னணியில் வைத்துச் செய்யப் பட்டவை அவர்கள் இலக்கியங்களாகும். இவ்வகையில் வந்ததே 'பிஹாரி சத்சயீ' என்பது இவர் இருந்து வாழ்ந்த நிலப்பகுதியும், மொழியும் ராதை - கண்ணன் இவர்கள் சம்பந்தப்பட்டவை எனவே இவர் கவிதை களில் அவர்களே பெரும்பாலும் நாயகர் நாயகியர்களாக வருகின்றனர். இடைச்சேரி, இடைப்பெண்கள், பால், தயிர், யமுனை, கோகுலம் போன்ற கண்ணன் கதைப் பின்னணிகளிலேயே கவிதைகள் உதிர்கின்றன.

நூலைப் பற்றியும் நூலாசிரியரைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு முன், இதில் வரும் முக்கிய கதாநாயகியான ராதையைப் பற்றிச் சிறிது கூறவேண்டி யுள்ளது. கண்ணனைத்தான் எல்லோருக்கும் தெரியுமே!

ராதை நந்தகோபனின் தங்கை முறை என்றும், இதனாலேயே இவள் நப்பின்னை அல்லது பின்னை என்று வழங்கப்பட்டதாகவும் சொல்லப் படுகிறது. பொதுவாக இவள் கிருஷ்ணனின் காதலி என்றும், 'விருஷபானு' என்ற இடைக்குலத்தவரின் பெண் என்றும், அதிரதனான சூதன் என்ற தேரோட்டியின் மனைவியாகி, பிற்காலத்தில் கர்ணனை வளர்த்தவள் என்றும் கர்ண பரம்பரையில் சொல்லப்படுகிறது.

சைதன்யர் கொள்கைக்கும் வல்லபாசார்யர் கொள்கைக்கும் மூலக்கதை இதிகாசமான 'கர்க' சம்மிதை யில் ராதையின் நிலை வருமாறு :

ராதை 'கோலோகம்' என்ற (ஹரே க்ருஷ்ண மதத் தின் கொள்கைப்படி அவர்களின்) வைகுண்டத்திலிருந்து விஷ்ணுவின் பராசக்தியே (லக்ஷ்மியே). கோகுலத்தின் அருகில் உள்ள நகரில் பூர்வ ஜென்மத்தில் 'சுசந்திரன்' என்று வழங்கிய தெய்வீக அம்சம் கொண்டவர் 'விருஷ பானு' என்ற பெயரில் பிறந்தார் என்றும்—அதே போன்று பூர்வ ஜென்மத்தில் தெய்வாம்சம் பொருந்திய 'கலாவதி' என்பவள் இப்பொழுது கன்யா குப்ஜத்தில் 'கீர்த்தி' என்ற பெண்ணாகப் பிறந்தாள் என்றும்— இவர்கள் திருமணத்தை நந்தகோபன் முன்னிருந்து நடத்த, இவர்களுக்குப் பராசக்தி ராதையாகப் பிறந்தாள் என்றும் (கண்ணன் பிறப்பதற்குப் பல வருஷம் முன்னால்) கூறப்படும்.

கண்ணன் பிறந்தபின் குழந்தைக் கண்ணனை, யமுனைக் கரையோரம் எடுத்துச் சென்றார் நந்தன். புயலும் காற்றும் பலமாக அடிக்கவே குழந்தையைக்

காப்பாற்ற நந்தன் சிரமப்பட்டார். அப்போது ராதை பருவப் பெண்ணாக வந்து கண்ணனைத் தான் பத்திரமாகக் கொண்டு தருவதாகச் சொல்லி எடுத்துச் செல்கிறாள். கண்ணன் ராதையின் புண்ணியத்தால் காளைப்பருவமுள்ளவனாகிறான். 'பாண்டீரே வனம்' என்ற பகுதியில், பிரம்மன் முன்னிலையில் அவர்கள் திருமணம் நடக்கிறது. அதன்பின் ராதை கண்ணனை மீண்டும் குழந்தையாக்கி யசோதையிடம் சேர்ப்பிக்கின்றாள்.

கண்ணன் மீண்டும் இளைஞன் ஆனபின் அவளை மணந்து கொள்ளுகின்றான். இது அவர்கள் காட்டுவது.

இந்தக் குழப்பம் எதுவுமே இல்லாமல் தமிழில் வரதராஜர் என்பார் தாம் பாடிய பாகவதத்தில் இந்த இராதை என்பவளை நப்பின்னை என்ற பாத்திரமாகவே படைக்கிறார். அவர் பாகவதப்படியான வரலாறு வருமாறு :

மிதிலை என்னும் பட்டணத்தில் யசோதையின் அண்ணன் 'கும்பகன்' ஆண்டு வந்தான். இவனுக்குத் திருமகள் நப்பின்னை என்ற பெயருடன் தோன்றினாள். பாற்கடலைக் கடைந்த போது மூதேவிக்குப் பின்னால் தோன்றயதால் இவள் 'பின்னை', பின்னால் தோன்றியவள் ஆனாள். கும்பகனும் இடை வகுப்பைச் சேர்ந்தவனே. இவன் மாட்டுத் தொழுவத்தில் ஏழு அசுரர்கள் அடங்காக் காளைகளாகத் தோன்றினர். யாராலும் அடக்கமுடியவில்லை. வீரர்களை எல்லாம் கொன்றன. அவர் தவித்தார், கண்ணன் ஒரு சமயம் அங்குச் சென்ற போது அவற்றைக் கண்டு, தன் திறமையால் 'ஏறுதழுவி' அடக்கினான். அதனால் பரிசாக ராதையான நப்பின்னையைக் கண்ணனுக்குத் திருமணம் செய்து தருகிறான் கும்பகன். அவர்கள் பிரியாகக்காதலராகின்றனர். தமிழ் மரபுக்குத் தகவும், ஆழ்வார்கள் 'நப்பின்னை நங்காய்', 'திருவே துயிலெழாய்' என்று

பலபடியாகப்பாடினர். நப்பின்னையை அழகாகவும் ஏற்றமாகவும் வரதராஜர் தம் பாகவதத்தில் படைத்தார். மூல பாகவதத்தில் ராதையைப்பற்றி எதுவும் பேசப்படாமையால், மற்றச் செய்திகளுக் காதார மின்மையால் நாகரிக வரம்பு கடவாத ஆதாரமான இந்த இராதையையே நாம் எடுத்துக் கொள்ளலாம்.

''விலைவேண்டார் எம்மினத் தாயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம் வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்''

என்ற முல்லைக்கலிப் பாடலில் முல்லைத் திணை ஒழுக்கமான 'ஏறு தழுவலை' வைத்து, ''கொலையினும் கொடிய காளைகளின் கொம்புகளின் மேல், அவற்றையே எம் இன்பம் செய்யும் கொங்கைகளாக எண்ணி யார் பாய்ந்து அடக்குவாரோ அவர்க்கே நாங்கள் உரியவர். எங்களுக்கு வேறு விலை வேண்டாம்'' என்று வீரம் பேசிய தமிழ் மகளின் ஒழுக்கத்தின் அடிப்படையாக வைத்து, வரதராஜர் ராதையைப் படைத்ததால் அதையே நாம் ஏற்றுக் கொள்வோம்.

2. ஆசிரியர் வரலாறு

இனி இந்த ''பிஹாரி சத்சயி'' காவியம் பாடிய 'பிஹாரி லால்' என்ற அமர கவியின் வரலாறு :

இவர் வடநாட்டுக் குவாலியரில் கி. பி. 1595-ல் 'கரவாரி மதுரா செளபே' என்ற அந்தண உபவகுப்பில் பிறந்து, தந்தையிடம் கல்வி கற்றுச் சிறந்த புலவரானார். முகலாயப் பேரரசு 'ஷாஹ்ஜஹானின்' தொடர்பு ஏற்பட்டது. பெயர் பரவிற்று.

'மதுராவில்' தம் வகுப்புக் குலமகள் ஒருத்தியை மணந்து கொண்டார். மாமனார் வீட்டிலேயே பெரும்

பாலும் இருந்தார். பல சிற்றரசர்களிடமிருந்து இவருக்கு வருடாந்திர வருமான மானியம் வந்தது. அம்பர் நாட்டு இளவரசர் 'ஜெயசிம்ம'னிடமே இவருக்கு அதிகப்பற்று. அவன் ஒரு சமயம் ஒரு சிற்றிளம் பெண்ணை மணந்து அவள் மயக்கத்திலேயே இருந்து, அரசு அலுவல்களைக் கவனியாதிருந்தான். அவ்வமயம் அரசனின் மூத்த மனைவி அனந்தகுமாரி இவரிடம் அவனைச் சரி செய்யும்படி வேண்டினாள், பின்வரும் கவிதையை அவன் பார்க்கும் வகையில் அவர் ஓர் ஓலை நறுக்கில் எழுதி அந்தப் புரத்திற்கு அனுப்பினார்.

பூவா மலர்வண்டே பூந்தாதும் தேனுமில்லை
நீ வீணே மயல்கொண்டாய்! மலர்ந்தால் என் செய்வாய்?

''ஏ மன்னனே இவளோ பூக்காத இன்னும் அழகு முற்றும் வெளிப்படாத இளம் மொட்டு போன்றவள். இவளிடம் உடல் வாளிப்பும் (மகரந்தத்துகள்) அதனால் அணுகி அனுபவிக்கப் போகும் கூடும் இன்ப சுகமான தேனும் இன்னும் இவளிடம் தோன்றவில்லை. இதற்குள்ளாகவே இப்படிச் செயலிழந்து விட்டாயே. இவள் பூத்துக் குலுங்கிப் பருவ மங்கையானால் என்ன செய்வாய்? உயிரையே விட்டுவிடுவாயோ?'' என்ற உட்பொருள் தோன்றப் பூவாத மொட்டை சுற்றும் ஒரு வண்டைப் பார்த்துச் சொல்லும் காட்சியாகப் பாடினார். அரசனும் கண்ணுற்று மனம் திருந்திச் சரிப்பட்டு, அதே போல் பல பாடல்களைக் காவியமாகப் பாடி உருவாக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். அதன்படி 700 கவிதைகள் (ஈரடிப் பாக்கள்) அடங்கிய தொகுப்புநூலை இவர் ஆக்கினார். பாடல் ஒவ்வொன்றுக்கும் அரசன் ஒவ்வொரு பொற்கிழி அளித்தான். மூத்த அரசியோ 'காலீ பஹாடி' என்ற கிராமத்தை இவருக்கு மானியமாக அளித்தாள். இந்த நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் வண்ணப்படம் (Oil painting) இன்றும் உள்ளது. கி. பி. 1647-ல் இவர் 'பிஹாரி சத்சயீ'யைச் செய்து முடித்தார். இளவரசனின்

குழந்தைக்கு இவர் பாடமும் கற்பித்தார். பிற்காலத்தில் அரசியல் அமைதியின்மையால் இவர் 'மதுராவுக்கே' சென்றார். இவர் மனைவி முன்னால் காலமானதால், மனத்துறவு பெற்று, பிருந்தாவனத்திற்கே சென்று வாழ்ந்தார். 1664-ல் தம் 69-வது வயதில் அமைதியாக இவர் விண்ணுலகடைந்தார்.

3. நூலமைப்பு-கவிதை நயம்

'பிஹாரி சத்ஸயீயின்' நூலமைப்பு கவிதை நயம் முதலியன காண்போம்:-

தமிழில் தனித் தனிப்புலவர்கள் பாடிய பாடல்களைக் கோவையாக்கித் தொகுத்து நூல் உருவம் கொடுக்கும் மரபுண்டு. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, போன்றவை அவை. இந்த வகையில் 700 பாடல்களைத் தொகுத்து நூலாக்கும் மரபு வடபுலத்து 'பிராகிருத' மொழியில் முதலில் ஏற்பட்டது. 'சாதா சப்தசதி' என்ற நூல் அவ்வகையில் வந்தது. இதையே முன்னோடியாக வைத்து 700 பாடல்களாகப் பிஹாரி தொகுத்தார். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு காதல் காட்சியைப் படம் பிடித்து காட்டி, ஒரு நிகழ்ச்சியையே முழுவதுமாக விளங்க வைப்பது.

தமிழில் குறள் போலவும், தெலுங்கில் 'துபதாலு' போலவும், 'தோஹா' என்ற ஹிந்தி கவிதைகளாகும் இவை. ஒவ்வொரு அடியிலும் ஆறு கணங்கள் (அசை) இரண்டிரண்டு கொண்ட செய்யுள்கள் இவை. இதில் அரையடிகள் ஒவ்வொன்றும் 6+4+3 மற்றும் 6+4+1 என்ற கணக்கில் மாத்திரை கொண்டவை. அதாவது முதலில் 13 மாத்திரையும் இரண்டாவது 11 மாத்திரையும். அதாவது ஒவ்வோர் அடியிலும் 24 மாத்திரையும் கொண்டவை. இவற்றில் அடிகளின் இறுதியில் எதுகை வரும்.

யாமும் ஈரடிகளிலேயே தரவு கொச்சகக் கலிப்பா, சந்த விருத்தவகை யாப்புகள் முதலியவற்றால், இலக்கணம் மற்றும் பொருள் விளங்கா அருஞ்சொற்கள் பெரும் பாலும் வராமல் எளியவையான செய்யுள்களாகவே இவற்றை மொழியாக்கம் செய்துள்ளோம். உண்மையான சொல்லுக்குச்சொல். மொழியாக்கம் செய்யாமல் (Sincear Literal Transaltion) பொருளே முதன்மையாகக் கொண்டு விடுதி மொழிபெயர்ப்பாகவே (Free Transalation)— உண்மைத் தமிழ்க் கவிதைகளே என்னும் படிக்குச் செய்துள்ளோம்.

இந்த பிஹாரி சத்சயி அகச்சுவையில் காதல் இன்பத் தின் பல நிலைகளை வகை வகையாகக் கற்போர் இன்ப முறும் வண்ணம் நயங்களை உள்ளடக்கிக் கூறுவது. உவமை போன்ற அணிகளில் சிறந்து விளங்கி இறைச்சிப் பொருளாகப் பல செய்திகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சுவை நூலாகும் இது. இவ்வகையில் பிஹாரி லாலை ''ஹிந்தியின் காளிதாசன்'' என்றால் மிகை யாகாது. இவர் நூலும் திருவள்ளுவரின் காமத்துப் பாலை நிகர்ப்பதாகும்.

உலக இன்பங்களில் தலையானது சிற்றின்பம். இது ஆண்தான் முதன்மை பெற்று (Sudjective) பெண் அதற் குக் கருவியாகப் போகப் பொருளாக (objective) இருந்து உய்த்து அனுபவிப்பதே இன்பமாக, மனிதனின் அடிப் படை உணர்வாக இருந்து வருகிறது. பெண்ணைத் தன் உரிமைப் பொருளாகவும் மனிதன் பெறும் அரிய வசதி களில் ஒன்றாகவும் இந்நாள் வரை கருதப்படுவது. பெண் இப்படி ஆணுக்கு இன்பம் செய்வதால் அவளுக்குப் பெருமையே. அன்றி, அது வரம்பு கடந்து அடிமைத் தனம் திணிக்கப்படும் போதுதான் நாகரிக நிலையைத் தாண்டுகிறது இந்த நிலையில்தான் வடபுல காவியங் களில் பெண்களை வாத்சாயனர் காம சூத்திரப் படியும், மற்றச் சுவை துய்த்தல் என்ற ரசானுபவ நிலை இவற்றின்

படியும், பலவகை நாயகிகளாகப் பிரித்துச்சுவைக்கக் கூறும் பாரம்பரியம் ஏற்பட்டது. அதையே பின்பற்றி 'பிஹாரி லால்'தன் கவிதைகளை அமைத்தார். இந்த நாயகிகள் நம் தமிழ் இலக்கியத்தின் தலைவிகளே. ஆனால் தமிழில் நாகரிக ஒழுக்கமுறை வாழ்க்கை நெறியில் தலைவி காட்டப்படுவாள். வடபுலத்தில் அவை இருந்தாலும் சில வரம்பு கடந்தவையும் உண்டு இந்த நாயகிகளைப்பற்றி அங்கங்கே நூலினுள் சுட்டிக் காட்டுவோம். இங்கே முக்கியமானவற்றைக் கூறுவோம்.

நாயகிகள் முக்கியமாக தான் மணந்து தன்னாலேயே அனுபவிக்கப்படும் உரிமையுடையவளான 'சுவகீயா' என்றும், பிறர் மனைவியைக் கள்ள ஒழுக்கமாக ஆண் சில சமயம் அனுபவிக்கும் பெண் 'பரகீயா' என்றும் (இதைப் பெரும்பாலும் பிஹாரிலால் தவிர்த்திருக்கிறார்), இனி வெளிப்படையாக பொதுவாகப் பொருள் பெற்றுக் கொண்டு இன்பம் தரும் பெண்கள் 'கணிகா' (தாம் பெறும் பொருளுக்குக் கணக்குப் பார்த்து இன்பம் தருபவள்) 'வேசியா' என்றும் மூன்று வகையாக பேசப்படுவார்கள்.

நாயகிகள் அவர்கள் நிலைகளுக்கேற்ப வகைப் படுத்தப்பட்டுள்ளனர்:

1. **'அபிசாரிகா'** (நாயகனை கூடச் செல்பவள்)
2. **'உத்கண்டிதா'** (நாயகனை உரிய இடத்தில் சேரக் காத்திருப்பவள்.
3. **'விப்ரலம்பா'** (மேற்படி உரிய இடத்தில் தலைவனைக் காணாமல் வருந்துபவள்)
4. **'வாசக கஜ்ஜா'** (தன்னை அழகுப்படுத்திக்கொண்டு எதிர்பார்த்து மகிழ்பவள்.)
5. **'சுவாதீன பதிகா'** (கணவனுக்கே உரிமையாக வசப் பட்டவள்.)
6. **'அன்யசம் போக துகிதா'** (தலைவன் வேறு ஒருத்தியுடன் இணைந்துவிட்டான் என்று வருந்துபவள்.)

7. **'கண்டிதா'** (கணவன் முன்னிலையிலேயே மேற்படி தலைவன் பர ஒழுக்கத்தை அறிந்தவள். அதைக் கண்டு வருந்துபவள்.)

8. **'புரோஷித பதிகா'** (பிரிவால் வருந்துபவள்.)

9. **'கலஹந் தாரிதா'** (ஊடல் கொண்டவள்)

10. **'கர்விதா'** (தன் தலைவன் உயர்வு பற்றிப் பெருமைப் பட்டுக் கொள்பவள்.)

11. **'மானவதி'** (ஊடலில் சினத்தை வெளிப்படுத்துபவள்.)

இவர்களில் பலரையும்தம் கவிதைகளில் பிஹாரிலால் காட்டிச் சுவைப் படுத்தியுள்ளார். அவற்றுள் ஒன்றிரண்டை இங்கே கவனிப்போம்:

நாம் முதலில் கூறிய மூவகை நாயகிகளில் நாயகனை மணந்து கொண்டு தான் ஒருத்தியே சுயமாக அனுபவிக்கும் **சுவகீயா** என்பவளைப் பற்றி பிஹாரிலால் சொல்வதைப் பார்ப்போம். இவளும் மூவகைப்படுவள் 'அக்ஞாத யௌவனா. இவள் இளமை மிக்கவள்; காதல் கூறுகள் அறியாத சிறுமி. அச்சமும் நாணமும் இல்லாதவள். இவளைப்பற்றிய பிஹாரிலாலின் படைப்பைப் பாருங்கள்.

1. தலைவன் மிக இளையவளை மணந்தவன். இவளே **அக்ஞாத யௌவனா** ஆவாள். சோலையில் ஊஞ்சலாடுகிறாள். அச்சமின்றி நிலத்தை உதைத்து ஊஞ்சலாடுகிறாள்.

> **''ஊஞ்சலாடும் நோஞ்சலாள் உணராள் உடைநழுவலே**
> **தேஞ்சயிடை ஒடியுமோ தேராள் கீழ் விழுதலே!''** (280)

இவள் இளையவள், ஆனால் வாளிப்பு இவளை மெருகூட்டும் நேரம். ஆடும்போது தாவணி காற்றில் பறக்கிறது. இவள் உடலின் மேற்பாகம் மார்பகம் அடிவயிறும், கீழே தொடை முதலியவையும் செக்கச்செவேலென்றும் பளிச்சிட்டும் உயிர்ப்படம் காட்டுகின்றன.

தலைவன் கண்டு மயங்குகிறாள். இவளோ உடை நழுவு தலையும் உணரவில்லை (நாணம் இல்லை). உதைத்து ஆடுதலால், மெல்லிடை தாக்கப்படுகிறது; நெளிகிறது, இயல்பாகவே கொங்கைப் பளுவு தாங்காது நெளியும் இடை, இப்பொழுது ஊசலாடி அவை குலுங்குவதால் இடை மேலும் நெளிகிறது. இப்படி மேலும் கீழும் தாக்கப்படுவதால் இடை தேய்ந்து ஒடிந்துவிடுமோ என்று தோன்றுகிறது. இந்தக் காட்சியில் தலைவன் சொக்கி விடுகின்றான். இவளோ வேகத்தால் ஊசல் பலகையி லிருந்து நழுவி விழுகின்றாள் (அஞ்சவில்லை). இந்த நிலையில் அவளைக் கீழே விழாமல், ஓடி அவள் மேல் பாய்ந்து வாரி அவளை அணைத்து, இன்பத்தை மொத்த மாக அனுபவிக்கிறான் தலைவன். (அணைத்துக் கொள் வதை அடுத்த செய்யுளில் கூறியுள்ளார்.)

2. இதில் அடுத்தவள் **'மத்யமா'**. இவள் சற்று விவரம் தெரிந்தவள். நாணம் முழுவதும் நீங்கவில்லை; மறுப்பாள். ஆனால் கூடலில் ஆர்வமுண்டு. மறுப்பு வெறும் பாசாங் குதான். இதோ பிஹாரிலால் கூறுகிறார்:

வீட்டில் தனித்திருந்தாள் விடுவேனோ பிடித்
தணைத்தேன்
'மாட்டே' னெனப் பார்த்தாள் மனத்தில் நிலைத்தாளே.

பிறந்தகம் போன மனைவியைத் தேடிக்கொண்டு கணவன் அங்குச்செல்கிறான். அங்கே அவள் தனித்திருக் கிறாள். வாய்த்தது வாய்ப்பு என்று மகிழ்ந்து ஓடிச் சென்று அவளை அப்படியே அணைத்துக் கொண்டான். அவள் "அய்ய யாராவது பார்த்து விடுவார்கள்; விடுங்கள் என்று மாட்டேன் என்று" சொல்லுகின்றாள். வாய்தான் மாட்டேன் என்று சொல்கிறதே தவிர, விடுவித்துக்கொள்ளாமல் முழுவதும் அவனிடம் தன்னைக் கொடுத்துவிட்டு, அணைப்பின் ஆசையால் அவனை ஒரு மயக்கப்பார்வை பார்க்கிறாள். இந்தக் காட்சி தலைவியின் நாணங்கலந்த அழகும் பார்வை

நளினமும் அவன் மனத்தில் நிலைத்து விடுகின்றன. இங்கே ஒரு குட்டி நாடகத்தையே காட்டுகிறார் புலவர்.

3. மூன்றாமவள் கணவனுடன் வாழ்ந்து அனுபவப் பட்டவள். இவள் 'பிரவுடை' எனப்படுபவள். கணவனுக் குத்தானே கூடலில் ஆர்வம் காட்டி அவனை இன்புறுத்து பவள். இவளைப் பாருங்கள்.

அவனோ படுத்திருந்தான் அவளிடை மேகலையோ
துவள இசைபாட நூபுரம்தான் தூங்கியவே!

அவன் தலைவியே இன்பம் தரட்டும் என்று தூங்குவதுபோல் பாசாங்குடன் மல்லாந்து படுத் திருந்தான். அவன் முழுப் பொலிவும் தலைவி மனத்தைச் சுண்டி இழுத்தது. ஓடிச்சென்று அவன்மேல் குப்புறப் படுத்துக் கொஞ்சினாள்; கூடினாள். இருவர் கால்களும் பின்னிக்கொண்டன. இவளோ இடையும் மேகலையும் அசைய அசைய மேலும் கீழுமாக எழும்பியும் விழுந்தும் கூடி இன்பஞ் செய்தாள். இந்த அசைவால் மேகலை மணிகள் ஆடி அசைந்து அசைந்து சங்கீதம் பாடின. கால்கள் கூடுதலில் பின்னிக்கொண்டு அசையாமையால் ஒலிக்க வேண்டிய அவள் கால் சிலம்புகள் அசையவில்லை; தூங்கிவிட்டன.

இதில் புலவர் ஆண் கீழும், பெண் மேலிருந்தும் காமம் சுவைக்கும் முறைமாறி இன்பத்தை 'விபரீத ரதியை'க் கூறுகிறார். இது பெரும்பாலும் வடநாட்டுக்குரியது. இங்கே தலைவி பக்குவப்பட்டவள். ஆகையால் தானே முதன்மைக் காட்டிச் செயல்பட்டுக் கணவனை இன்ப உலகத்திற்கு இட்டுச் செல்கிறாள். இந்த விபரீத ரதியை அதிவீரராம பாண்டியன் தமயந்தி நளன் கூடலில் குறிப்பாகக் காட்டுகிறார்.

அடுத்து நிலைகளுக்கேற்ப வேறுபடும் நாயகிகளுள் ஓரிருவரைப்பற்றிப் புலவர் காட்டும் காட்சியைப் பார்ப்போம்:

**4. அவனவளைப் பார்த்திழுத்தான் அவளோ முகந்தாராள்
அவனும் முயன்றகன்றான் போனபின் அழுதாளே!**

வேறு ஒரு பெண்ணுடன் கூடிவந்துள்ளான் இவன் என்று தலைவன் மேல் ஊடல் கொண்ட 'கலஹந் தாரிதா' என்ற நாயகி இவள். அவன் வெளிலிருந்து அவளைப் பார்த்தான்; கெஞ்சிக் குழைந்து அணைத்துப்பார்த்தான். அவளோ சினத்தால் முகம்பாராமல் இருந்து விட்டாள். அவனும் கட்டிப்பார்த்துவிட்டு மீண்டும் பிரிந்து போனான். அவன் போனபின், அவன் காதலை எண்ணி, "ஐயோ அறிவின்மையால் இப்படி அவனை மீளவும் வேறு ஒருத்தியிடம் விட்டு விட்டோமே" என்று இவள் ஏங்குகிறாள்.

5. அடுத்து வெளிப்படையான ஊடலழகி ஒருத்தியைப் பார்ப்போம். தலைவி வெளியில் போய் விட்டு வெகுநேரம் சென்று வீடு திரும்பினாள். இந்த இடைவெளியில் கணவன் தன் இல்லத்தில் வேறு ஒரு பெண்ணுடன் கூடியுள்ளதை இவள் புரிந்து கொள்கிறாள்.

**பஞ்சணையைப் பார்த்தழுவாள் பரத்தை குழல் கண்டாள்
நெஞ்சம் வெடித்து நின்றாள் நித்திரையும் செய்யாளே.**
(354)

தலைவி பஞ்சணையைப் பார்த்தாள். வேறொரு பெண்ணுடன் அவன் கூடிய சலசலப்பால் அவள் தலைக் கூந்தல் பகுதி மஞ்சத்தின் மேல் இருந்ததைக் கண்டாள். இதனால் அவள் கீழே படுத்திருக்கத் தலைவன் முறைப்படி அவளைக் கூடியுள்ளதைக் கண்டு கொண்டாள் இவள். சினமும் துக்கமும் மேலிட நெஞ்சு வெடித்து நின்றாள். தூக்கம் வரவில்லை. விழித்தே இரவைக் கழித்தாள். இந்த நாயகி 'கண்டிதா' என்பவளாவாள். கணவன் வேறொருத்தியுடன் கூடிய குறிகளைக் கண்டு கண்டித்துக் கோபம் கொண்டவள்.

இப்படி பிஹாரிலால் இன்பச்சுவையை முன் வைத்து பலவகை வண்ண வண்ணக் காட்சிகளைப் படிபோர்க்குக் காட்டுகிறார். படிபோர்க்கு அதே கிளர்ச்சியும் உணர்வும் ஏற்படுகிறது. நாயகியரின் வெவ்வெறு நயங்களை இவர் கூறும்போது, வேறுவேறு இன்ப உலகங்களுக்கு நம்மை இட்டுச் செல்கின்றார். மெய் சிலிர்த்து உணர்விழிந்து போகின்றது.

இதனாலேயே இவர் காவியம் இறவா அமரத்துவம் பெற்று விட்டது. பலமொழிகளிலும் மொழி பெயர்க்கத் தகுவது உலக இலக்கியங்களில் இதுவும் முதன்மையாகக் கருதப்பட வேண்டியது; கருதப்படுவது. பிஹாரிலால் வாழ்ந்த காலத்திலேயே இவர் நூலுக்கு உரை கவிதை நடையிலேயே தோன்ற ஆரம்பித்து விட்டன. இதுவரை கணக்கற்ற உரைகள் வந்துள்ளன.

மான சிம்மன், கிருஷ்ணகவி, லால் (லால் சந்திரிகா உரை), ஹரிப்ரகாஷ், சிருங்கார சப்த சதீ: இவை பழைய செய்யுள் மற்றும் உரை இரண்டும் விரவிய உரைகள் அடுத்து பிரபு தயாள் பாண்டே ரசகௌமுதி (பழைய வுரை), பிஹாரி ரத்னாகர், தேவேந்திர நாத் சர்மா இவர் கள் உரைகளும் குறிப்பிடத் தக்கவை. இவற்றில் 1925-ல் வெளிவந்த 'பிஹாரி ரத்னாகர்' என்ற உரையையே பின் வந்தவர் பலரும் பின் பற்றியுள்ளனர்.

35 ஆண்டுகளுக்கு முன்வந்த தேவேந்திர நாத் சர்மா (1957) உரையைப் பின்பற்றி, நம் புலமையுணர்வையும் குழைத்து, இதை ஒரு தமிழின் கவிதை இலக்கியமாகவே மொழிபெயர்ப்பு உணர்வு தோன்றாதபடி, படைக்க முயன்றுள்ளேன். பன்மொழிப்புலவர் திரு. மு.கு ஜெகந் நாத ராஜா செய்த 'காதா சப்தசதி' என்ற தமிழ் நூல் (பிராகிருதத்தின் மொழியாக்கம்) எனக்கு இவ்வகையில் ஊக்கம் காட்டியது. அதற்காக நான் அவருக்குக் கடமைப் பட்டுள்ளேன். சிற்சில இடங்களில் 'பிஹாரி ரத்னாகர்' என்ற உரையையும் பின்பற்றி யுள்ளேன்.

இந்நூலில் 47 கவிதைகள் கடவுள் வாழ்த்தாகவும், 64 கவிதைகள் அறம் கூறுபவையாகவும், 43 கவிதைகள் ஆறு பருவ வருணையாகவும், மற்ற 546 கவிதைகளே இன்பச் சுவையுள்ளவையாம். இந்நூலில் சோதிடம், கணிதம், உளவியல், கடவுளியல் போன்ற புலவரின் பல்துறைத் தேர்ச்சி நமக்கு அங்கங்கே தெரிகிறது.

தமிழில் இல்லாத இத் தனித்தன்மை வாய்ந்த இலக்கியத்தைத் தமிழுக்குத் தரும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது பற்றி பெருமையும் பெரு மகிழ்வும் அடைகின்றேன். கற்போர் இன்பங்கண்டால் அதுவே இந்நூலை ஆக்கியதற்கு யான் பெற்ற பரிசாகக் கருதுவேன்.

தாம்பாட எடுத்துக் கொண்ட நூல் இனிது நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்துடன் தம் வழிபடு கடவுள் கண்ணனையும் ராதையையும் வணங்கிப் பாடுகிறார் புலவர்.

இதில் வரும் காதல் கவிதைகளும் மற்றவை அனைத்துமே ஆயர் பாடியையும், பிருந்தாவனத்தையும், கண்ணனையும் ராதையையும் இடைப்பெண்கள் இளைஞர்களையும் நாயக நாயகியராகவும் கவிஞர் கண்ணன் இராதையின் மேலுள்ள பக்தியால் அவற்றையே நிலைக்களமாக் கொண்டு புனைந்துள்ளார்: இதனால் **கண்ணனின் காதல் ஓவியம்** என்று இந் நூலுக்குப் பெயரிடப்பட்டது.

பிஹாரி சத்சயிநூலுக்கு 35 ஆண்டுகளுக்கு முன்வந்த திரு. தேவேந்திர நாத் சர்மாவின் உரைப்படியும் அதற்கு முன் வந்த, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, ‘பிஹாரி ரத்னாகர்’ என்ற ஜகத்நாததாஸ் ரத்னாகர் என்பவர் உரைப்படியும் செய்யுட்கள் எடுத்துக்கொள்ளப் பட்டன.

எனவே ஒவ்வொரு செய்யுளின் உரை இறுதியிலும் அது எதிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது எனத் தெரிந்து கொள்ளும்படி அதன் எண்கள் கொடுக்கப் பட்டுள்ளன. பி.ர. என்பது பிஹாரி ரத்னாகர் எனவும் மற்றவை தேவேந்திரநாத் சர்மா உரை எனவும் எடுத்துக் கொள்ள வேண்டும். மூலபாடத்தை ஒப்பிட்டுப் பார்க்க விரும்புவோருக்கு இது பெரிதும் பயன்படும்.

பிஹாரிலாலின்
கண்ணனின் காதல் ஓவியம்

1. கடவுள் வாழ்த்து

1. நப்பின்னை நோக்கினாள் நாயகன் நிறம்பசுந்தான்
அப்பன் மகிழ்ந்தான் பிறவிநோய் அகன்றதுவே!

இராதை தன் காதலன் கண்ணனை அன்போடு பார்த்தாள். அவள் பார்வையின் நிறமோ பசுமை. அவள் உடல் வண்ணமோ பட்டுச் சிவப்புப் பொன்னிறம். அவன் நிறம் பளபளக்கும் கருநிறம். அதில் இவள் செவ்வுடல் எதிர்வடிவமாகத்தோன்றுகிறது (பிரதிபிம்பம்). இதனால் இரண்டுபேர் நிறமும் கலந்து கண்ணன் நிறம் பசுமை யாகி விடுகிறது. ராதாவின் காதல் மயக்கப் பார்வையால் கண்ணன் மகிழ்கின்றான். அப்படிப்பட்ட ராதா என் பிறவி நோயைத் தீர்ப்பாள்.

இவர் காதல் சுவையையே பாடப்போகிறார். அதனால் இராதாவின் காதல் பார்வையுடன் நூலை ஆரம்பிக் கிறார்.

2. திருமுடிமாலையும் பீதக ஆடையும் தீங்குழலும்
உருவ முடனென் உளம்புகு கண்ண! என்னைக்
காத்தருளே!

தலையில் கிரீடமும் கழுத்தில் வனமாலையும் இடையில் பட்டு பீதாம்பரமும், கையில் இனிய இசை வழங்கும் வேய்ங் குழலுமாக இந்த வடிவமுடன் கண்ணன் என் உளம் புகுந்தான். அவன் எனைக் காப்பானாக.

**3. ஆனைமுன் ஓடிவந்தாய் ஆட்கொண்டாய்! நான் கூவ
நீ நினைந்தால் வாராயோ நின் தொழிலும் விட்டாயோ?**

ஐயனே முதலையிடம் சிக்கிய கஜேந்திரனைத் தன் வாகனத்தையும் விட்டுவிட்டு விரைவில் ஓடி வந்து அவனைக் காப்பாற்றினாய். நானும் சம்சாரம் என்னும் முதலையிடம் சிக்கி ஓயாமல் உன்னைக் கூவி அழைக்கின்றேனே. உனது செவி கேட்கவில்லையா. அல்லது இப்பொழுது நீ உன் காக்கும் தொழிலைத்தான் விட்டு விட்டாயா? [பி. ர. 11]

**4. ஏனிது கையிலே மாலை, இறைவனை எண்ணாக்காலை?
மேனி முழுவதும் நாமம் விரும்புவ தெல்லாம் காமம்.**

கையில் ஜெபமாலை வைத்துக் கொண்டு உள்ளன்புடன் இறைவனை எண்ணாமல் இயந்திரம் போல் உருவேற்றுவதால் என்ன பயன்? உடலில் மதச்சின்னமான நாமம் இட்டுக்கொண்டு உள்ளத்தில் உலக இச்சையையே முதன்மையாக வைத்துக்கொண்டு இறைவனை எண்ணாமல் இருந்து என்ன பயன்? உள்ளன்பான பக்தி இன்றி இவையெல்லாம் வீணே.

**5. காலனெனும் யானைவாய்க் கரும்பாய் விழும் நேரம்
மாலரியை மனம் கொள்வாய் புலமயக்கம் விடுவாயே.**

இந்த உலக வாழ்க்கை நிலையற்றது. எப்பொழுதாவது எமனென்னும் யானையின் வாயில் நாம் கரும்பு போல் அகப்பட்டுக் கொள்வோம். இறப்பது தான் நிச்சயம். அதனால் நரசிங்கமாகிய திருமாலை நினைத்துப் பக்தி செய். பிறவி நோயிலிருந்து தப்பித்துக் கொள்வாய் மனமே. காலனை யமனை யானையாக உவமித்தார். அதற்கேற்ப அவனை அகற்றும் திருமாலை யானைக்குப் பகையான திருமாலின் நரசிம்ம அவதாரத்தைச் சிங்கமாகச் சொன்னதும் நயமே.

[பி. ர. 21]

2. காதல்

உயிர்கள் அனைத்தும் விரும்புவது இன்பம் ஒன்றையே. இன்பத்துள் எல்லாம் முதன்னையாக இருப்பது. சிற்றின்பத்தால் பெறுவதொன்றுதான். பாலுணர்வின் முதிர்வில் தோன்றும் இச் சிற்றின்பம் எதிர்பாலினரைக் காணும் தோறும் கிளர்ந்தெழுவதாகும். இவ்வெழுச்சி நினைக்க நினைக்க இன்பம் தரும் அளவில் நிற்பது காதல். அது அடங்காமல் உய்த்து உணரும் நிலையில் நடப்பது காமம். ஒத்த தலைவனும் தலைவியும் தாம் நேரில் காணும்போது ஊழ்வயத்தால் ஒருவர் மேல் ஒருவர் வயப்பட்டு அன்பு ஏற்படுவது காதல். ஒருவரே பலரையும் காணும்போது ஒரே நிலையில் ஆர்வம் மேற்பட்டால் அது காமம்.

தமிழர் காதல் முந்தியதை வகைப்படுத்தி, அதை அக இலக்கிய இலக்கண வரம்பாக்கிற்று. மற்ற எந்த நிலையிலும் பெரும்பாலும் பெண்ணைக் காணும் தோறும் உள்ளத்தில் எழும் கிளர்ச்சி மாத்திரமாய் ஏற்படும் காமமே பெரிதாகப் பேசப்படும். காதல் மேல் நிலை உணர்வாகிக் கடைசியில் இணைவிழைச்சில் முடிவதால் ‘வள்ளுவர்’ காமத்துப்பால் என்று பெயர் வைத்தார்.

ஆணின் எண்ணம் மாத்திரமாய்ப் பெண்ணைக் காணும் தோறும் அவன் நினைவில் ஏற்படும் மேல் நிலை மற்றும் கிளர்ச்சி நிலைகளில் ஏற்படும் இன்பக் கூறுபாடுகளைப் பல நிலைகளில் கூறுவதே இந்தக் காதல் என்னும் பகுதியில் தரப்பட்டுளளது.

ஆண் செயல் நிலையில் மேலுணர்வும், பெண் செயல்படு நிலையில் கிளர்ச்சியுறும் உணர்வும் (subjective

and objective) உள்ளவர்கள் ஆகையால் பெண்ணின் அழகே முன் நிற்கிறது. அதை ஆண் கண்டு மகிழும் நிலையில் இங்குப் பலவாறாகப் பேசப்படுகிறது.

6. **கோடி நூறாயிரம் ஆயிரமும் கோடிப்பார்**
கோடி எனக்கெல்லாம் கோபாலன் ஆவானே!

எல்லோரும் ஆயிரம் லக்ஷம் என்று பணத்தை சேர்த்து வைப்பாரே அன்றி அவர்கள் இறைவனை எண்ணியும் பார்க்காமல் கடைசியில் அந்த சொத்தையெல்லாம் விட்டு இறந்து விடுவர். ஆனால் எனக்கு அழியும் பணம் வேண்டாம். என் அருட் கடவுளான கோபாலன்தான் எனக்குக் கோடி ரூபாய்க்குச் சமமாவான்.

தோழிக்குத் தலைவி கூறியது

7. **நாணமின்றி நாயகன் அழகென்னும் கள்ளாலே**
காணக்கண் மயங்குதடி காவலையும் கடந்ததடி!

அடியே அவர், அதுதான்என் தலைவன் அழகை என் கண் கண்டு, அந்தக் கள்ளைக்கண்ணால் பருகி மயங்கித் துடிக்குதடி. காவல் இடம் பொருள் எதையும் பாராமல் நாணத்தை விட்டு விட்டதே என் கண். என் செய்வேன்!

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

அவர் அழகு கண்ணால் பருகப்படும் கள் என்பது திருக்குறளிலும் எதிரொலிக்கிறது. (599)

தோழன் தலைவியைப்பற்றித் தலைவனுக்குக் கூறுவது

8. **மீனக்கண் மையழகோ மீனச்சனி ஓரையிதோ**
நீ நயக்கும் நங்கையெழில் நின்னுரிமை துய்ப்பாயே!

உன் ராதையின் கண் மீன் போன்றது. அதில் கரிய மை தீட்டியுள்ளாள். அதனால் அவள் அழகு பல மடங்காகிறது. இது மீன இராசி (கண்)யில் உள்ள சனி

(கரிய மை) உள்ள ஜாதகத்தை உடையவருக்குப் பெரிய ராஜ யோகத்தைத் தருவதுபோல், கண்ணா! உனக்கும் இவள் அழகு ஒரு ராஜ போகம் உனது நங்கை. அவளது அழகும் உனக்கே சொந்தம்; ஆகையால் உன்பாடு யோகம் தான்; அனுபவி! அனுபவி. (439)

ராதையின் மீனக் கண்ணில் இடும் மை மீன ராசியில் சனி இருப்பது போன்ற ராஜயோகமாகியது. இது ஜோதிடக் கொள்கை. கவிஞனின் ஜோதிட ஞானம் புலனாகிறது.

தலைவி தோழிக்குக் கூறுவது

9. **நாணக் கயிறறுந்து நாயகன் எழிற்சுழலில்**
காண, மனக் கண்படகும் சிக்கிச் சுழலுதடி!

அடியே அவர் அழகு, என் நாயகன் அழகு காட்டாற்றுச் சுழலாய் இழுக்குதடி என் மனம். கண் என்ற படகு அந்த சுழலில் சிக்கி மீள முடியாமல் தவிக்குதடி, என் செய்வேன்! (பி.ர. 10)

தலைவன் தோழனுக்குக் கூறுவது

10. **நீக்கி முகச்சீலை நின்று கடைக்கணித்தாள்**
தாக்கி இழுத்தாள் தண்ணிழலால் அணைத்தாளே.

தோழா! என்தலைவி பேரழகி. நான் அவளைப் பார்க்கத் துடிக்கும்போதே பலர் நடுவிலும் திடீரென்று முகச் சீலையை நீக்கி என்னை ஒரு கணம் பார்த்தாள். அவள் பார்வை மயக்கம் எனக்குத் தெளிவதற்குள் அவள் அகன்று விட்டாள். ஆனால் அவள் நிழல் என்மேல் பட்டு சில்லிட்டு அணைத்தது. (440)

தலைவி தோழிக்குக் கூறியது

11. **நாயகன் நலம்கண்டேன் நானுப்பாய்க் கரைந்து விட்டேன்**
போயமனம் கோடிமுறை முயன்றும் போனதடி!

அடி நான் நாயகன்அழகைக் கண்டதும் மனம் அதில் லயித்துவிட்டதடி. அந்த அழகென்னும் நீரில் என் மனம் கண் என்ற உப்பு கரைந்து போய்விட்டதடி. நான் கோடி முறை முயன்றும் என் மனம் அவர் பின்னாடியே போய் விட்டதடி! என் செய்வேன்! (234)

தலைவன் தலைவி அழகைப் புகழ்தல்

12. கண்வேலைப் பாய்ச்சி என் கண்ணே மனம் துளைத்தாய்
புண்ணாக்கி மூக்குத்தி புழையும் பொத்தியதே.

அன்பே! உன் கண் பார்வை வேல்போன்று என் மனத்தைத் துளைத்து விட்டது. உன் மூக்குத்தித் துளையோ அதை மேலும் புண்ணாக்கியதே. தலைவி ஒரு (கண்) கருவியால் துளை போட்டாள். ஆனால் ஒரு துளையால் (மூக்குத்தித் துளை) அந்தத் துளையை மேலும் புண் படுத்தினாள். எப்படி வித்தை? தலைவி மூக்குத்தியில்லாமல் இருந்தால் (இக்காலத்தவர் போலே) அந்த முக அழகு மேலும் வசீகரம் என்பான் தலைவன்.

நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்தவே. —கம்பன்
(பி ர. 27)

தலைவியின் தோழி அவள் செயலைக் கூறுவது

13. அவள் அவனைப் பார்த்தாள் அனைவரையும் பார்த்தாள்
அவள் பார்வை திசையூசி அவனிடமே மீளுதடி!

தலைவி பலர் இருக்கும்போது அவர் நடுவே தன் நாயகனைப் பார்த்து மகிழ்ந்தாள். ஆனால் அப்படிப் பார்த்தது வெளிப்படக் கூடாது என்பதற்காக மீண்டும் எல்லோரையும் பார்த்தாள். இருந்தாலும் அவள் கண்களை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. காந்த திசை காட்டும் ஊசி போல அவன் பக்கமே மீண்டும் மீண்டும் அவை திரும்பி அவளைக் காட்டிக் கொடுத்து விடுகின்றன. (பி.ர. 30)

கவிஞன் கூற்று

14. பார்வையால் சம்மதம் கேட்டான் பலமுறை முடியா தென்றாள்
பார்த்தனர் இவரைப் பலரும் பார்வையால் கவர்ந்தனர் இவரே.

பலர் நடுவே தலைவன் தலைவியைக் குறிப்பாய் பார்த்து (தான் குறித்த இடத்தில் மாலை வருகிறாயா?) என்று சம்மதம் கேட்டான். அவள் நாணத்தாலே பார்வையாலேயே முடியாதென்றாள். இதை - இந்தப் பார்வை உரையாடலை மற்றவர் கண்டு விட்டனர். இப்பொழுது இருவர் பார்வையும் கலந்து அவர்களும் கலந்து விட்டனர். அப்புறம் மற்றவருக்கென்ன வேலை? (பி. ர. 32)

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
என்ன பயனும் இல. [வாய்ச்சொற்கள்
—திருவள்ளுவர்.

இதுவும் புலவன் கூற்று

15. தாமரை கொண்டு தலைநீவித் தையலைச் சம்மதம் கேட்டான்
பூமகள் கொங்கைமேல் ஆழிவைத்தாள் பொழுதின்று சாயட்டும் என்றாள்.

தலைவன் பலரிடையே தலைவியைத் தன்னுடன் கூட வரும்படி கேட்கிறான். அவளோ பொழுது சாயட்டும் என்கிறாள். இதைப் புலவன் இப்படிக் கூறுவான்: தலைவன் ஒரு தாமரை மலரைத் தண்டுடன் பறித்துத் தன் தலையைத் தடவுகிறான். அதாவது நான் உன் தாமரை போன்ற திருவடிகளில் என் தலையால் வேண்டுமானால் வணங்குகிறேன். எனக்கு இன்பம் தா என்கிறான். அவள் சூரியனுக்கு முன்னால் மோதிர முகப்பைத் தன் கொங்கை முகப்பின்மேல் வைத்தாள். மோதிரத்தில் கதிரவன்

உருவம் தெரிகிறது. அதாவது கதிரவன் அத்தமன மலையில் (இங்கே கொங்கை) விழட்டும். அதாவது மாலையாகட்டும் என்கிறாள். கொங்கை மேல் ஆழி வைத்தது. நீ கொடுத்த மோதிரத்தின் மேல் ஆணை. உன் இன்பத்திற்குக் கருவியாகும் என் இளம் கொங்கை களையே தருகிறேன் என்று குறிப்பால் மோதிரத்தை அதன்மேல் வைத்துக் காட்டுகிறாள். பிறர் எதுவும் புரிந்து கொள்ளாமல் இவ்வளவு நாடகமும் நடத்திவிடு கிறார்கள் இவர்கள். கவிஞன் ஒருவன்தான் இதை நடத்த முடியும். (702)

தலைவி கூறுவது

16. நின்னன்பு நீங்கியதென் நெஞ்சமும் அப்படியே நின்னோடே சென்றதுவே நீமீள மீளுவதோ?

அன்பரே! இரக்கமின்றி இன்று நீர் என்னைப் பிரிந்தீர். உண்மையில் என்மேல் உமக்கு அன்பு இல்லை. ஆனால் வெட்கம் கெட்ட என் மனம் நீர் சென்றபோது உம்மோடேயே சென்று விட்டது. நீர் திரும்பும் போது தான் மீண்டும் உம்முடன்தான் என்பால் திரும்புமா? என்ன அநியாயம்? (பி. ர. 36)

சென்ற நெஞ்சம் செய்வினைக் குசாவாய்
ஒருங்குவரல் மரபோடு வருந்துங் கொல்லோ?

—நற்றிணை

தலைவனுடன் சென்ற தலைவியின் நெஞ்சம் அவன் செய்யும் வேலைக்குத் துணையாக இருந்து விட்டு அவனு டனேயே திரும்பி வருவோம் என்று அவனிடமே தங்கி விட்டதோ?

பிஹாரிலால் நம் நற்றிணையைப் படித்திருப்பாரோ?

தோழன் தலைவனுக்குக் கூறுவது

17. பூவா மலர்வண்டே! பூந்தாதும் தேனுமில்லை
நீவீணே மயல்கொண்டாய் மலர்ந்தால் என்செய்வாய்?

மிக இளைய, இன்னும் பெண்மையின் முழு நலம் பெறாத தலைவியிடம் மயங்கிக்கிடக்கும் தலைவனைப் பார்த்துத் தோழன் தெளிவு படுத்துகிறான். ஏ! வண்டே இதுவோ அரும்பாகும் வெறும் மொட்டு. இன்னும் மலரவே இல்லை. இப்பொழுது இதனிடத்தில் நீ விரும்பும் மகரந்தப் பொடியோ தேனோ இல்லை. இப்பொழுதே இப்படி இதைச் சுற்றுகிறாயே. நன்றாக மலர்ந்தால் தேனின் மயக்கத்தால் உயிரையே விட்டுவிடுவாயோ?

தோழா இவளோ சிறுமி; பெண்மையின் மதமதப்பு நளினம் இன்னும் எதுவும் இவளிடம் தோன்றவில்லை. இப்பொழுதே இவளைச் சுற்றிச் சுற்றி வருகிறாயே. இவள் முழுவதும் பூரித்துப் பூத்துக் குலுங்கிப் பெண்ணின் நலன் எல்லாம் வரப் பெற்றால் என்ன செய்வாய். உயிரையே விட்டுவிடுவாயோ? கொஞ்சம் நிதானி! என்று வண்டின் உவமையொடு ஒப்பிடுகிறார் புலவர். (102)

இது ஒரு பெண்ணின் அழகு பற்றிக் கவிவியப்பது

18. காதளவும் கண்மான் தமைக்காமன் காளையர்கள்
மீதுபடை ஏவிநிதம் வேட்டை பிடிப்பானோ?

மன்மதனென்னும் காமன் மிகவும் கெட்டிக்காரன். இந்தப் பெண்ணின் அழகே அழகு. இவள் கண்கள் காதளவும் நீண்டு மானைப் போன்று மருண்டு பார்க்கின்றன. இவள் அழகு ஒரு புறமிருக்க இவள் பார்வையிலேயே காளையர்கள் மயங்கி விடுகிறார்கள். இவள் பார்வை என்னும் மானை ஏவி இந்த மன்மதன் இளைஞர்களை வேட்டையாடுகிறாள். எல்லோரும் கொடிய

நாயை ஏவி வேட்டை பிடிப்பார்கள். இவளோ மெல்லிய சாதுவான மானை ஏவியே வேட்டை பிடிக்கிறாள். மிகவும் கெட்டிக்காரன் (புலவன் தானே!) மான்களைப் பிறர் வேட்டையாடுவது முறை. இங்கே மான்களே காளை களை (இளைஞர்களை) வேட்டையாடுகின்றன. கவிஞனும் மிகவும் கெட்டிக்காரனே. (பி. ர. 45)

ராதையின் கூற்று

19. **கண்ணின்மை தீட்டினேன் கண்ணன் உளம் கவர**
கண்கண் ணனைக்கண்டும் கண்ணனே கவர்ந்தானே!

தோழீ! இந்த வேடிக்கையைப் பார்த்தாயா? கண்ணனை என் கண்ணழகால் மயக்கிக் கவர்ந்துவிட வேண்டும் என்று அவைகளுக்கு மைதீட்டி அழகுபடுத்திக் கவர்ச்சியுடன் அவனைப் பார்த்தேன். ஆனால் அவனோ மாயக் கள்ளன். பார்க்கும் என் கண்களையே கலர்ந்து கொண்டான். (விழித்திருக்கும் போதே விழியைப் பிடுங்கி விட்டான்! இது திருடப் போனவன் தான் திருடப் பட்ட கதையாயிற்று!) (பி. ர. 47.)

தலைவன் சொல்வது

20. **புதர்மறைந்து பாயும் புலிபோல் அவள் கண்கள்**
அதிரப் பிடித்தனவே ஆடை மறைந்தெனையே.

தோழா! அவள் முகச் சீலை இட்டு வந்தாள். திடீரென தன் முகத்திரை நீக்கி ஒரு கணம் என்னைத் தன் மயக்கும் கண்களால் பார்த்தாள். அவளுடைய அந்த அழகிய கண்கள் புதர் மறைவிலிருந்து திடீரென்னுப் பாய்ந்து மானைப் பிடிக்கும் புலிபோல் என்னைப் பற்றி மயக்கி விட்டனவே. என் செய்வேன். (புலி புதர் மறைவிலிருந்து பாய்ந்தது; இவள் கண்கள் ஆடை மறைவிலிருந்து பார்த்

தன.) ஒரு புலி ஒரு மான் மேல் தான் பாயும். இவளுடைய கண்களென்ற இரண்டு புலியும் ஒரு மானாகிய என் மேல் பாய்ந்தன. என்செய்வேன். (250)

தோழி தலைவியின் கண்ணழகைப் பற்றிக் கூறுவது

21. கண்ணழகால் யாரின்றுன் கைதியோ? காமன்தன்
கண்திறந்து காதலெனும் பிச்சையார்க் கிடுவானோ?

மகளே! இன்று வெளியே கிளம்பிவிட்டாய். வந்தது ஆபத்து. உன் அழகிய மயக்கம் செய்யும் கண்களால் இன்று எந்த இளைஞனைச் சிறைபிடிக்கப் போகிறாய்? உன் கண்களின் மூலம் மன்மதன் இன்று காதலெனும் பிச்சையை எந்த இளஞுனுக்கு இடுவானோ? அழகியான இவள் கண்களால் சிறைபிடிக்கிறாள். மன்மதன் இவள் கண் திறந்து பிச்சை போடுகிறான். கடவுள் எப்பொழுது கண்திறப்பான்? என்ற வழக்கு இது தானோ?

(பி. ர. 8)

தோழி தலைவிக்குக் கூறியது

22. கண்களை நீ நம்பாதே எனப் பல்கால் கடிந்திலனோ?
கண்கண்ட பிழையாலுன் உள்ளம் கரையுதடீ!

அட அசட்டுப் பெண்ணே! உன் கண்களையே நீ நம்பாதே என்று உனக்கு எவ்வளவோ முறை எச்சரிக்கை செய்தேனே! அப்படி இருந்தும் கேட்காமல் அந்தக் கண்களால் மாயக் கண்ணனைக் கண்டு வைத்தாயே. அதனால் உன் உள்ளம் அவன் அழகில் கரைந்து தவிக்குதே. மோசம் போய்விட்டாயே! (பி. ர. 66)

தலைவனின் இயற்கையான அழகைத் தலைவி கண்டு ரசிப்பதைக் கவி கூறுவது

23. கோதுகின்ற கூந்தல் பவளவிரல் பலகணியால்
காதலனைக் கமலக்கண் கண்டே மகிழ்கின்றாள்.

தலை குளித்து வந்து வெளியில் வெய்யிலில் கூந்தல் தலையைக் கோதி உலர்த்துகிறாள். தலைவன் எதிர் வீட்டில் நின்று கொண்டிருக்கிறான். அவன் இவளைப் பார்க்காமல், தான் அவனை மட்டும் அவன் அழகைக் கண்டு மகிழ்கிறாள். கூந்தல் உலர்த்தும் போது முன்னால் விழுகிறது. அதன் இடையே தன் நான்கு கை விரல்களை யும் (கட்டை விரல் நீங்கலாக) இடை வெளி வைத்து அடுக்காக வைத்து அதன் இடை வெளியில் அவனைப் பார்த்து மகிழ்கிறாள். (கூந்தல் பலகணியின் நெடுக்குக் கம்பி; பவள விரல் குறுக்குக் கம்பி) மிகவும் கெட்டிக்காரி தான்.

ஒருத்தி
மருங்குலின் இடைகளூடே வள்ளலை நோக்குகின்றாள்
—கம்பன்

இராமன் உலா வரும் போது பெண்கள் கூட்டத்தால் மறைத்தலால் பின்னாலிருந்தவள் பார்க்க இயலவில்லை. சிற்றிடை கொண்ட மற்றப் பெண்களின் நெருக்கத்தில் சிற்றிடைகள் வெளி காட்டியது. அவற்றின் மூலம் இவள் இராமனைப் பார்த்து மகிழ்கின்றாள்!

தோழனுக்குத் தலைவன் கூறுவது

24. நாணந்தான் கொண்டாள் போல் தன் முகத் திரை
காணுவாள் வயிறுந்தி காட்டித் தெருபுகுவாள். [நீக்கி

என் நாயகி என்மேல் மிகவும் காதலுள்ளவள். நான் உடலழகைப்பார்த்து மகிழ்வேன், விரும்புவேன் என்று

அவளுக்குத் தெரியும். அதனால் வெட்கப்பட்டுக் கொண்டு என்னைப் பார்ப்பது போல் முகத்திரையைத் தூக்கி இடுக்கு வழியாக என்னைப் பார்த்தாள். புடவையால் மறைப்பது போல் மேலே வேண்டுமென்றே அதிகம் தூக்கியதால் அவள் வயிறு, அதன் மூன்று மடிப்பு, மற்றும் உந்தி இவற்றைப் பளிச்சென்று எனக்குக் காட்டி விட்டாள். எல்லாம் ஒரு கணம்தான். அந்த மயக்கத் திலிருந்து நான் மீளுவதற்குள் அவள் 'சருக்' கென்று தன் சந்துக்குள் புகுந்து மறைந்துவிட்டாள். (506)

பிரிவு பொறுக்காத தலைவி தன் தோழிக்குக் கூறுவது

25. கமலமெனக் கண்களையே
கூறுவார் கல்லவையே;
கமலக்கண் நோக்கமனம்
காட்டுத்தீப் பற்றியதே!

கண்களைத் தாமரை மலர்களுக்கு ஒப்பிடுகிறார்கள். இது தவறு. தாமரை குளிர்ந்த தன்மையுள்ளவை. காதலி யாகிய நான் என் காதலனை நோக்கினேன்; அவனும் என்னை நோக்கினான். இருவர் கண்களும் மோதிக் கொண்டன. இதனால் 'சில்லென்ற' குளிர்ப்பு அல்லவா ஏற்பட்டிருக்க வேண்டும்? மாறாக நாங்கள் பிரிந்த பின்னால் எங்கள் மனத்தில் பிரிவு என்ற தீ அல்லவா மூண்டு விட்டது. இதனால் கண்கள் தாமரை அல்ல; அவை சிக்கிமுக்கிக் கற்கள். அதனால் அவை மோதியதால் இந்தத் தீ மூண்டது. (719)

ராதை கண்ணனைக் கண்டு மகிழ்வது

26. காதலால் கண்ணனைக் காண்பேன்;
கரிய நிறத்தினில் ஆழ்வேன்!
காதலோ புத்தொளி வீசும்;
கண்ணனே செய்கின்ற மாயம்!

என் காதலன் கண்ணனை அடிக்கடிப் பல காலும் காண்பேன். அவன் கரிய நிறப் பளபளக்கும் மேனியழகு என்னைக் கவரும். அந்தக் கருமை என் மனத்தில் கருமை என்னும் இருளையல்லவா ஏற்படுத்தி இருக்கவேண்டும்? மாறாக என் மனத்தில் அவன்மேல் கொண்ட காதலெனும் ஒளியே வீசுகிறது. இருள் ஒளியைத் தருகிறது. ஆம் இது கண்ணன் செய்த மாயம்தான். (பி. ர. 126)

தலைவன் தன் மோதிரம் அனுப்பினான் அதனால் மகிழும் தலைவியின் செயல்

27. ஆணவன் மோதிரம் தந்தான்;
அணிவாள் அணைப்பாள்; முத்தமழை
காணமுன் பொழிவாள்; மீண்டணிவாள்;
காதலன் நினைவால் களிப்புறுவாள்.

காதலன் பரிசாக மோதிரம் அனுப்பினான். அவள் அதை அணிவாள்; கட்டி முத்தமழை பொழிவாள்; முன்னே வைத்துப் பார்த்து மகிழ்வாள். மீண்டும் அணிவாள். அதைக் கண்டு காதலன் நினைவால் மிகவும் களிக்கின்றாள் தலைவி. (பி. ர. 123)

தலைவன் தலைவியரின் செயல் - கவிகூற்று

28. இடைச்சியைக் காதலன் தடுத்தான்;
நாணிலை விடு, வா என் இல்லம்;
தடையிலை தயிரிது வேண்டாம்;
கடையும் தயிரொன்று தருவேன்.

இடைப் பெண் ஒருத்தி தன் தோழிகளுடன் தயிர் தலையில் சுமந்து விற்றுக்கொண்டே தெருவே சென்றாள். திடீரென்று அவள் காதலன் இடையில் பாய்ந்து வழி மறித்து, ''பெண்ணே உன் தயிர் தருகிறாயா?'' என்றான்; அவளோ ''தடை இல்லை. ஆனால் இந்தத் தயிர் வேண்

டாம். உனக்கு நாணம் இல்லை. என்னை இப்பொழுது விட்டு விடு; என் இல்லம் வா. நீ கட்டித் தழுவுகின்ற தயிரைத் தருவேன்'' என்றாள். அவன் இன்பத்தால் வெறி கொண்டான்.

மூலத்தில் புலவர் தயிர் வெண்ணெய் இவற்றையும் புணர்ச்சி இன்பத்தையும் குறிக்கும் இருபொருள் தரும் 'கோரசம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அது தமிழில் வழங்காமையால் கடையும் தயிர் எனப் பட்டது. இதனால் தயிர் கடைந்து வெண்ணெய் என்ற இன்பம் பெறுவது போல் என்னையும் அப்படிச் செய்து இன்பம் என்ற சுகத்தை நீ அடையலாம் என்று தலைவி கூறுகிறாள். (பி. ர. 126)

இராதை கண்ணன் செயல்

29. நாயகி பசுக்களைத் தடுத்தான்;
நாயகன் பசுக்களும் கலந்த;
நாயகி நாயகர் கண்ணும்
மனமும் காதலால் கலந்த.

இராதை பசுக்கூட்டத்தை மேய்க்க ஓட்டிச் சென்றாள்: எதிரே கண்ணன் தன் பசு மந்தையுடன் வந்தான்; இராதையைத் தடுத்தான்; தன் பசுக்களையும் அவளையே மேய்க்கச் சொன்னான். (நீ என் பசுக்களை மேய்: நான் உன்னை மேய்க்கிறேன் என்றானே) இருவர் கண்களும் கலந்தன; மனமும் கலந்தன. (பி. ர. 128)

புக்ககம் போகும் புதுமணப்பெண்

30. நாயகன் இடம் செல்லுநாளை;
நங்கையர் நவிலவும் துள்ளி,
போயவள் போல மகிழ்ந்தாள்;
பொத்தினும் சிவந்தன கன்னம்!

அக்கால முறைப்படி இளம் வயதில் திருமணமாகிப் பிறந்த வீட்டில் இருந்த தலைவி பெரியவளானபின், தோழியர் அவள் கணவன் வீடு செல்ல வேண்டிய நாள் குறிக்கப்பட்டதை (இதற்குக் 'கௌனா' என்று பெயர்) அவளிடம் சொல்லுகிறாள். இதனால் இப்பொழுதே அவனிடம் சென்று விட்டது போல் அவள் மகிழ்ந்தாள். ஆனால் அது வெளியில் தெரிந்து விடுமே என்று வெட்கம். அதனால் அடக்கினாள். இருப்பினும் இளம் பருவத்தினளான அவள் கன்னங்கள் சிவந்தன; அவளைக் காட்டிக் கொடுத்து விட்டன. (பி. ர. 134)

தலைவன் தன் தலைவி அழகு நலம் பற்றித் தன் தோழனிடம் கூறி மகிழ்வது

31. நாணிக் கோணி நடந்தாள்;
நமுட்டுச் சிரிப்புச் சிரித்தாள்;
காணக் காண மகிழ்ந்தேன்;
கள்ளி உளங்கொண்டு போனாள்!

அவளோ அழகி. என்னைப் பார்த்து விட்டாள். ஏற்கெனவே தெரிந்த நடை. இப்பொழு என்னைக் கண்ட வெட்கத்தால் நாணிக் கோணி நடந்தாள். ஆனால் அவளால் என்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. என்னைப் பார்த்தாள்; ஒரு நமுட்டுச் சிரிப்பு; அதாவது குறும்புச் சிரிப்பு சிரித்தாள். இந்தக் காட்சியின் கிறுகிறுப்பில் இருந்து நான் மீள்வதற்குள் அந்த மாயக் கள்ளி என் உள்ளத்தையே பறித்துக் கொண்டு போய் விட்டாள். (607)

கொடிச்சி கையகத் ததுவே பிறர்
விடுக்க லாகாது பிணித்தஎன் நெஞ்சே
—நற்றிணை

(அவள் பிறர் விடுவிக்க இயலாதபடி என் நெஞ்சைக் கையாலேயே பிணித்துக் கொண்டது போல் விடாமல்

எடுத்துச் சென்று விட்டாள். அவள் கையில் அகப்பட்டு விட்டதால் பிறர் விடுவிக்க முடியாதென்கிறாள்.)

இதுவும் தலைவன் தலைவி செயலைக் கூறி மகிழ்வது

32. வீட்டின் வெளிப்புறம் சென்றாள்;
 மீண்டும் மோர் கேட்டு வந்தாள்;
காட்டினள் மேனி சிரித்தாள்:
 காதலைச் சிந்தினள் போனாள்!

"எதிர் வீட்டில் உள்ள என் காதலிக்கு என் ஏக்கம் தெரியும். அதனால் பாலுக்குத் தோய்க்கப் பிறை மோர் கேட்க வந்தது போல் முதலில் உள்ளே வந்தாள். அவளழகை நான் பார்க்க முடிந்தது. ஆனால் மீண்டும் பார்க்கவேண்டும் என்ற ஆசை. இதற்குள் அவள் வெளியே போய்விட்டாள். எதையோ மறந்தவள்போல் மீண்டும் மோர் கேட்டு வந்தாள் (நான் பார்க்க மற்றொரு வாய்ப்பு). ஆனால் போகும்போது உடை நழுவும் பாசாங்கில் தன் மேனியழகைக் காட்டிவிட்டு, காதலையும் சிந்திவிட்டுப் போனாள் (மோர், பால் இவை கையில்; அவள் சிந்தியது காதல்). அவள் வரும்போது முன்னழகைப் பார்த்தேன்; மீண்டும் போகும்போது அவள் பின்னழகைப் பார்த்தேன்." இவ்வளவையும் புலவன் கொட்டி விடுகின்றான்.

(பி. ர. 144)

தலைவி தன் தலைவனைப் பற்றிக் கூறுவது

33. ஆவோடு தெருவோடு சென்றான்;
 அன்பாகக் கதவூடு கண்டான்;
பாவைஎன் கண்களைப் பார்வைப்
 பசையினால் பறித்திட்டுச் சென்றான்.

தலைவி வீட்டுக்குள்ளே தெருநோக்கி இருந்தாள். இருப்பினும் 'அவன்' பார்க்க வேண்டும் என்பதற்காக வாயிற் கதவைப் பாதி திறந்து வைத்திருந்தாள். 'அவன்'- அதுதான் அந்தக் கண்ணன், தெருவழியே தன் பசுக்களை ஓட்டிக் கொண்டே சென்றான். இவள் வீட்டெதிரில் போகும் போது தன் மாயப் பார்வையால் கதவிடுக்கு வழியாக இவளைப் பார்த்தான். அவன் பார்வையில் ஏது பசை? அப்படியே இவள் பார்வையையும் ஒத்தி எடுத்துக்கொண்டு போய்விட்டான். (பி. ர. 147)

ராதையின் தோழி ராதையின் காதல் பார்வையின் வலிமையைக் கூறுவது

34. கவர்ந்திழுத்துன் கண்ணிணை
செய்த தென்ன மாயமோ?
அவன் புனைந்த முடிகுழல்
அவனோ டாடை சரியுமே!

ராதை காதலோடு தன் இரு கண்களாலும் கவர்ச்சியோடு அவனைப் பார்த்தாள். அவள் கண்கள் என்ன மாயம் செய்தன! அவள் பார்வை மயக்கம் தாளாத கண்ணன் கீழே சரிந்தான் ஆடை சரிந்தது; அவன் திருமுடி சரிந்தது. கையில் இருந்த குழலும் ஒரு மூலைக்கு ஓடிவிட்டது. தோழி! உன் கண் செய்த மாயம் என்ன? உன் கண்ணன் நிலை குலைந்து விட்டானே!

(பி. ர. 154)

தலைவி தோழியிடம் தலைவன் அழகின் வலிமை கூறுவது

35. மானம் கெட்ட கண்களிவை
மதியும் கெட்டுப் போயினவே!
நானும் இழுத்து வைத்தாலும்
நந்தன் தனையே நாடுதடி!

என்னைப் போலவே என் கண்களுக்கும் மானம் ஈனம் வெட்கம் எதுவும் கிடையாது. இவற்றிற்கு இப்பொழுது புத்தியும் மழுங்கிவிட்டது. அவனையே மீண்டும் மீண்டும் பார்க்கின்றன. எத்தனையோ தடவை பிடித்திழுத்து வைக்கிறேன். அவை அவிழ்த்துக் கொண்டுபோய் அவனையே பார்க்கின்றனவே. என் செய்வேன்? நந்தனை அவை விடவில்லையே! (பி. ர. 157)

இதுவும் அப்படியே

36. அடிமுடி வரையில் அவனுருவம்
பலகால் கண்டும் ஆசைதான்
விடுவதுமில்லை கண்களவன்
முகநகை வேண்டி ஏங்குடி!

இராதை தோழியிடம் சொல்லுகிறாள். நானொரு வெட்கம் கெட்டவள். என் ஆசை நாயகன் கண்ணனை உச்சி முதல் உள்ளங்கால் வரை பலமுறையும் கண்டு விட்டேன். ஆனால் என் கண்களுக்கோ ஆசை அடங்க வில்லை. மீண்டும் மீண்டும் அவன் முகத்தைப் பார்த்து, அதில் தோன்றும் என்னைக் கவர்ந்திழுக்கும். அவன் அழகிய புன்னகை ஒன்றையே வேண்டி இவை தவிக்குதடி! என் செய்வேன்?

''கோடி செம்பொன் போனாலென்ன—ஐயன்
குறுநகை போதுமடி!''

என்று யாரோ பாடிய ஓசை இன்னும் காதில் விழுகிறது. (பி. ர. 158)

இராதை கண்ணனிடம் கூறுவது

37. கட்டை விரலைத் தா! என்பாய்;
கையும் மெய்யும் இழுத்தணைப்பாய்!
குட்டை வாமனக் கண்ணா! உன்
குறும்புக் குணத்தை அறியேனோ?

இராதை தன் காதலன் கண்ணன் காதல் சாகசத்தைக் கூறிப் பரவசப்படுகிறாள் ''அன்பே கொஞ்சம் கிட்டே வாயேன்; கட்டை விரல் முனையை மட்டும் நீட்டு. நான் தொட்டுக் கொள்கிறேன்'' என்கிறான். அவள் உண்மை என்று தயங்கிக் கொண்டே தன் கைக் கட்டை விரலை மட்டும் நீட்டுகிறாள். ஆனால் அவன் அதுதான் சாக்கென்று லபக்கென்று விரலோடு கையையும் அவள் நளின உடல் முழுவதையும் பாய்ந்து, ''அகப்பட்டுக் கொண்டாயா? இனி விடமாட்டேன்'' என்று அணைத்து, வாளிப்பான அவள் உடல் பரிச இன்பத்தை அவன் முழுவதும் அனுபவித்தான். அவள் விடுவித்துக் கொண்டாள். அவன் மீண்டும் கட்டைவிரல் 'தானம்' கேட்கிறான். இராதை சொல்லுவாள்: ''கண்ணா! நீ ஏமாற்று வித்தைக் காரன்; இனி உன்னை நம்பமாட் டேன்'' என்கிறாள். குள்ள வாமனனாக வந்து மாபலியை ஓரடி மண் கேட்டு மூவடியும் பறித்துக் கொண்டாய். அதுபோல் முன்னால் ஒருமுறை என் கட்டை விரலை மட்டும் கேட்டுவிட்டு உடல் முழுவதையும் பிடித்து அணைத்து **ஆதிக்கம்** செலுத்தினாயே. இனி ஏமாற மாட்டேன். (ஆதிக்கம் செலுத்தியது அவளிடம் காம இன்பம் கண்டது என்றாள் இராதை.) (598)

இராதை கண்ணனிடம் தன் கண் மூலம் தன் ஈடுபாட்டைக் கூறுவது

38. இழக்க இழக்க இழந்துழலும்
என்கண் என்சொல் கேட்டிலவே!
சழக்கன் அழகைப் பலகாலும்
தான்கண் டெனையும் இழக்குதடி!

தோழி! நான் என் மாயக்கண்ணன் அழகில் முழுவதும் இழந்து விட்டேனடி. என் கண்ணே எனக்குப் பகை. சூதில் இழப்பவன் வென்று விடலாம் என்று எண்ணி மீண்டும்

மீண்டும் இழப்பதுபோல், என்கண் அவனைக் காணும் தோறும் காணும் தோறும், நான் எவ்வளவோ கட்டுப் படுத்தியும் மீண்டும் கண்டு கண்டு, என்னைக் கடைசியில் அவனிடம் இழந்து விட்டதடி! என்செய்வேன்! (591)

வேலை நிமித்தம் வெளியூர் செல்ல எண்ணிய தலைவன், தலைவி பிரியமுடியாமல் தவித்து அழுதலைக் கண்டு, தன் பயணத்தைக் கைவிடுவதைக் கூறுவது

39\. அழுவாள் விழுவாள் தொழுவாள்:
அவன்முன் கண்ணீர் விடுவாள்!
தழுவி அவனும் அழுதான்;
தடுத்துக் கொண்டான் பயணம்.

தலைவன் வெளியூர் செல்லக் கிளம்பினான். பிரிவு பொறுக்க மாட்டாத தலைவி அழுதாள். விழுந்தழுதாள்; அவனைத் தொழுதாள். பிரியவேண்டாம் என்று கெஞ்சி அழுதாள். அந்த நிலையிலும் அவள் அழகு வேறுஒரு வகையாகப் பளிச்சிடுவதைக் கண்ட தலைவன், அவள் அழுவதை மனம் சகியாமல், அவளைத் தழுவி அணைத்துக் கொண்டு, ‘கண்ணே நான் போகமாட்டேன்’ என்று கூறித் தன் பயணத்தை நிறுத்திவிட்டான். (353)

தலைவி தோழிக்குக் கூறியது

40\. கண்ணால் காணும் பொழுதே
கண்ணால் உள்ளம் கொண்டான்;
பெண்ணே! நான்என் செய்வேன்;
பெரியன் பகலும் கள்ளன்!

தோழி! கண்ணன் பலே கைகாரன். நான் அவன் அழகைக் கண்ணால் கண்டேன். அவனும் என்னைக் கண்ணால் கண்டு அப்படியே என் உள்ளத்தையும் இழுத்துப் பறித்துக் கொண்டான். இப்படிப் பட்டப் பகலிலேயே பகல் கொள்ளை அடித்தானே! நான் விழித் திருக்கும்போதே விழியைப் பிடுங்கி விட்டானே! என் செய்வேன்!

**தலைவி தலைவனுடன் யாருக்கும் தெரியாமல்
ஒரு சோலைக்குள் தலைவனுடன் கூடிவிட்டு
அவனுக்கு முன்னே இவள் சோலையிலிருந்து
வெளிப்படுகிறாள். கண்டுவிட்டனர் பலர்;
அதை மறைக்கத் தோழிக்குக் கூறும்
முகத்தால் பொதுப் படையாகக்
காரணம் கூறுகிறாள்.**

41. சோலை ஆலங் காட்டில்
  சோர்வால் வழியை இழந்தேன்;
 பீலி சூடி வந்தான்;
  பின்னால் பிழைத்து வந்தேன்!

''தோழி நான் மலர் பறிக்க இந்த இருண்ட நெருங்கிய சோலையின் உள்ளே சென்று விட்டேன். ஓர் ஆலமரத் தடியில் போனபின் வழி மறந்து போயிற்று. அங்கே கண்ணன் திருமுடியில் மயிலிறகு சூடி வந்தான். அவன் தான் வழிகாட்டி முன்னே வந்தான். நான் தப்பிப் பிழைத்து வெளியில் வந்தேன். இதுதான் உண்மை.'' இவள் ஆலமரத்தடியை ஏன் குறிப்பிடுகிறாள்? அங்கே-தான் அவனுடன் 'அது' நடந்தது என்று தோழிக்கு மட்டும் குறிப்பாய் விளக்குகிறாள். (பி. ர. 162)

தோழி தலைவிக்குக் கூறியது

42. பெண்ணே! கண்ணோ! படையோ?
அளவில் ஆடவர் நடுவே
கண்ணால் 'அவனை' இழுப்பாய்;
காதலுக் கிடைவெளி உண்டோ?

தோழி! நீ மிகவும் சாகசக்காரி. உன்னிடம் இருக்கும் கண்ணென்னும் ஆயுதம் மிகவும் பொல்லாதது, பல படை வீரர்கள் நடுவே தன் பகைவனை மட்டும் தொலைவில் எங்கிருந்தாலும் தேடிச் சென்று அழிக்கும் ஒரு வீரன் போலே ஆடவர் பலர் இருந்தும் உன் கண் 'ஜாடை காட்டி' அவர்கள் நடுவே வெகு தொலைவில் உள்ள உன்னவனைக் காதலலை 'ம்...வா இங்கே' என்கிறது. அவனும் ஓடி வந்து விடுகிறான். நீ மிகவும் பொல்லாதவள் தான். **(191)**

தோழி தலைவனுக்குத் தலைவி மிகவும் இளையவள் இதற்குள் 'அதற்கு' அவசரம் வேண்டாம் என்கிறாள்

43. அறியாப் பருவத் தாளே,
அதற்குள் அவசரம் ஏனோ?
அறுகால் வண்டோ சுழலும்
அரும்பு மெல்லிது கண்டே!

மலராத அரும்பின்மேல் வண்டு ரீங்காரம் செய்து சுழலுமே அன்றி அதன் மேல் விழுந்து புரளாது. ஏன் என்றால் அரும்பும் அதன் காம்பும் மெல்லியவை யாகையால், வண்டு உட்கார்ந்தால் அதன் பளுவைக் காம்பால் தாள முடியாது. அதனால் மலரும் வரை வண்டு காத்திருக்கும். அதன் வாசத்திற்காகவே சுழலும்.

மலரைப் போல் இவளும் மிகவும் சின்னவள்; அறியாப் பருவத்தாள். உன் கலவிக்கு இவள் ஈடு கொடுக்க முடியாத நிலை. அதனால் இவள் பருவ எழில் படிப்படியாக வளரு வதை மலருவதை பார்த்துப் பழகிக் கொண்டே வா. இவளுக்கும் 'அதற்குத்' தாங்கும் வலிமை வரும்போது உன்னிடம் அச்சம் நாணம் நீங்கித் தானே தன்னைக் கொடுக்கும் பக்குவம் வந்துவிடும். அப்புறம் என்ன? இன்பம் கொள்ளை கொள்ளை தான்.

இங்கே மெல்லிய மலர் வண்டின் பளுவைத் தாங்காது என்று கூறுவதால் பெண் தாங்கி ஏந்திக் கொள்ள ஆண் அனுபவிக்கும் இன்பத்தைச் சுட்டிக் காட்டுகிறார் புலவர்.

ஒரு 'அஞ்ஞாதயௌவனா' என்ற நாயகி கள்ளருந்திப் போதையில் கணவனைக் கூட்டி மகிழும் காட்சி

44. சிரித்துச் சிறியள் விழுகின்றாள்;
கள்ளால் மயங்கி நெளிகின்றாள்;
புரியா மழலை பொழிந்தவனைப்
புல்லிப் புல்லி மகிழ்வாளே!

இவள் மிகவும் இளையவள்; காதலிலும் காமத்திலும் இன்னமும் அனுபவமில்லை. சாதாரண நிலையில் கணவனைக் கண்டால் மிகவும் கூச்சப்படும் இவள், அவன் முன்னிலையில் கள்ளருந்தி விடுகிறாள். கூச்சம் நாணம் பறந்து விடுகின்றன. காரணமின்றி அவர்கள் இரவில் பேசிய இரகசியங்களையெல்லாம் புரியாத மழலைச் சொற்களில் குழறிக் கொட்டுகிறாள். அடிக்கடி சிரிக்கின்றாள். கள்ளால் வந்த போதையால் தானே ஓடிப்போய்க் கணவனை வலிய அணைத்துத் தழுவித் தழுவிப் பலகாலும் மகிழ்கின்றாள்! நெளிகின்றாள். (361)

இராதை பிரிவு நிலையில் கூறுவது

45. கண்ணன் நின்ற இடமெல்லாம்
கண்ணன் இன்னமும் தெரிகின்றான்!
கண்ணைக் கவரும் இடமவையே!
காதல் மயக்கம் இதுதானோ?

தோழி! கண்ணனை நான் பல இடங்களில் பார்த்து மகிழ்ந்தேன். அவனோ இன்று பிரிந்து சென்றுவிட்டான். ஆனால் அவன் நின்ற இடங்கள் தோறும் அவன் இப்பொழுது இல்லாவிட்டாலும் அங்கங்கே அவன் நிற்பது போன்ற உருவெளித் தோற்றம் இப்பொழுதுகூட எனக்குத் தெரிகிறதடி. இது உண்மையா? அல்லது காதலால் வந்த மயக்கமா? புரியவில்லையடி! (பி. ர. 142)

நாயகன் நாயகி தம்முள் நோக்குதல்

46, மாடம் பிடித்தனர் எதிரெதிர்;
மன்னனும் மங்கையும் நோக்கினர்;
ஆடிடும் கூத்தரின் கயிறுபோல்
அவர் அவர் நோக்கமும் பின்னவே!

காதலன் காதலியர் எதிர்எதிர் வீட்டினர். இருவரும் தங்கள் தங்கள் மாடத்தில் (பால்கனியில்) ஏறினர். மகிழ்வுடன் ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் பார்த்துக் கொண்டனர். அவர்களுடைய பின்னிய பார்வை இரண்டு மாடத்திடை கழைக் கூத்தாடுபவர் இருகொம்புகளிடையே ஆடுவதற்குக் கட்டிய கயிறு போல் ஆகிவிட்டது. (பி. ர. 193)

எதிர் வீட்டு நாயகனைப் பார்க்கும் நாயகியின் செயல்

47. மாடத்தில் ஏறி இறங்குவாள்,
மன்னனைப் பலமுறை காணவே;
ஆடிடும் கூத்தின மங்கைபோல்,
ஆசையால் சோர்விலா நங்கையே!

எதிர் வீட்டிலுள்ள தன் காதலனைக் காண, அடிக்கடி காண, அவளுக்குக் கொள்ளை ஆசை. அதனால் தன் வீட்டு மாடத்தின் மேல் (பால்கனி—இதுதான் பலகணி—இல்லை பல கணி—பல கண் துளையுடையது—பலகணியாகி, பால் கனியாகியது) அடிக்கடி பலமுறை பார்த்துப் பார்த்து ஏறி ஏறி இறங்குகிறாள். அதனால் அவள் களைப்பே அடையவில்லை, ஏனென்றால் அவ்வளவு ஆசை. இது கழைக்கூத்தாடிப் பெண் நட்ட உயரமான கொம்பின் மேல் பலமுறை ஏறி இறங்குவது போல் உள்ளது. (பி.ர.194)

கண்ணன் அழகுக்குக் கண்கள் ராதையை விலைபேசியது

48. உடையவளைக் கேட்காமல்
உயர் விலைசொல் என் கண்கள்
உடைய அவன் அழகுக்கென்
உடைமையெலாம் கொடுத்தனவே!

என்கண்கள் வெட்கமற்ற நியாயமற்ற தரகர்கள் ஆகிவிட்டன. அவன் அழகைப் பார்த்தன (நான் அதனால் என்னையே இழந்தேன்.) என் அழகை அவனும் பார்த்து என்னை உரிமை ஆக்கிக் கொண்டான். இதற்குக் காரணம் யார்? யஜமானியாகிய என்னிடம் கூடச் சம்மதம் கேட்காமல் இந்த மானம் கெட்ட என் கண்கள், என் தரகர்கள், அவன் அழகுக்கு ஈடாக மொத்தமாக என்னையே விற்று விட்டன. என் செய்வேன்? (பி.ர.195)

ஒரு கருமை நிற அழகியிடம் மனம் பறி கொடுத்த ஆணழகன் தோழனிடம் கூறுவது

49. ஒளிவாள் நெளிவாள்; ஒயிலாக
அங்கம் குலுங்க அவள் வருவாள்;
எளியேன் ஆவி பிரியுதடா!
எமனோ, கரும் பெண் அரவமிதோ?

தோழா! அவள் நிறம் கரியவள்தான். ஆனால் அவள் ஒவ்வொரு அங்கமும் அத்தனையும் வாளிப்பு, பளபளப்பு, மழமழப்பு. மெல்லிய அசையும் மதமதப்பு. இந்த இளமையால் அவள் அசைவு ஒவ்வொன்றும் ஓர் அழகு. ஒளிந்துவிடுவாள் ஒரு கணம். அடுத்த கணம் வளைந்து வளைந்து ஒயிலாக எல்லா அங்கமும் குலுங்க என் மனமும் குலுங்க அசைந்து அசைந்து நடப்பாள். இவள் அழகைக் கண்டு நான் கொள்ளை போய்விட்டேன். என் உயிரே பிரிந்து விட்டது. என்னைத் தீண்டிப் பற்றிய கரிய பெண்ணென்னும் பாம்போ அல்லது எமனோ இவள்? அறியேன்! (கரும் பாம்பு, நெளிந்து வளைந்து போவது போல் இவளும் என்னெதிரில் உலாவி உயிர் கொண்டாள்.)

(பி.ர. 196)

காதலன் ஆடிய கண்ணாமூச்சி

50. கண்ணனும் கண்பொத்தி நின்றான்;
கன்னியும் கண்ணனை உணர்ந்தாள்;
கண்ணனைத் துள்ளி அணைத்தாள்;
காதலர் பறந்தனர் விண்ணில்.

காதலனான கண்ணன் தன் காதலி ஒருத்தியை அவள் அறியாமல் பின்னால் வந்து அவள் கண்களைப் பொத்தினான். அவள் உத்தமப் பத்தினிப் பெண். ஆகையால் அவன் பரிசத்தாலேயே அவன் தன் காதலன்தான் என்பதை உணர்ந்து கொண்டாள். உடனே சற்றும் எதிர்பார்க்காமல் துண்ணென விரைவாகத் துள்ளிக் குதித்துத் தன் இரு கைகளை அவன் தோள் மேல் பூட்டி நெருக்கி, அவனை அணைத்துக் கொண்டாள். வலிய அணைத்த சுகமல்லவா? இருவரும் இன்பத்தால் சுவர்க்கத்துக்கே சென்று விட்டனர். (பி. ர. 200)

நாயகி நாயகனைக் காணாமல் சொன்னவை

51. கூட்டம் இடையே பவளவிதழ்
கூடாள் காணாள் மொழிகின்றாள்:
வாட்டிஎன் நெஞ்சை அவள் போனாள்;
மாதவள் சொன்ன தெதுவோதான்?

என் காதலி கூட்டத்தின் நடுவே போய்க்கொண் டிருந்தாள். நான் பார்த்தேன். அது அவள் அறிவாள். பிறர் பார்த்துவிடப் போகிறார்களே என்று நான் காணும் போதே அவள் தன் பவள இதழை அசைத்து ஏதோ முணு முணுத்தாள். அது என் நெஞ்சை வாட்டியது. அவள் சொன்ன செய்தி என்ன என்றுதான் தவிக்குது நெஞ்சம். அவளோ போய்விட்டாள். என் செய்வேன்! (பி. ர. 202)

தலைவி புதுக் காதலி — தலைவனைக் காண இயலாத் தவிப்பு

52. காணும் காதல் புதிதாகப்
போவாள் வருவாள்; காதலனைக்
காண இயலாள்; தச்சன்கைத்
துளைசெய் கருவி நூலானாள்.

இவள் புதிதாகக் காதலித்தவள். அனுபவம் புதிது. அதனால் (எதிர் வீட்டுக் காதலனைக் காணத்) தன் வீட்டின் உள்ளேயும் வெளியேயும் மாறி அலைகின்றாள்; தச்சன் துளை போடும் கருவித் தண்டில் சுற்றிய நூல் மாறி மாறி முன்னும் பின்னும் சுழல்வது போல் இவளும் சுழல்கின்றாள். (பி. ர 205)

இதுவும் தலைவனைக் காணத் துடிக்கும் தலைவியின் செயல்

53. இங்கும் அங்கும் அலைகின்றாள்;
பிரிவால் துயரால் மெலிகின்றாள்;
நங்கை இவளே பரம்பரம்போல்,
நம்பி நினைவால் சுழல்கின்றாள்.

அவள் காதலனைக் காண வெளியே செல்லுகிறாள். ஆனால் மற்றவர்களுக்கு அஞ்சி மீண்டும் உள்ளே திரும்புகிறாள். பிரிவால், அதனால் வந்த துன்பத்தால் இவள் மெலிகின்றாள். சிறுவர் கைப் பம்பரம் போல் இவள் உள்ளும் வெளியும் சுழல்கின்றாள். ஐயோ! பாவம்!

(பி. ர. 206)

தலைவனை இருளில் காணச் செல்லும் 'அபிசாரிகா' என்னும் தலைவியைப் பற்றித் தோழி சொல்லுவது

54. நீலச் சேலை சுற்றியதால்
நின்னை இருளும் மறைத் திடுமோ?
கோல விளக்கின் சுடரேபோல்,
கொடியே! மேனி பளிச்சிடுமே!

தோழி! இருட்டில் யாருக்கும் தெரியக்கூடாது என்று இருட்டைப் போலவே மறைப்பு நிறமான நீலச் சேலையைச் சுற்றிக்கொண்டு, இரவில் காதலனைக் காணச் செல்வதுதான் தப்பு. நீயோ சிவப்பு; உன் மேனி பொன்னிறம். அழகியவிளக்கு பொன்னொளி வீசி நடப்பது போல், உன் உருவத்தின் மேனி ஒளி இரவை ஒளியாக்கிச் செல்லுமே? நீலப்பட்டில் முத்தைவைத்தால், அது இன்னும் வெண்மையாக ஒளிரும். அதுபோல் நீலப் பின்னணியில் (Back ground) உன் செம்மை நிறம் மேலும் அதிகமாகத் தோன்றும். (152)

தலைவியின் காதல் மயக்கம்-தலைவன் வசப்படுவது பற்றித் தோழி கூறுவது

55. காட்டில் இருளில் சிலம்பொலியால்,
காதல்போதை தலைக்கேறும்;
நாட்டில் நாயகி உன்மழலை
நாயகன் கேட்டால் என்னாவான்?

யமுனைக் கரையிலே இருண்ட சோலையிலே இரவில் நாயகன் போய்க் கொண்டிருந்தான். நீ மெள்ள நடந்து அவனைத் தொடர்ந்தாய். உன் சிலம்பொலி 'கல், கல்' எனக் கேட்டது. உன் நடையின் அமைப்பு அவன் உணர்ந் தவன். சிலம்போசையால் நீதான் நடந்து வருகிறாய் என்று அவனுக்குப் புரிந்தது. உடனே காதல்போதை அவன் தலைக்கேறியது. இரவிலேயே இந்தக் கதி என்றால் பகலில் உன் இனிய கொஞ்சும் மழலைச் சொல்லோசை யைக் கேட்டல், அவன் என்னாவான்? பாவம்! அவனை அணைத்துக் காத்துக் கொள்ளடி! (பி.ர. 207)

தோழிக்குத் தலைவன் அழகுபற்றித் தலைவி கூறியது

56. காணக் காண அவனழகு
கண்ணில் அடங்காப் புதுவண்ணம்!
காண நீந்திக் கடலாழம்
காண யார்தாம் முயல்வாரோ?

என் நாயகன் அழகைச் சொல்லி முடியாது. காணும் தோறும் காணும்தோறும் புதுவண்ணமும் பொலிவுமாய் அவன் தோன்றுகின்றான். ஒவ்வொருமுறை பார்க்கும் போதும், அவன் அழகின் எல்லை விரிகிறது. கடலின் ஆழத்தை நீந்தியும் முழுகியும் யார்தாம் ஆழத்தையும் அகலத்தையும் காண முடியும்? (பி. ர. 213)

தலைவன் அழகில் தலைவி மூழ்குவது

57. அல்லும்பகலும் ஆணழகன்
அழகை அள்ளிப் பருகிடுவாள்;
சொல்ல இயலாள் துடிக்கின்றாள்;
தொடரும் மனமும் துன்புறுமே!

தலைவி தலைவனின் எல்லையற்ற அழகை அள்ளிப் பருகுகிறாள். அதுவோ கடல், இரவும் பகலும் பார்த்துப் பார்த்து அந்த அழகு வெள்ளத்தைப் பருகுவாள். ஆனால் இந்த அழகை அவளால் சொல்லமுடியவில்லை. அவன் பிரிவின் துயரும் சொல்லில் அடங்காது. அவன் பிரிந்து போனபோது, அவனுடன் சென்ற மனம் தானும் துன்புறுகிறது, என் செய்வாள்? (பி.ர. 218)

கண்ணன் கோபியர் சேலை திருடியது

58. சேலை கவர்ந்தான் இளங்கண்ணன்;
சேர்த்துக் கையால் கும்பிட்டால்,
சேலை தருவேன் என்கின்றான்;
கோபியர் சிரித்துப் பணிகின்றார்.

இளங்கண்ணன் வாளிப்பான இடைப் பெண்களின் சேலையைத் திருடினான். இருகையையும் உயர்த்தித் தூக்கிக் கும்பிட்டால்தான் தருவேன் என்கின்றான். அவர்களும் சம்மதித்துத் தம் வெறும் உடலெல்லாம் வெளியே தெரியக் கையை உயர்த்தித் தூக்கிப் கும்பிட்டு மகிழ்ந்தனர்.

கோபியர் இங்கே ஜீவான்மாக்கள்; புடவை போல் கண்ணன் என்ற பரமாத்மா தெரியாமல் அவர்களை உடல் மாயை மறைத்துச் சுற்றியிருக்கிறது. அதைக் கண்ணன் திருடிக்கொண்டான். இருந்தாலும் உடல்மேல் அவர்களுக்கு அபிமானம் போகவில்லை. அதையும்

அந்த ஜீவாத்மாக்கள் கைதூக்கிக் கும்பிட்டுப் பற்றை எல்லாம் விட்டார்கள். அதனால் வீடுபேறு பெற்றார்கள்.

சைவத்தில் சிவபெருமான் அம்மணமாக ரிஷிபத்தினிகளிடம் பிச்சை கேட்டது இதைத்தான். தாங்கள் இறைவனைக்காணக் தங்கள் அபிமானத்தை அவர்கள் ஒழித்து, அதையே பிச்சையாகக் கேட்டான். வைணவத்தில் கடவுள் ஜீவாத்மாக்களை அம்மணம் (ஒன்றும் அற்ற தன்மை) ஆக்கினான். ஆனால், சைவத்தில் கடவுள்தான் அம்மணமாகி ஜீவான்மாக்களின் அபிமானத்தை விடச் செய்தான். இதுதான் ராசலீலையின் தத்துவமும் என்றுணர வேண்டும். (பி.ர. 224)

தலைவியின் செயலைத் தலைவன் கூறி மகிழ்வது

59. புருவம் உயர்த்தி முந்தானை
தூக்கி இறக்கி, முகம் காட்டி,
பருவ எழிலின் வகைகாட்டிப்
பாவை உடனுள் புகுவாளே.

என் ஆசை என் நாயகிக்குத் தெரியும். அவள் என் எதிர்வீட்டுக்காரி. வெளியே வந்தாள். நான் பார்த்தேன். திடீரென்று முகத்திரையைத் தூக்கினாள்; புருவத்தை உயர்த்தினாள். முகத்திரையைத் தூக்கியதால், அவளுடைய வாளிப்பான திரண்டுருண்ட மேனி அழகு அப்படியே வெளிப்பட்டது. நான் கண்டு மகிழ்ந்தேன். அடிக்கடி இப்படி அவள் முகத்திரையை வெவ்வேறு உயரக்கணக்கில் தூக்கித் தூக்கி இறக்கினாள். இதனால்அவள் நெளியும் இடை, மும்மடிப்புள்ள அகலவயிறு, அடுத்தமுறை அவளின் திரண்டுருண்ட இரு கொங்கைகள் எல்லாம் படிப்படியாகத் தெரிந்தன. ஆனால், எல்லாவற்றையும் எனக்கு மட்டும் ஒரு கணத்தில் காட்டிவிட்டு, வீட்டுக்குள் ஓடி மறைந்தாள் அந்த மாயக் கள்ளி,

(பி.ர. 242)

தயிர் கடையும் இளம்பெண் முன் காதலன் வர அவள் நிலை

60. தயிரைக் கடைவான் உயிரன்பன்
தன்னைக் கண்டாள்; தடுமாறித்
தயிரைக் கடையாள் தண்ணீரைத்
தலைகீழ் மத்தால் கடைவாளே!

இளம்பெண் ஒருத்தி இப்பொழுதுதான் அவளுக்குக் காதல் அரும்பியிருக்கிறது. ஒருநாள் அவள் தயிர் கடைந்துகொண்டிருக்கிறாள். திடீரென அவளுடைய காதலன் அவள் முன்னால் வந்து, தோன்றுகிறான். அவளுக்கு ஆசை அதிர்ச்சி, ஆர்வம் இவற்றால் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. தான் கடைந்து கொண்டிருந்த தயிர்ப்பானையை விட்டுவிட்டுப் பக்கத்தில் இருந்த தண்ணீர்ப்பானையில் மத்தைத் தலை கீழாக வைத்துத் தாம்பால் வெறும் தண்ணீரைக் கடைகின்றாள். என்னே காதல் தடுமாற்றம்! (பிர. 245)

ஒரு சோரநாயகி (பரகீயா நாயகி)யின் செயல்—தோழி கூற்று

61. கொழுந்தன் மலரால் அடித்தான்;
கொடியிடை கூவிச் சிலிர்த்தாள்;
கொழுந்தேள் கொட்டிய தென்றே
களிம்புடன் சென்றேன் மீண்டேன்,

நாயகி கள்ள ஒழுக்கம் உள்ளவள். திடீரென்று அவளுடன் கள்ளத் தொடர்புள்ள அவள் மைத்துனன் தான் வந்திருப்பதை உணர்த்த, அவளை மலரால் தொலைவிலிருந்து அடித்தான். திடீரென்று ஏற்பட்டதால் சிலிர்த்துப் போய்ச் சத்தம் போட்டு விட்டாள். இவளைத் தேள்தான் கொட்டியதோ என்றெண்ணி, அதற்குரிய களிம்போடு அருகே சென்றேன். அதற்குள் அவர்கள்

சரசம் ஆரம்பித்து விட்டது. விஷயத்தைப் புரிந்து கொண்ட நான் மருந்தொடு திரும்பிவிட்டேன்.
(இப்படிப்பட்ட காதல் தமிழில் இல்லை.) (பி.ர. 246)

தலைவியின் தன்னைக் காணும் அழகு பற்றித் தலைவன்

62 உயரப் பறந்து கீழ்ப்பாயும்
இரையைப் பற்றும் கழுகைப்போல்,
உயர உயர்த்தி எனைப் பார்ப்பாள்;
உடனே நாணி நிலம் பார்ப்பாள்.

உயரப் பறக்கும் கழுகு திடீரெனத் தன் இரையின் பொருட்டுக் கீழே பாய்ந்து பற்றுவது போல், இவள் கண்களை நிமிர்த்தி என்னைப் பார்த்தாள். நான் பார்த்து விட்டேன். அதனால் நாணத்தால் தலைகவிழ்ந்து நிலத்தைப் பார்க்கலானாள்.

பிஹாரிலால் வள்ளுவரைப் படித்தாரோ?

யான்நோக்கும் காலை நிலனோக்கும், நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

பிஹாரி ஒருபடி மேலே சென்று காதலியின் செயலைப் பறக்கும் இரை பிடிக்கும் கழுகுடன் ஒப்பிட்டு விட்டார். கழுகு இரையைப் பிடித்தது. இவளோ தன் போதைப் பார்வையால் தலைவன் என்னும் தனக்குரிய இரையைப் பற்றிக் கொண்டாள். (பி.ர. 257)

திருமணம் ஆவதற்கு முன்னமே திருமணம்

63. புளக மயிரும் புல்லாகப்
புதிய வியர்வை புனலாக,
உளமொன் றானார்; கைப்பற்றும்
உண்மைத் திருமணம் இது தானோ?

இவர்கள் புதிய காதலர்கள்; முதல் முதல் சந்தித்துக் கைப் பிடித்துத் தழுவினர். இதனால் இருவருக்கும் உணர்ச்சி வசத்தால் மயிர் புளகித்துக் குத்திடுகிறது; புதுவியர்வை புனலாகப் பாய்கிறது. இந்த மயிரே தருப்பைப் புல்லாகவும், வியர்வையே பவித்திரக்கையில் ஊற்றித் தகப்பன் தாரை வார்த்துக் கொடுக்கும் தண்ணீராகவும் உதவ, இவர்கள் முறைப்படிக் கணவன் மனைவி ஆவதற்கு முன்னமேயே மணந்து விட்டனர் போலும். முதல் முதலில் தழுவும் ஆண் பெண் மெய்ப்பாட்டை இப்படி நயம்படக் கூறினார் புலவர். (259)

அடுத்த வீட்டில் தலைவன் படும் அவதி

64. அவனோ பிரிவால் அலமருவான்,
அடுத்த வீட்டில் பெருமூச்சால்;
செவிகேட் டிருந்தும் செயலறியேன்;
சென்று புல்லித் தணித்திலனே!

தலைவி சொல்லுவாள்: எங்கள் இருவர் வீடும் பக்கத்தில் உள்ளன. என் தலைவன் என் பிரிவால் வாடித் தவிக்கின்றான்; பெருமூச்சு விடுகின்றான். அவன் மூச்சு விடும் ஓசை இந்த அமைதியான இரவில் இங்கே என் செவியில் விழுகிறது. நான் என்ன செய்வேன்? செய்வதொன்றறியேன்! அடுத்த வீட்டில் அருகில் இருந்தும் ஓடிச் சென்று அவனை அணைத்து, அவன் தாபத்தைத் தணிக்க முடியவில்லையே! (பி.ர. 262)

தலைவியைக் கண்டு - மீண்டும் காணாத் தலைவன்

65. சாளரத் துனது முகமென்னும்
சந்திர உதயம் அவன் கணடான்;
மீளக் காணும் ஆசையினால்
மீளான் துயில இரவெல்லாம்.

தோழி சொல்லுவாள் : உன் காதலன் ஜன்னலின் முன்னே நீ நிற்கும் போது, அங்கு உதயமான உன் சந்திர வதனத்தைப் பார்த்து விட்டான். மீண்டும் இவள் ஜன்னலருகே வரமாட்டாளா, நாம் மறுபடியும் காண மாட்டோமோ என்ற ஏக்கத்துடன் இரவெல்லாம் தூங்கப் போகாமல் உன் வீட்டு ஜன்னலையே பார்த்துக் கொண்டு விழித்திருந்தான்!

(இது இவளுக்கு எப்படித் தெரியும்? இவளும் விழித் திருந்தாளோ?) *(263)*

பரத்தையைக்காதல் செய்யும் சொற்பொழிவாளன்

66. பரத்தைக் காதல் இழிவெல்லாம்
 பரக்கப் பேச அவனுடைய
பரத்தை பார்த்துப் புன்னகைத்தாள்;
 பாவம்! அவனோ அடக்குகிறான்!

அவன் சமயச் சொற்பொழிவாளன். பிறன்மனை நயத்தல், பரத்தையைக்கூடி ஒழுகும் தீமை எல்லாவற்றை யும் பற்றி ஒரு சபையில் சொற்பொழிவு செய்கிறான். அங்கே உள்ள அவனுடைய வைப்பாட்டியான பரத்தை அவனைப் பார்த்து, பொருளுள்ள புதிய புன்னகை செய்தாள். இவனும் சிரிக்கப் பார்த்தான். தன் மரியாதை காற்றில் பறக்குமே என்றஞ்சி எப்படியோ அதை அமுக்கி விட்டான். (பி.ர. 264)

தலைவி கொடுத்த தாம்பூலம்

67. காதல் நாணம் தொடுமின்பம்,
 கண்ட நடுக்கம் புதுவியர்வை,
மோதும் முறுவல், வெற்றிலையும்
 கைவைத் துளமொடு போனாளே.

என் காதலி புதியவள்; இளையவள். எனக்குத் தர வேண்டும் என்ற விருப்புடன் 'பீடா' (தாம்பூலம்) எடுத்து வந்தாள். இந்தச் சாக்கில் பார்க்கலாமே! என அருகில் வந்ததும் காதல் பளிச்சிட்டது; நாணம் தடுத்தது. என்னைப் பார்த்ததால் ஒரு நடுக்கம். ஆனால் ஒரு அன்புச் சிரிப்பு. இந்தப் புது உறவில் தேவையற்ற அச்சத்தால் வியர்வை, இவ்வளவும் பொங்கித் ததும்ப என் கையைத் தொட்டுத் தாம்பூலம் வைத்தாள். இந்தப் பரிச இன்ப மயக்கம் இருவருக்கும் தலைக் கேறியது. இவ்வளவு அழகு நளினங்களுடன் என் உள்ளத்தையும் எடுத்துக் கொண்டு அவள் ஓடி விட்டாளே! (611)

காமன் பண்டிகையில் நீர் பீய்ச்சுதல்

68. காதலன் காமன் திருநாளில்
கண்ணில் வீசிய செந்நீரால்
மோத வருந்தும் விழிகழுவாள்,
முதல்வன் கொடுத்த நிதியென்றே!

அன்று காமன் பண்டிகையான ஹோலித் திருநாள். காதலன் காதலிமேல் செந்நிற நீரைக் குழலால் பீய்ச்சினான். அது அவள் அழகியகண்களில் பட்டது. முகமும் செம்மையாயிற்று. காதலியோ தீர் பட்ட உறுத்தலால் வருந்திய கண்களைக் கழுவவில்லை. அதனைக் காதலன் தனக்குக் கொடுத்த காதல் பரிசாகக் கருதுகிறாள். (234)

தலிவி பிரிவால் வருந்தல்

69. உள்ளம் கொள்ளை கொண்டுள்ளம்
கொண்டே போனாய்; உனக்கென்மேல்,
கள்ளா! காதல் இலையோதான்?
காணவும் வாரராய், கண்பாராய்.

''என் நாயகனே! அன்று வந்தாய்; உன் உள்ளத்தை என்னிடம் கொடுத்துவிட்டு, என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போய்விட்டாயே! மீண்டும் என்னைக் காண வரவில்லையே! கள்வனே! உண்மையில் என்மேல் காதலன்பு இல்லையோ? கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன் என்கிறாயே!'' என்று தலைவி கூறுவாள். (321)

கண்ணனைப் பிரிந்த ராதையின் நிலை

70. கண்ணனை யமுனைக் கரையினிலே
காதல் புரிந்த இடமெல்லாம்
கண்ணால் கண்டாள் நப்பின்னை;
கண்ணீர் ஆறாய் ஆனதடி!

இராதை முன்பு கண்ணனுடன் காதல்புரிந்த யமுனைத்துறைகள் தோறும் சென்று பார்க்கின்றாள். இப்பொழுது அவன் பிரிந்ததால் அந்த இடத்தை யெல்லாம் கண்டவுடன், அவன் நினைவால் ஆற்றாமை யால், கண்ணீர் சொரிந்தாள். அதன் மிகுதியால் யமுனை ஆறே கண்ணீர் ஆறாக மாறிக் கரிப்பாகிவிட்டது. பாவம், நப்பின்னை என்செய்வாள்! (548)

கண்ணன் இடைப்பெண்களுடன் புரிந்த ராசலீலை

71. யமுனைக் கரையில் முழுநிலவில்
யாதவ மகளிர் சுற்றிவர,
யமுனைத் துறைவன் ஆடுகிறான்,
அவர் அவர் முன்னே தனித்தனியே!

கண்ணன் யமுனைத்துறையில் சரத்காலம் என்னும் ஐப்பசி முழு நிலவில் குழலூதிக் கோபியரைக் கவர்ந்து இழுத்தான். எல்லோரும் அவனைச் சுற்றி ஆடினார்.

அவனும் எல்லோருக்கும் தனித்தனிக் கண்ணனாகத் தோன்றி, ஒவ்வொருத்தியுடனும் ஆடினான்.

கண்ணன் பரம்பொருள். கோபியர் ஜீவான்மாக்கள். குழல் ஓசை பரம் பொருளில் ஜீவனைத் தன்பால் இழுக்கும் ஓங்கார நாதம். எனவே ராசலீலை ஜீவன் பரமான்மாவுடன் இணைவதைக் குறிக்கும். **(664)**

கண்ணன் மதுரை சென்றபின் அவனை வந்து கண்டவர், கோபியர் விரகம் பற்றிக் கூறியது

72. கண்ணா! காதல் இடைமகளிர்
கவலை பிரிவால் அழுகின்றார்;
மண்ணும் கடந்த கண்ணீர்தான்
வாயில் தோறும் முட்டியதே!

கண்ணா! உன்னைப் பிரிந்த இடைமகளிர் பிரிவால் மிகவும் வாடி, அழுது, கண்ணீரை ஆறாய்ப் பெருக்கு கின்றார்கள். அது வெள்ளமாகி நிலமெல்லாம் கடந்து இடைச்சேரியின் வாசற்படிதோறும் சென்று முட்டியது. அவர்களைக் காத்துக்கொள் என்கிறார்கள். **(459)**

காதலன் பெண்ணோவியம் வரைதலைப் பற்றி

73. பெண்ணின் ஓவியம் வரைகின்றான்;
பெண்ணென் ஓவியம் இதுதானோ?
பெண்வே றொருத்தி உருவிதுவோ?
என்றே பேதை செயலற்றாள்.

நாயகன் ஒரு பெண்ணின் ஓவியத்தை வரைந்து கொண்டிருக்கிறான். இன்னும் முற்றுப் பெறவில்லை. ''இது யார் ஓவியம்? இவர் என் ஓவியத்தையா வரைகிறார்? அல்லது வேறொரு பெண்ணின் ஓவியத்தைத்

தீட்டுகிறாரோ?'' இந்த எண்ணம் வந்தவுடன் இவள் அசைவற்றாள். எந்த அங்கமும் அசையவில்லை. இவளே ஓவியம் போல் ஆகிவிட்டாள். நாயகனுக்கு வேறொரு நாயகிமேல் பிரியம் என்ற எண்ணம் வந்தவுடன் இவள் வருந்துகிறாள். (683)

கண்ணன் அழகில் உள்ளம் பறிகொடுத்தவள்

74. புருவம் நெளியும் முகம்காட்டி,
புன்னகை தேரும் கண்காட்டி,
உருவ எழிலும் பீதகமும்
நடையும் உள்ளம் கலந்ததடி?

கண்ணன் அழகில் மயங்கிய தலைவி தோழியிடம் சொல்லுகிறாள்: அவன் அழகே அழகு! புருவத்தை நெளித்துக் காட்டுவான்; சிறு குறும்புப் புன்னகை செய்வான்; கண் பார்வையில் ஒரு செய்தியைச் சொல்லு வான். தன் பீதாம்பர ஆடையும் அவன் உருவத்தின் கோலமும் கம்பீர நடையும் என் உள்ளத்தைக்கவர்ந்ததடி! (666)

தலைவியின் அழகை அனுபவித்தல்

75. சிவந்த முகமும் சிறுநகையும்,
மருளும் பார்வை வெகுளிப்பெண்;
உவந்து தழுவித் தோழியரைக்
கெஞ்சலும் நெஞ்சை அள்ளுதடா!

தோழா! என் தலைவியின் அழகே அழகு! முகம் நாணத்தாலும் இயல்பாலும் சிவப்பு. அதில் மயக்கும் புன்னகை. மருளும் பார்வையோ உள்ளத்தைக்கொள்ளை கொள்ளும். இவளோ வஞ்சமில்லா வெகுளிப் பெண், தன் தோழிகளை வாய் குழற மழலை பேசித் தன் இரு கையாலும் தழுவுகின்றாள். (என்னைத் தழுவ

வேண்டும் என்ற குறிப்பைக் காட்டுகிறாளோ?) எல்லாம் சேர்ந்து என் நெஞ்சை அள்ளிக் கொண்டு போய் விட்டன! (611)

கண்ணன் அழகைக் கண்ட தலைவி கூறுவது

76. கண்ணன் அழகைக் காணும்கண்
 கண்ணால் வேறே காணாமல்,
கண்ணீர சுரக்கும்; காயும்;பின்
 சுரக்கும், கேணி உருளைபோல்.

தோழி! நான் கண்ணனைக் கண்டேன். அவன் அழகே அழகு! அவன் இப்பொழுது பிரிந்து விட்டான். அவனைக் கண்ட கண்கள் வேறு ஒன்றையும் காணாமல் நீர் சுரக்கும்; வற்றும். மீண்டும் சுரக்கும். கிணற்றில் நீர் இறைத்துப் பின் திரும்பி உருளும் (முன்னும் பின்னும் உருளும்) உருளையைப் போல் (ராட்டினம்) என் கண்கள் மாறி மாறி நீர் சுரந்தும் வற்றவும் செய்கின்றன. (705)

ஊடல் கொண்ட தலைவி பற்றித் தோழி கூறுவது

77. கோடி முறைநான் முயன்றாலும்,
 கொள்கை அவளோ விடவில்லை;
ஊடல் நீயே தீரப்பா!
 உண்மைக் காதல் உறவாலே.

''தலைவ! நான் எவ்வளவோ உன்னைப்பற்றி, உன் உண்மைக் காதல் பற்றிப் பலவாறாக எடுத்துச் சொல்லியும், அவள் உன்மேல் கொண்ட கோபம் தணியவில்லை. இனி நீயே சென்று அவள் எதிர்பாராத வகையில் உன் உண்மைக் காதல் என்னும் அதிர்ச்சியைக் கொடுத்து, உன் வயப்படுத்திக் கொள்!' என்கிறாள், தோழி. (377)

தலைவியின் அழகிலிருந்து தப்ப முடியா வலிமையைத் தோழி தலைவிக்குக் கூறுவது

78. புருவ வில்லும் பார்வையெனும்
அம்பும், புரவி துள்ளலையும்
பருவ எழிலாம் கோட்டையினால்,
பாவாய்! வெல்வாய், அவன் விழவே!

தலைவனுக்குப் பணிந்து விடாதே. அரசர்களுக்கு வில், அம்பு, குதிரை, கோட்டை இவை உண்டு. அதனால் அவர்கள் எதிரியை வெல்வர். உன்னிடம் பார்வை என்னும் அம்புண்டு; அது பட்டவுடனே அவன் விழுந்து விடுவான். புருவ வில்லால் அதை அவன்மேல் போடு. குதிரை போல் சதிராடும் உன் துள்ளு நடை அவனை அப்படியே மயங்கச் செய்யும். அது மட்டுமா? உன் பருவ எழில் குலுங்குவதை அவன் கண்டால், அந்த பருவ எழில் கோட்டைக்குள் அவன் சிறைபட்டு விடுவான். ஆசையால் பனிந்து விடாதே. உன் வலிமை உனக்கே தெரியாது. (153)

தலைவன் எழிலால் தலைவி வாட்டமுற்றது

79. உலகம் போன போக்கைப் பார்;
பாவம் ஒருபால், பழி ஒருபால்;
கலகம் புரிந்து கண்காண,
கட்டுடல் ஏனோ வாடியதே?

தோழி! இந்த அநியாயத்தைப் பார். உலகத்தில் பாவம் ஒரு பக்கம் பழி ஒருபக்கமாக உள்ளது. உலகத்தின் போக்கே மாறிவிட்டது. தலைவன் அழகோ கொள்ளை அழகு; எல்லை அற்றது. என் கண்கள் அவனை, அவன் அழகைப் பார்த்துக் கலகம்பண்ணி, என் உள்ளத்தைத் தூண்டிவிட்டுத் தாம் சாதுவாகி விட்டன. அதில் ஈடுபட்ட

என் மனம் மீண்டும் அவனைக்காணாததால் ஏங்கி, அதனால் என் உடலே மெலிந்தது. கண்பார்த்தது; ஆனால் உடல் மெலிந்தது. இது என்ன முறை? பிறந்தது முதல் இறப்பு வரை கண் அளவு மாறாமல் வளராமல் சுருங்காமல் அப்படியே இருக்கும். இது உடல் கூற்று உண்மை. (663)

காதலுக்கு வெட்கமில்லை

80. உலகம் புருவம் உயர்த்திடினும்,
ஒவ்வாப் பழிகள் மொழிந்தாலும்,
பலகால் பார்வை பரிமாறி,
பரிவால் மனத்தில் மகிழ்வாரே!

காதலுக்குக் கண்ணில்லை என்பார்கள். ஆனால், வெட்கம் கூட இல்லை. தலைவன் தலைவியர் காதல் பற்றி உலகோர் புருவத்தைச் சுருக்கி, ஏதேதோ பேசுகின்றனர்; பழியும் சுமத்துகின்றனர், இதனால் இவர்கள் அசைந்து கொடுக்கவில்லை. அவர்கள் நடுவே அவர்கள் பேசப் பல கால் நேருக்குநேர் பட்டவர்த்தனமாகச் சந்திக்கின்றனர். பார்வையால் பேசிக்கொள்கின்றனர். உள்ளத்தில் மகிழும் உண்மைப் பாசத்தால் காதல் புரிந்து மகிழ்கின்றனர். யார் அவர்களை என்ன செய்ய முடியும்? (200)

தலைவியின் அழகால் தாக்கப்பட்ட தலைவன்

81. கண்ணைக் கண்ணால் எய்தாளே;
கண்ணோ கவலைப் படவில்லை;
புண்ணாய்ப் புலம்பும் உடல் மனமே,
புதுமைப் பெண்ணின் கண்படவே.

தோழா! தலைவி மிக அழகி. அவள் என்னைப் பார்த்தாள். நானும் பார்த்தேன். கண்ணால் அவள் தாக்கினாள். அதனால் அவளைப் பார்த்த என்கண் தானே பாதிக்கப்

படவேண்டும். ஆனால் அவைகளுக்கு ஒன்றும் ஆகவில்லை. மாறாக, அவளையே நினைத்து, என் உடல் மெலிந்து புண்ணாகியது. மனமோ எண்ணி ஏங்கிப் புலம்புகிறது. என் செய்வேன். (602)

காமன் திருநாள் செய்த உதவி

82. தாமன் புடைய காதலரைச்
சாடும் உலகம் வாய்பொத்த,
காமன் திருநாள் பொடிதூவக்
காதலர் கட்டும் அவிழ்ந்ததடி!

காதலர் இருவர் ஒருவரை ஒருவர் விரும்பிப் பழகினர். ஆனால், சமூகம்-உலகம் அவர்களைக் கட்டுப்படுத்தியது. காமன் திருநாள் - ஹோலி வந்தது. இருவரும் ஒருவர் மேல் ஒருவர் வண்ணப் பொடி தூவி விளையாடினர். அந்தக்கணமே உலகம் வாய்பொத்தும். எல்லாவற்றையும் மீறித் தம்முள் ஒன்றாயினர். காதல் கட்ட விழ்த்துக் கொண்டது. இது கவி கூற்று. (230)

தலைவியின் கண் வலிமை பற்றித் தோழி கூறியது

83. நாணில்லா வில்லாலே
நம்பியரைக் கண்ணம்பால்
காணவே வீழ்த்திவிடும்
வில் வித்தை கற்றனையோ?

அடியென் செல்லமகளே! உன் அழகே அழகு! அதற்குமேல் விசித்திரமான வில்வித்தையும் நீ கற்றுள்ளாய். புருவவில்லை உயர்த்திக் கண்ணம்பால் காளையரை நோக்கவே அவர்கள் மயங்கிவிழுகின்றனர். உலகில் நாண்பூட்டிய வில்லிலிருந்து அம்பினால் குறியைக் குறி பார்த்து அடிப்பவர் சிலரே. ஆனால், உன் புருவ

வில்லுக்கோ நாண்—இடைகட்டும் கயிறு இல்லை. ஒரே சமயத்தில் இரண்டு வில்லால், இரண்டு அம்பால், ஒரே குறியைப் பார்த்து (காதலனை) வீழ்த்துகிறாய். இந்தப் புதுமையான வில்வித்தையை எங்குக் கற்றாய்? (203)

காதலை எதிர்க்கும் உலகைப்பற்றிக் கவி கூறுவது

84. கண்ணால் கலந்த காதலரைக்
கசடர் சழக்குச் சமுதாயம்
புண்ணாய்ப் போக முடிச்சிடுவர்;
தேவே! காதல் கதி இதுவோ!

உண்மையில் ஒருவரை ஒருவர் கண்ணால் கண்டு பழகி மனங்கலந்த காதலரை வாழவிடுவதில்லை உலகம். குற்றமும் வஞ்சனையும் பேசி இந்தச் சமுதாயம் அவர்கள் காதலைச் சிக்கல் முடிச்சாகிவிடுகின்றது. கடவுளே! காதல் கதி இதுதானோ? அவர்களை வாழவே விட மாட்டாயா?

மதுபருகிய புதுமணப்பெண்ணின் நிலை-தோழி கூற்று

85. நங்கை நாணம் நழுவியதே
தடுக்கும் மறுக்கும் விறைப்பில்லை,
மங்கை மதுவால் நயமானாள்;
வலுவில் அணைவாள் விரைவாயே!

தோழி தலைவனுக்குச் செல்லுவாள்; அவளோ புது மணப்பெண். அதுவம் முதிரா இளையவள் (அக்ஞாத யௌவனா. வேண்டாத நாணம், பழகுவதில் சிணுங்கல், மருவவரும்போது விறைப்பு எல்லாம் பேராவல் கொண்ட உனக்குத் தடையாகத் தான் உள்ளது. ஆனால் இன்று

உனக்கு நல்ல வாய்ப்பு. அவள் மது வருந்தி விட்டாள். அதனால் விறைப்பு நாணம் எல்லாம் போய்விட்டது, நயமாகி விட்டாள். அவளே உன்னை வலுவில் அணைத்துக் கொள்வாள். காலம் தாழாதே விரைந்து செல். (362)

தலைவி தலைவன் அன்பைப்பற்றிக் கூறியது

86. கண்ணொடு கண்கள் கலந்தனவே;
நாயகன் நழுவா வசமானான்;
பெண்ணே அவருடன் பேசிப்பார்;
செல்லா துன்வயம் ஒன்றானோம்!

தோழி! என் கண்ணின் வலிமையால், பார்வை மயக்கால், அவர் என் வசமாகிவிட்டார். நானும் அப்படியே, இனி யாரும் எங்களைப் பிரிக்க முடியாது. நீ வேண்டுமானால் அவருடன் என்னைப்பற்றிப் பேசிக் கலைத்துப்பார். அவர் மாறமாட்டார். நாங்கள் ஒன்றாகி விட்டோம். (686)

தலைவனிடம் தலைவி கொண்ட காதல் போதை—கவி கூற்று

87. நாயகன் பட்டம் விடுகின்றான்;
நாயகி வீட்டில் நிழல் கண்டாள்;
நாயகன் என்றே அவன் நிழலை
நடந்து நடந்து பிடிக்கின்றாள்.

நாயகன் பக்கத்து வீட்டு மாடியில் (தன் வீட்டு மாடியில்) பட்டம் விடுகின்றான். அவன் நிழல், பட்டத்தின் நிழல் இரண்டும் நாயகிவீட்டு முற்றத்தில் விழுகிறது. அதைக்கண்ட தலைவிக்குக் காதல் மயக்கம் அதிகமாகியது. அதனை நாயகன் என்றே பாவித்து, ஓடி ஓடிப் பிடிக்கின்றாள். உன்மேல் அவ்வளவு பைத்தியம் அவளுக்கு. (697)

தோழி தலைவியின் உள்ளக்காதலைக் கூறியது

88. கண்ணின் ஒளியும் மெய்யெழிலும்
புளகம் பூத்த தெதனாலே?
விண்ணில் புறாவைக் கண்டல்ல;
விட்டஉன் நாதன் நினைவாலே!

என்னிடம் மறைக்காதே, வானில் புறாவைப் பார்த்தா உன் உடலில் இம்மாற்றங்கள்! இல்லை. அந்தப் புறாவை விட்ட உள் நாயகனின் இனிய நினைப்பால் உன் கண்களில் புத்தொளியும், உடம்பில் ஒரு பளபளப்பும, உடலில் குறு மயிர் புளகம் பூத்ததும் ஏற்பட்டனவே. இதை மறைக்க முடியாதே. (687)

தோழி தலைவியின் விழியின் வலிமை கூறல்

89. விழியெனும் அம்பு வில்லம்பை
வென்ற தின்று புரிந்ததடி!
விழிதைத் திதயம் உருவாமல்
விழுந்தான் நோவ உன்னழகன்!

தோழி! உன் கண்ணில் விழியின் அம்பு வில்லம்பை விடக் கூர்மையானது! வில்லம்பு தைத்தால் அடிபட்டவர் அம்பு உருவிப் போவதால் இறந்து படுகிறார். அம்பும் வெளியே போய்விடுகிறது. உன் விழியம்பு உன் காதலர் இதயத்தில் தைத்தது. ஆனால், அது அவர் நெஞ்சில் பாய்ந்ததே அன்றி உருவி வெளியே போகவில்லை; அவரும் சாகவில்லை. மனம் நோவ வெதும்புகின்றார். அம்பு உள்ளேயே தங்கி விட்டதால் இந்த அவஸ்தை. (காதலியாகிய நீ பார்க்க, அவரும் பார்த்துக் காதல் கொள்ள, இப்பொழுது பிரிந்ததால் மிகவும் கஷ்டப்படுகிறார்; போய் அவரைக் கண்டு கொள்.) (204)

தலைவியைத் தலைவனுடன் தோழி இணைய வைப்பது

90. அங்கே கணவன் ஏங்குகிறான்;
அமுங்க அணைவாய் இருகையால்;
இங்கே என்னைப் புல்லியதேன்?
தீயும் நீரால் தணியாதோ!

தலைவி தோழியை அணைத்துக் கொள்கிறாள். அவள் சொல்லுவாள். ''பைத்தியக்காரி! என்னை என்ன நினைவோடு ஏன் அணைக்கின்றாய். அங்கே அவன் (உன் தலைவன்) உனக்காக ஏங்குகிறான். அவனைச் சென்று உன் இரு கையால் (உன் இளமையான விம்மிய மார்பு) அமுங்கும் படி அவனை இறுகும் படி அணைப்பாயாக (அவன் உள்ளத் தீயினுக்கு—புண்ணுக்கு ஒத்தடம் தருவாயாக). அதனால் அவன் இதயத்தில் எரியும் பிரிவென்னும் தீயை உன் குளிர்ந்த நெருக்கம் என்னும் நீரால் அணைப்பாயாக. அதாவது அணைத்து (தழுவி) அணைப்பாயாக (தீயை அணைப்பாயாக) என்கிறாள். (பி.ர.382)

தலைவி செயல் பற்றிக் கவி கூற்று

91. மின்னல் போலே கணம் தோன்றி
மின்னி மறைவாள் மறுகணமே;
பின்னி அணைப்பாள் இருகையால்;
மாடத் தவனை மயிலன்னாள்.

தலைவியும் தலைவனும் மாடத்தின் மேலே நிற்கின்றனர். மழைக்காலம். வானம் அடிக்கடி மின்னுகிறது. அவன் மேகத்தைப் பார்க்கிறான்; அதே சமயம் மயிலைப் போன்ற அவள், அவனை இருகையாலும் அணைத்துக் கொள்ளுகிறாள். மின்னல் தோன்றும் போது, வெளியே (தெருப்பக்கம் பால்கனி யாதலால்) யாராவது பார்த்து

விடுவார்களே (அந்த வெளிச்சத்தில்) என்று பின்னால் நகர்ந்து விடுவாள். மின்னல் மறைந்தவுடன் மீண்டும் அணைத்துக் கொள்வாள்.

இதற்கு வேறு பொருளும் கூறுவர். மாடத்திலே கார்காலத்தில் இருவரும் தனித்தனியே, ஆனால் இணைந்து நிற்கின்றனர். தலைவிக்கு அந்தப் பிரிவுகூடத் தாளவில்லை. ஓடிச்சென்று அணைத்துக் கொள்கிறாள். சிறிது சென்று தாபம் கொஞ்சம் தணிந்தது. விலகு கிறாள். உடனே தாளாமையால் மீண்டும் அணைத்துக் கொள்கிறாள். இவள் மின்னல் போன்று பளிச்சிடும் சிவப்பு. அவன் நிறம் மேகம் போன்ற கறுப்பு, எனவே அணைக்கும் போது மேகத்தைத் தழுவும் மின்னலாகிறாள். வானத்தில் மின்னல் தோன்றுவது ஒரு கணமே; இவளோ அணைக்கும் வரை தோன்றுகிறாள். மேகம் என்றதால் இவள் மயிலானாள். (58)

கள்ளக்காதலி ஒருத்தி (பரகீயா) தன் கள்ளக் காதலன் செய்கையைக் கூறுவது

92. பிள்ளை வாங்கும் முறை இதுவோ;
பெறும்போ தெந்தன் இரு கொங்கை
அள்ளி அமுக்கி மகிழ்கின்றான்;
அன்றைய நாடக ஓத்திகையோ?

பிறன் மனைவியாகிய ஒருத்தியின் கள்ளக் காதலன். பகலில் தன்னிடம் தன் கள்ளக் காதலன் நடத்திய சரசத் தைக் கூறுகிறாள். இடுப்பில் என் குழந்தையை வைத்திருந் தேன். (இருந்தாலும் அவள் கட்டுக் குலையாத அழகி). அதைக் கொஞ்சுவதற்கு என்னிடமிருந்து வாங்குவதாக (வெளி உலகுக்குப் போக்குக் காட்டி) அப்படி வாங்கும் போது, வாங்கும் இரு கையால் என் இரு கொங்கை களையும் உடன் அள்ளி மகிழ்கின்றான். இது அன்று

இரவு அவன் என்னுடன் நடத்தப் போகும் நாடகத்தின் ஒத்திகையோ (செய்யுளின் கடைசிப் பகுதியில் கண்டது மொழிபெயர்ப்பாளர் அதிகப்படி). (610)

தோழி தலைவியிடம் கூறியது

93. கோடி முயன்றும் மறையாது
கொண்ட காதல் ஒளிந்திடுமோ?
ஓடி அலையும் உன்கண்ணின்
ஒளிதான் காட்டிக்கொடுத்ததடி!

தோழி உன் காதலை என்னிடம் மறைக்க முடியாதடி! நீ கோடிதான் முயன்றாலும், உன் கண்கள் யாரையோ தேடி அலைகின்றன. அவற்றில் ஒரு புதிய ஒளி தென்படுகிறது. இதுவே உன் காதலைக் காட்டிக் கொடுத்து விட்டது. உண்மையைச் சொல்லடி! (உதவுகிறேன்.) (624)

தலைவன் தன் காதலைப்பற்றித் தன் தோழனிடம் கூறியது

94. தன்னந் தனியள், தழுவவிடாள்;
புருவம் மூக்கும் நெறித்திடுவாள்;
தன்சிறு தந்தை பெயரிழுப்பான்;
பனியே குளிரும் பார்வை இதேன்?

என் தலைவி உண்மையில் என்னை விரும்புகின்றாள். வெளியில் காட்டும் வெறுப்பெல்லாம் நடிப்புதான். அன்று அவள் தனித்திருந்தாள். தழுவ முயன்றேன். விடவில்லை. புருவத்தையும் மூக்கையும் உயர்த்திச் சினங் காட்டினாள். தன் சிற்றப்பனிடம் சொல்வதாகச் சத்தியம் செய்தாள். ஆனால் அவள் பனி பொழிவது போல் குளிர்ப்போடு என் மேல் ஓர் ஆசைப் பார்வை வீசினாளே! அது ஏன்? (218)

தலைவன் தோழனுக்குச் சொல்லியது

95. காதல் உலகில் வாழ்வதுதான்
கடினம்; நீதி அநீதியாடா?
காதல் புரிவது கண்ணாக
கபட மறியா மனம் வாடும்.

காதல் உலகில் வாழ்வது கடினம். இங்கே அநீதி தான் நீதியாகிறது. கண்கள் தாம் பார்த்துக் காதல் புரிகின்றன. ஆனால் மனம் தான் கிடந்து வேதனைப் படுகிறது, தவிக்கிறது. (அவளைப் பார்த்தேன்; இப் பொழுது பிரிவால் மனம் துயரப்படுகிறது.) (123)

தலைவன் தோழியிடம் கூறியது

96. பருகப் பருகத் தாகவிடாய்
தீரா உவர்நீர் போலிவளின்
பருவ எழிலைப் பலகாலும்
பார்த்தும் ஆவல் தீராதே!

உன் தோழி அழகே அழகு. எத்தனை தடவை பூத்துக் குலுங்கும் அவள் பருவ எழிலைப் பார்த்த போதும் என் ஆசை அடங்கவில்லை. உப்பு நீரைக் குடிக்க குடிக்க, எவ்வளவு குடித்தாலும் தாகம் அடங்காதது போல், பார்க்கப் பார்க்க அவள் அழகு அதிகமாகத் தெரிகிறது.
இங்கு மூலத்தில் லவணம் லாவண்யம் (உப்பு-அழகு) என்ற சொற்களின் ஒரே வடிவத்தில் இருபொருளைக் கூறுகிறார்). (305)

தலைவியின் தோழி மற்றொரு தோழிக்குக் கூறியது

97. கண்ணைப் பொத்தக் காதலனும்
கையால் தவிராள்; அறியாள்போல்
கண்ணொடு கட்டித் தழுவுசுகம்
தாகம் தீராள் காதலியே!

தோழி! தலைவியின் திருட்டுத் தனத்தைப் பார்த்தாயா. காதலன் அவள் கண்ணைப் பொத்தினான். பரிசத்தால் அவன் தான் என்று தெரிந்து வைத்தும் அறியாதவள் போல், அவன் கைகளை விலக்காமல் யார்? யார்? என்று கேட்டாள். அவன் கண்ணைப் பொத்திய சாக்கில் அவளைத் தழுவிச் சுகம் கண்டு கொண்டிருந்தான். இவளுக்கும் தாகம் தீரவில்லை; அவனுக்குந் தீரவில்லை.

கண்ணாம்மூஞ்சி ஆட்டத்தில் கண்ணை விலக்காமல், பொத்துவது யார் என்று சொல்ல வேண்டும். இல்லையென்றால் கண் பொத்துவது தொடரும். (500)

கனவில் கண்ணனைக் கண்ட காதலி கூற்று

98. கண்ணன் வந்தான் தாளிட்டேன்;
காலை காணேன் தாளிருக்க;
கண்ணன் எவ்வழிப் போனானோ?
கனவே இதுதான் ஆனதடி!

அடி தோழி! இரவில் கண்ணன் என்னிடம் வந்தான். உடனே அவன் வெளியே போகாமல் கதவைத் தாளிட்டுப் பூட்டிவிட்டேன். கலந்து மகிழ்ந்து துயின்றேன். காலையில் பார்த்த போது அவன் போய்விட்டது தெரிந்தது. கதவு சாத்தியது சாத்திய படியே இருந்தது. அவன் எந்த வழியாக வந்து போயிருப்பான். கடைசியில்தான் புரிந்தது நான் கண்டது கனவு தான் என்று. (695)

தலைவன் தலைவி அழகைக் கண்டு மகிழ்ந்தது

99. இச்சைக் குரியன் காணமுகச்
சீரை உயர்த்த வயிறோடு
கச்சில் அடங்காக் கட்டழகும்
கண்டான் கொள்ளை கொண்டானே!

தலைவியிடம் நாயகன் வந்தான். தலைவி அவசரத்தில் தன் முகச்சீலையைத் தூக்கிவிட்டுச் சரிசெய்வதாக ஒரு பாவனை செய்தாள். துணி மேலே மிகவும் ஏறிக்கொண்டதால், கச்சில் அடங்காத அவள் விம்மும் வாளிப்பும் மும்மடிப்பு கொண்ட வயிறும் இடையும் தெரிந்தன. அவன் பார்த்தான்; காட்சி இன்பத்தைக் கொள்ளை கொண்டான். (468)

தலைவன் தன் தோழனுக்குச் சொல்லியது

100. மங்கை அழகால் மனம் சுழலும்;
 பலகால் இழுத்தும் அவளிடமே
தங்கும்; தச்சன் துளைகருவி
 போலென் மனத்தைப் பொள்ளியதே!

தோழா! என் காதலி மிக்க அழகி. அவள் பருவப் பொலிவைப் பார்த்து என்மனம் சுழன்று கரைகிறது. இதை எவ்வளவோ பிடித்து நிறுத்தியும் அவளிடமே செல்கிறது. தச்சன் துளைபோடும் கருவிபோல அவள் அழகு என் மனத்தைப் பொள்ளிச் சல்லடையாக்கி விட்டது. (293)

தோழிக்குத் தலைவி கூறியது

101. தச்சன் வெட்டத் தளிர்க்கின்ற
 மரம்போல் எங்கள் மெய்க்காதல்;
பச்சைப் பசுமைத் தளிர்வீசும்;
 பலரும் தூற்றிப் பழித்தாலென்?

எங்கள் காதல் தெய்வீகமானது; உண்மையானது. இந்த ஊர் பூராவும் உள்ளோர் எங்களை ஏசித் தூற்றிப் பழித்தாலும், தச்சன் வெட்ட வெட்ட மேலும் தளிர் விட்டு வளரும் மரம் போல், அது மேலும் பசுமையாகத் தளிர் விட்டு வளர்ந்து கொண்டுதான் இருக்கும். (508)

உண்மைக் காதலின் உயர்வு

102. ஈருடல் இயக்கும் ஒருயிராய்
வாழ்வர் உண்மைக் காதலரே;
சீருடன் இருவிழி காகம்தான்
சிறுமணி ஒன்றே காணுவதே.

அவர்கள் காதல் மிகவும் உத்தமமானது! உடலால் அவர்கள் இருவர் ஆயினும் ஒருடல் பெற்றவர் போலவே வாழ்கின்றனர். ஒரே எண்ணத்துடன் ஓர் உயிரே இருவர் உடலையும் இயக்குவது போல் ஒன்றி வாழ்கின்றனர். காகத்திற்கு இருவிழி இருந்தாலும் அதனுள் ஒரு சிறிய கருமணியே இரண்டு புறமும் உருண்டு பார்ப்பதுபோல் இவர்கள் ஒருவராகவே வாழ்கின்றார்கள். (509)

தலைவி தோழிக்குக் கூறியது

103. கண்ணின் அம்பு வில்லம்பைக்
காட்டிலும் கடிது கொடிதாகும்;
கண்ணால் இருவர் காந்திடுவர்
வில்லோ வீழ்த்தும் ஒருவரையே!

தோழி! இந்தக் கண் என்னும் அம்பு மிகவும் கொடிது; வில்லம்பைவிடக் கொடிது. என் கண்ணால் நான் அவரைப் பார்த்தேன் (என் கண்ணம்பு அவரைத் தாக்கியது.) அவரைப் பார்த்த நான் இப்பொழுது அவர் நினைவால் வருந்துகிறேன். அடிபட்ட அவரும் என் நினைவால் வருந்துகிறார். இப்படிக் கண்ணம்பு இருவரையும் தாக்குவது (எய்தவனையும் எய்யப்பட்டவனையும்.) அதனால் வில்லம்போ எய்யப்பட்டவன் ஒருவனையே தாக்கும். (686)

தலைவியின் தோழி மற்றொரு தோழிக்குக் கூறியது

104. ஊடல் கொண்ட சினம் தீராள்;
மேலும் கிளறி விடுகின்றான்;
ஊடச் சிணுங்கும் அவளழகு
கூடக் காணக் களிக்கின்றான்.

காதலனுடன் பொய்ச் சினம் கொண்டு ஊடினாள். அதனால் முகம் சிவக்க உடல் அழகு கூடியது. அந்தச் சினத்தைத் தணிக்காமல் தலைவன் அதை மேலும் கிளறி விடுகின்றான். ஊடவும் சிணுங்கவும் அவள் செய்யும் போது அவள் பெண்மைப் பொலிவு கூடுவதை அவன் கண்டு களிக்கின்றான். அடி பைத்தியக்காரி! தலைவி இன்னும் இதை அறியவில்லையே! (564)

தலைவிக்கு தலைவன் மேல் உள்ள மோகம்

105. அண்டை அயலார் துற்றிடினும்,
அவளோ எங்கும் நிலைகொள்ளாள்;
தண்டைக் கால்கள் தன்னில்லம்
போகா, அவனில் தாவிடுமே!

அவனும் அவளும் பழகுவதை ஊரார் பழித்து ஏசிப் பரிகசித்தும், அவள் சிறிதும் வெட்கமோ அச்சமோ படவில்லை. வெளியிலே சென்றாள்; தன்வீடு திரும்பும் எண்ணத்துடன் நடக்க ஆரம்பித்தாள். ஆனால் தண்டையணிந்த அவள் கால்கள் அவளுடைய காதலன் இல்லத்திற்கே இட்டுச் சென்றன. (642)

தலைவன் தலைவியைப் பற்றித் தோழனிடம் சொல்லியது

106. திட்டும் சொல்லில் தேன்பாயும்;
 திரும்பி அடிப்பாள் தித்திக்கும்,
கொட்டும் கோபம் முறுவலுடன்
 துரத்திப் பிடிப்பாள் புதியசுகம்.

என் அழகு காதலியின் எதிர்நிலை அழகு மிகவும் இனிப்பதாகும். அவளைச் சீண்டுவேன். என்னை ஆறை குறை வார்த்தைகளால் திட்டுவாள். அந்த ஒலியால் என் செவியில் தேன்பாயும். மீண்டும் பின்தொடர்ந்து கிண்டல் செய்வேன். உடல் நெளியத் தன் இளமை அங்கமெல்லாம் குலுங்க ஓடிவந்து, திரும்பி என்னை அடிப்பாள். அந்தப் பரிசமோ மிகவும் தித்திக்கும். (அவள் என்னிடம் ஏமாந்ததை எல்லாம் சொல்லுவேன்.) அதனால் கோபத்தைக் கொட்டி வருவாள். அப்பொழுது அவள் சிவந்த முகத்தில் புன்முறுவல் மாறாது. மீண்டும் சீண்டுவேன்; அவளிடம் அகப்படாமல் செல்வேன். துரத்தி என்னைப் பிடிப்பாள். அது அணைத்துக் கொள்வதில் முடியும். அவளே வலிய இப்படிச் செய்த தால் இது புதிய சுகமன்றோ? (704)

தலைவியைப் பற்றித் தோழி மற்றொரு தோழியிடம் சொல்வது

107. காதலன் மாலை கழுத்திட்டாள்;
 புளகம் தோன்றத் துள்ளுகிறாள்;
மாதவன் மாலை என ஒருத்தி
 இளையள் பத்தியை மெச்சுகிறாள்.

தோழி ஒருத்தி இவள் கழுத்தில் இவளுடைய காதலன் அணிந்த மாலையைப் போட்டாள். அவனுடைய நுண்ணிய பரிசத்தை அறிந்து, அவள் புளகம் பூக்கு

பூக்க மகிழ்ந்து துள்ளுகிறாள். வேறு ஒருத்தி இதைக் கோயில் மாலை, மாதவன் சிலையணிந்த மாலை என்று எண்ணினாள். தலைவியின் மெய்ப்பாட்டை உணர்ந்த இவள் தலைவியின் இளவயதில் கடவுளிடம் உள்ள ஈடுபாட்டை மெச்சுகிறாள். (581)

கண்ணன் குழலை மறைத்து வைத்த ராதையின் இன்பம்

108. கண்ணன் குழலை மறைத்திட்டாள்;
கண்ணன் பலகால் கெஞ்சுகிறான்.
கண்ணைச் சிமிட்டி மறுக்கின்றாள்;
கண்ணன் குரலிசை கேட்டிடவே!

இராதை ஒருதட்டவை கண்ணன் குழலை மறைத்து வைத்து விடுகிறாள். அவன் அதைத் தரும்படி அவளிடம் பலமுறை கேட்கிறான். மீண்டும் மீண்டும் அவன் பேசிக் கேட்கும்படி கண்சிமிட்டிக் குறும்பு செய்து மறுக்கின்றாள். அவன் குரல் குழலினும் இனிது. அவன் இனிய குரலைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசையால் இப்படிச் செய்வாள். (709)

தலைவி தலைவனிடம் கூறியது

109. கூந்தல் கோதி முடிக்கின்றான்;
கொழுநன் தொட்ட சிலிர்ப்பாலே
கூந்தல் வியர்ப்ப 'விடு' என்றாள்;
உலர்த்தும் உழைப்பு நானறிவேன்!

காதலன் தலைவியின் கூந்தலைக் கோதிச் சீவி முடித்து அலங்காரம் செய்கின்றான். அவன் கைபட்டவுடனே அவள் சிலிர்த்தாள். அதனால் கூந்தல் வியர்த்தது; மீண்டும் ஈரமாயிற்று. ''நீங்கள் கூந்தல் முடித்த அழகு

போதும்; விடுங்கள்'' என்றாள். அவன் இவள் விரும்பவில்லையே என்று மறுகினான். (''கூந்தலை உலர்த்தப் பட்ட கஷ்டம் எனக்கல்லவா தெரியும் என்கின்றாள்'' இவள். (504)

தலைவன் தோழனிடம் கூறியது

110. காதலி முன்னால் நான் நின்றேன்;
கடிந்தாள்; தோழியை நீ நெடுநாள்
வேதனை செய்தாய் என்றே என்
மீதொரு சிறுநகை வீசினளே.

நான் என் காதலி முன்னால் போய் நின்றேன். அதே சமயம் அவள் தோழியும் அவளிடம் வந்தாள். இவள் தோழியின் மேல் எரிந்து விழுந்தாள்: ''போடி நீ நீண்ட நாள்கள் என்னைப் பிரிந்து எனக்கு வேதனை கொடுத்து விட்டாயே!'' என்றாள். அதே சமயம் என்மேல் என்மெய் சிலிர்க்க ஒரு புன்னகையை வீசினாள். இவள் நான் பிரிந்து சென்றதைத்தான் சொல்கிறாள் என்று புரிந்து கொண்டேன். (606)

தலைவி தலைவனிடம் கூறியது

111. எந்தன் விரலில் மருதோன்றி
ஈரம் காயா திங்கேயேன்
வந்தாய் வெளியே செல்லையா!
வண்ணம் சிவக்க வருவாயே!

ஐயனே! என் விரலில் மருதோன்றி பூசியுள்ளேன். இப்பொழுது வீட்டில் ஏன் புகுந்து கொண்டாய். சேட்டை செய்யாமல் கையை விடு (நீ அருகில் இருப்பதால் என் பெண்மை நாணச் சிலிர்ப்பால் விரல் வியர்ப்பதால் அவை காயவில்லை) இதன் ஈரம் காயும் முன்னே ஏன் வந்தாய்? வெளியே செல் ஐயா (என் செல்ல ஐயா) ஈரம் காய்ந்து

விரல்கள் சிவந்த வண்ணம் கண்டபின் வரலாம். வெளியே போங்கள் என்கிற் றாள். (710)

தலைவி தோழிக்குக் கூறுவது

112. கண்ணே காணும் உடல்வாடக்
கண்ட நியதி சரியோதான்?
கண்ணால் பார்த்த பாவத்தால்
கன்னி என்மெய் இளைக்குதடி!

தோழி! இந்த அநியாயத்தை எங்கே போய்ச் சொல்வேன். என் 'அவரை' என் கண்கள்தான் பார்த்தன. மனம் விரும்பியது ஆனால், அவர் பிரிவால் என் உடல் அல்லவா இளைத்துவிட்டது. பார்த்த பாவம் கண் செய்யத் தண்டனையை உடலுக்களிக்கும் இந்த நியதி சரிதானா? (668)

தலைவியின் தோழி மற்றொரு தோழிக்குக் கூறியது

113. வண்ணம் தூவ நடித்திடுவான்;
மங்கை மறைவாள், சிணுங்கிடுவாள்;
கண்ணைத் துகிலால் மறைத்திடுவாள்;
காதலன் கண்டு மகிழ்வானே?

காமன் பண்டிகையில் தலைவன் கைப்பிடிக்குள் வண்ணப்பொடி இருப்பதாக நடித்துத் தலைவியின் மேல் தூவ வருகின்றான். அவள் ஓடி ஒளிகின்றாள். சிணுங்கு கிறாள். கண்ணில் விழப் போகிறது என்று பயந்து முன்தானையைத் தூக்கி மறைக்கின்றாள். அவள் ஓடி ஆடும்போது அந்த அவஸ்தையைக் காதலன் கண்டு மகிழ்கின்றான். அப்படி அவள் அலையும் போதும், கண்ணை முன்தானையால் மறைக்கும்போதும், அவள்

உடல் வாளிப்பு நெளிவுகள் எல்லாம் வெளியே தெரிகின்றன. அதனால் காதலன் மேலும் மகிழ்கின்றான். (233)

தலைவியின் தோழி மற்றொரு தோழிக்குக் கூறியது

114. நடுச்சுவர் இருபுறம் காதலர்கள்;
எம்பி விரல்மேல் நடம்புரிவர்;
தொடுவது கன்னம் சிவந்திடவே
முத்தம் கொடுத்து மகிழ்ந்திடுவர்

காதலர் வீடுகள் நாட்டுப்புறம்; தாய்ச்சுவர் உள்ள பக்கத்து வீடுகள். தாய்ச்சுவர் மேல் இடைவெளி; கூரை பொது. இதனால் காதலியை இந்தப் பக்கத்திலிருந்து பார்க்க வேண்டுமென்று காதலன் அந்தப் பக்கத்திலிருந்து கட்டை விரல் ஒன்றை ஊன்றி எழும்பி நிற்பான். அவளும் அப்படியே செய்தாள். கழுத்தளவு இடைச்சுவர் தடுப்பின்றி வெளியே நீட்டினர். இருவர் கன்னங்களும் தொட்டன. அவற்றில் இருவரும் மாறி மாறி முத்தம் கொடுத்து மகிழ்ந்தார்கள். மனமிருந்தால் மார்க்கம் உண்டு. (458)

தோழி தலைவியிடம் கூறியது

115. கள்ளி என்னிடம் மறைக்காதே
காதல் நோயின் வசப்பட்டாய்!
கொள்ளியும் குளிரும் பருவத்தில்
கொட்டுது வியர்வை எதனாலே?

அடி திருட்டுக் கள்ளி! உன் சமாசாரம் எனக்கு நன்றாகத் தெரியும். நீ அவனைக் கண்டாய்; காதல் நோய் வசப்பட்டு விட்டாய். கொள்ளிக் கட்டைக்கும் குளிர் பிடிக்கும் இக் கார் காலத்திய் உனக்கு, உன் உடலில் எப்படி வியர்வை வந்தது. (காதல் நோயால் வியர்க்கிறது.) (495)

தலைவி தோழிக்குக் கூறியது

116. கரிய வண்ணத் தொருமனிதன்
கண்ணுக் கென்இல் தெரிகின்றான்;
தெரிய வில்லை; யாரிவனே?
தெரியத் தெரிய நடுக்கமடி!

கண்ணன் (கரியன்) அந்த இடைப் பெண்ணைக் காதலிக்கிறான். இரவில் அவள் வீட்டுக்கு வருகின்றான். இதைப் பற்றித் தலைவி கூறுகிறாள்: ''ஒரு கரிய மனிதன் இரவில் வருகின்றான். அவனை ஒவ்வொரு முறையும் நான் பார்க்கிறேன். ஆனால் ஒவ்வொரு முறையும் அதனால் என் உடம்பு நடுங்குகிறதடி.'' (இது கறுப்பு மனிதனைப் பேய் என்பது போல் உலகுக்குக் கூறினாலும், அது கண்ணனே என்று தோழிக்குக் குறிப்பால் உணர்த்துகிறாள்.)

(654)

தலைவியின் தோழி மற்றவளிடம் கூறியது

117. நளின நங்கை நம்பியிவர்,
நடுங்கு குளிரில் நதியினிலே
குளிப்பர் நீங்கார் இறைநாமம்
கூறிக் கடைக்கண் நோக்கிடுவர்.

காதலனும் காதலியும் மற்றவர்கள் நடுவே நீராடுகின்றனர். ஆற்றில் எதிர் எதிர் நிலை. ஒருவரை ஒருவர் ஆசையுடன் பார்த்துக் கொண்டே இருக்க விருப்பம். காலம் குளிர்காலம். தண்ணீரும் சிலுப்பானது. எல்லோரும் கரையேறிய பின்னும் நடுங்கும் குளிரில் இன்னும் பார்த்துக் கொண்டே இருக்கும் ஆசையில் இறைவன் நாமத்தைச் சொல்லிக்கொண்டே கரையேறாமல் நிற்கின்றனர். (குளிக்கும்போது இறைவன் நாமம் உருவேற்றுவது வழக்கம். இவர்கள் மற்றவர் பேரை உருவேற்றினரோ?)

(237)

தலைவியின் தோழி மற்றவளுக்குக் கூறியது

118. வடுக்கண் அழகி முகம் உயர்த்தி,
வளவன் நெற்றித் திலகமிட,
நடுங்கும் கையால் அதுகோண,
நங்கை காட்டித் திரிகின்றாள்.

என்னுடைய காதலி காதலுக்குப் புதிது; அவனும் அப்படியே. இருவரும் ஆற்றில் குளித்துக் கோலம் செய்து கொள்கின்றனர். காதலன் காதலி கீழ் உதட்டில் கை வைத்துக் கவிழும் முகத்தை தூக்கிப் பிடித்து, அவள் நெற்றியில் திலகமிடுகின்றான். மற்றவர் பார்த்திடுவர் என்ற அச்சத்தாலும், புது புதிதாக அவளைத் தொடுவதாலும், அவன் கை நடுங்குகிறது. அதனால் திலகம் கோணலாகிறது. அந்தக் கோணல் திலகத்தை நாயகன் இட்டதால் பெருமையுடன் அதனை எங்கும் காட்டி இவள் திரிகின்றாள். அழிக்கவில்லை (வடுக்கண்-மாவடு போன்ற கண்.) (493)

தோழி தலைவனிடம் கூறியது

119. சிறுமொழிப் பாவை குறுநகையாள்;
சிணுங்கி நாணும் மழலையினாள்;
சிறுபெண் நானே வயமானேன்;
திருமா வளவா! என்னாவாய்?

உன் இளம் காதலி பேசுவதோ கொஞ்சம். அதிலும் தன் காதல் வயத்தால் பொருள் தொடர்பு இராது. சொல்லும் போது குறுநகையுடன் சிணுங்கி முகங்கோணிக் குழறி மழலையுடன் பேசுகிறாள். இதைக் கேட்டும் அந்தக் கோலத்தைப் பார்த்தும் பெண்ணாய்ப் பிறந்த நானே அவள் வசமாகி விட்டேன். திருமா வளவனே! ஆணாய்ப் பிறந்த நீ இந்த இளங்கிளியைக் கண்டால், உன் கதி என்ன ஆகும்? நீ கொடுத்து வைத்தவன் தான். (580)

தலைவி (கண்டிதாநாயகி) ஊடல் கொண்டு தலைவனை ஏசியது

120. இன்றுன் கோலம் புதிதையா!
இருகண் ஒளியும் மாறுபடும்;
நன்றுன் மொழியோ குழறுவதேன்?
நாயகி புதியவள் யாரோ தான்?

தலைவன் இரவில் ஒரு பரகீயா (பரத்தை) நாயகி யுடன் சரசமாடித் தலைவியிடம் வருகிறான். அவன் நிலை கண்டு இதைத் தலைவி புரிந்து கொள்ளுகிறாள். சொல்லுவாள்: ''இன்று உன் வடிவத்தில் ஒரு புதிய மாற்றம் ஏன்? (வேறு பெண்ணுடன் கூடிய அலங்கோலக் குறிப்பு) உன் கண்ணில் திருட்டுப் பார்வையல்லவா தெரிகிறது?

(கனவொழுக்கத்தால்) உன் பேச்சு ஏன் நடுங்கி உளறு கிறாய்? யாரவர் உனக்கு வாய்த்த புது நாயகி? என்று கோபம் கொள்கிறாள். (428)

தலைவியைப் பற்றித் தோழி கூறியது

121. தாயில் இருந்தாள் தனி நங்கை;
தன்னவன் வந்தான், செயலறியாள்;
வாய்மொழி குழறும் நாணமுடன்
காண வருவாள் காதலியே!

தலைவி பிறந்தகத்தில் இருக்கிறாள். அவள் தனித் திருந்தாள். அப்போது பார்த்து அவள் கணவன் அங்கே வந்தான். புதுமணமானவர்கள். ஆகையால் நாயகன் வந்தவுடன், அவள செயலற்றுப் போகிறாள் (கையும் ஓட வில்லை காலும் ஓட வில்லை.) அவனுடன் பேச நா எழ வில்லை. நாக்குக் குழறுகிறது. நேராகப் பார்க்க முடிய வில்லை; நாணம் தடுக்கிறது. இந்த நிலையில் அவளைத்

தயங்கித் தயங்கிக் காண வருகிறாள் அந்தக் காதலி. (தலைவன் தன் மாமனார் இல்லம் சென்றபோது அனுபவித்த இந்தக் காட்சியைத் தன் தோழனிடம் கூறுவதாகவும் கொள்ளலாம்.) (206)

தோழி தலைவியின் செயல் கூறியது

122. விழுவாள் எழுவாள் பலகணிமேல்;
நிற்பாள் நாணம் கவ்வுதலால்;
முழுதும் பாராள்; ஏக்கமுடன்,
பலகால் காண முயல்வாளே;

எதிர் வீட்டில் தலைவன் வந்துள்ளான். தன் வீட்டிலிருந்து அவனைத் தலைவி பல விதத்திலும் காண முயல்கிறாள். பலகணி உயரத்திற்கு எழுவாள். முடியாமையால் விழுவாள். ஒரு கால் பார்த்தபோது அவனும் கண்டு விட்டதால், நாணம் கவ்விக் கொண்டதால், முழுமையும் பாராமல் பின் வாங்குவாள். அதனால் ஏங்கி மீண்டும் காண முயல்வாள். இப்படி அவள் அல்லல் படுவதைப் பார்ப்பதே ஒரு தனி அழகு. (442)

தலைவி தலைவன் கண்ணாமூச்சியாடல்

123. கண்ணா மூச்சி விளையாடக்
காதலர் இவரோ சளையாதார்;
கண்ணைப் பொத்தும் போதெல்லாம்,
கட்டி அணைக்கும் சுகமினிதே.

கவி கூறுவது. இந்த இளங் காதலர்கள் சோலையில் கண்பொத்தி ஆடுகின்றனர். கண்பொத்தும் போதெல்லாம் ஒருவரை ஒருவர் இந்தச் சாக்கில் கட்டி அணைத்து மகிழ்கின்றனர். (கவிஞர் காலத்தில் சமூக நிலை மேல்-மட்டத்தில் உள்ளவர்கள் பொழுது கழித்த நிலையில் இது ஒரு காதல் விளையாட்டு, சிறுவர் ஆடுவது அல்ல. சிறுவரும் ஆடுவதை இன்று காண்கிறோம். (499)

பகலில் திருட்டுக் காதல்

124. வெய்யில் தாளேன் மீள்வமெனப்
பொய்யே சொல்லப் பிறர் மீள,
மெய்யின் நிழலில் தையலுடன்
மெதுவாய்ச் சோலை புகுகின்றான்.

தலைவன் கை தேர்ந்த கள்ளன். ஒரு நாள் ஊருக்கு வெளியில் தன் புதிய இளைய நாயகியுடன் சென்றான். அங்கே அவன் பழகிய பழைய காதலியரும் இருந்தனர். இவனுக்குத் தன் புதிய வளுடன் கூடிக் களிக்க ஆசை. திடீரென்று, ''இப்பொழுது வெய்யில் ஏறி விட்டது மீள்வோம்'' என்று ஒரு பொய்யைச் சொல்லி விட்டு, அவளுடன் இவன் பின் தங்குகிறான். இவனும் வரு கிறான் என்று அவர்கள் போய் விட்டார்கள். இவன் தன் புதிய 'அவளை' அவள் மேல் வெய்யில் படாவண்ணம் தன் உடலின் நிழல் அவள் மேல் படும்படி அவளை அணைத்துக் கொண்டே காதல் நடத்த ஒரு இருண்ட சோலைக்குள் மெதுவாய் நுழைந்து விட்டான். (459)

தலைவிக்குத் தோழி கூறியது

125. ஓவம் புனைந்த பதுமை போல்
ஒன்றும் அசையாய், இமையாமல்
யாவன் அவனை நோக்குகிறாய்?
நாணிலி, நங்காய், நவிலுவையே!

''அடி திருட்டுப் பெண்ணே! திடீரென்று ஓவியத்தில் வரைந்த அழகு பதுமைபோல் அசையாமல் ஆடாமல் இமை கொட்டாமல் இருப்பது போல் ஒரு போக்குக் காடடுகிறாயே? யாரவன்? அவனை, அச்சம் நாணம் எதுவுமின்றிப் பார்த்துக் கொண்டிருக்கிறாயே? என்னிடம் சொல்லடி!'' (576)

தலைவி பற்றித் தோழி கூறியது

126. சாட்டை வீச முன்னோடும்
கடிவாய் இழுக்கக் கண்ணிணையை
நாட்டிய மாடும் குதிரைபோல்
நாணமும் காமனும் நடத்துகிறார்.

இவள் நாயகனைக் காணத் துடிக்கிறாள். காமன் ஆசை என்னும் சாட்டையை வீசுகிறான். இவள் கண்களெனும் குதிரை, காதலன் பக்கம் பாய்கிறது. ஆனால் இவன் வெட்கப்படுகிறான் நாணமெனும் கடிவாளம் கண் குதிரையைப் பின்னுழுக்கிறது. ஒரே சமயம் சாட்டை வீசியும் கடிவாளத்தால் இழுக்கப்படவும் முன்னும் போகாமல் நிற்கவும் முடியாமல் நாட்டியமாடும் குதிரை போல் இவள் கண்கள் அவனைப் பார்க்கவும் முடியாமல் இருந்த இடத்திலேயே முகத்திலேயே சுழல்கின்றன. இந்த முகமும் அழகுதான். (207)

தலைவியின் தோழி மற்றவளுக்குச் சொல்லியது

127. மாலை நெருங்க நெருங்க இவள்,
முன்னும் பின்னும் மனமேபோல்,
காலும் பாவா துழலுகிறாள்:
காதல் நோயின் வலு இதுவோ?

தோழி! இவளைப் பார்த்தாயா? இரவு நேரம் நெருங்க நெருங்க எங்கும் நிலை கொள்ளாமல் வாயிலுக்கும் உள்ளுக்கும் முன்னும் பின்னும் கால் பாவாமல் அலைகின்றாள் அவள் மனம் அலையும் பாட்டை அது காட்டுகிறது. அவள் நாயகன் வருவதை எதிர் பார்க்கிறாள். இவ்வளவு துடிப்பு! இதுதான் காதல் நோயின் வேகமோ? (451)

தோழி மற்றத் தோழிக்குக் கூறியது

128. காதலர் இருவர் கண்கண்டார்,
கலந்து பேசத் தவிக்கின்றார்;
மோதும் நாணம் வாயடைப்ப,
இரப்போர் கண்ட கருமியைப்போல்.

இந்த ஜோடியைப் பார்த்தாயா? இவர்கள் ஒருவரை ஒருவர் மிகவும் விரும்பும் காதலர்கள். சந்தித்துக் கண்களால் பார்த்தனர். பேச இருவரும் தவிக்கிறார்கள் ஆனால் வார்த்தை வெளியில் வராமல் நாணம் அவர்கள் வாயை அடைத்து விட்டது. பிச்சைக்காரனைப் பார்த்துக் கருமி வெளியில் தலைகாட்டாததுபோல் வார்த்தைகள் வாய்க்குள்ளேயே நின்று விடுகின்றன. (460)

தலைவி தோழிக்குக் கூறியது

129. நிலவின் நிறைந்த சுடரல்லால்
உண்ணாச் சக்கர வாகம்போல்,
தலைவன் திங்கள் முகமன்றிக்
காணேன்; அன்றிச் சாவேனே!

தோழி; அவர் நினைவும் முகமும் நான் மறக்க மாட்டேன்: நான் அவரையே விரும்புகிறேன். சக்கரவாகப் பறவை முழுநிலவின் கதிரைத்தான் உண்ணும், தேய்ந்த நிலவிலும், நிலவு தோன்றாக் காலத்தும் இறப்பு வருவதானாலும் பட்டினியே கிடக்கும். அதுபோன்று அவர் திருமுகத்தையன்றி வேறு யாரையும் ஏறெடுத்துக் கூடப் பார்க்கமாட்டேன் விரும்பவும் மாட்டேன். அப்படி இல்லையென்றால் இறந்துபடுவேன். (133)

தலைவன் தன் தோழனுக்குக் கூறியது

130. கையால் சொக்குப் பொடிதூவி
காதலி உள்ளம் கைகொண்டாள்;
மெய்யே நானவன் மெய்யடிமை;
மேனி யழகோ சொக்குதடா'

என் காதலி நடத்திய நாடக அழகே தனி. என்னை 'மயக்கிவிடுவேன்' என்று சொல்லிக்கொண்டு வண்ணப் பொடியைச் சொக்குப்பொடியாகத் தன்கையால் என்மேல் தூவினாள் (பிறரை வசப்படுத்த மத்திர சொக்குப் பொடி துவுவது வழக்கம்.) இந்த அசைவும் அவள் மேனி அழகை எடுத்துக்காட்டியது. இதே இழுப்பில் என் உள்ளத்தை கொண்டு போய்விட்டாள். உண்மையாகவே நான் அவளுக்கு மெய் (உடலால் உடலை விரும்பும்) அடிமை யாகிவிட்டேன். அவள் அழகு என்னை அடிமையாக்கி விட்டது. என் செய்வேன்!

தலைவி தோழியிடம் சொன்னது

131. பண்ணும் சுருதி சேராமல்,
தாளமும் தப்பிப் போனதடி!
கண்ணன் வந்த தடுமாற்றம்
காதல் ஆச்சு! இசைபோச்சே!

அடியே! நான் ராகம் சுருதிதப்பாமல் ஆரோகண கதியில் பாடிக் கொண்டிருந்தேன். எதிரே கண்ணன் வந்து நின்றான். பண் சுருதி சேராமல் தாளம் தப்பியது. காதல் வந்தது. சங்கீதம் விடைபெற்றுக் கொண்டதடி! (பாடும்போது உயர்ந்த ஆரோகணத்தில் சுருதிதாளம் தப்புவது அவலக்ஷணம் ஆகும்.) (693)

தலைவியின் தோழிகள் தம்முள் பேசியது

132. உள்ளம் கள்ளன் கைவசமே;
வில்ள அறியாள், வீட்டினிலே;
உள்ளும் புறமும் ஓடுகிறாள்,
உயரும் தாழும் ஊஞ்சல்போல்!

தலைவியைப் பார். தன் வீட்டில் நிலை கொள்ளாமல் தவிக்கின்றாள். தன் உள்ளத்தைத் தன் காதலனான அந்தக் கள்ளனிடம் பறிகொடுத்துவிட்டாள். அதை வீட்டில் சொல்ல முடியாமல் தவிக்கிறாள். மேலும் கீழும் ஆடும் ஊஞ்சலபோல் வீட்டிற்கு உள்ளும் புறமும் மீண்டும் மீண்டும் ஓடித் தவிக்கிறாள். வீட்டு வேலை என்னாவது? (441)

தோழி தலைவிக்குக் கூறியது

133. கண்ணே உந்தன் நோய் அறிவேன்;
கருதும் நோயின் மருந்தறிவேன்;
கண்ணன் உனக்கு நோயானான்;
அவனே உனக்கு மருந்தாவான்.

தலைவியே நீ கண்ணன் மேல் காதல் கொண்டு இப்பொழுது அவனைப் பிரிந்துவிட்டதால் வாடி வருந்தி நோயுற்றாய். கண்ணன்தான் உனக்கு நோயானான். அவன் வந்து உன்னை அணைத்துக் கொண்டால், உன் நோய் பறந்துவிடும். எனவே, அவனே உன் நோய்க்கு மருந்தும் மருத்துவனும் ஆவான், இதனை நான் நன்றாக அறிவேன்.

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து.

பிஹாரிலால் பெண்ணை நோயாளி ஆக்கினார், அதற்கு முன் திருவள்ளுவர் ஆணை நோயாளியாக்கினார். இருவரும் ஒரே மருந்தைத்தான் சொல்லுகின்றனர்.
(பி.ர. 557)

தலைவனைப் பிரிந்த தலைவியின் செயல்

134. கணவனைக் கூடும் பேராவல்
கருத்தை வாட்ட, நாணத்தால்,
கணவன் உடையும் வில்லம்பும்,
கட்டி அணைத்து மகிழ்வாளே!

கணவன் பிரிந்து சென்றுள்ளான். அவன் மேல் கொண்ட காதல் ஆவல் எல்லாம் தலைவியை வாட்டுகிறது. அவனைச் சேர-பார்க்க ஒரே ஆவல். அது இயலாததால், அவன் கழற்றிய உடை, அணிகலன், அவன் வில், அம்பு முதலியவற்றினை அவனாகவே நினைத்துக் கட்டி அணைத்து மகிழ்கின்றாள். (481)

தலைவியின் அழகுபற்றித் தலைவன்

135. சாளரம் முன்னே நிற்பாள்:
சரம்போல் திலகம் வைப்பாள்;
தாளரும் தீயின் சுடர்போல்,
கண்ணால் தாக்கி மறைவாள்!

தலைவி எதிர் வீட்டுக்காரி. தலைவன் அவளை ஒரே ஒருமுறை பார்க்க விரும்புகிறான். எதிர்வீட்டுச் சாளரம் அதாவது சன்னலில் அவள் திடீர் எனத் தோன்றுகிறாள். நெற்றியில் சரம்போல் (அம்புபோல்) கூர்மையான திலகத்தை அவன் காண அணிகிறாள். அந்தக் கூர்மை அவன் நெஞ்சைத் தைக்கிறது. அதோடுவிட்டாளா? காதல் மயக்கப்பார்வை ஒன்று வீசினாள். அது தீப் பிழம்பு போல் அவன்மேல் பாய்ந்தது. தாக்கியவள் உடனே மின்னல் வேகத்தில் மறைந்தாள். காதலுக்கு வந்த பரிசு இது தானா?

கண்ணனைக் காதலித்த காதலி கூறுதல்

136. என்னிடத் தோளே! கண்ணனவன்
என்னிடம் வரவே துடிக்கின்றாய்;
என்னிடம் வந்தால் உனைத்தழுவி,
மற்றதைத் தழுவா வகை செய்வேன்.

தலைவி கண்ணனைப் பிரிந்துள்ளாள். வாடுகிறாள். அப்பொழுது அவள் இடத்தோள் துடிக்கிறது. இடது உறுப்புக்கள் பெண்களுக்குத் துடிப்பது நன்மை தரும் என்பது நம்பிக்கை. எனவே கண்ணன் வருவான் என்று நம்புகிறாள். அதனால் சொல்லுவாள்: ''ஏ என் இடது தோளே! நீ இப்போது துடிக்கிறாய்; என் கண்ணன் வருவான் என்கிறாயோ? அப்படி வந்தால் அவனை விட்டு என் இடது தோளாகிய உன்னையே தழுவச் சொல்லுகிறேன். வலத்தோளை விட்டுவிடச் சொல்கிறேன். உனக்கு நானளிக்கும் பரிசு இதுதான்.

(காதலன் காதலியைப் பார்த்து எதிரில் நின்றால் அவன் வலது கரம் அவளுடைய இடதுபுறம் தான் நிற்கும். எனவே அதனையே நீட்டி இடக்கைத் தோளைப்பற்றி அவன் அணைப்பான். இயல்பாக இந்த நயமும் இதில் உண்டு.) (699)

தலைவிக்குத் தோழி கூற்று

137. வசந்த காலம் இதமிதுவாம்;
தண்மையும் வெம்மையும் சமமாகும்;
பசக்கும் வியர்க்கும் புளகிக்கும்
பைந்தொடி! கண்ணன் சிந்தனையோ?

தலைவி தலைவன் நினைவாக இருக்கிறாள். அப்பொழுது இதமான வசந்த காலம். இப்பொழுது தட்பம் வெப்பம் இரண்டும் சமமாக உடலுக்கும் உள்ளத் துக்கும் சுகமாக இருக்கும். ஆனால் காலமல்லா இக்

காலத்தில் மேனி நிறம் மாறிவிட்டது (பசந்தது); வியர்வை சிந்துகிறாய். உடல் சிலிர்த்துப் புளகாங்கிக்கிறது. உண்மையை நானல்லவா அறிவேன்? காதலன் நினைவே காலமற்ற காலத்தில் உனக்கு இவை எல்லாம் தோன்றுகின்றன. (பி. ர. 564)

தலைவிக்குத் தோழி கூறியது

138. முதுகைக் காட்டி முகம்கரவேல்;
முதுகும் கண்ணன் பார்வையினால்,
அதிரப் புளகாங் கிதமடையும்;
அன்புக் காதல் மறைபடுமோ?

அடி கள்ளி! அவன் வரும்போது நேராகப் பார். முதுகை திருப்பிக் கொள்ளாதே. அவனுக்கு உன் அழகிய முகத்தை மறைக்காதே (கோபம் வேண்டாம்). ஏன் என்றால் நீ எப்படி இருந்தாலும் அவன்மேல் கொண்ட உன் காதல் உன்னைக் காட்டிக் கொடுத்துவிடும். இதோ பார். அவன் பார்வைபட்ட உன்முதுகில் உள்ள சிறுமயிர்க் கூட்டம் புளகாங்கிதம் அடைந்து குத்திட்டு நிற்கின்றன. இதுவே உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டதே. உண்மைக் காதலை மறைக்க முடியுமா? (466)

தலைவன் தலைவி பற்றித் தன் தோழனுக்குக் கூறியது

139. இல்லில் தனியே இருந்தாளைத்
தழுவக் கையை இழுத்திட்டேன்;
இல்லை என்றாள் எனை இசைவாய்ப்
பார்த்தாள்; மனத்தில் நிலைத்தாளே.

என் காதலி மிக அழகி. ஒரு சமயம் எனக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. அவள் வீட்டில் தனியே இருந்தாள்.

வேகமாகச் சென்று கைப்பிடித்திழுத்துத் தழுவ முயன்றேன். அவள் இல்லை, முடியாது என்று சிணுங்கினாள். ஆனால் என் முயற்சிக்குத் தன் உடலால் எதிர்க்காமல் எனக்கு இசைவதான சைகையில் அன்பு மயக்கப் பார்வை ஒன்று பார்த்தாள். அவளின் இந்த நிலை என் மனத்தில் (ஓடாத தொலைக்காட்சிப்) படமாக நிலைத்து விட்டது. அப்புறம் என்ன? இன்பம் கொள்ளைதான். (461)

தலைவியின் செயல் பற்றித் தோழி

140. காதலன் நினைவாய்த் தன்வயமாய்
தானே கண்டாள் கண்ணாடி;
காதலன் தெரிய சினக்கின்றாள்;
காதலில் தன்னை இழந்தாளே.

காதலி எப்போதும் காதலன் நினைவாக இருக்கின்றாள். அவனில் தன்னைக் கரைத்துத் தன்வயமாகி விட்டாள். இந்த நிலையில் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தாள். ஆனால் என்ன அதிசயம். காதலன் உருவம்தான் தெரிகிறது. 'ஏன் இன்னும் வரவில்லை' என்று அதனுடன் சினக்கின்றாள். காதலில் தன்னையே இழந்து விட்டாள் (கண்ணாடியில் தெரியும் தன்முகமும் தன் காதலன் உருவமாகத் தோன்றுமளவுக்கு அவளுக்கு வேறு எதையும் மறைந்த ஐக்கியம் ஏற்பட்டது.

(குறிப்பு: இந்தத் தத்துவத்தையே அருட்பிரகாச வள்ளலார் கண்ணாடியில் தன்னைக் காணாமல் முருகனைக் கண்டார். முருகன்மேல் கொண்ட இதுதான் தெய்வீகக் காதல். இதை மனோ தத்துவ நிபுணர்கள் பலவித Mental Power என்று சொல்லப்படும் Mirror Practice என்கிறார்கள்.) (431)

தோழி தலைவிக்குக் கூறியது

141. கண்ணே உன்மனம் அவனிடமே
 கரைய நீ அவன் ஆகிவிட்டாய்;
பெண்மை மாறின் இல்லென்னாம்?
 குளவி கொட்டிய புழு ஆவாய்!

பெண்ணே! என் அருமைக் கண்ணே! உன் காதலைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொள். எப்போதும் அவன் நினைவாகவே-அந்த மாயவித்தைக்காரன் கண்ணன் நினைவாகவே இருக்கிறாய். இதனால் ஆபத்து. ஒரு நிலையில் நினைவு முற்றிக் குளவி கொட்டிய புழு குளவியாகவே மாறிவிடுவது போல் அவனாகவே, ஆணாகவே மாறிவிடுவாய். அப்புறம் உன்நிலை என்னாவது? வீட்டு வேலை என்னாவது? யாரைக் காதலிப்பாய்? ஆணை ஆண் காதலிக்க முடியுமா? (586)

தோழி மற்றொரு தோழிக்குக் கூறியது

142. அவன் வரும் நேரம் அறிந்தவளும்
 அயர்வாள், விழுவாள், கொட்டாவி
அவளும் விடுவாள்; தோழியரும்
 அவளைத் தனிவிட் டகலுவரே!

நம் தலைவி மிகவும் கெட்டிக்காரி. அவளொடு அவள் வீட்டில் நாமெல்லாம் படுத்திருந்து பேசிக் கொண்டிருந்தோம். தன் தலைவன் வரும் நேரம் அவளுக்குத் தெரியும். அதனால் சோர்வு விடுவதுபோல் விழுந்தாள்; புரண்டாள்; கொட்டாவி விட்டாள். அப்பாவிகளான எல்லாத் தோழியரும் இவளுக்குத் தூக்கம் வந்துவிட்டது என்று எண்ணி, இவளைத் தனியே விட்டுவிட்டுத் தத்தம் வீட்டுக்குச் சென்று விட்டனர். அப்புறம் என்ன? (453)

தன்னைச் சோலைக்கழைத்த தலைவனிடம் தலைவி கூறியது

143. வருவ தஞ்சுவன் சோலையிலே;
வம்பு பேசும் சிறுமகளிர்,
திரிவர் நாகண், வாயடைக்க;
நாமும் கரந்து செல்வோமே!

தலைவனிடம் அவள் சொல்லுகிறாள்: ''இதோ பார்! இந்த அற்பப் பெண்களுக்கு ஊர் வம்பே பெரிய வேலை. நம்மைப் பற்றிப் பேசித் திரிவர். அதனால் இப்பொழுது உன்னுடன் தனியாக வர அஞ்சுகிறேன். அவர்கள் பேசும் நாக்கு வாய் கண்கள் எல்லாவற்றையும் ஏமாற்றி நாம் வேறு வகையாக இன்பம் காணுவோம். கவலை வேண்டாம்'' என்கிறாள். (601)

வெளியில் உள்ள தலைவன், வீட்டிற்குள் உள்ள தலைவி பற்றித் தோழனிடம் கூறியது

144. என்னைப் பாராள் புறங்காட்டி,
இல்லில் குழுவில் அமர்கின்றாள்;
மின்னும் நாணத் திருப்பார்வை
என்மேல் வீசி நெளிவாளே!

என் தலைவி என்மேல் மிகவும் அன்புடையவள். தன் வீட்டில் வாயிலுக்கு நேரே முதுகுகாட்டி மற்றவர்களுடன் அமர்ந்திருக்கிறாள். நான் தெருவிலிருந்து அவளைப் பார்க்க விரும்புகிறேன். இது அவளுக்குத் தெரியும். இதனால் மின்னல் வேகத்தில் திடீர் திடீர் என்று வாயிற் பக்கம் நெளிந்து, வெட்கமும் அன்பும் கலந்து பார்க்கிறாள். மீண்டும் பழையபடி. (212)

தலைவிக்கு மற்றத் தோழியர் கூறியது

145. நாயகன் பேரைக் கேட்டவுடன்
நாணி நடுங்கிச் சிலிர்க்கின்றாய்;
நீயிதை மூடியும் நின்னுடலே
நின்னைக் காட்டிக் கொடுத்ததடி!

தோழி! உன் காதலை இனியும் உன்னால் மறைக்க முடியாது. உன் காதலன் பெயரை நாங்கள் சொன்னவுடன் ஏன் உடல் நடுங்குகிறது? நாணம் ஏன் மீறுகிறது? உடலெல்லாம் புல்லரித்துச் சிலிர்க்கின்றது. உன் காதல் வெளிப்பட்டு விட்டது. உன் உடலே உன்னைக் காட்டி கொடுத்துவிட்டதே! சொல்லு! (574)

மலை எடுத்த கண்ணன் செயல் பற்றித் தோழி கூறியது

146. மலையை எடுத்தான்; நப்பின்னை
பார்வை மயக்க, மாலாட;
மலையும் ஆட, இடைமக்கள்
நடுங்க நாணுட் கொண்டானே,

இந்தக் கண்ணனைப் பாரடி! மழையிலிருந்து கோகுலம் காக்கக் கோவர்த்தன மலையைத் தூக்கிப் பிடித்தான். அங்கே எதிரே இராதை தோன்றி ஒரு பார்வை அவனைப் பார்த்தாள். அந்த மயக்கந் தீராமல் அவன் நடுங்கினான். மலை கீழே விழுமோ என்று இடை மக்கள் வருந்தினர். இதையறிந்து தன் செயலுக்கு நாணம் கொண்ட கண்ணன் சமாளித்துக் கொண்டான். (633)

தலைவி தோழியிடம் கூறியது

147. முள்ளால் உள்ளம் களித்ததடி!
முள்ளை நீக்கி, முன்நின்றான்;
கள்ளன் காதல் நானுணர
உள்ளம் துயரம் போனதடி!

என் தலைவன் என் பின்னே தொடர்ந்து காட்டு வழியில் வந்து கொண்டிருந்தான். என் காலில் முள் தைத்தது. அதனை வெட்கத்தைப் பாராமல் ஓடிவந்து எடுத்துவிட்டான். அவன் காதல் உறுதியாயிற்று. முள்ளுக்கு நன்றி. என் மனத்துயரும் போயிற்று. (658)

தலைவன் தோழனுக்குக் கூறியது

148. தேயா வழிசெல் அவள்பின் நான்
தேய்வழி செல்ல, கல்குத்த,
நோயால் நெளியும் இடையழகை
நோக்கி நோக்கி மகிழ்ந்தேனே!

தலைவியும் நானும் ஒற்றையடிப் பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தோம். அவள் முன்னே சென்றாள். அனுபவமில்லாமையால் அவள் தேயாத வழியில் கால் பாவ நடந்தாள். அதனால் காலில் அடிக்கடி கல் குத்தியது. வலி தாளாமல் அவள் அசைந்து அசைந்து முன்னும் பின்னும் திரும்பி நெளிகின்றாள். அதனால் துணி விலக இடையின் பின்னழகும் முன்னழகும் எல்லாமே வெளித் தோன்ற நான் கண்டு பலகால் பார்த்து, அவளை அணைத்துக் கொண்டே மகிழ்ந்தேன். நான் அவள்பின் கல் குத்தாதபடி கவனமாகத் தொடர்ந்தேன். (578)

தலைவி தோழிக்குக் கூறியது

149. இழுத்தும் இழுக்கும் கடிவாளம்
மீறிப் பாயும் குதிரைபோல்,
விழிகள் என்னுள் நிலைகொள்ளா;
விரும்பி யவனை நோக்கிடுமே.

அடியே! என் ஆசை வெட்கம் அறியவில்லை. எவ்வளவு தான் இழுத்துப் பிடித்தாலும் கடிவாளத்தை மீறிப் பாயும் குதிரை போல், என் கண்கள், எவ்வளவு தான் தடுத்து நான் நிறுத்த முயன்றாலும், என்னை மீறி, என் காதலனையே காணப்போய் விடுகின்றனவே! ஒரு ஒரு முரட்டுக் குதிரையையே அடக்க முடியாதபோது இரண்டு கண்களாகிய இந்த இரண்டு முரட்டுக் குதிரை களை, அதிலும் பெண்ணாகிய நான் எப்படி அடக்குவேன்! சொல்லடி! (568)

தலைவியின் செயல்-கவி கூற்று

150. கைவிரல் மோதிரக் கண்ணாடி
தன்னில் காதலன் உருத்தோன்ற
மைவிழி நோக்கி மகிழ்கின்றாள்,
முதுகை அவனே நோக்கிடவே.

தலைவி மிகவும் குறும்புக்காரி, தலைவன் அவளைக் கெஞ்சித் தன்னை முகம் காட்டிப் பேசச் சொல்லுகிறான். அவளைப் பார்க்க மிகவும் விரும்புகிறான். ஆனால் அவளோ கூச்சத்துடன் அவனைப் பார்க்க முடியாமல் அவனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்திருக் கிறாள். ஆனால் தன் கைவிரல் மோதிரத்தை அவள் முகத்துக்கெதிரில் வரும்படி கையை வைத்துக் கொண்டிருக் கிறாள். அந்த மோதிரத்தில் உள்ள கண்ணாடியில் காதலன் உருவம் தெரிகிறது. திருட்டுக்கள்ளி. அவள் மட்டும் பார்த்து மகிழ்கின்றாள். (567)

தலைவி செயல்-கவி கூற்று

151. கூட்டம் நடுவே கூரியகண்
பிளக்க என்னை முகம்நோக்கி,
மீட்டும் இழுப்பாள் இருகண்ணை;
மேனி சிலிர்த்துப் போனேனே.

நாங்கள் பலர் நடுவே கூட்டத்தில் இருந்தோம். அவள் சாகசக்காரி; கெட்டிக்காரி. எப்படியோ பிறர் அறியாமல் அந்தக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு கூரிய பார்வை யால் என்னைப் பார்த்துத் திடீரென உடனே தன் கண்களை இழுத்து மீட்டுக் கொண்டாள், அந்தக் கண் வீச்சால் என் மேனியே சிலிர்த்து விட்டது. நான் காதலால் பரவசப்பட்டுவிட்டேன். (பி. ர. 612)

தோழி தலைவனுக்குக் கூறியது

152. வசந்த மல்லிகைப் பொற்கொடியை
வாழ்வின் மூலதனமாயுன்
வசமே அளித்தேன்; அங்கேபார்;
வாசம் வீச வருகின்றாள்.

தலைவன் அழகி ஒருத்தியை விரும்பினான். ஆனால் அவள் வசப்படவில்லை அவளைப் பெறப் பாடுபட்டு அவன் தோழியின் உதவியை நாடினான். அவள் அந்தத் தலைவியைச் சரிபடுத்தி அழைத்து வந்து கூறுவது: ''அன்பே! அதோ பார் வசந்தகால மல்லிகை பூத்துப் பொன்னிறம் கொண்டது போன்ற அழகி மேனி பொன்னாய்ச் சுடர் வீச உன் வாழ்க்கை மூலதனம் இது தான் என்னும் படி வருகின்றாள் பார். இனி அவள் உன் வசமாக அளித்து விட்டேன். அதோ தன் மேனி பூவாசம் வீச வருகின்றாள். போ, இனி உன்பாடு வேட்டைதான்'' என்கிறாள். (313)

தோழி தலைவனுக்கு கூறியது

153. மாலை யளித்தாய் மங்கைக்கு
வாசம் போயும் மகிழ்கின்றாள்;
நூலிடை ஆடும் கொங்கைமேல்
நுடங்க நீங்கா தணிவாளே

தலைவா! உன் தலைவி உன் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் பார். நீ அளித்த மாலை நீ அணிந்த தால் அதன் மேல் அளவு கடந்த ஆவல். இடை நோவ ஆடும் தன் கொங்கைகள் மீது, அதுவும் ஆட இடை யசைய இன்னும் அணிந்து கொண்டிருக்கிறாள். (573)

தோழி தலைவனுக்குக் கூறியது

154. கொண்டவன் கூட்டம் நடுவாக
குழந்தையை இழுத்து முத்தமிடக்
கண்டவள் தானும் முத்தளித்தாள்;
கவிழ்ந்தாள் நாண நகைகொண்டாள்.

அதோ பார், உன் தலைவி படும் நிலையை. நீ வெளியூர் சென்று வந்தாய். கூட்டத்தில் நடுவிலே இருந் தாய், இன்னும் உன் தலைவியைச் சந்திக்கவில்லை. அவளுக்கோ அவசரம். உன் குழந்தையை நீ இழுத்து முத்தமிட்டாய். உடனே அவளும் குழந்தையைத் தன்னருகே இழுத்து உன் முத்தமிட்ட தொடர்புள்ள கன்னத்தைத் தானும் முத்தமிட்டாள். நீ பார்த்து விட்டாய், அதனால் நாணித் தலைகுனிந்தாள். (507)

தலைவன் தோழனுக்குக் கூறியது

155. மங்கை அழகை நான் நோக்க
மாதவள் பாராள் போலத்தன்
அங்கம் முழுதும் தெரியத்தன்
ஆடை சரித்து நாணினளே.

நான் அவள் அழகைப் பார்த்து மகிழ விரும்பினேன். என் காதலிக்கு இது தெரியும். கூட்டம் நடுவில் என்ன செய்வாள். நான் பார்த்தும் பாராதவள் போல் நடித் தாள். ஆனால் வேண்டுமென்றே, நான் பார்த்து மகிழ வேண்டுமென்றே, தன் சேலையைத் தானாக விழுவது போல் போக்குக் காட்டி நழுவ விட்டாள். அவள் கட்

டழகான எல்லா முக்கியமான அங்கங்களும் தெரிந்தன. எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவள் உடனே வெட்கப் பட்டவள்போல் ஆடையைச் சரி செய்து கொண்டாள். (505)

தலைவன் கூறுவது

156. தனி நீ ராடும் தையலுமென்
நடையொலி கேட்டு நாணுகிறாள்;
கனிமொழி கொங்கை மூடிஎனைக்
கவ்வி நோக்கி ஓடுகிறாள்.

என் ஏக்கம் என் காதலிக்கு நன்கு தெரியும். அவள் உடலழகைப் பார்க்க எனக்கு எப்போதும் விருப்பம். அவள் குளத்தில் ஒரு நாள் தனியாக நீராடிக் கொண்டிருந் தாள். அவள் அழகிய மார்புக் கலசங்கள் தெரிந்தன. என் நடையொலி கேட்டுத் திரும்பி நாணினாள். நான் பார்த்து மகிழ்ந்தேன். அவள் தன்னை மூடிக் கொண்டு, தன் பார்வையால் என்னைக் கவ்விக் கொண்டு போய் விட்டாள். என் செய்வேன்! (238)

தலைவியின் செயலைத் தோழி தலைவனுக்குக் கூறியது

157. இந்த வியப்பைப் பார்த்தனையா?
இவளே பலகணித் திரை நீக்கிச்
சந்து விரலால் எதிர்பார்த்துத்
தானுனை நெடிதே நோக்குகிறாள்.

தலைவா! உன் நாயகியின் செயலை-இந்த வியப்பைப் பார்த்தாயா? நீ வருவாய் என்று நெடு நேரம் எதிர் நோக்குகிறாள். நீ தெரிகிறாயா என்று ஜன்னல் அருகி லேயே தவங்கிடந்து, தன் விரல்களின் இடைவெளியூடே ஜன்னலின் திரையை நீக்கி உன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் பார். (596)

தலைவியின் செயலைத் தோழி தலைவனுக்குக் கூறியது

158. தானே தன்வயம் இழந்துவகைத்
தன்னை மறந்தாள் யார் கேட்டும்
மானேர் விழியாள் மலங்குகிறாள்;
ஒன்றும் மொழியாள் கண்ணேறோ?

உன் தாயகியைப் பார்த்தாயா? உன்னைப் பார்த்து உன் நினைவாகவே நீ போன பின்னாலும் அந்த இடத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். தன் வயமிழந்து மறந்தும் போய் விட்டாள். யார் என்ன கேட்டாலும் மலங்க மலங்க விழிக்கின்றாள். ஒரு வேளை இவளுக்கு யார் கண்ணாவது பட்டுவிட்டதோ? (உன் கண் தான்.) (645)

தலைவன் தலைவியின் செயலைத் தோழி கூறுவது

159. விட்டு விலகி நின்றாலும்
விழியால் விழுங்க நோக்குகிறார்;
கிட்ட இருந்து மகிழ்வது போல்,
கிளர்ந்து காதல் புரிகின்றார்.

இந்தச் சோடியைப் பாருங்கள். இருவரும் ஒருவரை ஒருவர் விட்டு விலகி வெகு இடைவெளியில் நிற்கின்றார்கள். பலர் ஒரு விருப்பதால் அருகருகே வரமுடியவில்லை. இருப்பினும் ஒருவரை ஒருவர் விழுங்கி விடுவது போலவே பார்க்கின்றனர். இந்தப் பார்வையாலேயே மிக நெருங்கி இருப்பவர்களாக எண்ணிக் கிளர்ச்சியுடன் காதல் புரிகின்றனர். (211)

தலைவியின் செயல்

160. மஞ்சம் துயிலும் மாதவளும்
துயிலாள் போர்வை உள்ளிருந்தாள்;
நெஞ்சு கொடுத்தான் துகில் நீக்க,
நடுங்கி நோக்கி, மயல் செய்தாள்.

தலைவி தன் மஞ்சத்தில் படுத்துத் தூங்குவது போல் பாசாங்கு பண்ணிக் கொண்டு, போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தாள். கணவன் வந்தான். போர்வையை இழுத்து அவளைப் பார்த்தான். காதலனைப் பார்த்ததால், இப்படி எதிர் பாராது பார்த்ததால் அவன் உடல் சிலிர்த்து நடுங்கினாள். அவனை ஒரு மயக்கப் பார்வை காதல் செய்யும் போதையுடன் பார்த்தாள். எல்லாம் ஒரு நொடி தான். ஆகா, இந்தக் காட்சி எவ்வளவு அழகானது! (726)

தலைவியின் புனல் ஆடும் நிலை

161. புனலினி தாடும் புரிகுழலாள்
நாயகன் வரவும் நனி நோக்கி,
புனலின் குளிரால் நடுங்குதல்போல்
போக்குக் காட்டிப் புல்லினளே!

தலைவி தன் அழகு அங்கமெல்லாம் நனைந்த ஆடை ஒட்டியதால் சிக்கெனத் தெரிய, அங்கே நாயகன் அவள் எதிர்பாராத போது திடீரென வருகிறான். அவனை நேருக்கு நேர் பார்த்தவுடன் அவளுக்கு ஒரு சிலிர்ப்பு, நடுக்கம், நாணம் எல்லாம் ஏற்பட்டன. ஆனால் இது நீரின் குளிர்ப்பால் வந்ததென்று அவனை நம்பச் செய்து ஓடிச் சென்று, இந்தச் சாக்கில் அவனை அப்படியே கட்டி அணைத்துக் கொள்ளுகிறாள். (வலிய அணைத்த சுகமல்லவா?) (625)

தோழி மற்றொரு தோழிக்குக் கூறியது

162. பதுமைப் பாவை எழில் மதுவால்
மயங்கும் அழகன் மதுக்கிண்ணம்;
மதுரம் பொழியும் இதழாக
மனத்தில் கொண்டான்; பருகானே.

தலைவன் மது அருந்தத் தொடங்கினான். மதுக் கிண்ணத்தைத் தன் இதழருகே எடுத்துச் சென்றான். பதுமை போல அழகிய தன் காதலியின் மதுவை ஏற்கெனவே நிறையக் கண்ணால் பருகியுள்ளான், அவள் எழிலென்னும் மதுவும் பருகியுள்ளான். மதுக்கிண்ணம் உதட்டருகே போனதும் தன் மங்கையின் செவ்விதழும் அதில் ஊறும் மதுப் போன்ற இதழமுதும் அவனுக்குக் கண்ணில் தெரிய, மது அருந்தாமலே அப்படியே இருக்கிறான்.

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு —திருவள்ளுவர்

இங்கே நினைக்கும் போதே களிக்கின்றான் (302)

தோழியிடம் தலைவி கூறியது

163. ஆயர் பாடி ஆயிழையார்
கற்பினர் நெறியும் புகன்றிடுவர்;
வேய்ங்குழல் ஓசை செவிபுகவும்,
குலப்பெண் யாரே? வேசியரே!

தோழி! கண்ணன் இசையில் மயங்கும் என்னை மட்டும் கற்பு தவறி விட்டவள் என ஏன் நிந்திக்கிறாய். ஆயர் பாடியில் உள்ளவர் அனைவருமே கற்புடையவர்கள் தான். கற்பு நெறி பற்றி அவர்கள் உபதேசமும் செய்ய வல்லவர். ஆனால், கண்ணனின் மதுரக் குழலிசையைக் கேட்டவுடன் கற்பு அடக்கம் எல்லாவற்றையும் காற்றில்

பறக்கவிட்டு விட்டு, யமுனைக் கரைக்கு - அவன் குழலூதும் இடத்திற்கு - அவனிடம் ஓடி விடுகின்றார்களே! இதில் யார் குலப்பெண்? எல்லாரும் வேசியர் என்றல்லவா சொல்லவேண்டும்?

(கண்ணன் பரம்பொருள் - அவன் குழலோசை ஓங்கார நாதம். உயிரினம் எல்லாம் அவன் மனைவியர் தான். உயிரினமாகிய ஆயர் பாடி மகளிரெல்லாம் ஓங்காரத்தால் கண்ணனெனும் கடவுளிடம் ஐக்கியம் ஆகின்றனர். எனவே இது முறையே. கற்புத் தவற வில்லை. கண்ணன் தத்துவம் இதுதான் *(691)*

தன் அழகில் கர்வம் கொண்ட தலைவிக்குத் தோழி கூறியது

164. கொள்ளை அழகும் குணமிருந்தும்
பயனென் காதல் அன்பொழுகும்
உள்ளம் இலையேல்? எண்ணெயிலா
விளக்காம் அதுதான் ஒளி தருமோ?

ஏ பெண்ணே! உன் அழகில் உனக்கு இவ்வளவு கர்வம் இருக்கக்கூடாது. காதலன் இந்த அழகுக்கெல்லாம் மசிய மாட்டான். யாரும் விரும்புவது அன்பு காட்டும் பாசத்தையே. அது காதலில் குழைந்திருக்க வேண்டும். அன்பில்லாக் காநல் பயன் தராது; எண்ணெயில்லாத விளக்கு எப்படி எரியும்? அது போலத்தான். *(681)*

தலைவி தோழியிடம் கூறியது

165. நாயகன் வரவும் நாணத்தால்
காணா தொழிந்த என்கண்கள்,
போயபின் காணத் துடிக்குமிவை
புண்ணிய மின்றிப் போயினவே!

தோழி! காதலனைக் காண எனக்கு அளவற்ற ஆசை, தான், ஆனால் இந்த என் கண்கள் கொடுத்து வைக்க வில்லை. அவர் வரும்போது, நாணத்தால் தலை குனிந்து இந்தக் கண்கள் அவரை ஆசை தீரக் காணாமல் விட்டு விடுகின்றன. அவர் போனபின் அவரைக் காணத் துடிக் கின்றன. இந்தக் கண்கள் அவரைக் காணும் புண்ணியம் செய்யாமல் போய்விட்டனவே. (564)

ராதை கண்ணன் காதலைக் கவி வியப்பது

166. பின்னை கண்ணன் காதலது
நிலைத்த தன்றோ? காளையவன்
பின்னை; கண்ணன் கலப்பையினைப்
பிடித்தோன் பின்னவ னாயிற்றே!

(புலவர் மூலத்தில் இப்பாடலை இரண்டு மூன்று பொருள் படச் சிலேடையாகப் பாடியுள்ளார். அதில் இயல் பொருள் மட்டும் இங்கே காட்டப்பட்டுள்ளது.)

ராதை மற்றும் கண்ணன் இருவருடைய காதலும் இயல்பானது; நிலைத்த சிரஞ்சீவித் தன்மைவாய்ந்ததாகும். ராதாவோ (நப்பின்னை) விருஷபானு - விருஷபம் என்றால் காளை—காளையவன்—அவனின் அனு தங்கை. அதாவது காளையின் பசு தங்கை. கண்ணனோ கலப்பை ஏர் பிடித்த பலராமன் தம்பி. கலப்பை இங்கே அதை இழுக்கும் - பிடிக்கும் காளையைக் குறிக்கும். காளையைக் குறிக்கும் அதற்குத் தம்பியும் பின்னவனும் காளையே. எனவே ராதா பசுவாகவும் கண்ணன் காளையாயும் ஆயினர். இதனால் இது இயல்பான சாசுவதமான காதலானது. (43)

தோழி தலைவியை இடித்துக் கூறியது

167. காதலை மறைப்பாய் பேர்சொல்லாய்
நடையும் முகமும் கண்ணொளியும்
காதலைக் காட்டிக் கொடுத்ததடி
சினந்து சிணுங்கிப் பயனெதுவோ?

பெண்ணே! நீ என்னதான் காதலைப் பல நாள் மறைத்தாலும் அது வெளிப்படாமல் இருக்குமா? நீயே காதலை மறைக்கிறாய்; காதலன் பேரையும் சொல்ல மறுக்கிறாய். ஆனால், காதல் சிலிர்ப்பால் உன் நடையில் ஒரு நளினம் மதர்ப்பு வந்து விட்டது. கண்கள் தம் பார்வையில் வேறு ஒளி காட்டுகின்றன. மிரளும் பார்வை, மயக்கும் பார்வை இவையே இருக்க, இயல்பான வெகுளித்தனமான பார்வை போய்விட்டது. உன் முகமே புத்தொளி கொண்டுள்ளது. இவையே உன் காதலைக் காட்டிக் கொடுத்துவிட்டன. இனியும் மறைக்காதே; பயனில்லை,
(700)

தோழி தலைவிக்குக் கூறியது

168. கண்ணன் கவர மயலானாய்
கள்ளி! அறிவேன்; கரவாதே;
கண்ணே வியர்த்துச் சிலிர்க்கின்றாய்,
அழகி அழகால் பித்தானாய்!

பெண்ணே! என்னிடம் உன் காதலை மறைக்காதே. கண்ணன் உன்னைக் கவர்ந்தான். நீ அவனுக்கு மயங்கி அடிமைப்பட்டு விட்டாய். உன் மனத்தில் நீதான் அழகி என்று எண்ணம். அவனோ உன் அழகையும் கவர்ந்த அழகனாகிவிட்டான். அந்தக் காதல் தளையால் உன் உடல் வியர்க்கிறது; அடிக்கடி சிலிர்க்கிறது. நீ மறைத்தாலும் இவை காட்டிக்கொடுத்து விட்டன. நான் அறிவேன். (623)

தலைவி செயல் பற்றித் தோழி கூறியது

169. கமலக் கண்ணி முகமொடுகால்
கழுவி நகைப்பான் யமுனை எதிர்;
விமலன் நோக்கத் தாழ்த்துகிறாள்
விரும்பி நோக்கி நீராடாள்.

இவள் செயலைப் பார். யமுனை எதிர்க்கரையில் இவள் காதலன் கண்ணன் இருக்கின்றான். அதிக நேரம் அவன் தன்னைப் பார்க்கவேண்டும் என்றும் தானும் அவனைப் பார்க்க நேரம் தேவையென்றும் எண்ணி, இக் கரையில் தன்முகத்தை அலம்புவாள். குதிகாலைக் தேய்ப்பாள். ஆனால் இன்னும் நீராடாமல் ஆற்றில் இறங்காமல் காலம் தாழ்த்துகிறாள். (242)

சூழ்நிலையால் தலைவி அழகு முழுவதும் தலைவன் கண்டு மகிழ்வது

170. உச்சி முனைப் பூ எட்டுகிறாள்;
உடைந ழுவத்தோள் உந்திவரை
கச்சிற் பிதுங்கும் முலைக்கண்ணும்
கண்டேன், கட்டி அணைத்தேனே!

என் காதலி அழகி; காட்டுச் சோலைக்குப் பூப்பறிக்கப் போனாள். அவளறியாமல் நானும் பின் சென்றேன். அவள் தனக்கெட்டாத உச்சிக்கிளையில் பூப்பறிக்க முயன்று எட்டுகிறாள்; சிறிது குதிக்கவும் செய்கிறாள். இதனால் அவள் மேலாடை நழுவுகிறது. அவள் மேலுடல் முழுவதும் இருதோளும் அக்குளும், வயிறும் அதன் மூன்று மடிப்புகளும் உந்திவரை வெளியில் தெரிகின்றன. கையைத் தூக்கி எம்புவதால் இறுகக்கட்டிய கச்சை (ரவிக்கையை) பிதுக்கிக்கொண்டு அவள் இளங் கொள்கைகளின் கண்கள் வெளியில் தெரிகின்றன. கண்டேன்; உள்ளமே மயங்கிப் பதறிக் கலங்கினேன்,

என்ன அழகு என்ன வாய்ப்பு! விடுவேனா? ஓடிச்சென்று அப்படியே கட்டித் தழுவிக்கொண்டேன் பூ அவள் பறித்தாள்! அவளை நான் பறித்துக்கொண்டேன், (512)

தலைவி அனுப்பிய மலர்ப்பற்றித் தலைவன் செயல்

171. மானே விடுத்த மதுமலரை
வாய்முத் தீவான் கன்னமெனத்
தானு மணைப்பான் துடைத்திடுவான்
தந்து விடுப்பான் தாம்பூலம்.

தலைவனுக்குக் காதலி ஒரு அழகிய ரோஜா மலரைப் பரிசாக அனுப்பினாள். தலைவன் அதைக் கண்டதும் தன் தலைவியின் ரோஜாக்கன்னம் நினைவுக்கு வர முத்தமிட்டான். அதனை அணைத்தான்; எச்சில் போகத் துடைத்தான். பின் தன் நினைவாக அவளுக்குப் பீடா என்னும் தாம்பூலம் அனுப்பினான். தாம்பூலம் காமத்தைத் தூண்டுவதும் தலைவி அதைப் போடுவதால் இதழ் சிவப்பதையும் குறிக்கும், அவள் ரோஜா அனுப்பி ரோஜாக் கன்னத்திற்கு முத்தம் கேட்டாள். இவன் தாம்பூலம் அனுப்பி அவளுடன் கூடும் விருப்பத்தைக் காட்டி அவளையே கேட்டான், (தாம்பூலம் கொடுத்துப் பொண்ணை வாங்கிக் கொண்டானோ?) (572)

தலைவன் கூறுவது

172. முத்தே ஆழப் பிறந்தவளின்
மூக்கி லாடி இதழ் சுவைப்பாய்,
அத்தவம் செய்யா உயர்குடியேன்
அழகியின் இதழ்சுவை அறியேனே.

தலைவியின் மூக்கில் தொங்கும் முத்தே! (புல்லாக்கு) நீ மிகவும் புண்ணியம் செய்தனை. கடலில் ஆழமாகக் கீழே பிறந்தாலும் அழகிய என் தலைவியின் மூக்கில் தொங்குகிறாய் (எனக்குப் போட்டியாக); அவள் இதழை சுவைக்கிறாய். உயர் குடியில் உன்னைப்போல் கீழே இல்லாமல் மேலே பிறந்தும், நான் அவள் இதழ்ச் சுவையை இன்னும் அறியேன். இது என்ன அநியாயம்? (பி.ர.706)

தலைவி முகத்தில் வைத்த பொட்டழகைத் தலைவன் சொல்லி மகிழ்வது

173. மங்கையின் திருமுகம் இனிதழகே;
மரகதப் பொட்டும் மதிமுகமும்
திங்களின் தனயன் புதனுந்தன்
மடியில் திகழ்வது போலுளதே!

ஆகா! என் தலைவியின் முகத்தின் அழகே அழகு! தன் மதிமுகத்தில் அவள் மரகதச் சுட்டி அணிந்துள்ளாள். அது சந்திரன் தன் பிள்ளையான புதனைத் தன் மடியில் வைத்துக் கொண்டிருப்பதுபோல் இருக்கிறது. சந்திர முழுநிலவு முகம் பொன்னிறம், புதன் பச்சை மரகதம். பொன்னிறப் பின்னணியில் பொட்டாக ஒளிர்கிறது. புதன்-சந்திரனின் மகனென்பது நூற்கொள்கை. (220)

தலைவி தோழிக்குக் கூறிறது

174. நாயகன் கண்ணில் படும் வரையில்,
நாண்குல எல்லை நான்மீறேன்;
மாயவன் காண வாழ்வறியேன்;
கண்டால் மானம் பறக்குதடி!

தோழி! நான் அவனைப் பார்க்கும் வரையில் வெட்கம் மானம் குலக்கட்டுப்பாடு எல்லாம் மீறாமல் இருக்க முடிகிறது ஆனால் அந்த மாயவனை என்னால்

காணாமல் வாழத் தெரியவில்லை. அப்படிக் கண்டு விட்டால், மானம் குலக்கட்டுப்பாடு எல்லாம் காற்றில் பறந்துவிடுகிறது. அவனையே பார்த்துக் கொண்டிருக் கிறேன் என் மனம் என் வசம் இல்லை. என் செய்வேன். (690)

3. காதலில் அழகு

அழகு என்பது பெண்ணுக்கே உரியது என்பது காதல் நெறித் துணிபு, அவள் வருணனைக் குரியவள். பெண்ணே பெருமைப்பட வேண்டிய ஒன்று. இதற்காக ஆண் குலம் பெண்ணுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. அவளிடம் மகிழ்கிறது; மயங்குகிறது. ஏன்? சில சமயம் அடிமையே ஆகிவிடுகிறது. இதைக் கருத்தில் கொண்டுதான் திருவள்ளுவர் காமத்துப்பாவில் முதலில் தகையணங் குறுத்தல் என்ற பெண்ணின் அழகுக்கு ஆண் வசப்படு வதைப் பொருளாக வைத்து ஆரம்பித்து, பின் அதை அனுபவித்த ஆணின் வாயாலேயே நலம்புனைந்துரைத்தல் என்று அவள் அழகை வருணிக்கிறார், அந்த எல்லைக்குட் பட்ட பிஹாரிலாலின் கவிதைகள் இங்குத் தொடர்கின்றன. (134)

தலைவி பருவத்தின் அழகைப் பெற்றுவிட்டதைத் தோழி கூறுவது

175. பருவ மன்னன் பதம்தர உன்
மனமும் கண்ணும் உடலழகும்,
உருவக் கொங்கைப் பின்னழகும்
உள்ளம் கவர ஒளிருதடி!

பெண்ணே! பருவமென்ற மன்னன் உனக்குப் பதவியை-இளம்பெண், பருவ மங்கை என்ற பதவியைக்

கொடுத்துவிட்டான். அதற்காள குறியீடுகள் தோன்றி விட்டன. உன் மனம் இப்பொழுது ஒரு புது மயக்கத்தைக் காண்கிறது. உடலில் புதுவண்ணம் ஏறியுள்ளது. கண்ணோ மிரள அலைகின்றன. உன் மார்பகம் விம்மிப் பருத்து இப்பொழுது முழு உருவம் பெற்று விட்டன. உன் பின்னழகு இடையின் கீழகன்ற மிடுக்கால் அதிகம் ஒளிபெற்றுவிட்டது. உன் அழகே அழகு! (284)

தோழி தலைவனுக்குக் கூறியது

176. மனமும் கண்ணும் மதியுமுடல்
மங்கைப் பருவப் புத்தெழிலும்,
தினமும் காதல் புரிகின்ற;
தேனே சொரிவாள், இனிஇவளே!

தலைவ! உன் காதலி இப்பொழுதுதான் பருவத்தின் பூரிப்பில் காலெடுத்து வைத்துள்ள பச்சை இளம் பெண்ணாவாள். அவள் மனம், கண், அறிவு இவை போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்துள்ளன கண் பார்த்து மனத்துக்குச் சொல்ல, அறிவு சரியா இல்லையா என்று முடிவு செய்ய, தொடர்ந்து காதலன் களிப்பெய்தும் வகையில் காதல் புரியும் தகுதி இவளுக்கு வந்துவிட்டது. பருவப் பூரிப்பில் உடலழகோ முழுமை பெற்றுவிட்டது. இனி அவள் புரியும் காதலில் உனக்குத் தேன் மழைத்தான். (182)

தலைவியின் கண்ணின் அழகைத் தோழி சொல்வது

177. கண்ணின் மணியின் அழகைப்பார்
கள்ளி முகத்தில் உள்ளிருந்து
பெண்ணின் நாணம் மடமச்சம்
பேதைமை எல்லாம் பளிச்சிடுமே!

தலைவா! உன் காதலியின் கண்ணில் உள்ள மணியின் அழகை நீ கவனித்தாயா? நாணம், அச்சம், மடம், (எல்லாம் தெரிந்து தெரியாமை போன்ற உணர்வு), ஒரு வெகுளியான பேதைத்தனம் எல்லாம் இவள் முகச்சீலைக் குள் மூடிக்கொண்டு பார்த்தாலும் வெளியே பளிச்சிடு கின்றன. இப்பொழுது இவை யெல்லாம் உன்னையே நோக்கியுள்ளன. நீ கொடுத்து வைத்தவன்தான். (183)

தலைவன் தன் தோழனுக்குக் கூறியது

178. காதணி மகர வளையந்தான்
கணைபோல் மனத்தில் பாயுதடா!
காதலி முகத்தின் எழிலெல்லாம்
கருத்தில் பதிந்து போனதடா!

நண்ப! என் காதலி அதோ வருகின்றாள். மகரம் போன்ற (மீன் போன்று ஒரு பக்கம் கூராக உள்ளது) வளையத்தைக் காதில் அணிந்து கொண்டிருக்கின்றாள். முகத்தை அப்படி இப்படி அசைக்கும் போது அவைகள் ஆடும். அவள் அழகு அதிகமாகும். அதனால் அவை என் மனத்தைப் பிளக்கும் கணைகளாகி விட்டன. அவள் முகத்தின் மொத்த அழகும் என் மனத்தில் பதிந்து விட்டது. (266)

தோழி தலைவனுக்குக் கூறுவது

179. பொங்கும் நிலவின் பொன்னொளியில்
பொன்னிற மங்கை புலனாகாள்;
அங்கம் கமழும் புதுமணமும்
வண்டால் அவளும் தெரிவாளே!

தலைவா! உன் தலைவி பொன்னிறம் கொண்ட செம்மை வண்ண மேனியெழில் கொண்டவள். இப்

பொழுதே இரவு குளிரும் புது நிலவு; முழு நிலவு. இதன் ஒளியும் பொன்னிறமே. இதனால் அவள் மேனி நிறமும் இதுவாக இதில் அவள் உனக்குப் புலனாகாள். புது இளமைப் பருவத்தால் அவள் உடலின் எல்லா அங்கங்களி லும் ஒரு புதிய நறுமணம் தோன்றியுள்ளது. அதைக் கொண்டும், அந்த மணத்திற்காக அவள் நகரும் போது அவளைச் சுற்றிவரும் வண்டுகளைக் கொண்டும்தான் அவளை அடையாளம் தெரிந்து கொள்ள வேண்டும்.

(தலைவி நிறம் மிகவும் சிவப்பு என்று சொல்லுவாள்.) (450)

தோழி தலைவயின் பொன்னிறத்தைப் புகழ்ந்தது

180. பொன்னின் மேனி ஒளி மேலும்
பொங்கி வழிய மல்லிகையைக்
கன்னி சூடப் பொன்னிறமாம்
கள்ளி உனையும் கவர்வாளே!

தலைவ! உன் காதலியின் மேனியின் வண்ணத்தைப் பார். ஏற்கெனவே அவள் பொன்னிறம். பருவப் பூரிப் பால் மாயை என்னும் எண்ணெய் பூசியது போன்ற ஒரு பளபளப்பு. பொன் நகை மெருகிட்டது போன்று மேனி முழுவதும் பளிச்சிடுகிறது. அவள் சூடிய மல்லிகை மாலை யும் வெண்மை மாறி, அவள் மேனியின் பொன்னிற மாயிற்று. என்ன நிறம்! என்ன அழகு! அவள் உன்னைக் கவர்ந்ததில் வியப்பில்லை. (295)

தோழி தலைவனுக்குச் சொல்லியது

181. காதள வோடிய கண்ணிணை தான்
காமன் யோக நெறி சொல்லும்;
கண்ணள வேறிய கண்ணொளியால்,
கடவுளில் ஒன்றுவர் யோகியரே!

தலைவ! உன் காதலியின் கண்ணழகைப் பார். காது வரை அவை நீண்டுள்ளன. எனவே காதல் மயக்குப்

பார்வையால் உன்னைக் கவர்ந்து, காமனின் யோக நெறியைப் போதித்து, அவளை உன்னோடு ஒன்றச் செய்கிறது. யோகிகள் கூட கண்களை உயரத் தூக்கிப் பார்க்கும் யோக நெறியால் கடவுளுடன் ஒன்றி அத்வைத நிலையை அடைகின்றனர். (அதை உன் காதலியிடம் தான் கற்றிருக்க வேண்டும்.) (184)

தலைவி மேனியழகைத் தலைவனுக்குத் தோழி சொல்லியது

182. பருவ மங்கை உருவஎழில்
பார்வை நுழையும் துகிலூடே
வெருவிப் பார்க்கக் கடலூடே
கற்பகக் கொடிபோல் தெரிகின்றாள்.

தலைவ! உன் காதலியின் அழகே அழகு. அவள் பொன்னொளி மேனியில் தன் இயல்பான உடை மேல் பிறர் பார்வையும் நுழையும் உருவத்தைக் காட்டுகிற மெல்லிய துகிலைப் போர்த்திருந்தாள். கண்ணாடிக் கூண்டுக்குள் விளக்குப் போல அவள் பொன்னொளி மேனி சேலைக்கு வெளியே பளிச்சிடுகிறது. இந் நிலையில் தன் முகத்திரை நீக்கி நாணம் அச்சமுடன் உன்னைப் பார்க்கின்றாள். இது கடலிலிருந்து பொன்னொளி வீசும் கற்பகக் கொடி வெளிவருவது போல் அவள் காட்சியளிக்கின்றாள். அவ்வளவே. நீ கொள்ளை போய் விட்டாய்.

(பி. ர. 16)

தலைவன் தோழிக்குச் சொல்லியது

183. நோக்காம் பயணிமெய் ஒளிஉதயம்
நோக்கி நடப்ப, எழிற் கள்ளன்
தாக்கச் சிரிப்பால் சுருக்கிட்டுக்
கீழிதழ்க் குழியில் தள்ளினனே.

அவள் அழகில் நான் என்னை இழந்து மூழ்கி விட்டேன். என் பார்வை அவள் உடல் ஒளியை இதுதான் உதயம் (தொடக்கம்) என்று எண்ணி, அவள் அழகு பூராவும் அனுபவிக்கத் தன் பயணத்தைத் தொடங்கியது. ஆனால் அவள் அழகு என்னும் திருடன் அவள் அழகு மயக்கம் என்ற இருட்டில் என் பார்வைப் பயணி திகைத்ததால், அதனைத் தாக்கி, அவள் செய்த நகைச்சுவைச் சிரிப்பால் அதனைத் தூக்கிலிட்டு, அவளுடைய கீழுதட்டில் உள்ள பள்ளத்தில் (என்னை) அந்தப் பார்வையைத் தள்ளி விட்டான். மீளாமல் தவிக்கின்றேன். என் செய்வேன். (அவள் அழகைக் காணப் போய் முகம் வரை கூடப் பார்க்க முடியாமல் பாதியிலேயே தவிக்கின்றான் இவன்.)
(177)

தலைவன் தோழிக்குக் கூறியது

184. கொங்கை மலைமேல் படியேறி
 கொண்ட களைப்பால் என் கண்கள்
 திங்கள் முகத்தைத் தீண்டப் போய்
 கீழிதழ்க் குழியில் விழுந்தனவே!

தலைவன் கண்கள் தலைவி அழகினை மேலிருந்து தொடங்கிப் பார்க்கத் தொடங்கி, அவள் கீழ் இதழ் என்னும் புதை சேற்றுக் குழியில் விழுந்து விட்டன. இப்பொழுது கீழே இருந்து தொடங்கி அவள் அழகைப் பார்க்கக் கிளம்பின. அவளுடைய விம்மிக் குவிந்த கொங்கைகள் என்னும் (இரு கண்கள் இரு கொங்கைகள்) மலையின் உயரத்திற்கு மெதுவாக ஏறின. உச்சி அடைந்த பின் களைத்துப் போயின. அந்த உச்சியிலிருந்து அவள் முகம் தெரிந்தது. எனவே அவள் இதழை முத்தமிட்டுச் சுவைத்துத் தம் களைப்பைத் தீர்த்துக் கொள்ள எண்ணி இறங்க ஆரம்பித்த வேகத்தில் உருண்டுப் போய் இதழை அடைய மாட்டாமல் இடையிலேயே அவளுடைய கீழி

தழ்க் குழி என்னும் புதை சேற்றுக் குழியில் மீண்டும் விழுந்து விட்டன. என் செய்வேன்! அவள் அழகு கண் களுக்கு அடங்காதது என்பதாம். (172)

இராதையைப் பார்த்துத் தோழிக் கூறியது

185. அழகால் பின்னாய்! ஊர்வசி நீ
அவளை விஞ்சிய பேர்வழி நீ!
சூழகன் கள்ளன் உள்ளத்தில்,
உள்வசி நாமம் பெற்றனையோ?

கேளடி நப்பின்னை நங்காய்! நீ அழகால் ஊர்வசி என்னும் தேவப் பெண்ணையும் விஞ்சியவள். இளங் குமர னாகிய கண்ணனின் உள்ளத்தில் வசிப்பவளாகி (உள்வசி) யாகி விட்டாய். கண்ணன் உள்ளத்தை நீ கொள்ளை கொண்டு விட்டாய். ஊர்வசியைவிட நீ கொடுத்து வைத்தவள். (696)

தலைவியின் தோழி மற்றவளுக்குக் கூறியது

186. கண்ணே றஞ்சிக் கரும்புள்ளி
கன்னம் வைக்கச் செம்மேனி
பெண்ணின் அழகே பெரிதாகப்
பேதை யுறுவர் ஆடவரே.

தலைவியின் அழகும் நிறமும் மிகவும் நேர்த்தி யானவை. அதைப் பார்த்து யாரும் கண் வைக்கக் கூடாது என்று அவள் சிவந்த கன்னத்தில் ஒரு கரும் புள்ளி வைத்தனர். அது பொன்னிற மேனியளாகிய அவள் அழகை மேலும் பெருக வைத்தது. பார்த்த ஆடவர் எல்லாம் புத்தி பேதலித்தனர். (பி. ர.28)

தலைவியின் பாத அழகு

187. பஞ்சின் பாதம் பவளவிரல்
பாங்கைச் சொல்லப் போமோசெம்
பஞ்சுக் குழம்பு பூசப்போய்
பாதியில் நின்று பதறினளே.

தலைவியின் பாதம் பவளவிரல் கொண்ட பஞ்சு போன்று மென்மையாகவும் சிவப்பாகவும் உள்ளது. தோழி அவற்றிற் செம்பஞ்சுக் குழம்பு பூசி அழகு செய்ய ஆரம்பித்தாள். பாதமும் சிவப்பு; குழம்பும் சிவப்பு. இதனால் வேறுபாடு தெரியவில்லை. எனவே பாதி பூசு கையில், ஆரம்பித்தது எங்கே? விட்டது எங்கே என்பது தெரியாமல் பதறிப் பாதியிலேயே நிறுத்தி விட்டாள் தோழி.

பஞ்சொக்கும் பாதம் செய்ய பவளத்தின் விரல்கள் ஐய!
—கம்பன். (157)

இளம் தலைவியின் புதிய அழகு கண்டு தலைவனின் மற்ற மனைவியர் வருந்தல்

188. பூவை இளம்பெண் பருவத்தாள்
பூத்துக் குலுங்கி ஒளிவீச,
பாவை நாயகன் பிறமகளிர்
பளிங்கு முகங்கள் மங்கியவே.

தலைவனுக்குப் பல மனைவிகள். இளம்பெண் ஒருத்தியை இப்பொழுதுதான் திருமணம் செய்து வந்தான். அவள் ஏற்கெனவே அழகி. இப்பொழுது பருவம் பூத்துக் குலுங்கி அவளை மேலும் அழகு செய்து ஒளி வீசச் செய்தது. இதைப் பார்த்த தலைவனின் மற்ற மனைவிகளின் முகங்கள் ஒளி இழந்தன (தலைவன் இனி இவளையே சுற்றுவான் அல்லவா?) (283)

தலைவியின் அழகைத் தலைவன் தோழிக்குச் சொல்லுவது

189. திங்கள் செவ்வாய் குருஇணையத்
திகழும் வளம்போல், செம்பொட்டுத்
திங்கள் முகத்து நுதல் மஞ்சள்
திதலை மனத்தை இழுக்குதடி!

தலைவி அணிகலன் அணிந்து, பொட்டிட்டு, நுதலில் மஞ்சள் பொட்டுகள் மயிர் ஓரம் முன்னுச்சியில் இட்டுத் திங்கள் முகம் ஒளிவீச வருகிறாள். என் உள்ளம் பறி போகிறது. சந்திரன், செவ்வாய், குரு இந்தக் கோள்கள் கோசாரத்தில் கூடும் போது, உலகில் மழை பெய்து வளம் பெருகுவது போலச் சந்திரமுகத்தில் செவ்வாய்க்குரிய சிவப்புகுங்குமம் குருவின் மஞ்சள் நிற மஞ்சள், சந்தனக் கலவையை முன்னுச்சியில் இணைத்ததால் என் உள்ளத்தில் காதல் என்னும் குளிர்ந்த வெள்ளம் பெருகிவிட்டது. (268)

தலைவியின் கண்ணழகைத் தலைவன் வியப்பது

190. காமச் சுவையைப் போதிக்கும்
கண்கள் கஞ்சப் புள்ளிணையோ?
தாமரை யோ! மை தீட்டாவெண்
கருமை கலந்து தளிர்ப்பதுவோ!

பெண்ணே! உன் கண்கள் மிகவும் கவர்ச்சி உடையவை. ஆளை அப்படியே சொக்கி இழுக்கின்றன. சிருங்காரக் காமச் சுவையைப் போதிக்கும் ஆசானாக இருக்கின்றன. தாமரை போல் சிவந்தும் கஞ்சப் பட்சிகள் போன்று மை தீட்டாமலேயே கருமையாயும், வெண்மையும் கலந்து என் உள்ளம் குளிர்வித்துத் தளிரும் படி செய்கின்றன.

"கஞ்சத்தின் அளவிற் றேனும்
கடலினும் பெரிய கண்கள்" —கம்பன்.

கறுப்பும் லவண்மையும் கலந்த கஞ்சப்புள் என்னும் சிறுபறவை கண்ணுக்கு உவமை கூறப்படுவது. (187)

தலைவியின் கண்ணழகைத் தோழி வியப்பது

191. கண்ணே திரையை நீக்கிமுகம்
காட்டு! காளையர் மகிழட்டும்;
விண்ணின் நிலவு தேயட்டும்;
விரியும் கமலம் வாடட்டும்.

கண்ணே! என் தோழி! இப்பொழுது நீ முழு அழகு பெற்று விட்டாய். உன் முகமொன்றே போதும். யாரையும் கவர்ந்து இழுக்கும். அதனால் முகச் சீலையைத் திறந்து உன் முகத்தை வெளியே காட்டு. இளம் காளைகளான வாலிபர்கள் அதைக் கண்டு மகிழ்வர்; மயங்குவர். உன் முகத்தைப் பார்த்த முழுநிலவு வெட்கப்பட்டுத் தேய்ந்து விடும். விரிந்த கமலமோ உன் முகத்திற்கு ஈடாக வில்லையே என்று வாடிவிடும்.

சந்திரன் இயல்பாகவே தேய்வதற்கும் இரவில் கமலம் மூடிக் கொள்வதற்கும் இவள் முகமே காரணம் என்று அழகு படுத்துகிறார் புலவர். (370)

தலைவியின் கண்ணழகை நாயகன் வியந்தது

192. அந்தி மயக்கம் செய்யும் கண்
முந்நிற வண்ணம் அலைபாயும்;
சந்திர வதனி! தாமரையும்
வாடும்; மீனும் ஒளிந்திடுமே!

ஏ பெண்ணே! உன் கண்ணின் அழகே அழகு! மாலையில் ஏற்படும் மயக்கம் போல் எல்லாரையும் அது மயங்கச்

செய்யும். அதில் செம்மை வெண்மை கருமை மூன்று நிறங்களும் கலந்துள்ளன. இக் கண்களைக் கண்டு கமல மலர் தாம் ஒப்பாக வில்லையே என்று இதழ் மூடிக் கொள்ளும். மீன்களோ அதற்குத் தாம் நிகரில்லையே என்று ஓடி ஒளிகின்றன. (188)

தலைவியின் கண்ணழகை கண்ணனுக்குத் தோழி சொல்வது

193. மன்மதன் அம்பும் மருளும்மான்
கண்ணும் இவளிடம் தோற்றனவே!
மன்மதன் தோற்கும் மணிவண்ணா!
மாதிவள் கணபோல் உண்டோதான்?

மன்மதன் கூடத் தோற்றுப் போகும்படியான அழகான கண்ணனே! இவள் கண்களைப் பார். காம பாணம் போன்று கண்டாரைக் காமுறச் செய்து வீழ்த்துகின்றன. எனவே அக்காமன் அம்பைவிட இவை பொல்லாதவை. மானின் மருண்ட பார்வையின் மயக்கம் இவள் கண்ணில் இருப்பதால் மானும் பார்வைக்கு இவளிடம் தோற்று விடும் என்பதே உண்மையாகும். (189)

தலைவியின் அழகைத் தோழி புகழ்வது

194. பொன்னின் மேனி அரவமணி
பூட்டித் திரிவாள்; புத்தொளியால்,
தன்மனை தீபம் அணைந்தாலும்,
விளக்குச் சுடர்போல் வீசுகிறாள்.

தலைவ! பொன்னிறத்தோடு பளபளக்க ஒளி வீசும் மேனி படைத்தவள் உன் காதலி. இன்று அவள் நாக ரத்தினங்களாலான (அரவமணி) அணிகலன்கள் அணிந்துள்ளாள். பொன்னிறமேனியில் அவை பிரதிபலித்து அவள் மேனியொளி பன்மடங்காகி விடுகிறது. இப்படியே

அவள் வீட்டில் உலவி வருகிறாள். விளக்கை அணைத்தாலும் இவள் மேனியே ஒளியால் சுழலும் விளக்காகத் திரிகின்றாள். தனியாக வீட்டுக்கு விளக்குத் தேவை இல்லை. (275)

தலைவியின் பருவச் சந்திப்பின் அழகைத் தோழி தலைவனிடம் வியந்து கூறியது

195. பிள்ளை மங்கை இருபருவம்;
அங்கம் முழுதும் அழகூட்டும்;
வில்லும் இருசுடர் விளக்கானாள்
இருநிறப் பட்டுடை அணிந்தாளோ?

தலைவ! உன் காதலியின் அழகே அழகு. அது இரு வகைக் கலவையாக இப்பொழுது தோன்றுகிறது. இவளுக்குப் பிள்ளைப் பருவம் இன்னமும் விலகவில்லை. மங்கையாம் பெண்மைப் பருவ நளினமும் முழுதும் வரவில்லை. இரு பருவத்தின் அழகும் இவள் உடலில் களை கட்டியுள்ளது. இரண்டும் தனிஒளி பெற்றதால், இவள் இரட்டைத் திரியுள்ள விளக்காகத் திரிகின்றாள். மேனியில் இருபருவமும் பளிச்சிடுவதால் இவள் இரு வண்ணப் பட்டாடை சுற்றியவள்போல் பளபளக்கிறாள்.

(Double Colour புடவையில் பெண்களுக்கு விருப்பம் அதிகம். கவிஞர் காலத்திலேயே அது உண்டு போலும்.) (281)

தலைவியின் முக அழகைத் தோழி தலைவனுக்கு வியந்து கூறியது

196. மங்கை முகமதிப் பேரொளியால்,
வளர்பிறை தேய்பிறை யறியாதார்,
தங்கள் கணிதப் பஞ்சாங்கம்
கண்டே அறிவர்; என்செய்வார்?

தலைவா! உன் தலைவியின் முகத்தைப் பார்; கொள்ளை அழகோ அழகு. எப்பொழுதும் பௌர்ணமியின் அதாவது முழு நிலவாக ஒளிவீசிக் கொண்டிருப்பதால், சந்திரன் மங்கிப் போகிறது. இதனால் அவளுடைய வீட்டில் தேய்பிறைக்கும் வளர்பிறைக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. பஞ்சாங்கத்தைக் கொண்டு தான் இரண்டு பக்ஷத்தையும் திதியையும் தெரிந்து கொள்ளுகிறார்கள்.
(165)

தோழி தலைவியின் கொங்கை அழகைக் கூறுவது

197. கொங்கை மலையின் குவடுகளில்
கொள்ளைக் காமன் திரிகின்றான்;
எங்கும் வரைவழி ஏகார்போல்
இவளைப் பிழைத்துப் போவீரே!

தலைவ! மலைப்பாதைகளில் மலைக்கள்ளர்கள் திரிவார்கள். அதனால் ஊர்ப் பயணம் செல்வோர் அப்பாதைகளைத் தவிர்ப்பார்கள். அதுபோல் உன் தலைவியின் கொங்கைகள் இப்பொழுது முழுவதும் விம்மிப் புடைத்துப் பருத்து உயர்ந்து மலைபோல் வளர்ந்து விட்டன. அதன் உச்சியில் காமன் என்னும் கொள்ளைக்காரன் காணும் இளைஞர்களைக் கொள்ளையடிக்கவே திரிந்து கொண்டிருக்கின்றான். அதனால் எச்சரிக்கை. நீயும் அவள் கொங்கைகளைக் காணப்போய் அந்தக் கொள்ளைக்காரனிடம் மாட்டிக் கொள்ளாதே.
(162)

நாட்டுப்புற இளம்பெண் உடலழகைத் தலைவனுக்குத் தோழி சொல்வது

198. பட்டிச் காட்டுக் கட்டுடலாள்
பகட்டாய் இடுப்பில் கை வைத்துச்
சுட்டி நோக்கிக் கவர்ந்திடுவாள்;
மஞ்சள் சுண்ண முகத்தாளே.

தலைவா! உன்னுடைய நாட்டுப்புற அழகியைப் பார். நாணம் குறைவு; முரட்டுப் பெண். ஆனால், கட்டுடலான வாளிப்புடையவள். முகத்தில் மஞ்சள் சந்தனக் கலவைப் பொடியால் அழகு செய்து கொண்டுள்ளாள். காலை இடக்காக வைத்துக் கொண்டு, இடுப்பில் இருபக்கமும் இரு கையையும் வைத்துக் கொண்டு நிற்கிறாள். உன்னைச் சுண்டி இழுத்துப் பார்த்து, உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டாள் பார். (333)

தலைவன் தலைவியின் கூந்தலழகைக் கூறியது

199. கந்தம் கமழும் கருஞ் சுருளாய்
மெல்லிய தண்ணிய கூந்தலினை
முந்தி வாரி முடிக்கின்றாள்;
சிந்தையும் வாரி முடிக்கின்றாள்!

என் தலைவியின் கூந்தல் நீண்டு சுருண்டு, இயற்கை வாசனையோடும் மென்மையாகவும் சில்லென்று தண்மை யாகவும் உள்ளது. அதனை மதிமுகப் பின்னணியில் மேகத்தில் சந்திரன் போன்று தோன்றக் கோதி வாரி முடிக்கின்றாள். அதனுடன் என் சிந்தையையும் சேர்த்துச் செருகிக் கொண்டாள். (223)

நாயகியின் நிற அழகு பற்றித் தோழி தலைவனுக்குக் கூறியது

200. வண்ணக் குங்குமம் கேசரியும்
சண்பக மலரும் பொன்னிவைதாம்
பெண்ணின் மேனிக் கொப்பாமோ?
பேதித் திடுமென் நெஞ்சகமே!

சிவப்புக் குங்குமமும் நெற்றி முனையில் பூசும் கேசரிச் சுண்ணமும் இவள் மேனி நிறத்தை ஒவ்வாது; அவை ஒட்டிக் கொள்ளும். இவள் மேனி மென்மை. சண்பகமலர்

(மஞ்சளானது) ஒக்குமோ என்றால், அது வாடிவிடும். இவள் மேனி வாடாது தளதளக்கும். தங்கந்தான் ஒக்குமோ என்றால், அது உலோகம்; உறுதி, மென்மை இல்லை. இதனால் இவை எல்லாவற்றிற்குமோ, தனித் தனி ஒவ்வொன்றிற்குமோ இவள் மேனி ஒவ்வாது. மேலே சொன்ன குறையெல்லாம் ஒரு தனி வகையாய் பொன் மென்மை கொண்டாற்போன்று இவள் மேனி நிறம் பளிச் சிடுகிறது. என் நெஞ்சகம் மருள்கிறது. (290)

தலைவன் தலைவியின் முக அழகு கூறல்

201. மதிமுகச் சுட்டி மாணிக்கம்
மதியில் கதிரவன் உதயம்தான்;
மதியொளி மங்கும்; மதிமுகமோ
மணியொளி வீசி மலருதடா!

இவள் தன் சந்திரன் போன்ற முகத்தில் மாணிக்கத்தாலான சுட்டித் திலகம் அணிந்திருக்கின்றாள். இது சந்திர மண்டலத்தில் சூரியன் உதயமானது போல் உள்ளது. சந்திரனுடன் சூரியன் சேர்ந்தால் சந்திரனின் ஒளி மங்கும்; மழுங்கும். ஆனால் இவள் முகச் சந்திரனில் மாணிக்கம் வெகு அழகாகச் செங்கதிர் வீசி ஒளிர்கின்றது. சூரிய சந்திர சேர்க்கை அமாவாசை; அன்று ஒளி கிடையாது; இங்கே முழுவதும் ஒளியே! (256)

தலைவி அழகு பற்றித் தோழி சொல்லியது

202. வெள்ளைச் சேலைப் பொன்வளையம்
காதி லணிந்தாள் அழகைக்கேள்;
வெள்ளைக் கங்கை வெய்யிலிலே
வெங்கதிர் உருவம் ஆடுதடா!

உன் காதலி இன்று வெள்ளைச் சேலை உடுத்து வந்துள்ளான், பொன்மேனியில் இச் சேலை மிகவும்

எடுப்பாக இருக்கிறது. இவள் காதில் பொன்வளையும் அணிந்துள்ளாள். இது இவள் அழகை மேலும் பலமடங் காக்கி மிளிர்கிறது. இது வெண்மையான கங்கை நீரில் வெய்யில் வேளையில் கதிரவனின் உருவம் ஆடுவதுபோல் இருக்கிறது. கதிரவன் ஒருவன்தான். ஆனால் இரு வளையங்கள் இரு கதிரவர்கள் சொலிப்பதுபோல் இருக் கிறது என்ன இருந்தாலும் உன்னவள் கொள்ளை அழகுதான். (175)

தலைவியின் மேனி அழகைத் தோழி சொல்லியது

203. வண்ண நிலவும் நிழலாகும்,
வண்ணம் கொண்ட பொன்மேனிப்
பெண்ணின் மேனி; இவள் முன்னால்
பெண்வே றொளிதான் பெறுவாளோ!

தலைவ! உன் தலைவியின் வண்ணப் பொன் மேனி யின் தண்ணிய ஒளியில் முழு நிலவும் நிழலாகி விட்டது. அப்படி இருக்க, இவள் எதிரில் இருக்கும்போது வேறு எந்தப் பெண்தான் ஒளிபெற முடியும்? இவள் மேனி ஒளியில் மற்றவர் அழகெல்லாம் மங்கிப் போகும் என்பதாம். (242)

தலைவி மனம் கவரும் பருவம் பெறுவதைத் தோழி தலைவனுக்குக் கூறுவது

204. சித்திரைப் பகலும் நீளும் இரா
சிறுகும் மாறிய பருவத்தால்;
சித்திரப் பாவை செழுங்கொங்கை
புடைத்து விம்மும்; இடை தேயும்.

தலைவா! உன் தலைவி உனக்காகவே தன் புதிய இளமையால் பூத்துக் குலுங்குகின்றாள். இப்பொழுதான் சிறுமிப் பருவம் தாண்டி, மங்கைப் பருவம் அடைகிறாள்

இதனால் சித்திரை மாதம் பகல் நீண்டு இரவு குறைவதைப் போல், பெண்மை முதல் அழகான இவள் வாளிப்பான மார்பகங்கள் இப்பொழுது விம்மிப் புடைத்துப் பெரியவை யாகி விட்டன. ஆனால், இடையோ சித்திரை இரவு போல் குறைந்து தேய்ந்து விட்டது. உன்பாடு யோகம் தான்.

(161)

தலைவியின் மேனிநிற அழகைத் தோழி தலைவனுக்குக் கூறுவது

205 மஞ்சள் மல்லிகைச் சோலையிலே
மங்கை புகுந்தாள், மறைவானாள்;
கொஞ்சு மொழியாள் மெய்வாசம்
கொண்டே கண்டு கொண்டோமே!

தலைவ! உன் தலைவி பொன்மேனி கொண்டவள். மஞ்சள் மல்லிகையே பூக்கும் சோலையிலே இவள் பூப்பறிக்கச் சென்றாள். மஞ்சள் பூக்கள் நடுவில் இவள் பொன்மேனி ஒளியும் கலந்து இவளை அடையாளம் தெரிந்து கொள்ள முடியாதபடி இவள் மறைவாகி விட்டாள். ஆனால் இவள் உடலுக்குத் தனியாக ஒரு வாசனை உண்டு. மஞ்சள் பூச்சோலையில் இவள் இருக்குமிடத்தில் தோன்றும். அவ்வாசனையைக் கொண்டு தான் இவள் இருப்பதை நாம் அறிவோம்.

(291)

தலைவியின் மூக்கின் அழகைக் கூறல்

206. சிவப்பு மூக்கில் நீலமணி
செண்பகப் பூமேல் கருவண்டாய்,
உவந்து தேனைப் பருகல்போல்
உதிக்கும் காட்சி அழகைப் பார்!

தலைவ! உன் காதலி நல்ல சிவப்பு நிற முள்ளவள் அவள் மூக்கில் நீல மணி அணிந்திருந்தாள். அது செண்பக மலரில் ஒரு கருவண்டு அமர்ந்து தேனருந்துவது போன்று காணப்படும். இந்த அழகான காட்சியைப் பாருங்கள். (நீலமணி வண்டு தலைவன். மூக்கு தலைவி. இவள் உற்ற பருவம் பெற்றாள். இனி நீ இவளை வண்டு தேன் குடிப்பது போன்று அனுபவித்து அவள் இளமை நலத்தைத் துய்ப்பாயாக!) (178)

தலைவனுக்குத் தோழி தலைவியின் மேனி வண்ணம் கூறல்

207. பொன்னின் மேனிப் பெண்ணிளமான்
புனலில் முழுகும் இடமெல்லாம்
பொன்னின் வண்ணம் புனலாகும்;
புதுமைப் பெண்ணின் அழகிதுவே!

தலைவ! உன் தலைவியின் மேனி வண்ணத்தைத் பார். அது பொன்வண்ணமாக ஒளிவீசுகிறது. அதோ, அவள் புனலாடுகிறாள். அப்படி ஆடும் போது நீரில் முழுகி நீரின் கீழ்ப்போகிறாள். அப்பொழுது அவளுக்கு நேரான நீர் மட்டம் பொன்னின் வண்ணமாகக் காட்சி யளிக்கிறது. இந்த அதிசயததைப் பார்த்தாயா? அவ்வளவு சிவப்பு உன் காதலி! (243)

இதுவும் அப்படியே—தோழி தலைவியின் கொங்கையின் தன்மையைக் கூறுகிறாள்!

208. தருண மங்கையின் பூரிப்பு
பையப் பையத் தழுவுதடா!
உருவக் கொங்கை உருண்டுதிரண்
டுயரும்; தோழியர் மனம் வேகும்.

தலைவ! உன் காதலி இப்பொழுது சிற்றிளமை நீங்கி நல்ல பருவத்தில் பூரிக்கத் தொடங்கியிருக்கிறாள்.

இதனால் அவள் அங்கங்கள் எல்லாம் பூசிப் புடைத்து வடிவம் பெறுகின்றன. முக்கியமான பெண்மையின் தளதளப்பைக் காட்டும் அவள் கொங்கைகள் திரண்டு உருண்டு உயர்த்து புடைத்து விம்மிப் பருத்துள்ளன. இதனால் அவள் தோழியர் (உன் பிற காதலியர்) பெறாமையால் மனம் வேகின்றனர். (287)

தலைவி மூக்கின் கீழ் வெண்மைத் திட்டு தெரிவதை வருணிப்பது—தோழிகூற்று

209 வெற்றிலை மென்ற சுண்ணாம்பு
ஒட்டிய மூக்கெனத் துடைக்கின்றாய்;
மற்றுன் மூக்கணி வெண்முத்தின்
நிழல்திட் டிதுவென மனம் கொள்வாய்.

பேதைப் பெண்ணே! வெற்றிலை போட்டு உன் உதட்டுச் சிவப்பு இன்னும் அதிகமாகியது. மூக்கின் கீழ் மேல் உதட்டில் வெள்ளைத்திட்டு தெரிகிறது! இது வெற்றிலையின் சுண்ணாம்பு என்று எண்ணித் துடைக்கிறாய். உண்மையில் உன் மூக்கில் தொங்கும் முத்து (புல்லாக்கு) சிவந்த மேலிதழில் பளபளக்கும் பொன்வண்ணப் பின்னணியில் வெண்மையான பிம்பமாக விழுகிறது. அதைத் துடைக்கும் முயற்சி வீண்! உன்மேனி நிறம் தன் மேலுள்ள பொருளையும் தன்னுண்மை காட்டும்; சிவப்பு ரசம் பூசிய கண்ணாடி போன்ற பளபளப்பு. (179)

இது தலைவியின் கொங்கையழகைத் தலைவனுக்குக் கூறல்

210 சொல்லில் அடங்கா அங்களழில்
சுடரும் மேனி மெல்லாடை
புல்லி இறுக்கியும் பூரிக்கும்
கச்சி லடங்காப் பூண்முலையே!

தலைவ! உன் காதலியின் ஒவ்வொரு அங்கத்திலும் இப்பொழுது இளமையின் செழிப்பு ஒளிருகிறது. அவள் அங்கங்கள் எல்லாமே சொல்லில் அடங்கா அழகுள்ளவையாய், உடுத்திய உடையை மீறித் தெரிகின்றன. கச்சையும் அதன் மேல் முன்தானையையும் இறுக்கி இழுத்துக் கட்டியும் அவற்றுள் அடங்காமல் பிதுங்குவது போன்று முழுத் தோற்றத்துடன் அவளுடைய அழகிய கொங்கைகள் தெரிகின்றன. உன்பாடு யோகம்தான்.

'கச்சின்கண் அடங்காத கனதனமும் கண்டு சோர்ந்து
பிச்சன் போல் ஆயினனப் பெண்மணியின்
நலமெல்லாம் பெறுவான் நின்றான்.

—வில்லி பாரதம். (245)

தலைவியின் மேனி வண்ண எழிலைத் தோழி கூறல்

211. மஞ்சள் மல்லிகைப் பொன்மேனி
மங்கை சுற்றிய செம்பட்டு
கொஞ்சு நடைப்பெண் இருவண்ணக்
கோலம் கொண்டாள்; மிக அழகே!

தலைவ! இயற்கையாகவே உன் காதலியின் மேனி வண்ணம் மஞ்சள் மல்லிகை போல் பொன்னிறம். அதன் மேல் அவள் செம்பட்டு சுற்றியுள்ளாள். அதுவும் பார்வை நுழையும் மெல்லிது. எனவே அவள் சுற்றிய ஆடையா அல்லது மேனியோ? சிவப்பும் மஞ்சளும் கலந்த இரு வண்ணமாகப் போட்டி போட்டுக் காட்சி அளிக்கின்றன. உன் காதலியின் அழகு இன்னும் கூடுகிறது. (249)

தலைவிக்குத் தலைவன் மாலை அணிவித்தான்

212. நாயகி அழகு நலம் பெருக
வகுள மாலை அணிவித்தான்;
நாயகி மேனி நளினத்தால்,
வகுளம் புத்தெழில் பெற்றதடி!

தோழி (மற்றொரு தோழியிடம்) கூறல். நாயகியோ பொன்மேனி அழகி. அவளுக்குத் தலைவன் தன் கையால் தானே அக்கறையுடன் தொடுத்த வகுளமலர் மாலையை அணிவித்தான். இதனால் அவள் அழகுகூடும் என்பது அவன் எண்ணம். மாறாக அவள் மேனி நிறத்தால் அந்த வகுள மாலை வண்ணம் மாறி, புத்தொளீ பெற்றது. (513)

தலைவியின் பாதவண்ணத்தைத் தோழி கூறல்

213. பாத விரலில் மாணிக்க
மெட்டி அணிந்தாள் பாவையிவள்;
பாதச் சிவப்பில் மணியொளிதான்
பாதம்பணிந்த சூரியனோ?

இவள் பாதவிரலில் மாணிக்க மணி பதித்த மெட்டி (காலாழி) அணிந்துள்ளாள். ஏற்கெனவே அவள் பாதம் சிவந்த நிறமுள்ளவை. அதில் மாணிக்கம் மேலும் சுடர் வீசுகிறது வானத்தில் உள்ள சூரியன் இவள் பாதச் சிவப்புக்கு நாம் ஒப்பாக வில்லையே என்று அஞ்சி அவள் காலில் சரண்புகுந்ததுபோல் தோன்றுகிறது. மாணிக்கம்- சூரியனுக்கு உவமை. (259)

தலைவியின் தொடையழகு கூறுவது

214 கதலித் தண்டில் அழகூற்றிக்
காமன் செய்த தொடை இவையோ?
மதன ஆடல் புரியுங்கால்,
மகிழ்வோன் புரளும் மஞ்சமிதோ?

இவள் தொடைகள் திரண்டுருண்டு அழகாகவும் மெத்தென்றும் மென்மையும் தண்மையும் பெற்று, வாழைத் தண்டைக் குழலாக்கி, அதில் அழகென்னும் நீரை ஊற்றி நிரப்பி, மன்மதன் படைத்து வைத்தது போன்றுள்ளன. காதலன் இவளுடன் மதன கேளிக்கை புரியும் போது, அவன் படுத்துப் புரளச் சுகங்கள் கொடுக்கும் மஞ்சம் தான் இவையோ? (தற்காலத்தில் நீரிட்டு மெத்தை செய்து படுக்கும் பழக்கமும் உண்டு. இவள் தொடை Tube என்று சொன்னால் இதில் அழகென்னும் நீர் நிரப்பப்பட்டுள்ளது என்க.) (154)

தலைவியின் அங்கங்கள் பருத்தலும் மெலிதலும்

215 பருவ மென்னும் இளவரசன்
பலரை ஏற்றி இறக்கிடுவான்;
உருவப் பெண்ணின் அங்கங்கள்
பருக்கும் மெலியும் உண்மையிதே.

தலைவியின் உடல் இப்பொழுதுதான் சிற்றிளமை கடந்து 'யுவதி' என்ற இளம் பெண்ணாகத் தொடங்கியுள்ளாள். பருவம் என்னும் இளவரசன் இப்பொழுது தான் அவள்மேல் ஆட்சி செலுத்தத் தொடங்கியுள்ளான். புதிதாகப் பதவிக்கு வந்தவன் சிலருக்குச் சம்பளம் கூட்டுவதும் சிலருக்குக் குறைப்பதும் உண்டு. அதுபோல் இவள் அங்கங்களில் சில—உடலின் கொங்கைகள், தொடை, இடைப்பின்னால் பிட்ட பாகம் — பருத்தும் இடை வயிறு முதலியவை மெலிந்தும் இருப்பதும் இதனால்தான். மொத்தத்தில் இவள் பேரழகியே. (282)

ஒரு புதிய தலைவியின் பேரழகைப்பற்றித் தோழி கண்ணனுக்குக் கூறியது

216. கண்ணா பெரியேன் என்றெண்ணேல்
கையை நெஞ்சில் வைத்துப் பார்;
பெண்ணிவள் கையைக் கண்டாலே
பேதை நெஞ்சம் மயலாவாய்.

கண்ணா! நீ பல கோபிகைப் பெண்களையும் அவர்கள் அழகையும் கண்டிருப்பாய். இப்பொழுது இதோ ஒரு புது இடைப்பெண் வருகிறாள். உன் நெஞ்சைத் திடப்படுத்திக் கொள். கையை நெஞ்சு பதனாமலிருக்க அங்கே வைத்து நிதானி. எவ்வளவோ பெண்களைக் கண்டு விட்டேன். நான்தான் பெரியவன் என்று மார்தட்டிக் கொள்ளாதே. இப்பொழுது இவள் வீசிவரும் கையைப் பார்த்தாலேயே அவள் அழகில் உன் புத்தி பேதலித்து மயங்கி மயலாவாய். இவள் எல்லாரையும்விட அழகியாவாள். (630)

தலைவி அழகை தோழி தலைவனிடம் கூறல்

217. பொன்னணி தோற்கும் பொன்மேனி;
விழிக்குத் தோற்கும் தீட்டும் மை;
கன்னிக் காலின் செம்மைக்குத்
தோற்கும் பாதச் செம்பஞ்சே!

தலைவா! இவள் மேனி அழகே தனி. பொன்னணிகள் பல அணிந்துள்ளாள். அதனால் இவள் அழகு பெருக வில்லை. அந்த அணிகலன் இவள் நிறத்தைப் பெற்று மேலும் சொலிக்கின்றன. கண்ணுக்குத் தீட்டிய மையால் மையின் கருமையே அதிகமாயிற்று. கண் அழகு கூட வில்லை. காலில் பூசிய செம்பஞ்சுக் குழம்புதான் நிறம் கூடிற்று. இவள் பாதச் சிவப்புக் கூடவில்லை. எனவே இவள் மேனிக்கண் அழகே தனி. (272)

தோழி தலைவியின் முக அழகைத் தலைவனுக்குக் கூறியது

218. வட்ட முகத்துக் கீழிதழில்
வட்டக் கரும்பொட்டிட்டனனே;
மட்டவிழ் மலரில் மது உண்ண
கருவண் டமர்ந்த கவினாமே.

இவள் வட்ட முகத்தைப் பார். சிரித்த சிவந்த முகம். அவழ் கீழுதட்டில் உள்ள பள்ளத்தில் கண்ணேறு படா திருக்க ஒரு கரும் பொட்டினைத் தோழியர் வைத்தனர். அது இவள் தாமரை முகமலரில் தனியாக ஒரு கருவண்டு தேன் உண்ண உட்கார்ந்துள்ளது போலத் தோன்றுகிறது. இவள் முகஅழகு ஒரு தனிதான். (170)

தோழி தலைவனுக்கு ஒரு கிராமப் பெண்ணழகைக் காட்டியது

219. கழுத்தில் காட்டுப் பூமாலை;
நெற்றியில் காவி மலர்த்திலகம்;
முழுக்க முட்டும் கொங்கையினாள்;
முனைந்து வயலைக் காக்கின்றாள்.

தலைவ! இந்த புதுக் கிராமப் பெண்ணைப் பார். அப்படியே புதிசும் இளசுமாக இருக்கிறாள். கழுத்தில் காட்டுப் பூ மாலையைத் தொடுத்துப் போட்டுக் கொண் டுள்ளாள். நெற்றியில் காவி நிற மலரைத் திலகமாக ஒட்ட வைத்துக் கோண்டிருக்கின்றாள். இப்பொழுது தான் இவள் பருவம் செழிக்கத் தொடங்கி இருக்கிறாள். இடுப்பில் கையை வைத்துக் கொண்டு இவள் வயல் வரப்பில் காவல் காக்கும்படி நிற்கிற தோரணையைப் பார். இவள் இரு மார்பகமும் முழுக்க வளர்ந்து முட்டுவது போல் நிமிர்ந்து நிற்கின்றன. இவற்றால் இவள் வயலைக் கவரவரும் இளைஞனைப் பிடித்துப் போடுறாள். காவலா காக்கிறாள்? (232)

தலைவியே தன் பருவ மாறுதல் கண்டு மகிழ்வதைக் கூறுவது

220. கீழே கிளிஞ்சில் கிளறுகிறாள்;
கிளரும் கொங்கை தன் மார்பில்
தாழா தெழுச்சி யொடுதிரள,
தானே கண்டு மகிழ்கின்றாள்.

தலைவா! இதோ இந்தப் பட்டிக் காட்டுப் பைங் கிளியைப் பார். ஆற்றங்கரையில் கிளிஞ்சில்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கின்றாள். (தான் மங்கையாகி விட்டோம் என்பது கூட நினையாமல், சிறுமியாகவே நினைத்துக் கொண்டு, இப்படி செய்கிறாள்;) இவள் இளங்கொங்கைகள் திரண்டு எழ ஆரம்பித்துவிட்டன. இந்தப் புத்துணர்ச்சி இவளுக்குப் புதுமையாய் இருப்ப தால், கீழே கிளிஞ்சில் பொறுக்கும் பாவனையில் கொங்கை களின் திரட்சி வளர்ச்சி இவைகளைக் குனிந்து கவனிக் கிறாள். இந்தக் காட்சியில் இந்த இளசைப் பார்க்க எவ்வளவு அழகாக இருக்கு! (286)

தலைவியின் முக அழகைக் கூறுவது

221. பட்டப் பகலே ஆனாலும்,
பாவை முகத்தை மதியென்று,
கிட்டப் பறக்கும் வாளப்புள்
கிளர்ந்து நோக்கும் பருகிடவே.

தலைவியின் முகம் வட்டமாக முழுநிலவு போன்று இருக்கிறது. பகலில் கூட அது ஒளி குன்றாமல் சந்திரனைப் போன்றே தெரிகிறது. இதைக் கண்டு சக்கிரவாகப்புள் (சந்திரன் கதிரை உண்டே வாழும் பறவை) இவள் முகத்தைச் சந்திரனாக எண்ணி, இவள் முக அருகாமையிலேயே பறந்து கொண்டிருக்கிறது. (166)

இதுவும் தலைவி முக அழகைக் கூறுவது

222. வட்ட முகத்தை மதியென்றே
எண்ணி மற்றவர் தவம்முடிப்பர்;
வட்ட முகத்தை மாடத்தே
காட்டேல்; நானே செல்கின்றேன்.

ஏ பெண்ணே! உன் முகம் வட்டமாக முழு நிலவு போலக் காட்சி அளிக்கிறது, சந்திரோதயம் ஆகிவிட்டதா

என்று நீ மாடத்தில் ஏறிப் பார்க்காதே. நம்மைப் போன்று சந்திர நோன்பு இருக்கும் பிறபெண்கள் உன்முகத்தை முழுநிலவு என்று தவறாக எண்ணி, விரதத்தை முடித்து, உண்ணா நோன்பை முடிப்பர். ஆகையால் அதை நானே சென்று மேலே பார்த்து, வருகிறேன்.

(திருமணமாகாப் பெண்கள் பௌர்ணமியில் பகல் உண்ணா நோன்பிருந்து, இரவில் சந்திர உதயம் கண்டு, நோன்பை முடித்துக் கொள்வர்.) (583)

இதுவும் அதுவே

223. பட்டினி நோன்பை முடித்திடுவோம்;
பலரும் உன்னைப் பார்க்கின்றார்;
வட்ட முகமிரு மதியென்றே
மருள்வர் இறங்கிப் போவோம் வா!

''பெண்ணே! நாம் சந்திரனைக் கண்டுவிட்டோம். இனி உணவுண்டு பட்டினி நோன்பை முடித்துக் கொள்வோம். இனி நாம் மாடத்தின் மேல் நின்றால், உண்மையான சந்திரனையும் உன் வட்ட முகச் சந்திரனைப் பார்த்து, வானத்தில் இரு சந்திரர்கள் இருப்பதாகப் பிறழ எண்ணித் தங்கள் விரதத்தை முடியாமல் திகைத்திடுவர். ஆகையால், நாம் மாடத்திலிருந்து கீழே இறங்கிப் போவோம் வா!'' என்கிறாள் தோழி.

(584)

இதுவும் தலைவியின் அழகு நலம் கூறுவது

224. அதுஅது இருக்கும் இடமிருந்தால்,
அழகாய் இருக்கும்; அதனாலே
மதிமுக நெற்றியில் பல் வண்ண
மலரால் திலகம் திகழுதடி!

அது அது இருக்க வேண்டிய இடத்திலிருந்தால், எல்லாமே அழகாய்த்தான் இருக்கும். இவள் முகமோ முழு நிலவைப் போல் ஒளி வீசும். அதில் நெற்றியிலும் முன்னெற்றியிலும் பலவண்ணப் பூக்களை ஒட்டிக் கோலம் செய்துள்ளாள். பொன்னிற ஒளி முகத்தின் நிறப் பின்னணியில் இவை மிகவும் எடுப்பாகவும் அழகாகவும் தெரிகின்றன.

தலைவியின் பருவ மாற்றத்தால் வரும் அழகு

225. கதிரவன் இராசி கடத்தல் போல்,
கன்னியும் பருவம் மாறுகிறாள்;
முதிர வளரும் கொங்கையொடு
முற்றா இளமை முற்றியதே.

கதிரவனாம் சூரியன் ஓர் இராசியை விட்டு மற்றொரு புதிய ராசிக்குப் போவதால், சிலவகை மாற்றங்கள் உலகில் ஏற்படுவது இயல்பு. அதுபோல் இவள் வாழ்வு என்னும் இராசி கட்டத்தில் பருவம் என்னும் பகலவன் ஒவ்வொரு படியாகத் தாண்டுகிறான். சிற்றிளம் பருவம். இவள் உடலில் வளப்பக் குறிகள் இல்லை. இப்பொழுது தான் இளம் பெண் பருவம் வந்துள்ளது. இவளுக்கு முற்றாத இளமை முற்றியுள்ளது. இவள் கொங்கைகள் செழித்து இவளை இளம் பெண்ணென்று காட்டி விட்டன. இனி காளையர் மனம் கவர இம் மான் புறப் பட்டுவிட்டது. (280)

புதிய மணப்பெண் வீட்டுக்கு வரும்போது நடப்பது

226. புதிய மணப்பெண் முக நோக்கப்
புகுநாள் அத்தை சாவிதர,
முதலிடம் மருவ மருமகளிர்
நல்க, நாதன் மனந்தந்தான்.

இந்த இளம் பெண் இப்பொழுதுதான் மணம் செய்து கொண்டு கணவன் வீட்டுக்கு வந்தாள். புதுமணப் பெண்ணின் முகத்தைத் திரை நீக்கி பார்க்கும் திருநாள் அன்று. அன்று அவள் அத்தை அவளிடம் கொத்துச் சாவியைக் கொடுத்து விட்டாள். அவள் சக்களத்தி களான பிற மனைவியர். கணவனுடன் பழக முன்னுரி மையை அவளுக்கு அளித்து விட்டனர். நாதனான கண வனோ தன் மனத்தையே தந்துவிட்டான். அவ்வளவுக்கு அழகும் குணமும் அவளிடம் இருந்தன. (437)

இளந் தலைவியின் அழகு நலம்—தோழி கூறுவது

227. மருமகள் கையோ சிறிதெனவே
மாமன் பிச்சை 'போ'டென்றான்;
மருமகப் பெண்ணின் அழகாலே
மண்டிய தங்கே பெருங்கூட்டம்

அவள் தன் புக்ககம் போனாள். மிகவும் சிறியவள்; மிகவும் அழகி. சிறியவள் கையும் சிறிது. எனவே இவள் கையால் பிச்சை போட்டால் அளவு குறையும் என்று எண்ணி, இவள் மாமனார் கௌரவமாக மருமகள் கையால் பிச்சைப் போட வைத்தார். ஆனால் இவள் கொள்ளை கொள்ளும் பேரழகைப் பார்க்கவே அவள் வீட்டின் முன்னால் ஒரு பெருங் கூட்டம் கூடிவிட்டது. (இதனால் பல முறையும் போட்டதால் அளவு கூடி விட்டது) (309)

கண்ணனுக்கு வந்த ஏமாற்றம்—தோழி கூறுதல்

228. சோலை இரவு முகிலிருளில்
கண்ணா கன்னிகை வரஎளிதே;
சேலைக் குள்ளும் பொன்னொளிரும்
சேயிழை விளக்காம் மறைப்பொணுமோ?

கண்ணன் ஒருபுது நாயகியை அடர்ந்த சோலையிருள், இரவின் இருள், மழை மேக இருள் எல்லாம் திரண்ட மையிருளில் வரச் சொல்லுகிறான். கண்ணா நீ சொல்வது சரி. கன்னி யாரும் அறியாமல் இருளில் வர முடியும். ஆனால் அவள் கட்டிய சேலையை மீறி மேனிப் பொன்னொளி வீசி, அவள் போகும் இடமெல்லாம் நகரும் ஒளிவிளக்காகக் காட்சி அளிக்கின்றாளே. குட்டு வெளிப் பட்டு விடுமே! என் செய்வது? தலைவியின் மேனி எழில் அவ்வளவு சிவப்பு என்பது (457)

கண்ணன் செய்த காதல் வேகம்—தோழி கூற்று

229. முந்திச் செய்த காதலெலாம்
மூண்டு மனத்தில் அடங்காமல்,
செந்தீச் சுடரொளி வீசுதல்போல்
செம்பூ அணிந்தான் திருக்கண்ணன்.

கண்ணன் பல கன்னிப் பெண்களுடன் வகை வகையாகக் காதல் புரிந்துள்ளான். இப்பொழுது அதை எண்ணும்போதெல்லாம் அந்தக் காதல்-கனல் சுடர் விட்டெரிகிறது; மனத்தில் அடங்கவில்லை. இப்பொழுது அவன் அரத்தக மலர் (சிவப்பு மலர்) மாலையை அணிந்துள்ளான். மறைந்து உள்ளில் குமுறும காதல்-கனலெல்லாம் வெளியில் செம்மை நிறத் தீம்பிழம்பு வீசுவது போல அந்த மாலையை அவன் அணிந்துள்ளான். (667)

தலைவியின் அழகு செய்தமயக்கம்
தலைவன் கூற்று

230. கணமே கன்னி அழகுக்கள்
அருந்த மயக்கம் தலைக்கேறிக்
கணமும் துயிலேன் நாணச்சம்
காமம் காலம் கடந்ததடி!

தலைவியின் அழகு மிகவும் அதிகம்: ஆபத்தானது. தற்காலப் போதைப் பொருள் போன்றது. அதை ஒரு கணம்தான் பார்த்தேன். அந்தக் கள்ளின் மயக்கம் தலைக்கேறி விட்டது. தூக்கம் வரவில்லை. நாணம் (மரியாதை), அச்சம் எல்லாம் போய் விட்டது. சதா காலமும் அவள் நினைவே. இப்படி என் காமம் கடந்து போச்சு; எப்பொழுதும் என்னை வாட்டுகிறது. *(114)*

தலைவியின் அழகின் நளினம்—தோழி கூற்று

231. பூட்டும் அணிகலன் சுமையாகப்
பூவை மெல்லுடல் தாளாமல்,
நாட்டிய நடையே நடக்கின்றாள்,
பாதம் பதியப் பாவுதலால்,

தலைவியோ கொள்ளை அழகி. அதை அதிகப்படுத்த உடலெல்லாம் எல்லா அங்கங்களிலும் அணிகலன்களைப் பெற்றோர் பூட்டி விட்டனர். அதன் சுமையை அவளால் தாள முடியவில்லை. அதனால் உடல் அழுந்திப் பாதம் பூமியிலேயே பதிந்து விடுகிறது. ஒரு பாதம் எடுத்து மறு பாதம் வைக்கும் போது, நடை தள்ளாடி இவள் நடை நாட்டிய நடையாகவே மாறிவிட்டது.

அனிச்சப்பூ கால்களையாள் பெய்தாள்; நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. —திருவள்ளுவர்.

அனிச்சப்பூ மிகவும் மென்மையானது. அதன் காம்பைக் கிள்ளாமல் இவள் தலையில் வைத்துக் கொண்டாள். காம்பின் சுமை கூடத் தாளாமல் அவள் இடை வருந்தியது. *(308)*

தலைவன் தலைவி அழகை எண்ணி மகிழ்வது

232. கரிய வண்ணச் சேலையிலே
கவினார் முகமே மதியாகத்
தெரியும்; பொன்னொளி மேனியிலே
செய்வேன் காதல்; துயிலினிதே.

அவள் பொன்னொளி மேனி கொண்டவள். கறுப்புச் சேலையை இறுக்கச் சுற்றி இருந்தாள். இந்தப் பின்னணியில் அவள் மேனி நிறம் இன்னும் பளிச்சிட்டது. அவள் சிவந்த முகத்தைச் சுற்றி அந்த கறுப்புச் சேலையை போர்த்தி இருந்தாள். இது கரிய மேகத்தினிடையே சந்திர உதயம் போன்று இருந்தது. என் மனம் கிளர்ச்சி அடைந்தது; காதல் புரிந்து அவள் பொன் மேனிமேல் அப்படியே துயின்று விட்டேன். (615)

தோழி தலைவி அழகைத் தலைவனிடம் கணித்துச் சொல்கிறாள்

233. பூச்சியந் தாலெண் பதின் மடங்காம்;
பொன்னே ஒளிரும் முகந்தனிலே
பூச்சியம் போலே பொட்டிட்டாள்;
பூவை அழகெண் மீறியதே!

உலகில் ஒரு எண்ணின் பக்கத்தில் பூச்சியம் என்ற Zero வை வைத்தால் அதன் மதிப்புப் பத்து மடங்காகும். ஆனால் இவள் பொன்னொளி வட்ட முகத்தில் பூச்சியம் போலவே வட்டப் பொட்டிட்டிருந்தாள். அதனால் இவள் அழகு பத்து மடங்கிற்குப் பதிலாக மேலும் எண்ணற்ற மடங்கு அதிகமாகப் பொலிகிறது. (257)

தலைவனிடம் தலைவியின் அழகைப் பற்றித் தோழி கூறியது

234. மஞ்சள் மல்லிகைச் சோலையிலே
மங்கை எழிலாள் உலவுகிறாள்,
மஞ்ச ளழகி வெண்சேலை
மஞ்சட் பொன்னிற மானதடா!

தலைவ! உன் தலைவியின் உடல் ஏற்கெனவே பொன்னிறமானது. இதில் வெண்மை நிறச்சேலை உடுத்துக்கொண்டு, மஞ்சள் கொன்றை மலர் பூக்கும் சோலையிலே உலவுகிறாள். வெளியே இருந்த போது, இவள் உடல் நிறப் பின்னணியில் ஆடை அழகான தோற்றம் தந்தது, மஞ்சள் பூஞ்சோலையிலே இவள் நுழைந்தவுடன் பூவின் மஞ்சள் நிறமும் இவள் பொன்னொளி மேனி நிறமும் சேர்ந்து, இவள் சேலையையும் மஞ்சளாக்கி விட்டது. இதனால் சோலையில் அவள் உலவுவதே கண்ணுக்குத் தெரியவில்லை. (252)

தலைவியின் மேனி நிற உயர்வைக் கூறியது

235. பொன்னொளி மேனி இளநங்கை
பொன்னணி புனைந்தாள்; தெரிவரிதாம்,
பொன்னும் பொன்னும் ஒன்றியதால்,
பொன்னைத் தொட்டே தெரிவாரே!

என் காதலியின் மேல் பொன் வண்ணமானது. அவள் பொன் நகைகளைப் பூட்டியிருந்தாள். அவள் மேனி வண்ணமே பொன்னிமானதால், அடையாளம் தெரியவில்லை. இதனால் அவள் உடலைத் தடவிப்பார்த்தே உறுத்தும் இடங்களைக் கொண்டு அங்கங்கே நகைகள் இருப்பதை அறிய முடிகிறது. (அப்படியானால், இந்தச் சாக்கில அவள் உடலை இவன் அடிக்கடி தொட்டுப் பார்த்து மகிழ்கிறனோ?) (299)

தலைவியின் மேனி எழில் கூறியது

236. கன்னி இளம்பெண் காரிகையே;
பொன்னணி புனையேல்; கண்ணாடி
முன்னே ஊதிய மூச்சேபோல்
பொன்னணி மெருகும் மங்குதடி!

அடி இளம்பெண்ணே! இனி நீ பொன்னாலான நகைகளை அணியாதே. வெளியே புது மெருகுடனே காணும் அவைகள் நீ போட்டுக் கொண்டவுடன், உன் பொன்னொளிப் பின்னணியில் துருபிடித்தது போலும், கண்ணாடி முன் ஊதினால் கண்ணாடி மங்குவது போலும் அந்த நகைகள் மெருகிழந்து விடுகின்றன. (பி.ர. 335)

தலைவியின் மேனி எழில்

237. சந்தனம் குங்குமம் கத்தூரிக்
கலவை தடவி மேனியொளி
மந்த மாகும். கண்ணாடி
முன்னே ஊதிய மூச்சே போல்.

தலைவி உடல் நல்ல சிவந்த பொன்னொளி கொண்டதாகும். அதை அதிகப்படுத்த சந்தனம், குங்குமப்பூ, கத்தூரி கலந்த கலவைக் குழம்பை உடலில் பூசினாள். அதனால் அவள் மேனி நிறம் கூடுவதற்குப் பதிலாக மூச்சு ஊதிய கண்ணாடி மங்கியதுபோல் மந்தமாகி விட்டது. (277)

தலைவியின் எழில் கண்டு தலைவன் மயக்கம்

238. சுண்டு விரலோ செம்பவளம்;
சுற்றி நீல மணியாழி;
கண்டு களிப்பேன் காரிகையின்
திரிவழி உதரம் உளங்கவரும்.

என் தலைவி மிக அழகி. அவள் சுண்டு விரல் ஒன்றே போதும். செம்பவளம் போன்ற அவ்விரலில் நீலக்கல் வைத்த மோதிரம் அணிந்திருந்தது என் மனத்திற்கு மிகவும் களிப்பாயிற்று அவள் தன் இடை வயிறு தெரிய நின்றாள். வயிற்றின் மும் மடிப்பான திரிவழியும் வயிறும் பார்த்தேன். களித்த மனம் பறிப்போய் விட்டது. (270)

தலைவியின் மேனி நிற வருணனை

239. வெண்ணிறச் சேலை சுற்றயவள்
பொன்னின் மேனி ஒளியதுதான்;
எண்ணெய் விளக்கு நீர்த்தாரை
பின்னே தெரிவது போன்றுள்ளதே!

என் தலைவி மேனி மிக அழகு, பொன்னொளி வீசும் சிவப்பு. அவள் வெள்ளைச்சேலை சுற்றி இருந்தாள். அதையும் மீறி அவள் பொன்னிற உடல் சுடரிட்டது. நீர்த் திரைக்குப் பின் எண்ணெய் விளக்கு எப்படிச் சிறிது மங்கலாகத் தெரியுமோ அப்படி அவள் பொன்மேனி வெள்ளைப் புடவையையும் மீறித்தெரிகிறது. (248)

தலைவியின் உருவ அழகு

240. ஓவியம் புனையா உருவத்தாள்;
ஓவியம் தீட்ட முற்படுவேன்;
ஓவியம் பாதி வரையும்முன்
உள்ளம் திகைத்துப் போனேனே.

என் தலைவியின் அழகு சொல்ல முடியாதது. சித்திரத்தில் எழுதலாகா அழகிய வடிவினாள். அவளை எப்படியாவது படம் வரையலாம் என்று எண்ணி, அவள் உருவத்தைப் பார்த்துப் பார்த்து எழுத ஆரம்பித்தேன். பாதி எழுதி முடிக்குமுன் மேற்கொண்டு எப்படி எழுதுவது என்று திணறித் தெரியாமல் திகைத்துப் போனேன். பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவள் அழகை மேலும் மேலும் பார்க்க வேண்டுமென்றே நின்று விட்டேன். மேற்கொண்டு எழுதவில்லை. (307)

''ஓவியத் தெழுதவொண்ணா உருவத்தாய்''

—கம்பன்

தலைவியின் நளினச் சேட்டையைக் கூறுவது

241. என்னைத் திரும்பிப் பாராமல்
எழிலார் முகத்தைத் திரைநீக்கித்
தன்கைப் பிடியில் செந்தூளைத்
தூவி மறைத்தாள்; கரைந்தேனே!

என் தலைவியின் அழகே அழகு. ஒருநாள் காமன் பண்டிகையன்று என்னிடம் வந்தாள். என்னைத் திரும்பிப் பாராமல் நாணிக் கோணி நின்றாள். திடீரென்று தன் முகச்சீலையை நீக்கிச் சேலைக்குள்ளிருந்து கைந் நிறையச் செந்தூளைத் தூவிக் காட்டினாள். (''என்னுடன் ஹோலி விளையாட வா'' என்று) உடனே தன்னை மறைத்துக் கொண்டாள். இந்த ஒரு வினாடி வெளிப் பாட்டில் என் உள்ளமே கரைந்து போய்விட்டது. (229)

தலைவியின் உடலழகு நடிப்பு

242. காமன் திருநாள் பரிசுக்கே
கண்ணைச் சுழற்றிச் சிரிக்கின்றாள்;
பூமலி ஆடை புல்லிடுவாள்;
தாரேன், எழிலே பார்த்திருந்தேன்!

அன்று காமன் பண்டிகை. காதலனிடம் காதலியர் பரிசு பெறுவது வழக்கம். அதற்காக என் அழகுக் காதலி என் எதிரே வந்தாள். கண்ணைச் சிமிட்டிச் சுழற்றிச் சுழற்றிச் சிரித்து மன்றாடினாள். என் மேலாடையை இழுத்துச் சிணுங்கினாள். இந்தச் சிணுங்கலும் சிரிப்பும் கண்சுழல் காட்சியும் என்னை மிகவும் கவர்ந்தது. மேலும் மேலும் இவள் இந்த நிலையைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆசை. அதனால் பரிசைத் தாராமல் மேலும் அவளைச் சீண்டி விட்டுக் கொண்டே அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். (231)

புனலாடி வரும் இளமங்கையின் எழில்

243. குளித்துக் கூந்தல் பரப்பியவள்,
குங்குமம் உச்சி வகுட்டணிவாள்;
தெளிந்த செந்தூள் நெற்றியிலே
கதிர்மதி விழுங்கும் அரவமிதோ!

இவளோ செக்கச் செவேல் என்றிருந்தாள். குளித்துக் கூந்தல் பரப்பி உலர்த்துகிறாள். இதற்குள் நெற்றி வகுட்டில் சுமங்கலிகளுக்குரிய குங்குமத்தைத் தூவினாள். அதில் சில கூந்தலிலும் ஒட்டின. இது சூரியனுக்கு ஒப்பாயின. அவள் முகம் சந்திரனுக்கு நிகரானது. பின்னால் கருங் கூந்தல் பாம்பான ராகுவுக்குச் சம மாயிற்று. இது இந்த ராகு சந்திர சூரியர்களை ஒரே சமயத்தில் விழுங்கி எக்களித்தது போலிருந்தது. (255

தலைவியின் மேனி எழில்

244. குங்குமம் குளிர்சாந் தப்பியவள்
குங்குமப் பொன்னிறம் குழைந்ததனால்,
அங்கவள் மூச்சுக் காற்றதனால்
வாசம் வீச அறிவோமே.

என் தலைவி மேனி பொன்னிறமானது. அதன் எழில் அதிகமாக அவள் குங்குமச் சந்தனக் கலவையை உடலில் பூசியிருந்தாள். ஆனால் மேனி நிறமும் பூச்சின் நிறமும் ஒன்றாகித் தெரியாததால் அவள் விடும் மூச்சுக்காற்றால் அந்தப் பூச்சின் வாசம் வீசியது. இதனால் அவள் பூச்சு (Cosmatic) அணிந்திருப்பது தெரிகிறது. (இவள் மேனி மிகவும் அழகுப் பொன்னிறம்) (292)

தலைவியின் பொன்னொளி மேனி எழில்

245. பொன்னொளி மேனி முத்தாரம்
பொலியக் குருமணி போலுளதால்;
முன்னொரு குச்சிக் கொடுமணியைப்
புரட்ட முத்தென அறிவோமே.

என் தலைவியின் மேனி இரத்தச் சிவப்பு. அவள் முத்து மாலை அணிந்திருந்தாள். அது மஞ்சள் குருமணி மாலையாக நிறம் மாறி, உடல் நிறத்தைப்பெற்று முத்து மாலை இருப்பதே தெரியவில்லை. ஒரு குச்சியை எடுத்துப் புரட்டிப்பார்த்துத் தூக்கினால்தான் வெண்மை முத்து தெரிகிறதாம். அவ்வளவு பொன்னிறம் அவள். (276)

பிறை தொழச் சென்ற தோழி தலைவனைக் கண்ட நற்சேதி தலைவிக்குச் சொல்வது

246. பிறை தொழச் சென்றேன் இரண்டாம் நாள்
மேலைத் திக்கில் மதி உதயம்;
நிறைமதி கண்டேன் கீழ்வானில்
திருவினை நாயகன் உதயமடி!

தோழி இன்று துதியை திதி (வடநாட்டில் தூஜ் என்ற விரதம்) இதைக் காண நான் மாடத்திற்குச் சென்றேன். ஆங்கே மேல்வானில் பிறையைக் கண்டு தொழுதேன். ஆனால் கிழக்கே முழுமதி அதாவது பூரண சந்திரனையும் கண்டேன். உற்றுப் பார்த்தேன். அது உன் காதலன் முகம். நம் பாக்கியம் இன்று அவன் வந்துள்ளான். மேற்கில் உதயமாகும் இரண்டாம் பிறைச் சந்திரன் முழுநிலவாகக் கிழக்கில் தெரிவது அதிசயமே. நாயகனின் முகம் அவ்வளவு அழகு. (85)

தலைவியின் அணைப்பின்பம்

247. மாதவள் வந்தாள் கொங்கை நலம்
மகிழத் தழுவித் துயர்தீர்த்தாள்;
''காதலி யோ'' எனக் கேட்டேன்யான்;
'தென்றல்' என்றான் காதலனே.

என் தோழன் (தலைவன்) பகலெல்லாம் காதலி பிரிவாலும் வெம்மையாலும் கஷ்டப்பட்டான். இரவு

வந்தது. ''மாதவள் வந்தாள்; தன் மார்பகம் நான் மகிழ என்மேல் தன் மார்பகம் நசுங்கத் தழுவினாள். என் துயர் எல்லாம்தீர்நதது'' என்றான். ''வந்தவள் உன் காதலியோ?'' என்றேன். குளிர் தென்றல் தான் வந்து அப்படிச்செய்தது என்றான் அவன், அவனுக்கு எல்லாமே காதலியாகத்தான் தெரிகிறது. (87)

இளந்தென்றலும் காதலியும்

248. களைத்து வியர்த்த வழிப்போக்கன்
மரநிழல் அமர்ந்த காலத்தே
இளைத்து நடக்கும் புதுமணப்பெண்
வாசத் தென்றல் வந்ததடி?

களைத்துப் போய் வியர்த்து விட்ட வழிப்போக்கன் ஒருவன் மரநிழலில் வந்து அமர்ந்தான். அப்பொழுது அசைந்து ஒயிலாக இளைத்தநடையுடன் புதுமணப்பெண் மெதுவாகத் தன் அழகால் சுற்றுப்புறத்தைக் கவர்ந்து வருவது போல் சோலை மலர் வாசனையையும் அள்ளிக் கொண்டு இளந்தென்றல் வந்தது. மிகவும் இதம். (89)

இளந்தென்றலும் காதலியும்

249. தேனில் குளித்து மலர்சூடித்
தெருவே வருவாள் புதுமணப்பெண்;
தானே வியர்த்து நாணமுடன்
தளர்நடைத் தென்றல் வந்ததடி?

புதுமணப் பெண் உருவமெல்லாம் இனிமை. அதனால் தேனில் குளித்து வருவது போல் தெரிகிறது. மலர் சூடி வருகிறாள். இதோ இந்தத் தெருவே வருகிறாள். இவள் அழகானவள். அதைச் சுமக்க முடியாமல் வியர்வை; நாணம். இதனால் தளர் நடையுடன் வருகின்றாள். இவள் யார்? இவள்தான் தென்றல். மலரின் தேனை

அள்ளிக்கொண்டு மலரையும் இழத்துக்கொண்டு வருகிறது. தாழவருவதால் நாணம் தெரிகிறது. இதுவும் தெருவில் நுழைந்து வருகிறது. அங்கங்கே பனி நீரை (வியர்வையாகத்) துளிகளைச் சுமந்து வருகிறது, மெதுவாகச் சில்லென்று மனம் இதமாக வருகிறது. இதுவும் புதுமணப் பெண்ணே! (90)

காதலனைக் கண்ட தலைவியின் நிலை—தோழி கூற்று

250. அவளைப் பார்த்த வேளையிலே
அழகா மாயம் என்செய்தாய்?
அவளுனைப் பார்த்த அக்கணமே
துறந்தாள் துயிலே; தவிக்கின்றாள்.

அழகான தலைவனே! அவளை நீ கண்ட போது, விழியால் என்ன மாயம் செய்தாய்? அவள் உன்னைப் பார்த்தது முதல் தூக்கம் மறந்தாள், இரவும் பகலும் உன் நினைவாகவே கிடந்து உறங்காமல் தவிக்கின்றாள். (447)

சோர்விலும் தலைவியின் அழகு-தலைவன் கூற்று

251. பருவ மங்கை யொடுசோலைப்
பவனி வந்த இளைப்பாலே
உருவ வியர்க்கும் நகை முகத்தை
நாணக் காண உளம் மகிழ்ந்தேன்.

என் காதலி பருவ அழகி. அவளுடன் சோலையெல்லாம் சரசமாகப் பேசிச் சுற்றி வந்தேன். அவள் தளர்ந்தாள். முகத்தில் குறுவியர்வை; முன்னெற்றி ஓரத்தில் வரிசை கட்டிற்று. முகத்தில் நாணமும் நகையும் கூடிக் களைகட்டியது. இதைப் பார்த்தேன். மனத்தை மேலும் பறி கொடுத்தேன். (515)

தலைவி அழகைப் பற்றித் தோழி தலைவனிடம் கூறல்

252. மேனிப் பொன்னொளி காக்க அயன்
 மேவும் பொன்னணி புனைவித்தான்;
மேனியில் பொனொளி மங்கியதே
 மீதுக் கண்படை விலகியதே!

தலைவியின் நிறம் தங்கமயமான மஞ்சள் நிறம், அது கண்பட்டுவிடக் கூடாது என்று தானோ அவனைப் படைத்த பிரமன் அவளுக்கு தங்க நகைகளை அணிவித்தான். அந்த பொன்னகைகள் அவள் உடலின் பொன்னொளியில் மங்கிப்போய்த் தனியாகத் தெரிந்ததால், கண்ணேறு (திருஷ்டி) படும் என்ற அச்சம் நீங்கியது. (265)

தலைவியின் அழகு நலம்-தோழி கூற்று

252. பாவை பூசிய செம்பஞ்சு
 பாதச் சிவப்பை வென்றிடுமோ?
பாவம், பொன்னணிச் சுமைதன்னால்
 பாதச் செம்மை வழியுதடா!

உன் தலைவி மிக அழகி. அவள் மேனியோ செம்மை நிறம். பாதமோ மிகவும் சிவப்பு. அதில் அவள் செம்பஞ்சுக் குழம்பு பூசி இருந்தாள். தோழி சொல்கிறாள்: அது உண்மையில் செப்பஞ்சின் செம்மையில்லை. அவள் பூட்டிய அணிகலன்கள் எல்லாம் சுமையாக, அதைத் தாளமாட்டாமல் அவள் உடலின் (செம்மை) உதிரமாகக் கால் மூலம் பிதுங்கி வழியுது அவ்வளவே. (அவள் மிகவும் செம்மை நிறத்தாள் என்பதாம்) (306)

கண்ணனின் எழில்-கோபிகை ஒருத்திக்கு மற்றவள் கூறுவது

254. கண்ணன் அணிந்த மயிற்பீலி
காமன் சிவனைப் பழிவாங்க
எண்ணிச் சந்திரர் நூற்றுவரை
இணைத்து மணிமுடி சூட்டினனோ?

தோழி! உன் கண்ணன் தன் கிரீடத்தில் மயில்தோகை அணிந்தான். அதனால் அவன் முடி ஒளி அதிக அழகுடன் விளங்குகிறது. சிவனால் தீங்கு இழைக்கப்பட்ட காமன் சிவனைப் பழிவாங்கக் கிருஷ்ணன் முடியில் நூறு சந்திரர் களை அவன் முடியில் இணைத்துக் கிரீடம் கவித்தது போலுள்ளது. சிவன் ஒரு பிறைதான் அணிந்தார். இவனோ நூறு அணிந்ததால் சிவன் தோற்றுப் போனான். கிருஷ்ணன் மயில் மகுடத்தில் மிக அழகாக இருக்கிறான் என்பது குறிப்பு. (652)

கண்ணன் அழகு

255 கண்ணன் செவ்விதழ் கருவிழியும்
மஞ்சள் பட்டுடை வேய்ங்குழலில்
வண்ணக் கலவை விழுவதனால்
வானவில்லாய் ஒளிவீசும்.

தோழி! கண்ணன் தன் செவ்விதழில் பளபளக்கும் வேய்ங்குழல் வைத்து ஊதுகிறான். அதன் மேல் அவன் விழியின் கருமையும் விழுகிறது இந்த வண்ணக் கலவை யால் அந்தப் புல்லாங் குழலில் வானவில்லின் வர்ண ஜாலங்கள் ஒளி வீசுகின்றன. (674)

தலைவியின் செம்மைநிற அழகு-தோழி தலைவனுக்குக் கூறியது

256. பொன்னின் வண்ணக் கழுத்துள்ளே
புகுந்து நுழை வெற்றிலைச்சாறு
மின்னும் மாலை மாணிக்கம்
மேலொளி வீசுதல் போலுளதே!

உன் தலைவி உடல் நிறம் மிகவும் சிவப்பு. அதிலும் கண்ணாடி போன்று ஊடே தெரியும் சிவப்புக் கழுத்து அவளுக்கு (Transparent). இதனால் அவள் வெற்றிலை விழுங்கும் செஞ்சாறு உள்ளே நுழைந்து கீழே போவது போன்று தெரிகிறது. (கழுத்து சொன்னபடி உள்ளே தெரிவதில்லை) மிகவும் சிவப்பு. அதை இப்படி வருணித்துள்ளார் கவி. தமிழ்ப் பேச்சு வழக்கில்கூட ''இவள் எச்சில் விழுங்கினால் தெரியும் தொண்டைச் சிவப்பு'' என்பார்கள். *(301)*

தலைவியின் முன்னெற்றிக் கூந்தல் அழகு

257. நெற்றிச் சுருண்ட கருங்குழலால்
நேரிழை எழிலே விஞ்சுதடி!
முற்றெண் நாணயக் குறியைப் போல்
முழுதும் கூட்டிக் காட்டுதடி!

தலைவியின் நெற்றிமேல் விழும் சுருண்ட கூந்தல் சுருள்கள் அவள் அழகைப் பன்மடங்காகக் காட்டுகிறது. நாணயக் காசுகள் பின்னால் உயரும் மதிப்பைக் காட்டும் குறிகள் போல் இது அவள் அழகைப் பலபடி விஞ்சிக் காட்டுகிறது.

(கவிஞர் காலத்தில் ரூபாய் போன்ற நாணயங்களின் பின்னால் எண்ணை அதிகமாக்கிக் காட்டி நாணய மதிப்பை உயர்த்திக் காட்டும் குறியீடுகள் இருந்தன.) *(224)*

தலைவியின் கண்களழகைக் கூறுவது

258. கன்னி முகத்திரைக் குள்ளுலவி
மின்னும் மருளும் அலையும் கண்;
பன்னீர்க் கங்கை அலையாடும்
மீனெனப் பாவை நோக்கினளே.

என் காதலி முகத்திரை (மெல்லியது) மூலமாகவே என்னைப் பார்க்கிறாள். அவள் கண்களில் உள்ள மருட்சியும், மிரளும் ஒருவகைத் தயக்கமும், அவள் விழிகள் என்னை அங்கும் இங்கும் தேடி அலைதலும் வெகு அழகு. முகத்திரை கங்கை நீர்போல், அதனுள் அலையில் ஆடும் மீன்போல் தன் விழியை அலைய வைத்து, கங்கையின் பன்னீர்போல் குளிர்ந்த நீரின் தன்மை எல்லாம் குளிர வீசி என்னைப் பார்க்கிறாள். (பி. ர. 376)

தலைவியின் கொங்கை எழில்—தோழி கூற்று

259. தளரா முதிரா இளங்கொங்கை
தழுவ மனத்துள் பிறமகளிர்
ஒளிவர்; முற்றும் திரண்டுருள
உனதே அவனுயிர் அரசாட்சி!

பெண்ணே! நீ இப்பொழுதுதான் பருவத்தின் தொடக்கத்தில் அடியெடித்து வைத்திருக்கிறாய். உன் குத்திட்டுள்ள முற்றாத இளங்கொங்கைகள் இப்பொழுது தான் வடிவம் பெற ஆரம்பித்துள்ளன. இப்பொழுதே உன் நாயகன் உன்னைத் தழுவும் போது, அவன் மனத்தில் உள்ள பிற மனைவிகளை அந்த இடத்திலிருந்து அவை ஓட்டி விடுகின்றன. (தழுவும் போது அவை மனம்-இதயத்தைத் தீண்டி, அங்கு உள்ள பிற மகளிரை ஓட்டி விடுகின்றன. (289)

இனி இவை முழுவதும் திரண்டு உருண்டு அழகிய வடிவம் பெற்றுப் பருவத்தின் முழுச் செழுமையில் நீ நின்றாய், இந்தக் கொங்கைகள் நினைவாகவே உன் நாயகன் இருப்பான். ஆகையால் அவன் உயிரையே நீ அரசாட்சி செய்வாய். 'உன்னிடமே அவன் பரவசமாய் முடங்கிக் கிடப்பான் என்பதாம்.

அமிழ்து பெய் செப்பின் அன்னவெம்முலை
நுகர்பூங் காமத்து நுதிமுகம் உரிஞ்சி —பெருங்கதை

இவள் கொங்கைகள் அமுதம் நிரப்பி வைத்த கிண்ணங்கள். கணவன் தழுவுந்தோறும் இவற்றின் முளைகள் அவன் நுகரும் புதிய காதல் முழுவதையும் அவள் உள்ளத்திலிருந்து உறிஞ்சி விடும். (289)

பெண்ணையும் கவரும் தலைவி அழகு—தோழி தலைவனுக்குக் கூறியது

260. கொள்ளை அழகுக் கோலமிவள்;
பெண்ணாம் நானே பேதுற்றேன்;
உள்ளம் கரைந்து பரவசமாய்,
உன்னை இழப்பாய், நீ கண்டால்,

தலைவா! இவள் கொள்ளை அழகு. இதைக் கண்டு பெண்ணாகிய நானே புத்தி பேதலித்து விட்டேன். நீ பார்த்தால் என்னாவாய்? உள்ளத்தைப் பறி கொடுத்து உன்னையே அவளிடம் இழந்து விடுவாய்.

''கண் பிற பொருளில் செல்லா,
கருத்து எனின் அஃதே கண்ட
பெண் பிறந்தேனுக் கென்றால்,
என்படும் பிறருக்கு'' என்றாள். —கம்பர்

பெண்ணாகிய என் கருத்தே இவளிடம் முழுதும் சென்று விட்டது. இவள் அழகைக் கண்ட ஆண்களின் கதி என்னாவது? (617)

தலைவியின் இயல்பான எழிலைக் கூறுவது

261. நேரே குளித்துச் சேலையுடல்
நெகிழச் சமையலறை புகுவாள்;
ஏரார் முகத்தின் ஒளிவீச
இல்லம் முழுதும் பளிச்சிடுமே!

தலைவன் தலைவியின் அழகைத் தன்னுள் அனுபவித்துக் கொள்கிறான். ''ஆகா! அவள் அழகே அழகு. இப் பொழுது தான் நீராடிவிட்டு வருகிறாள். சேலையை அறை குறையாக அவள் உடலில் நெகிழும்படி சுற்றியுள்ளாள். அதற்குள் சமையலறையில் வேலை அவசரம். முழுதும் திருத்தி உடுத்தாமல் பாதி மேனி அங்கும் இங்கும் தெரியும் படி சமையல் அறைக்குள் நுழைவாள். முகமோ முழுதும் ஒளி வீசுகிறது. இவளுடைய இந்த இயல்பான அழகால் வீடு பூராவுமே பளிச்சிடுகிறது.'' தலைவன் எவ்வளவு கொடுத்து வைத்தவன்! (263)

தலைவியின் மேனி நிற அழகு பற்றித் தோழி

262\. பொன்னொளி வீசும் புத்தெழிலாள்;
வெண்ணிறச் சேலை மேல் சுற்றி,
மின்னொளி ஐப்பசி மேகம் போல்
மேனி சிலிர்க்க வருகின்றாள்.

தலைவியின் உடல் நிறமோ பொன்னொளி வீசுவது. அதன் மேல் வெள்ளைச் சேலை சுற்றியுள்ளாள். அந்த வெள்ளையூடே அவள் பொன்மேனி ஐப்பசி மாதத்தில் திடீரென்று மின்னல் தோன்றும் மேகம் போல் பளிச்சிடு கிறது. அவள் அழகே அழகு! (262)

தலைவியின் வெவ்வேறு அங்க அழகு

263\. உள்ளம் குளிரும் மழைக்காலம்;
உதய முழுமதி முக எழிலாள்;
கள்ளவிழ் தாமரை கைகால், கண்
கஞ்ச மலராய்க் கவர்கின்றாள்.

தலைவி அழகே அழகு. கார்கால மேகத்தில் பளிச் சிட்டுத் தோன்றும் முழுமதி போல் எல்லாருடைய உள்ள மும் குளிரச் செய்யும் முக எழில் உள்ளவள். அவள் கை,

கால் கண் தேனவிழும் தாமரை மலர் போன்று செவ்விய மெல்லியவையாகும். அவள் கண்களோ கஞ்சமலர் போன்ற அழகானவை. அதனால் உலகம் பூராவையும் அவள் கவர்கின்றாள். (கஞ்சம் தாமரை மலர் வகை, வடநாட்டில் இது ஒரு சிறு பறவை (வண்டு); கண்ணுக்கு உவமை கூறப்படும்.)

தலைவியின் பாதத்தின் மென்மை-
தலைவனுக்குத் தோழி கூற்று

264. பஞ்சின் மெல்லிய பாதம்செம்
பஞ்சுக் குழம்பு பூசும்பெண்
அஞ்சுவள் வெடிக்கு மெனத்தீண் டாள்;
அம்பூந் துளிரால் பூசுகிறாள்.

''தலைவி மிகவும் மென்மையானவள். மிகவும் உறுதியாக இருக்கவேண்டிய பாதமே பஞ்சுபோலிருக்கும். அதை அழகு படுத்த செம்பஞ்சுக் குழம்புடன் பணிப் பெண் வந்தாள். பாதம் தொட்டாலே வெடித்து விடுமோ (பித்த வெடிப்பு) என்ற அளவுக்கு மிகவும் மென்மையாக இருந்தன. அதனால் பூந்துளிர்க் கொத்தைத் தூரிகையாக (Brush)ப் பயன்படுத்தி அவை நோகுமோ என்று தயங்கித் தயங்கி அதைப் பூசுகிறாள். தலைவா இதைப் பார். (304)

தலைவியின் குரலினிமை—தோழி கூறியது

265. தேனும் கருப்பஞ் சாறொடு வான்
தேவர் அமுதும் குழைந்த குரல்;
ஊனும் இனிக்கும் மழலையினாள்;
ஓவிய அழகா உணர்வாயே

தலைவா! உன் தலைவியின் குரல் இனிமையைக் கேட்டாயா? கெஞ்சிக் கெஞ்சி இனிக்க விட்டு விட்டு

வருகிறது பேச்சு. தேனும், கருப்பஞ்சாறும், தேவர்களின் அமுதமும் கலந்த ஒரு இனிமை. கேட்போர் ஊனையும் உயிரையும் அடியில் இனிக்கும் வகையில் உள்ளது. ஓவியம் போன்ற அழகனே! இதை நீ உணர்ந்தனையோ? இனிமைக்கு உவமையாக இங்குச் சொல்லப்பட்ட பொருள்கள் எல்லாம் நாக்கினால் உணரும் சுவை. இங்கே காதினால் கேட்டுணரும் சுவையாகக் காட்டு கிறார். குரலினிமை சுவைப் பொருளாயிற்று; காது நாக்காயிற்று. **(619)**

தலைவியின் மேனியொளி-தோழி கூற்று

266. மெல்லியல் மேனி கண்கூசும்;
பொன்னொளி வீசி வருகின்றாள்;
அல்லியும் முழுமதி கண்ணாடி
அவளொளி முன்னால் நில்லாவே.

தலைவா! உன் காதலியின் மேனியின் நிறமும் ஒளியும் கண்கூசும்படி பளிச்சிடுகின்றன. பொன்னொளி வீசு கிறது. அல்லி மலரும் முழு நிலவும் அவள் மேனி ஒளிக்குத் தோற்கும் கண்ணாடி ஒளியும் அவள் நிறத்தின் முன் மங்கும். அவள் நடந்து வருவதே தீப ஒளி நடத்து வருவ தற்கு ஒப்பாகும். **(294)**

தலைவியின் பாத அழகு-தோழி கூற்று

267. அடிமேல் அடிவைத் தன்ன நடை
அடியில் சிவந்த துகளுதிரும்;
படியில் சிவந்த நிழலாடும்;
பாவும் தோறும் செம்பூவே.

தலைவ! உன் காதலியின் பாதங்களின் செம்மை நிறத்தைப் பார். அவள் நடையழகைப் பார். அடிமேல் அடி வைத்து அன்னம் போல் நடக்கின்றாள். அவள்

பாதம் நடக்கும் தோறும் அடியில் செந்துகள் உதிருவது போன்றுதோன்றுகிறது. பாதம் மாறி மாறிச் சிவப்பும் மாறி மாறி வருவதால் பொடி உதிருவது போல் தோன்றுகிறது. (155)

தலைவியின் நிகரற்ற அழகு-தலைவன் கூற்று

268. நகரும் புதிய பூங்கொடியோ?
நங்கை அழகு சுமையாக,
நிகரில் மெல்லடை நெளிவதையே
நிறைவிழி மூடேன் நோக்குவனே.

என் தலைவி தோற்றமே கண்ணுக்கு விருந்து. நகர்ந்து வரும் பூங்கொடி போல் காண்கின்றாள். பருவ அழகு அவள் எல்லா அங்கங்களிலும் பூத்துக் குலுங்குவதால், அழகின் சுமையைத் தாங்கமுடியாதது போல் அவள் மெல்லிய இடை நெளிய நெளிய நடந்து, என் உள்ளம் கொள்ளை கொண்டாள். நான் நோக்குவதில் சலிக்கவில்லை. (288)

தலைவி அழகு-தோழி கூற்று

269. நீலச் சேலை உள்ளொளிரும்
நிலவு முகந்தான் யமுனையிலே
கோல மதியாய் நிழலாடக்
கொவ்வை இதழாள் உலவுகிறாள்.

தலைவ! உன் காதலி நீலச் சேலை உடுத்து முகத்தை வழக்கம் போல் மூடி இருந்தாள். அதோ யமுனைக் கரையில் நடக்கின்றாள். யமுனை ஆற்றில் பூரண நிலவின் உருவம் நிழலாடுவதுபோல், இந்தக் கோவைச் சிவப்பிதழாள் நடந்து வரும் அழகைப் பார். (யமுனை கருவண்ண நீருடையது; இது நீலச் சேலை. தலைவி முகம் அதில் நிழலாடும் முழுமதி உருவம்.) (247)

தலைவியின் எழில் கண்ட தலைவனின் தவிப்பு

270. உலகில் உள்ள அழகெல்லாம்
உருண்டு திரண்ட உன் உருவாய்த்
தலைவன் என்முன் வந்ததடி!
தவிக்கும் கண்கள் நிலை கொள்ளா.

அடி என் கண்ணே! உன் உருவ அழகை என்ன என்று சொல்லுவேன்! உலகில் உள்ள அழகெல்லாம் உருண்டு திரண்டு உருவம் கொண்டு நீயாகி என் எதிரில் வருகிறாய். உலகில் உள்ள அழகெல்லாம் உனக்கே சொந்தமாகி விட்டது. இந்த உன் அழகைக் காணக் காண என் மனம் திருப்தி அடையவில்லை. நிலை கொள்ளாமல் மேலும் மேலும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. (303)

தலைவியின் கூந்தல் அழகு-தோழி தலைவனுக்குக் கூறியது

271 கூந்தல் உலர்த்த விரிக்கின்றாள்
குமரர் உள்ளம் வசமழியும்;
கூந்தல் வாரி முடிப்பாளோ?
குமரர் உளமும் முடிப்பாளே!

தலைவ! உன் தலைவியின் கூந்தல் அழகே அழகு. அதனை முடித்தாலும் விரித்தாலும் அந்தக் கருங் கூந்தல் நடுவில் அவள் சிவப்பு முகம் மிக அழகு. அவள் கூந்தலை விரித்து உலர்த்தும்போது அதைப் பார்க்கும் இளைஞர்கள் உள்ளம் வசமழிந்து தொலைந்து போகிறது. அதை வாரி முடிக்கும் போதோ அவர்கள் உள்ளத்தையும் சேர்த்து வாரி முடித்துக் கொள்ளுகிறாள். (266)

களவில் தலைவனைக் கூடிவரும் அபிசாரிகா என்னும் நாயகிக்குத் தோழி கூறுவது!

272. பாதி வழியே மதிமறைய
பாதை இருண்டும் கவலாதே;
நீதிரை நீக்கி முகமதியும்
நகையொளி காட்டு; வழி தெரியும்.

பெண்ணே! நாம் இப்பொழுது திரும்பும்போது, சந்திரன் மறைந்து இருள் சூழ்ந்து, பாதி இரவு வந்து விட்டது. வழி தெரியவில்லை என்று கவலைப்படாதே. உன் முகச் சீலையை நீக்கி, உன் முகத்தைக் கொஞ்சம் நீட்டு. உன்முகச் சந்திரன் ஒளி வீசும். ஒரு மகிழ்வுப் புன்னகை வீசு. அது மின்னல் போன்று பளிச்சிடும். அந்த ஒளியில் நாம் வீடு சென்று விடுவோம். (451)

தலைவியின் கண்ணழகைத் தோழி புகழல்

273. கண்ணில் மருளும் மானொடு மீன்;
கமலம் கலந்த எழிலாய்! உன்
கண்வீச் சொன்றால் காதலனை
வீழ்த்தி இழுப்பாய், இது மெய்யே!

தோழி! நீயோ மிகவும் அழகி. உன் கண்களோ அதை விட அழகும் திறனும் உடையவை. மருளும் பார்வையால் மானையும், உருவ அழகால் மீனையும், குளிர்ச்சிப் பார்வை மலர்ச்சி இவற்றால் தாமரையையும் வென்றவை. இப்படி இருக்க, உன் கண்வீச் சென்றாலேயே உன் காதலன் மயங்கி உன் வசப்படுவதில் வியப்பில்லை. (705)

தலைவி கூற்று-தலைவன் கண்பார்வையில் ஈடுபாடு கூறல்

274. கள்ளனைக் காணா திருப்பேனோ?
அழகுக் கண்கள் இருப்பதெலாம்,
கொள்ளை அடிக்கும் கள்ளர்கள்!
கொள்ளை போச்சே என்னுளமே!

என் தலைவனின் கண்கள் மிகவும் கவர்ச்சி உடையவை, அவன் முகத்தைக் காணாமல் என்னால் இருக்க முடியவில்லை. அவள் கண்களோ சொத்தை எல்லாம் கொள்ளை கொள்ளும் திருடர்கள். அதனால் என் மனமும் பெண்மை எல்லாமும் கொள்ளைபோய் விட்டனவே. என் செய்வேன்! (588)

தலைவியின் இடையின் தன்மை தலைவன் மகிழ்தல்

275. கண்டதைக் கொண்டு காணாத
கடவுளை அறியும் தன்மைபோல்,
பெண்ணிவள் மேல்கீழ் மெய்நெளியப்
பேதை மெல்லிடை அறிவோமே!

கடவுளை ஞானிகள் அனுமானத்தாலும் கண்ட பொருளின் தன்மையால் காணாத அக் கடவுளைப் பெரியோர் விளக்குவர். அது போன்று இவள் மெல்லிடை கண்ணுக்குத் தெரியவில்லை. ஆனால், மார்பு, தோள், முகம் முதலிய செழுமையான உடலின் மேற்பாகமும், தொடை, பின்பக்கம், கால் இவைகளால் செழித்த கீழ்ப் பாகமும், முன்னும் பின்னும் இடமும் வலமும் மையத்தில் மட்டும் ஒட்டியது போன்று நெளிவதால், இடை இருப்பது தெரிகிறது. (பி. ர. 648)

தன் காதலியின் இடையழகைக்கண்டு தலைவன் மகிழ்வது

276. இல்லை என்னும் இடைதன்னை
மெலிதாய்ப் படைத்தான் கடவுள்தான்;
இல்லா இடைக்கும் ஈடாகக்
கொங்கையும் சகனமும் கூட்டினனே!

இவளுக்கு இடுப்பு இல்லையோ என்ற அளவுக்கு மிகவும் மென்மையானது; கண்ணுக்கே தெரியாதது. இதைக் குறைத்த கடவுள் இதற்கு ஈடு செய்ய இவள் செழுமையான கொங்கைகளிலும் இடுப்பின் பின்புறமும் கீழ்ப்பகுதியையும் நல்ல கொழுவிய உருட்சியும் திரட்சியும் உள்ளவையாகக் கூட்டிப் படைத்து விட்டான். (சகனம்-பிருட்ட பாகம்; பெண்களுக்கு செழுமையாக இருப்பது அசையும் நடைக்கு அழகு.)

''பொய்யோ எனும் இடையாளொடும் இளையா
னொடும் போனான்''
—கம்பன் (பி. ர 664)

தலைவியின் கன்னப் பொன்னெழில்

277. கன்னம் சிவந்த காரிகையின்
காதணி முத்தென எண்ணாதே;
முன்னம் வியர்வைத் துளிகளெலாம்
கன்னம் துடைக்கப் பூத்தனவே.

தலைவ! இவள் செக்கச் சிவந்த கன்னத்தில் இவள் காதில் அணிந்த முத்துக்கள் நிழலாடுவதாக எண்ணாதே. அடிக்கடி இவள் துடைப்பதால் சிவந்த கன்னத்தில் பூத்த வியர்வை முத்துக்களே அவை. (காதணி முத்துக்கள் சிவந்த கன்னத்தில் துடைக்க துடைக்க உடனுக்குடன் நிழலாடுகின்றன. இவற்றால் இவை வியர்வைத் துளிக ளாக உவமை செய்யப்பட்டன.) (பி. ர. 673)

தலைவியின் அழகுக்கு
அணிகலன் தேவையில்லை

278. அழகைக் கூட்ட அணிகலமேன்?
புருவப் பொட்டும், கருங்கண்ணும்,
ஒழுகும் வெற்றிலைச் செவ்விதழும்,
ஒளிரும் கூந்தலும் போதுமடி!

தோழி! தலைவிக்குச் சொல்லுகிறாள்: பெண்ணே! நீ இயற்கையாகவே அழகாக இருக்கிறாய். இதை அதிகப் படுத்த நகை எதற்கு? உன் புருவங்களைச் சுற்றி இட்ட வண்ணப் பொட்டுகளும், கருங்கண்ணும், ஒளிரும் கூந்தலின் பளபளப்பும், வெற்றிலை சாறொழுகிச் சிவந்த இதழும் எந்த ஆண் மனத்தையும் கொள்ளை கொள்ளும்.

'உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை
உருவினைமறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவை செய்தென்ன
அழகுக்கும் அழகு செய்தார்.''

—கம்பர் (பி. ர. 679)

தலைவியின் பொன்மேனிப் பளபளப்பு

279. அங்கம் யாவும் கண்ணாடி,
அணிகலன் அவற்றில் ஒன்றிரண்டாய்,
எங்கும் மூன்றாய் நான்காகி
எழிலாய்த் தோன்றும் ஓவியமே!

தலைவ! உன் தலைவியின் அங்கங்கள் யாவும் பொன்னொளி வீசும் பளபளப்பானவை. ஒவ்வொன்றும் ஒரு கண்ணாடி போன்றது. அவள் பூட்டியுள்ள அணிகலன்கள் யாவும் அந்த அங்கங்களில் பல முறை தோன்றலால் ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டு மூன்று நான்கு உருவங்கள் கூடத் தெரிகின்றன. அவ்வழகு ஓவியமாக அவள் திகழ்கின்றாள்.

(பி. ர. 680)

தலைவன் அழகில் தலைவிக்குள்ள ஈடுபாடு - தோழி கூற்று

280. பலகணி ஓரம் கட்டைவிரல்
பதிய எழும்பி எட்டிப்பார்;
தலைவனுன் அழகுத் தேவதையைக்
காண்பாய், உள்ளம் தருவாயே!

தோழி! அதோ பார். எதிர் வீட்டு வாயிற்படியில் உன் தலைவன். இங்கே இப்படி வா. ஜன்னல் அடியில் கால் கட்டை விரல் வைத்து அழுந்த எழும்பி, ஜன்னல் வழியாக அழகுத் தேவதையை—உன் தலைவனை—உன் கண்களால் பார். அப்படியே உன் உள்ளத்தைப் பறி கொடுத்து விடுவாய். (பி. ர. 482)

'அக்ஞாத யௌவனா' என்ற தலைவி ஊஞ்சலாடும் அழகு—தலைவன் தோழனுக்குச் சொல்லியது

281. ஊச லாடும் நோஞ்சவிடை
ஓடியத் தேய, உடை நழுவ,
வீசத் தெரியும் அங்கமெலாம்
விழுவ துணராள், விருந்தானாள்.

என் காதலி மிக இளம் பருவமுள்ளவள். இதனால் இதுவரும் என்ற விளைவுகளை அறியாதவள். மிகவும் இளைத்த உடல் உள்ளவள். இவள் ஊஞ்சலாடுகிறாள். இவள் அரும்பி அப்பொழுதுதான் வளரும் கொங்கைகள் பாரத்தால் இடை ஒடியுமோ என்று வளைகிறது. கீழே உதைத்து ஆடும் விசையால், இடை மீண்டும் துள்ளு கிறது. இருபுறமும் அதற்கு மத்தளம் போன்ற அமுக்கம். ஆடும் வேகத்தில் காற்றில் மேலாடையும் நழுவுகிறது. பாவாடையும் பறக்கிறது. இளமை பூரிக்கும் அவள் கொங்கை முதலியவையும், கீழ்த்தொடை முதலியவையும் எனக்குத் தெரிகிறது. வேகத்தால் ஊஞ்சல் பலகையி லிருந்தே விழுகிறாள். (அவள் விழுவதற்குள் அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டேன்.)

தன் ஆடை நழுவல், அங்கமெலாம் தெரிதல், கீழே விழுதல், இவற்றில் எல்லாம் கருத்தில்லாததால் இவள் அக்ஞாத, அதாவது நாம் மங்கைப்பருவம்

அடைந்து விட்டோம் என்பதறியாத யௌவனா-இளமையை உடையவள்-இந்த நாயகி. (5-2)

ஊஞ்சலாடிக் கீழே விழும் தலைவியைத் தலைவன் இடையில் ஏந்தி இன்பம் கண்டது

282. ஊஞ்சல் நழுவி விழுகின்றாள்;
உயர்வான் இழியும் தேவதையோ?
நேச நாயகன் இடையேந்தி,
நெஞ்சு தழுவி நிலம்விட்டான்.

முன்பாட்டில் சொன்ன அக்ஞாத யௌவனா என்ற இளம் பெண் அந்தச் செய்யுளில் சொன்ன நிலையில் உடை நெகிழ மேலுடை பறக்க அங்க அழகெல்லாம் தெரியக் கீழே நழுவி விழுந்து கொண்டிருக்கிறாள்.

இது வானத்திலிருந்து ஒரு வானுலகத் தேவதை (அப்சரா—அரமகள்) இறங்கி வருவது போன்று இருக்கிறது அதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த அவள் நாயகன், விழாது காப்பாற்றும் சாக்கில், ஓடிச்சென்று இடையில் ஏந்தி, அப்படியே தன் நெஞ்சோடு இறுக அணைத்து, நன்றாக அனுபவித்துவிட்டு, நிலத்திலே அவளை மெதுவாக விட்டான். (503)

தலைவி குளித்து வரும் காட்சி

283. கூந்தல் ஒருகை பிடித்திட்டாள்,
குவிமுலை சுற்றிய துணியொருகை
ஏந்தி, எழிலொடு வருகின்றாள்;
யாரைக் கவராள் இளமகளே?

இந்த இளம் பெண் நீராடி அறைகுறை ஆடையுடன் வருகின்றாள். நனைந்த கூந்தலை ஒரு கையில் பிடித்து. மற்றொரு கையால் தன் இளங்கொங்கைகளை விண்

ணென்று இறுக்கி, அவற்றின் வடிவம் புலனாகும்படி சுற்றிய ஆடையைப் பிடித்துத் தோளுக்கு மேலும் முழந்தாளுக்குக் கீழும் உடல் வனப்புத் தெரியும்படியும் இறுகச் சுற்றிய துணியால் மற்ற அங்கங்களின் வடிவம் தெரியும் படியும் துள்ளலும் நடையுமாக வருகின்றாள். இப்படிப்பட்டவள் யாரைத்தான் கவர மாட்டாள்?

''அகிலேந்து கூந்தல் ஒருகையில் ஏந்தி
அசைந்தொருகை துகிலேந்தி ஏந்தி...
நகிலேந்து பூங்கொடி போல் செல்லுமால்
நெஞ்சம் போமுயிரே''

—தஞ்சை வாணன் கோவை

இதில் மேல் பிஹாரிலாலின் கவிதை ஓவியம் அப்படியே வந்துள்ளது. (பி. ர. 687)

பருவம் பெறும் உடல் வாளிப்பு
தலைவியின் தனி அழகு

284. இளையள் மெல்லியள் என்றாலும்,
பருவம் பூத்த பாரிப்பால்,
தளதள வென்று அங்கமெலாம்
தழைத்துச் செழித்துத் திரளுதடா!

என் தலைவி இளம் பெண். இப்பொழுதுதான் பருவம் அவள் உடலைத் தன் பரிசைக் காட்டிக் கோலம் செய்ய ஆரம்பித்துள்ளது. அவள் மெல்லியவள்தான். இருந்தாலும், மார்பகம், பின்னழகு, தொடை, தோள் இவையெல்லாம் பருத்துச் செழிக்கத் தொடங்கிப் பார்க்கக் கண் கொள்ளா அழகுடன் விளங்குகின்றாள். அழகே அழகு. கண்ணுக்கு விருந்து; கருத்துக்கு மருந்து. (பி. ர. 691)

குளித்து ஈரத்துடன் செல்லும் தலைவியின் அழகு

285. குளித்துக் குளத்தின் கரையோரம்
போவாள் ஈரத் துகிலொட்ட,
வெளியில் தெரியும் அங்கமெலாம்;
வேறு விருந்து வேண்டேனே.

என் காதலி இதோ குளித்துக் குளத்திலிருந்து கரையேறி ஈரச்சேலை உடலுடன் அப்படியே ஒட்டிக் கொண்டதால் அவள் அழகு அங்கங்களெல்லாம் வாளிப் பாய் வடிவம் தெரிய நடக்கின்றாள். என் கண் மனம் இவற்றிற்கு விருந்து இதுவே. வேறென்ன வேண்டும்?
(பி. ர. 693)

தலைவி உறியில் வெண்ணெய்த்தாழி வைக்கும் காட்சி அழகு-தலைவன் அடையும் இன்பம்

286. உறியில் வெண்ணெய்க் குடம் வைப்பாய்;
உயரத் தூக்கிய கைகளினால்,
தெரியும் கொங்கை அடிவயிறும்
கண்டு மகிழ்வேன்; செல்லேல் நில்!

"அடியென் காதலியே! நீ உறியைத் தாவி அதன் மேல் வெண்ணெய்க் குடம் வைக்கும் போது, கை தூக்கு வதால், கச்சமும் பிதுங்கி உன் இளங்கொங்கைகள் நன்றாகத் தெரிகின்றன. அதன் கீழுள்ள அடிவயிறு முப்மடிப்பும் இன்னும் தெளிவாகத் தெரிகின்றன. அவ்வளவுதான் எனக்கு. வேறென்ன வேண்டும்? அப்படியே நில்; நகராதே. கொஞ்சநேரம் கண்டு மகிழ் கின்றேன்" என்கிறான் தலைவன்.

"சோலாடக் குழையாட விலைப்பால் கொண்டு
தெருவிற்பால் கூறுஞ்சிற் றிடைச்சி யாரே!
பாலான விலைப்பாலை அப்பால் வில்லும்;
பண்பான கலசமிரண் டென்பால் வைத்து,
மேலாடை தனை நீக்கித் தோய வாரும்
வேணுமோர் உள்ளுறையை விரும்புவீரே.
—தனிப்பாடல்

4. புணர்ச்சி மகிழ்தல்

உலக உயிர்கள் அனைத்தும் விரும்புவது இன்பம் ஒன்றினையே. அந்த இன்பங்களில் எல்லாம் தலையானது ஆண் பெண்ணிடம் துய்க்கும் சிற்றின்பமே. இது எல்லா உயிர்களிலும் ஒரு படியாயினும், ஆறறிவு படைத்த மனிதன் தனி நாகரிக நளினத்தில் துய்ப்பது விலங்குகள் போல் வெறும் உணர்ச்சி வசப்பட்டு மட்டும் அல்லாமல் (Sexuel Instinet) மனத்தளவில் தெளிந்துணரும் இன்ப உணர்வே பெரிது.

இதில் ஆண் செயல்களனாகவும் பெண் நிலைக்கள னாகவும் இருக்கிறாள் (Subjective and Objective). ஆண் பெண்ணிடம் துய்க்கு இன்பத்திலேயே நிறைவு பெறுகி றான். அது அவனுக்கு முதல் தேவையாக, உந்தும் உணர் வாக, இயல்பாகவே அமைந்தது. (மற்ற உயிரினமும் இப்படியே.)

அதை அவனுக்கு அளித்துச் சில சமயம் தானே ஒத்துழைத்து, அவனுக்கு அதை முழுமையாக அளிப்பதி லேயே பெண்ணின் பெருமையும் இன்பமும் இருக்கின்றன. இதனால்தான் நாகரிகம் தோன்றிய நாள் முதலாய் பெண் போகப் பொருளாகக் கருதப்படுகிறாள். அவளிடம் பெறும் இன்பத்திற்கு முதலிடம் தந்து, அதைப் பெருமைப் படுத்தி, அதனால் ஏற்படும் தாய்மைக்கும் மரியாதை செய்வதிலேயே ஆணின் சான்றாண்மை உண்டு. அவள் தரும் இன்பத்திற்கு அடிமைப்பட்டு, அவளுக்கே பணி யாகிக் கிடப்பது ஆணின் சிறுமை. அதே சமயம் அவள் வெறும் போகப் பொருள் என்று உயிர்த் தன்மையைப் பாராது கசக்கித் துய்ப்பதும் சிறுமையே. சமுதாய அழிவு ஆரம்பமாகிறது.

சிற்றின்பத்தில் தாய்மை தெய்வீகமாக மலர்வதால் பெண்ணைப் போகப் பொருளாகவும் போற்றும்

பொருளாகவும் பேண வேண்டியது மனிதனின் தலையாய கடமை.

முதலில் காதலைப் பற்றியும், புணர்வதற்கு முன் அதற்கு உந்து பொருளான நிலைக்களன்களையும், அதற்கு முதல் ஏதுவான காதலியின் அழகு ஈர்க்கும் தன்மையும் இவற்றை எல்லாம் கூறிவிட்டு, இப்பொழுது காதல் புரியும் புணர்ச்சி இன்பத்தையும் முழுவதும் தெரிவித்துத் தருவது இப்பகுதியில் வரும் கவிதைகளாகும்.

இரவெல்லாம் காதல் - தோழி கூற்று

287. மருளும் மயங்கும் வெருவுமிக
நாணும் காதல் விழிகளிலே
தெரிய இமையும் இராவெல்லாம்
புரிந்த காதல் தெரியுதடி!

தலைவியைத் தோழி பார்த்துக் கூறுவாள்: பெண்ணே! உன் கண்கள் மருட்சியும் மயக்கமும் நாணமும் கலந்து நேருக்கு நேர் என்னைக் காணக் கூசுகின்றன. இமைப்பிலேயே நடுக்கம் தெரியும், இவையே நீ இரவெல்லாம் விழித்து உன் காதலனுடன் கலந்திருந்தாய் என்பதைத் தெரிவிக்கிறது. என்னிடம் மறைக்காதே. (பி. ர. 23)

தலைவன் தலைவியர் சங்கேதத்தால் கூட ஏற்பாடு செய்து கொள்ளல்

288. நாயகன் கலவி நயஞ்சொன்னான்;
நங்கை புரிந்து சிரித்திட்டாள்;
போயினர் நழுவித் தனியாகப்
போகக் காதல் புரிந்திடவே;

பலர் கூடியிருந்த இடத்தில் நாயகன் பொதுவாகக் கலவி நயம் பேசினான். அவனுடைய நாயகி அவனுடைய விருப்பத்தைப் புரிந்து கொண்டு சிரித்தாள். இருவரும் யாருக்கும் தெரியாமல் நழுவினர். கலவி இன்பம் காணத் தனியே சென்றனர். (477)

தலைவியைக் கூடி மகிழ்ந்த தலைவன் கூற்று

289. ஒளியும் ஒயிலும் நகையுவகை
கட்டித் தழுவும் ஒட்டுதலும்
களியும் புறவின் இணைகுரலும்
காதலை யன்றி வேண்டேனே.

ஆகா! காதலில் தான் எவ்வளவு இன்பம்! இளமையாக இருவர் உடலிலும் ஒரு ஒளியும், பெண்ணின் மெல்லிய ஒயிலாக அசைதலும், சிரிப்பும், மகிழ்ச்சியும், ஒருவரை ஒருவர் கட்டித்தழுவும் பரிசசுகமும், கூடும் போது புறாக்கள் எழுப்புவது போன்ற அடங்கிய ரீங்கார ஒலியும் இவையெல்லாம் காதலில் உண்டு. இவற்றை அன்றி நான் வேறு எதையும் வேண்டேன். (473)

இரவில் யாருக்கும் தெரியாமல் சோர நாயகியுடன் தனிச் சோலையுள் சுகம் கண்ட கண்ணனை நோக்கி அந்த நாயகி கூறுவது

290. கண்ணா! காலைப் பொழுதாச்சு;
கமலம் பூத்தது; முரணாக
எண்ணுவர் ஊரார்; இனிவேண்டாம்
இருளும் சோலை வெளியே போ!

''கண்ணா! கலவி புரிந்தது போதும். காலை நேரம் வந்து விட்டது. கமல மலரும் கதிரவனைக் கண்டு மலர்ந்து விட்டது. இனி நாம் இங்கே இருந்தால் ஊரார் நம்மைத் தவறாக எண்ணுவர். ஆகையால் இருண்ட இந்தச் சோலையிலிருந்து நீ வெளியே செல். நான் பின்னால் வருகிறேன்'' என்றாள் அவள். (81)

தலைவியின் உதட்டுச் காயம் காட்டிக் கொடுத்தது

291. கரந்து மறைத்தும் வாயிதழில்
காதலன் கடித்த சிறுகாயம்
பரவும் வெற்றிலைச் சாயத்தால்
பாவைநின் சாயம் வெளுத்ததடி!

பெண்ணே! இரவு நீ செய்த சரசத்தை என்னிடம் மறைக்காதே. உன் உதட்டிலே நாயகன் கடித்துச் சுவைத்த சாயத்தின் கீறலில் நீ மென்ற வெற்றிலைக் காவி தனியாக ஒட்டிக் கொண்டிருப்பது அந்தக் காயங்களைக் காட்டி விட்டது. எனவே உன் சாயம் வெளுத்து விட்டது. இனி மறைத்துப் பயனில்லை. (173)

தனியாக நீராடும் காதலியின் உடலழகில் களிக்கும் நாயகன்

292. குளத்தி லாடும் கொடியிடையாள்
கொங்கை குலுங்கக் கண்டு மனம்
களித்தேன்; கண்டாள் நாணினாள்; நாம்
தனியம் அறித்தாள்; இனித்தாளே! (238)

எனது காதலி குளத்தில் குளித்துக் கொண்டிருந்தாள். அவள் கொடி போன்ற இடை அவள் பருத்து விம்மித் தளதளத்து நிமிர்ந்த கொங்கைகளின் பளுவைத் தாளாமையால், கண்ணாடி போன்ற அந்த நீரில் அவள் பொன்னொளி உடலோடு குலுங்கின. அதைக் கண்டு நான் களித்தேன். நான் கண்டதை அறிந்த அவள் முதலில் நாணினாள். ஆனால் நாம் இருவர் மட்டும் அங்கே தனி என்று அறிந்தாள். அதனால் எதையும் மறைக்காமல் எனக்கு இனிக்கக் காட்சி அளித்தாள். (238)

பிரவுடை என்ற நாயகி மாறெதிர் கலவியால் காதலனை மகிழ்விப்பது

293. அவனோ படுத்திருந்தான்
அவளிடை மேகலையோ
துவள இசை பாட,
நூபுரம்தான் தூங்கியவே!

கணவன் தன் மஞ்சத்தில் மல்லாந்து படுத்திருந்தான். தலைவி - அவன் மனைவி இப்பொழுது வந்தாள். (நன்கு பக்குவப்பட்டவள். கணவன் ஆசைப்படி விபரீத ரதி என்ற மாறெதிர் கலவி செய்தாள். ஆண் கீழும் பெண் மேலும் இருந்து கூடுவது.) அப்படிக் கூடும் போது அவள் இடை அசைவதால் அதில் கட்டி இருந்த மேகலை அதன் அசைவுக்கேற்ப இசையாக ஒலிக்கிறது. அதே சமயம் இருவர் கால்களும் பின்னி இருப்பதால் ஒலிக்க வேண்டிய சிலம்புகள் ஒலிக்காமல் தூங்கி விட்டன. இதிலிருந்து தான் அவள் மாறெதிர் கலவி மேற்கொண்டாள் என்று நயமாகக் கவிஞர் கூறுகிறார். (484)

தலைவன் மாறெதிர் கலவி வேண்டத் தலைவி உடன் படல்

294. மங்கை பாதம் தொழுதவனும்
மாறெதிர் கலவி தனைவேண்ட,
மங்கை நல்லாள் வாய்பேசாள்;
சிரித்து விளக்கை அணைத்தாளே!

தலைவன் விபரீத ரதி என்னும் மாறெதிர் கலவி வேண்டுமென நாயகியின் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அவள் வாயால் எதுவும் பேசாமல் விளக்கை உடனே அணைத்து விட்டாள். அதாவது உடன் பட்டாள்; செயலிலும் இறங்கி விட்டாள்

(பி. ர. 130)

தலைவி மாறெதிர் கலவி செய்ததைத் தோழி புரிந்து கொண்டு சொல்வது

295. மாறெதிர் கலவி நீ செய்தாய்,
கேட்டும் மறுத்து நடிக்கின்றாய்;
மாறணின் திலகம் நின் நெற்றி
மறுவாய்ப் பதிந்த விதம் சொல்லாய்!

ஏ பெண்ணே! நீ நேற்றிரவு நின் கணவனுடன் மாறெதிர் கலவி (விபரீத ரதி) செய்தனை என்பது நன்கு தெரிகிறது. நாள் கேட்டும் அதை மறுக்கிறாய். ஆனால் அது தெரிகிறது. ஏன் என்றால் அவன் நெற்றித் திலகம்-பொட்டு உன் நெற்றியில் எப்படி அப்படியே வந்தது? (வட நாட்டுப் பெண்கள் நெற்றி வகுட்டில் குங்குமம் இடுவார் கள். ஆணின் திலகம் அவன் கீழ் இருந்ததால் இவள் கலவி யில் அயர்ந்து சோர்ந்து தன் நெற்றி ஒட்ட அவன் மேல் துயிலலால் அவன் திலகம் இவளுக்கு வந்து விட்டது என்பது புலவர் கருத்து.) (486)

வெறும் உடைமாற்றத்தால் மாறெதிர் கலவி என ஏமாற்றல்—கண்ணன் ராதை செயல்

296. கண்ணனும் பின்னையும் உடைமாற்றிக்
காதல் நாடகம் நடிக்கின்றார்;
கண்ணில் மாறெதிர் கலவி யெனக்
காட்டி இயல்பாய்க் கலந்திட்டார்.

ராதை உடையைக் கண்ணனும் கண்ணன் உடையை ராதையும் மாற்றிக் கொண்டுக் கூடினர். உடையிலாவது பால் மாற வேண்டும் என்ற ஆவல். ஆனால், ஆண் உடையில் கீழே ராதையும், பெண் உடையில் மேலே கண்ணனும் இருந்து கூடினதால் இது இயல்பான கலவி யாயிற்று. (485)

காதலன் கூட வேண்டக் காதலி செயல்

297. இயலா தியலா தெனவாயால்
மொழிவாள் இளம் பெண்; விழிகளினால்
இயலும் இயலும் என முறுவல்
செய்வாள், இனிக்க வருகின்றாள்.

தலைவன் தன் நாயகியை இன்பம் வேண்டி மஞ்சத்திற்கு அழைத்தான். அவள் ‘இயலாது - முடியாது’ என்று சொன்னாள். ஆனால், வாய்தான் பேசியது. அவள் விழிகளோ ‘இயலும் இயலும்’ என்று உடன்படு பார்வை பார்த்தது. அதைச் சிறு புன்னகை காட்டி, அவள் மனம் இனிக்க மஞ்சத்திற்கு வந்தாள். (274)

தன் காதலியிடம் தான் பெறும் இன்பம் தலைவன் மகிழ்வு

298. கன்னி இளமான் கட்டழகி
காதலி என்னைத் தழுவுதொறும்,
பன்னீர் தெளித்தென் காமத்தீ
பரிவுடன் குளிர அணைப்பாளே.

என் காதலி இளையவள். பல்கால் அனுபவித்தும் கன்னி இளமானாகவே இன்றும் இனிப்பவள். கட்டழகி. என் உள்ளத்தில் காமத்தீ பற்றி எரிந்து கொண்டே இருந்தாலும் அதனைப் பன்னீர் விட்டு அணைப்பது போல், என் விருப்பம் அறிந்து தேவை அறிந்து அவ்வப் பொழுது என்னருகில் வந்து என்னைக் கட்டித் தழுவி சில்லென்ற இன்பக்குளிர்ச்சியைத் தந்து அணைத்துக் கொள்ளுகிறாள். அதாவது அந்தத் தீயை அணைத்து விடுகிறாள்.

நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.
—குறள்

அருகில் வந்தால் குளிரும் தீ இவள். (343)

நாயகன் தலைவி மேனி எழில் காண இயலாமை

299. விளக்கொளி நாயகி மேனி எழில்
காண நாயகன் துகிலுரிய
பளிச்சிடும் பொன்னொளி கண்கூசப்
பாவையின் மானம் பிழைத்ததடி!

பிறந்த மேனியாய்த் தன் நாயகன் இவளைக் காண விரும்பி விளக்கொளியில் இவள் புடவையை உருவ, இவளின் பொன்மேனி, அந்த ஒளியில் மேலும் அதிகமாகப் பளிச்சிட, ஒளி அதிகத்தால் இவனுடைய கண்கள் கூச, அவற்றை மூடிக்கொண்டாள் தலைவி; மானமும் பிழைத்தது.

''பொன் வயின் மேனி கொண்டாள்'' —கம்பன்.

தலைவி மேனி பொன்னைக் காட்டிலும் பளிச்சிடும் பளபளப்பு. (471)

தலைவி முதலில் தயங்கிப் பின் கூடல்

300. நாணுவள் நாயகன் முன்னாலே
நங்கை மறுப்பாள் நெளிகின்றாள்;
நாணம் கழல நாயகனின்
ஆவலு ணர்ந்தாள் அணைத்திட்டாள்.

நாயகன் அவளைக் கூடவந்தான். நாயகி நாணத்தால் நெளிந்து முதலில் மறுத்தாள். அவன் அருகில் வந்து செய்த சிறு தில்லு முல்லுகளால் அவள் நாணம் அகன்றது. அவளே இப்பொழுது அவன் ஆவலை - ஆசையை உணர்ந்து, தனே தழுவி அவனுக்கு அளவற்ற இன்பம் தந்தாள். (பி.ர. 465)

தலைவியை எப்படி வைத்து அனுபவிக்க வேண்டுமெனத் தோழி தலைவனுக்குக் கூறல்

301. மாலென மார்பில் அணைத்தாலும்
மாதொரு பாகன் அரை உடலம்;
போல இணைத்தும் மகிழாளே;
அங்கமோ டங்கம் அணைப்பாயே.

திருமாலைப்போல மார்பில் மட்டும் வைத்து அணைத்தால் இவள் மகிழாள். (லக்ஷ்மியை அவன் மார்பில் வைத்தான்) அல்லது உமையை இடப்பக்கம் வைத்த சிவன் போல இவளை அணைத்தாலும் இவள் மகிழாள். உன் ஒவ்வொரு அங்கமும் அவளுடைய ஒவ்வொரு அங்கமோடும் ஒட்டும்படி ஒருவர் உடலில் ஒருவர் முழுவதும் ஒதுங்கி, வேற்றுமை இன்றிக் கூடினால் தான் இவள் மகிழ்வாள். (464)

தலைவியும் தலைவனும் அயல் அயல் வீட்டில் இருந்து தொட்டுச் சுகம் காணல்

302. தாய்ச்சுவர் எம்பி இதழ்சுவைப்பர்;
துளைவழி இருகரம் தழுவிடுவர்;
பாயலில் அணைந்த சுகம்போலே
பகலாய் இரவும் விடிந்ததடி!

தலைவன் தலைவியர் அண்டை வீட்டினர். இடையில் ஆள் உயரத் தாய்ச்சுவர் மட்டும் உண்டு. நடுஉயரத்தில் சன்னல்போல் வட்டத் துளையொன்றுண்டு, எல்லோரும் உறங்கிய பின், தாய்ச்சுவரின் இருபுறமும் இருவரும் நின்று கொண்டு, எழும்பி முகத்தைத் தூக்கிச் சுவரின் உயரத்தின் மேல் வரும்படி செய்து, ஒருவரை ஒருவர் இதழ் சுவைத்து முத்தமிட்டு மகிழ்வர். துளையின் வழியாகக் கைகளை விட்டு ஒருவரை ஒருவர் தீண்டித் தழுவிச் சுகம் அடைவர். இப்படியே இரவு பகலாக இரவு பூராவும் கழிய இரவு விடிந்து விட்டது. (696)

நாயகன் தலைவிக்கு வெற்றிலை வாயில் திணித்தல்

303. நாயகன் வெற்றிலை வாயிதழில்
தன்விரல் கொண்டு திணிக்கின்றான்;
நாயகி பல்கால் மறுதலித்தாள்;
நனிமகிழ்வோடு சுவைக்கின்றாள்.

கலவியின் போது மஞ்சத்தில் தலைவியைக் கிளர்ச்சி அடையச் செய்ய அவள் வாயில் வெற்றிலைச் சுருளைத் திணித்தான். அவளோ 'வேண்டாம் வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டே அதை நன்றாகச் சுவைத்தாள்.

(பி. ர. 627)

தலைவி ஏமாந்து தலைவனிடம் அகப்படுதல் தலைவன் கூற்று

304. இணைய மறுத்தாள். துயில்கொண்டேன்;
இன்சுவை இதழை இதழ்வைத்தாள்;
அணைய வளைத்தேன் சிரித்திட்டாள்;
அன்று முழுவதும் அணைந்தோமே!

தலைவன் தன்னுடன் இணையும்படி தலைவியை எவ்வளவோ கெஞ்சினான். அவள் மறுத்துவிட்டாள். இவன் தூங்குவது போல் பாசாங்கு செய்தான். அதை உண்மை என்று எண்ணிக் கடைசியில் படுக்கும் போது அவன் இதழ் மேல் தன் இன்சுவை மெல்லிதழை லேசாக வைத்துக் குனிந்து முத்தமிட்டாள். அவன் அப்படியே அவளை இழுத்துப் பிடித்துக் கெட்டியாக அணைத்துக் கொண்டான். இவளால் தப்பவும் மறுக்கவும் முடிய வில்லை. அன்றிரவு பூராவும் சுகம்தான்.

(466)

தலைவியின் மறுப்பும் செயலும்

305. சின்னப் பொய்யும் கசப்பென்றே
யாரே சொன்னார்; சிறுக்கி"யிவள்,
முன்னம் முடியா தென விலகாள்;
முயங்க முயங்க இனிக்கின்றாள்

"சின்னப் பொய்யும் கசப்பு என்று யார் சொன்னது? நான் இவளை அணைக்க முயன்றேன் "முடியாது" என்றாள். வாய்தான் முணுமுணுத்தது; மறுக்கவுமில்லை; விலகவும் இல்லை. அணைத்து முயங்கினேன். பலதடவை சுகித்தும் மேலும்மேலும் இனிக்கின்றாள். என்னுடைய இளஞ்சிறுக்கியானாவள் பலே கைகாரி" என்கிறான் தலைவன் (பி.ர. 644)

தலைவி மாறெதிர் கலவிக்குப்பின் தளர்வு

306 கலவிக் களைப்பால் நாணுங்கண்
சிறிதே திறந்து காணுகிறாள்;
நிலவு முகத்தாள் நெஞ்சின் மேல்
துயில்வாள். நினைவில் நீங்காளே!

தலைவன் சொல்வான்; நான் கீழ் இருக்க அவள் என் மேல் படுத்துச் சுகம் தந்தாள். விபரீத ரதியில் காம சுகம் முழுமையும் கண்டோம். அவள் ஈடுபாடு முதன்மையான யானதால் கலவிக்குப் பின் களைத்துப் போனாள். அப்படியே என் நெஞ்சின்மீது உறங்கிவிட்டாள். இடையிடையே நாணத்தோடு தன் நிலவு முகத்தைத்தூக்கி, அரைப்பார்வை பார்த்து, மீண்டும் உறங்குவாள். (களைப்பால் முழுவதும் கண்திறக்க முடியவில்லை.) அவளின் இந்த நிலை என் நெஞ்சில் நிலையாகப் பதிந்துவிட்டது. (488)

தலைவன் கலவியின் போது செய்த காயத்தின் வடுவைத் தலைவி போற்றுதல்

307. வாயிதழ் பல்லால் அவன் செய்த
வடுவை நாளும் கண்ணாடி
போய்முன் கண்டு மகிழ்கின்றாள்
புதையல் இதுவென மூடுகிறாள்.

தலைவியுடன் நாயகன் இரவு கூடிக் களித்தான். அப்போது அவள் வாயிதழ் சுவைக்கும் போது அவன் பல்லால் ஆசையுடன் கடித்துச் சுவைத்த காயம் வடுவாகி விட்டது. அதைப்பகலில் யாரும் இல்லாத நேரம் கண்ணாடி முன் நின்று பார்த்துப்பார்த்து இவள் மகிழ்கிறாள். புதையல் போல அதைப் பாதுகாக்கிறாள்.

'முலைமீது கொழுநர்தம் நகமேவு குறியை
முன்செல்வ மில்லாத அவர்பெற்ற பொருள் போல்,
கலைநீவி யாரேனும் இல்லாத இடத்தில்
கண்டுற்று நெஞ்சம் களிப்பீர்கள் திறமின்!'

—கலிங்கத்துப் பரணி

அங்கே வாயிதழ்கக்கடியால் காயம். இங்கே கணவன் கைந்நகம் பட்ட கொங்கைமேல் காயம். இரண்டும் தலைவியர் நோக்கில் ஒன்றுதான். (494)

மறுக்கும் தலைவி மறாது கூடல்

308. புருவம் நெரிய மறுதலித்தாள்;
புன்னகை செய்வாள், சினக்கின்றாள்.
பருவ மங்கை கைநெகிழாள்
பள்ளியில் அவனைத் தழுவுகின்றாள்.

தலைவி தலைவன் கலவி வேண்டப் புருவத்தை நெரித்து மறுக்கிறாள்; சினம் கொள்கிறாள்; ஆனால்

அவள் வாயில் புன்னகை. அவனை அணைத்த கை நெகிழாமல் மேலும் மேலும் படுக்கையில் அவனைத் தழுவி அணைத்து இன்பம் செய்கின்றாள்.

'விடுமின் எங்கள் துகில் விடுமின் என்றுமுனி
வெகுளி மென்குதலை துகிலினைப்
பிடிமின் என்ற பொருள் விளைய நின்றருள் செய்
பெடைநலீர் கடைகள் திறமினோ!'

—கலிங்கத்துப் பரணி

காதலியைத் தொட்டுக் கூடுவதற்காக அவள் சேலையை அவன் அவிழ்க்க முயல, என்னை 'விடு! 'விடு' என்று வாயால் மட்டும் கூறி, அவன் செயலை எதிர்க்காமல் அவனிடம் சேலையை (எல்லாவற்றலையும்) கொடுத்து விடுபவள் இவள். (478)

5. ஊடல் - பிறமகளிர்

காதலி காதலுடன் கோபத்தால் பிணக்குக் கொள்ளுதலும், அவன் பிறமகளிரைக் கூடி இன்பம் அனுபவிக்கும் பல நிலைகளும் இங்குக் கூறப்படுகிறது.

தலைவன் வேறு ஒரு பெண்ணை நாடுகிறான் என்று ஊடல் கொண்ட தலைவியைத் தோழி மறுப்பது

309. முட்டாள் மகளே! மூளைதான்
கெட்டுப் போச்சோ? கருவண்டு
காட்டில் எருக்கை மொய்த்திடுமோ?
காரிகை வேறவன் நாடுவனோ?

முட்டாள் பெண்ணே! உன் மூளை கெட்டுப் போயிற்றா? எல்லாவற்றிலும் உயர்ந்த அவனுக்கே அதிக

இன்பம் தருகின்ற உன்னைவிட்டு உன் தலைவன் வேறொரு பெண்ணை நாடுவானோ? கருவண்டு தேனில்லா எருக்கு மலரை நாடுமோ? அதுபோலத் தான் நீயே அவனுக்கு இன்பத்தேனானவள். (363)

தலைவன் வேறொரு பெண்ணுடன் கூடி வந்ததைக் கண்டு கொண்ட தலைவி ஊடல்

310. கூட வந்த கோலமிதோ?
குதப்பும் வெற்றிலை செம்புருவம்;
ஊடலில் பணியச் செம்பஞ்சு
நெற்றியில்; உதட்டில் கண்மையே!

''ஐயனே! இன்று என்னுடன் கூடவந்த உன் கோலம் அழகுதான்! நீ வேறு பெண்ணுடன் கூடிவிட்டு அப்படியே வந்துள்ளாய். அந்தப் பெண்ணை இதழ் சுவைத்து முத்த மிடும்போது அவள் உன் கண்ணில் முத்தமிட உன்புருவம் அவள் இதழ் வெற்றிலைச் சாற்றால் சிவந்துள்ளன. நீ அவள் கண்ணை முத்தமிட உன் வாயில் அவள் கண்மைக் கறுப்பு ஒட்டிக் கொண்டது. அவள் காலில் நீ விழுந்து வணங்கி ஊடல் தணித்து இன்பம் வேண்ட அவள் காலின் செம்பஞ்சுப் பூச்சு உன் நெற்றியில் காண்கிறது. வெட்க மில்லையா உனக்கு?'' (425)

ஊடல் கொண்ட தலைவி தணிந்து கூறல்

311. தயங்கி வருவாய் மற்றவளைத்
தழுவிய துணர்த்தும், அவள் நினைவில்;
மயங்குமுன் மனம்நீ வந்ததனால்
மறந்தேன், பிரிவுத் தீயினையே!

தலைவா! நீ வேறு பெண்ணைக் கூடிவிட்டு நான் கோபம் கொள்வேன் என்று தயங்கித் தயங்கி வருகின்றாய். அவள் நினைவாகவே இருக்கின்றாய். இருந்தாலும் இப்பொழுதாவது நீ வந்தாயே. என் மனம்

இப்பொழுது உன் பிரிவுத் தீயின் வேதனையிலிருந்து தப்பியது. அந்த வரைவக்கும் நிம்மதி. (424)

தலைவியின் ஊடல் கோபம்

312. கையால் தழுவிக் காதினிலே
காதல் மொழிவான்; கண்களிலே
பொய்யும் நாணும் கண்டவளும்
பொருமி வீசினாள் சுடுநோக்கே.

வேறு பெண்ணுடன் பழகிவிட்டுத் தலைவன் 'சாது' போல் வந்தான். அவளை இருகையாலும் அணைத்துக் காதில் காதல் மொழிகளை எல்லாம் பேசினான். ஆனால் அவனுடைய கண்கள் அவனைக் காட்டிக் கொடுத்து விட்டன. அவைகளில் அவன் பொய்யொழுக்கமும், தயக்கமும், நாணமும் எல்லாம் பிரதிபலித்தன. இதைக் கண்டு கொண்ட தலைவி சடக்கென விலகிச் சிணுங்கிச் சினந்து ஒரு கோபப் பார்வையால் சுடச்சுட அவனை நோக்கினாள். (423)

வேறு பெண்ணைக் கூடிவந்த தலைவனைத் தலைவி கோபித்தல்

313. நெற்றியில் ஒட்டிய செம்பஞ்சு
நெருப்பாய் சுடுமென் நெஞ்சினிலே;
உற்றுப் பாரிக் கண்ணாடி;
மறைந்தால், மறுப்பாய், உன்பழியே.

''தலைவ! நீ வேறு பெண்ணிடம் சுகம் வேண்டி அவள் காலில் விழுந்து கெஞ்சியபோது. அவள் காலின் செம்பூச்சு உன் நெற்றியில் ஒட்டியுள்ளது. நீயே சென்று கண்ணாடியைப் பார். பின்னால் அதைக்கழுவி மறைத்து விட்டு நீயே உன் குற்றத்தை மறுப்பாய். உன் இந்த இழி செயலால் என் நெஞ்சு வேகின்றது'' என்கிறாள் தலைவி. (422)

தலைவன் கூடிய வேறு பெண் தலைவிமுன் வந்தபோது தலைவி பேசியது

314. காதணி நிழலுடன் கன்னத்தில்
கண்டும் காய வடுவடிவம்
மாதுனைக் கூடிக் கன்னத்தில்
மற்றவன் செயலைக் காட்டுதடி!

"அடி என் சக்களத்தியே! மிகவும் கௌரவமாக வந்துள்ளாயே. 'உன் கன்னத்தில் வடு ஏது என்றால், 'அது என் காதணி என் சிவந்த கன்னத்தில் நிழலாய் விழுகிறது' என்கிறாய். ஆனால் காதணி அசையும், நிழல் மட்டும் அசையாது? என் தலைவன் உன்னைக் கூடிக் களித்தபோது கன்னத்தைக் கடித்த காயம் தனியாகத் தெரிகிறது. வீணே பொய் சொல்லாதே" என்கிறாள் தலைவி. (பி. ர 81)

தலைவன் வேறு பெண்ணை எண்ணிக்கொள்ளத் தலைவி ஊடிப் பேசல்

315. என்னுளம் கொண்ட நின்மனத்தை
எவளோ ஒருத்திக் கீயாதே;
என்னுளம் அதனுடன் போய் விட்டால்,
என் நிலை என்னாம்? பேரிழவே!

தலைவ! நான் உன்னிடம் என் உள்ளத்தைப் பறி கொடுத்தேன். அந்த உள்ளத்தோடு உன் உள்ளத்தை வேறு ஒருத்தியிடம் மயங்கி இழக்காதே. என் உள்ளமும் உன் உள்ளத்தில் இருப்பதால், இரண்டையும் சேர்த்து அவளிடம் இழந்து விடுவாய். அப்புறம் என்கதி என்னாவது? எனக்குப் பேரிழப்பு தான் என்கிறாள் தலைவி. (320)

வேறு பெண்ணைத் தழுவி வந்த தலைவன் தோற்றம்

316. நெஞ்சொடு தழுவ நெஞ்சிலவள்
பதித்த முத்தணி வடு இவையோ?
வஞ்சக் காமனுன் மனக் களிற்றை
துரத்தக் கவணெறி கல்லிவையோ?

"தலைவா! வேறு பெண்ணுடன் கூடினால் அவளால் முழுநலம் சுகம் காண இயலாத நீ இப்பொழுது என்னிடமே வந்துவிட்டாய். உன் மார்பில் அவளைத் தழுவும் போது அவள் கொங்கை மேலணிந்த முத்துமாலை ஆழப்பதிந்து முத்துக்களின் வடுக்கள் தனியாகத் தெரி கின்றன. ஆனால் இப்பொழுது உனக்குப் புத்தி வந்ததால் காமன் என்பவன் உன்மனமென்னும் யானையைத் துரத்தத் தன் கவணால் வீசிய கற்கள் பதிந்த பள்ளங்கள் அல்லவா இவை? அதனால்தான் நீ என்னிடம் ஓடிவந்து விட்டாய்" என்கிறாள் தலைவி. (421)

வேற்றுப் பெண்ணைக் கூடிய தலைவன் வந்த போது தலைவியிடம் தோழி கூறுவது

317. பல்லொளி வீச நகையாதே;
பார்க்க அவன்கண் கூசுகிறான்;
மெல்லியல் உந்தன் முகம் பார்க்கும்
மனத்திடம் அவனுக் கில்லையடி!

தோழி! உன் தலைவன் வேறு பெண்ணைக் கூடிவிட்டு இப்பொழுது வந்துள்ளான். இதனால் உன் முகத்தை நேராகப் பார்க்கும் தைரியம் அவனுக்கில்லை. நீ வேறு கோபச்சிரிப்புப் புன்னகை செய்கிறாய். அதனால் உன் வெண்மையான பல்லொளி உன் முகத்தைப் பார்க்க முடியாமல் அவன் கண்கள் கூசும்படி செய்கின்றன. எனவே கோபத்தை விட்டு அவனை ஏற்றுக் கொள்.

(பி. ர. 100)

ஊடல் கொண்ட தலைவியைத் தோழி தணித்தல்

318. கண்ணால் கசந்து சுட நோக்கேல்;
காதலி வெற்றிலைச் சாறென்றே
எண்ணேல்; குண்டலம் கன்னத்தில்
எழிலார் நிழலாம்; மெய்யிதுவே.

''ஏ பெண்ணே! இப்பொழுது உன்னிடம் வந்த தலைவனைக் கசந்து கோபத்தால் சுட்டுவிடுவதுபோல் ஏன் பார்க்கிறாய்? நீ நினைப்பது போல் இவன் கன்னத்தில் தோன்றுவது நேற்றிரவு இவன் அனுபவித்த வேறு காதலி யின் வாயில் ஊறிய வெற்றிலைச் சாற்றின் வடு இல்லை. உண்மையில் அப்படி நடக்க வில்லை. இது அவன் பொன்னொளி வீசும் கன்னத்தில் அவன் காதுக் குண்டலத் தின் நிழல்தான் அப்படித் தெரிகிறது. வீணுக்குச் சந்தேகப்படாதே'' என்கிறாள் தோழி. (பி. ர. 113)

இரவு ஆகியும் கண்ணன் வராதது கண்ட தலைவி தோழிக்குச் சொல்லுவது

319. அந்தி வானம் இருள்சூழ
குருவிகள் கூவ இரவிதுதான்
வந்தது; நந்தன் வாரானால்;
மற்றொரு மாதுடன் மகிழ்வானோ!

''பெண்ணே இன்று கண்ணன் கட்டாயம் வருகிறேன் என்றான். அந்தி வானம் இருள் சூழ்ந்தது. குருவிகள் கூவிக் கூடு சென்றன. இரவு வந்தது. இது வரை நந்தன் வரவில்லையே. ஒரு வேளை வேறொரு பெண்ணு டன் இன்பம் பெறுகிறானோ?'' என்கிறாள் தலைவி தோழியிடம். (318)

தலைவன் தன் புது மனைவிக்கு மாலை அணிவித்தல்

320. மார்பில் அணிந்த மாலையையுன்
புதுமனை யாட்டிக் கணிவித்தாய்;
தாரது வாடியும் தான்சூடி
நங்கை மகிழ்ந்து திரிகின்றாள்.

தோழி சொல்லுவாள்: "தலைவா! உன் புதிய மனைவிக்கு உன் மாலையை அணிவித்தாய். அது வாடிய போதும் நாணமின்றி அதைக் கழற்றாமல் போட்டுக் கொண்டே திரிகிறாள். (இது உன் மற்ற மனைவிகளுக்குக் கோபம் தரும் செயலல்லவா?") (360)

தலைவியின் நிலை காட்டித் தோழி தலைவனை எச்சரித்தல்

321. வந்தது நலமே; மங்கை இவள்
மனவெறுப் பதுதான் மாறிவிடும்;
முந்திச் சிறுவிரல் மோதிரமே
துறப்பாய்; முனிவாள், கண்டக்கால்,

"தலைவா! நீவந்த வரை நல்லதே. ஆனால், உன் விரலில் மோதிரத்தைக் கழற்றி எறி. இதைக் கண்டால் உன் தலைவிக்கு இது உன் புதுக்காதலி அளித்தது புரிந்து விடும். இப்பொழுது தான் நீ வந்ததால் அவள் மனத்தில் உன்மேல் வெறுப்புக் குறைந்துள்ளது." என்கிறாள் தோழி. (372)

தலைவன் தன் பல மனைவிகளுடன் சுனையில் நீராடும் போது நடந்த கலகம்

322. புனல் விளையாடும் போதினிலே
புதுமனை யாட்டி கண்களிலே,
புனல்கை வீசப் புதியவளும்
மற்ற வரும்கண் சிவந்தனரே

தலைவன் தன் மனைவிகள் அனைவருடனும் சுனையில் (இக்காலத்தைய நீச்சல்குளம் Swimming Pool) நீராடிப் புனல் விளையாடுகிறான். தன் புதிய மனைவியின் கண்களில் தன் கைகள் மூலமாக நீரைவாரிப் பீய்ச்சினான். இதனால் புதிய மனைவி, பழைய மனைவிகள் அனைவர் கண்களும் சிவந்தன. புதியவளுக்கு நீர் உறுத்த கண் சிவந்தது; புதியவள் மேல் அக்கறை காட்டி அவளிடமே ஈடுபட்டதால், அதனால் சினக்க மற்ற மனைவிகள் கண்களும் சிவந்தன. (244)

தலைவன் மற்றொருத்தியிடம் ஈடுபடத் தலைவியின் ஊடல்

323. முறைமனை வியைவிட வேறொருபெண்
மோகம் கொண்டான்; கண்டிவளும்
குறையும் நிறையும் மகிழ்வோடு
கோபமும் தாபமும் கொண்டனளே.

தன் முறையான மனைவியை விட்டு வேறொருத்தி மேல் கணவன் மோகம் கொண்டதைக் கண்ட தலைவி குறைப்பட்டாள். போனால் போகட்டும்; கணவன் மகிழட்டும் என்ற எண்ணத்தால், நிறைவும் மகிழ்ச்சியும் பெற்றாள். ஆனால் அது நெடுநேரம் நிற்கவில்லை. இயல்பான சாதாரணப் பெண்ணே அவளுள் விஸ்வரூபம் எடுத்தாள். உடனே தாபமும் அவன் மேல் கோபமும் ஏற்பட்டு ஊடினாள். (335)

தலைவி ஊடலைச் சாக்குப் போக்குச் சொல்லித் தோழி தணிப்பது

324. மற்றொரு மங்கை நகவடுதான்
இல்லை; கணவனை முனியாதே;
முற்றிலும் உடலில் குங்குமப்பூ
தூவி முடிந்த கோலமிதே;

"அசட்டுப் பெண்ணே! உன் தலைவன் உடலில் இப்பொழுது உள்ளவை புதுக்காதலி கூடும்போது செய்த நகக்குறி வடுக்கள் இல்லை. அப்படி நடக்கவில்லை. நீதான் தவறாக எண்ணுகிறாய். உண்மையில் இவன் உடல் வாசத்திற்காகக் குங்குமப்பூவை அள்ளித் தூவி உடலைக் கோலம் பண்ணியிருக்கிறான். அந்தக் குங்குமப் பூக்கள்தான் வடுப்போல் தோன்றுகின்றன. வீணுக்கு அவனைக் கோபிக்காதே" என்கிறாள் தோழி. (411)

தலைவி கனவில் கணவனுடன் ஊடல்

325. நெஞ்சொடு தழுவித் துயில்கின்ற
 கணவன் வேறொரு நேரிழையைக்
கொஞ்சிடக் கனவில் கண்டனளே;
 புரண்டு கோபம் கொண்டனளே

தலைவி தலைவனைத் தன் நெஞ்சத்தோடு அழுத்தித் தழுவிப் படுத்திருந்தாள்; துயின்றாள். கனவில் அவன் வேறொரு பெண்ணுடன் கலந்து மகிழ்வது போல் கண்டாள்; உடனே முதுகை அவனுக்குக் காட்டிப் புரண்டு படுத்தாள்; மாளாக் கோபம் கொண்டாள். (கனவில்கூட வேறொருத்திக்குத் தன் தலைவனை விட்டுக் கொடுக்க அவள் விரும்பவில்லை.) (410)

தலைவன் உடல் அடையாளம் கண்ட தலைவி ஊடல்

326. நெஞ்சில் நேரிழை நகவடுவும்
 முழுதுடல் சோர்வும் கண்களிலே
கெஞ்சும் நாணும் கெடுமதியாய்!
 மற்றவள் கலவியைக் காட்டுதடா!

தலைவி சொல்லுவாள்; "தலைவா! நீ வீணுக்காவது எதை எதையோ பேசிப் பொய்ச் சத்தியம் பண்ணாதே.

நீ வேறொரு பெண்ணுடன் கலவி செய்து வந்துள்ளாய் என்பது நன்றாகத் தெரிகிறது. அவள் நகத்தால் கீறிய வடுக்கள் உன் நெஞ்சில் உள்ளன. உடல் முழுவதும் கலவியின் அவசரத்தால் சோர்ந்திருக்கிறாய். உன் கண்களில் தப்பு செய்துவிட்டுக் கெஞ்சுகிற மானம் கெட்ட தன்மை நாணம் தெரிகிறது. உன் புத்தி கெட்டுத்தான் போச்சுப்போ'' என்கிறாள். *(431)*

பரத்தையை சுகித்து வந்த தலைவனைத் தலைவி கோபிப்பது

327. பரத்தை சுகித்து வந்தவனைப்
பார்த்துக் கண்சிவப் பேனென்றாள்;
கரவு மனத்தன் காரிகையுன்
கண்சிவப் பொளிநிழல் என்றானே!

தலைவன் வேறொரு பெண்ணை சுகித்து, இரவெல்லாம் கண் விழித்துக் கண் சிவப்பேறித் தலைவியிடம் வந்தான். அவள் கோபத்தால் கண் சிவந்து, ''உன் கண்ணில் இந்தச் சிவப்பு எங்கிருந்து வந்தது?'' என்றாள். (''இரவெல்லாம் மாற்றாளுடன் விழித்துக் கழித்ததால் தானே'' என்பது அவள் கண்டுபிடித்துக் கேட்டது.) ஆனால் அவன், ''பெண்ணே! உன் கண் சிவப்புதான் பளிச்சிடும் என் கண்களில் பிரதிபலித்துச் சிவப்பாகியது'' என்று சாமர்த்தியமாகப் பதில் சொன்னான். **(415)**

வேறு பெண்ணைக் கூடி வந்த தலைவனைச் சாடல்—தலைவி கூற்று

328. செக்கச் சிவந்த கமலம்போல்
சிவந்த கண்கள் எதனாலோ?
ஒக்கத் திளைத்த உன்காமக்
கிழத்தி காதல் ஒளிஇதுவோ?

"தலைவா! உன் கண்கள் செக்கச் சிவந்து (இரவெல்லாம் கண் விழித்து வேறொருத்தியுடன் சுகித்த தால்) தாமரை போல் இருக்கின்றனவே? ஏன்? உன் காமக் கிழத்தியுடன் நீ ஒன்றிக்களித்த போது, அவள் செய்த காதல் இப்படி உன் கண்ணில் சிவப்பாய் தெரிகிறதா?" என்றாள் தலைவி. (414)

பரத்தையுடன் கூடிய தலைவன் பொய் சொல்லத் தலைவி சாடுவது

329. கள்வன் அல்லேன் எனப்பலகால்
கையில் அடித்துச் சொன்னாலும்,
ஒள்ளிய கண்கள் சிவந்தனவே;
இவையே காட்டும் அவள்உறவே.

"தலைவா! நீ ஏன் கையிலடித்துப் பொய்ச் சத்தியம் பண்ணுகிறாய்? உன் கண்கள் சிவந்துள்ளன. இவையே நீ இரவெல்லாம் விழித்து உன் காமக் கிழத்தியுடன் காலந்தள்ளியதைக் காட்டிக் கொடுத்து விட்டதே" என்கிறாள். (414)

பரத்தையைக் கூடி வந்தவனைத் தலைவி சாடுவது

330. பரத்தைப் பெண்சுகம் கண்டிங்கே
வந்தாய் பலகால் மறைத்தாலும்,
கரவுக் கண்கள் நேர்நோக்கா;
முகமோ கள்ளன் எனக்காட்டும்.

"தலைவ! வேறு ஒருத்தியுடன் கூடிவந்ததை ஏன் மறைக்கிறாய்? வஞ்சனையான உன் கண்கள் என்னை நேரே பார்க்கக் கூசுகின்றன. உன் திருட்டுத் தனத்தை உன்முகமே காட்டுகிறதே" என்றாள் தலைவி. (420)

வேறொரு பெண்ணுடன் கூடிய குறிகளைத் தலைவனிடம் கண்ட தலைவி கூறுவது

331. நீலச் செப்பில் பிறை நிழல்போல்
நீல மேனியில் அவள் நகத்தின்
கோல வடுவுன் நோக்குநுழை
துகிலுள் தோன்றும் குறையன்றோ?

கண்ணா! நீ கள்ளக் காதல் புரிந்ததை ஏன் மறைக்கிறாய்? உன் நீல மேனியில் அந்தக் காதலி கூடும்போது செய்த நகவடுக் குறிகள் ஒரு நீல ரத்தின செப்புக்குள் தண்ணீரில் தோன்றும் பிறைச் சந்திரன் நிழல் போல் தோன்றிக் காட்டிக் கொடுக்கிறதே? உன் குறையை அறியவில்லையா? (பி. ர. 186)

வேற்றுப் பெண்ணொடு பழகும் தலைவனின் நப்பாசையைத் தலைவி நொந்து கூறல்

332. நாணம் ஏனோ? நாயகனே!
வேற்றொரு தங்கையைக் கண்டக்கால்,
காணும் கண்ணைப் பழிக்காதே;
நானும் பழியேன், செல்வாயே!

''தலைவ! வேறு பெண்ணைப் பார்த்தாலே உன் மனம் பேதலிக்கிறது. இதில் வெட்கம் என்ன? கண்கள் உன்னை மீறி அவளைப் பாத்து ஆனந்திக்கின்றன. அவைகளை ஏன் பழிக்கிறாய்? (உன்னையே பழிக்காமல் நானும் உன்னைக் குறை சொல்ல வில்லை; போய் வா'' என்கிறாள் தவலவி. (404)

தலைவனின் பருவப் புதிய இளம் மனைவியைக் கண்டு மற்ற மனைவிகள் செயல்

333. பக்குவம் எய்தும் புதுமணப் பெண்
கண்டனள் மற்றைய பத்தினியர்;
அக்கறை காட்டினர் அவன் மீது;
வெளியூர் செல்லும் தருணம் போல்.

தலைவன் புதிதாக ஒரு சிறுமியை மணந்து கொண்டு வந்தான். அவள் இப்பொழுதுதான் பக்குவமும் பருவமும் அடைகிறாள், அழகும் வாளிப்பும் பளிச்சிடுகிறது. இதனால் தலைவன் கவனம் அவளிடம் சென்று விடும் என்று பயந்த அவன் மற்றப் பத்தினிகள், அவன் வெளியூர் சென்று விட்டால் வாடித் தவிக்கும் தவிப்போடு அவனிடம் அதிக அக்கறை காட்டினார். (425)

சந்தேகப்பட்ட தலைவியைத் தலைவன் தேற்றுதல்

334. வஞ்சகர் கோடிப் பொய்யுரையால்
மானே உன்னை மாற்றுகிறார்;
நெஞ்சினி யாளே! வஞ்சமெனில்,
நீ எனைக் கண்ணுள் சிறைவையே!

பெண்ணே! ஏன் வீணே சந்தேகப் படுகிறாய்... பலர் கோடிக் கணக்கான பொய்யுரைகளைக் கூறி உன் மனத்தை மாற்றப் பார்க்கின்றனர். அதில் உண்மையில்லை. என் நெஞ்சுக்கு இனியவளே! வேண்டுமானால் என்னை நீ உன் கண்களில் சிறை வைத்துக் கொள். (அதாவது நான் எங்கும் போகாமல் உன் பார்வையிலேயே இருக்கிறேன் என்கிறான் தலைவன் தலைவியிடம் (627)

தலைவி வருத்தம் பற்றித் தலைவனிடம் தோழி கூற்று

335. கெழுமிய காதல் கொழுநன் நீ;
கேண்மை மற்றவளொடு வாழ்வாய்;
முழுவது மொருநாள் ஆண்டாக
மூழ்கியுன் பிரிவால் நலிகின்றாள்.

''தலைவ! நீயோ இவளுக்கு நெருங்கிய உரிமைக் காதல் கணவன். இப்பொழுது வேறு ஒரு பெண்ணுடன் கூடி இவளை மறந்து, அவளைச் சுகித்துக் கொண்டிருக்கிறாய். உன் பிரிவு ஒரு நாளாயினும், அதுவே தாள முடியாத நீண்ட ஒரு வருஷத்திற்குச் சமமாக உன் பிரிவு இவளைச் சுடுகிறது.'' என்கிறாள் தோழி. (319)

தலைவனின் வேறு பெண் பழக்க அடையாளம் கண்டு தலைவி சாடல்

336. ஒருவகைப் பொருளே ஒப்புமையாம்
உலக வழக்கம் இதுவாகும்;
கருங்கண் அஞ்சனம் இதழேறக்
கண்ணில் இதழ்சிவப் பிதுவேனோ?

''தலைவ! ஒரே மாதிரிப் பொருள்கள்தான் ஒன்றுக் கொன்று ஒப்புமைச் சமமாக முடியும். ஆனால் உன் விஷயத்தில் இது வேறு விதம். கண்ணில் சிவப்புச் சாயமும் இதழில் கருமை நிறமும் மாறினது ஏன்? காமக் கிழத்தி கண்ணில் நீ முத்தமிட்டாய். அந்த மை உன் இதழில் ஒட்டிக் கொண்டது. அவள் உன் கண்ணில் முத்த மிட்டாள். வெற்றிலை மென்ற அவள் இதழின் செம்மை உன் கண்களில் சிவப்பாக ஒட்டிக் கொண்டது. என்னிடம் மறைத்து என்ன பயன்'' என்கிறாள் தலைவி. (267)

தலைவனின் மாற்றாள் உறவையும் ஏற்ற தலைவி இங்கிதமாகத் தன் எதிர்ப்பைக் கூறல்

337. கண்ணா! மணவறை தனில் காதல்
அன்பொடு காமம் சூடேற்றித்
தண்ணீர் லைத்தேன்; மாற்றாளைத்
தழுவிய களைப்பற ஆடுக நீர்.

தலைவ! என் உள்ளத்தை உன் குளியல் அறையாக்கி, அன்பு, காமம், காதல் ஆகிய மூன்று விறகை எரித்து, உன் மேல் தீராப் பாசம் என்ற தண்ணீரை இதமாகச் சூடேற்றி வைத்துள்ளேன். நீ மற்றவளைக் கூடின களைப்புத் தீர, அதில் நீராடி இளைப்பாற்றிக் கொள்'' என்கிறாள் தலைவி. அதாவது அவள் தன் மனம் சூடேறி வேகுது என்கிறாள். (பி. ர. 12)

மாற்றாளைக் கூடி வந்த தலைவனைக் கண்ட தலைவி செயல்

338. மாற்றாள் தழுவிய மாசு மனம்
உறுத்த நாணினன், அவள் முன்னால்;
ஆற்றாச் சினத்தள் ஆனாலும்,
அருளோ டவனைத் தழுவினளே.

தலைவன் வேறொரு பெண்ணைக் கூடிவந்தான். தன் மனைவியைப் பார்க்க அவனுக்குத் தைரியம் இல்லை. அவன் மனச்சாட்சி அவனை உறுத்தியது. அவள் முன் நின்றான். ஆனால் பார்க்க நாணினான். இவளுக்கோ சினம். ஆனால் அவன் அவல நிலையைக் கண்டு பாசத்தோடு அவனை அணைத்துக் கொண்டாள். (404)

தலைவன் மார்பின் அடையாளம் கண்டு தலைவி சினம்

339. நெஞ்சி லழுந்திய மாணிக்க
மாலை சிவந்து 'கொப்பளிக்க,
வஞ்சி அவள்பால் உன் அன்பை
வகையாய்க் காட்டுது நானறிவேன்.

''தலைவ! என்னிடம் ஏன் வீணாக மறைக்கிறாய்? நீ அந்த மாற்றாளுடன் தழுவி அவள் மாணிக்க மாலையை வாங்கி அணிந்து வந்துள்ளாய். இது நீ அவள் பால் கொண்ட தீராக் காதல் மனத்தில் கொதித்து, மார்புப் புறத்தில் கொப்பளித்த சிவந்த கொப்புளங்களாக அல்லவா உள்ளன? உன் கதை எல்லாம் எனக்குத் தெரியும்'' என்கிறாள் தலைவி. (271)

தலைவனை எப்படியும் வசப் படுத்தலாம் என்ற புது மனைவியின் கருவம்

340. மற்றொரு மனைவி வசமாகக்
கணவன் மகிழப் புதுமனைவி
சற்றும் கவலாள், தோழியினைத்
தளுக்கி மினுக்கி நோக்கினளே.

தலைவன் புதிதாக மற்றொரு இளம் பெண்ணை மணந்து வந்தான். ஆனால் பழைய மனைவிமேல் அவனுக்குப் பாசம் போக வில்லை. அவளுடன் சரசமாக இருந்தான். அதைப் பார்த்த புது மனைவி, சற்றும் கலங்கவில்லை. தன் தோழியைப் பார்த்து ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்து விஷமப் பார்வை பார்த்தாள். (இவள் இளையள் அதனால் புருவம் தந்த வாளிப்பு இவளிடம் அதிகம். அதை வைத்தே என் கணவனைச் சிக்கெனப் பிடித்து விடுவேன் பார் என்கிறாள் இவள். இயல்பு தானே?
(358)

பாத்தையிடமிருந்து தன் தலைவனை மீட்டு அகப்படுத்திக் கொண்ட தலைவியைத் தோழி பாராட்டல்

341. பரத்தை அவளோ கைகாரி;
பரவச மான காதலனை
பரவிய உன்னெழில் பாசத்தால்
மீட்டாய்; அவள் பழி போயிற்றே!

பெண்ணே! நீ மிகவும் சாமர்த்தியக்காரி. அந்தப் பரத்தை பலே கைகாரி. அவளிடமே பரவசப்பட்டுக் கிடந்த உன் காதலனை, உன்னுடைய பலராலும் புகழப் படும் அழகாலும் பாசத்தாலும் நீ அவனை அகப்படுத்தி மீட்டுக் கொண்டாய். பரத்தை ஒரு நல்ல குடும்பத்தைக் கெடுத்தாள் என்ற பழியும் இப்பொழுது அவளை விட்டு நீங்கி விட்டது. (620)

தலைவனது அடுத்த வீட்டுப்பெண் தொடர்பை அறிந்த தலைவியின் சினம்

342. அண்டை வீட்டு அழகி விரல்
அணிந்த கணவன் மோதிரத்தை
கொண்டு வந்து அவள் முன்னே
காட்டக் கனலாய்க் கொதித்தனளே!

அண்டை வீட்டு அழகியுடன் தலைவனுக்குக் கள்ளத் தொடர்பு. அவளுக்கு மறைவாக யாருமறியாமல் தன் கை விரல் மோதிரத்தைத் தலைவன் பரிசாக அளித்தான். அவள் சும்மா இல்லாமல் அதனைத் தலைவி முன்னா லேயே கொண்டு வந்து காட்டிவிட்டாள். புரிந்து கொண்ட தலைவி கனலாய்க் கொதித் தெழுந்தாள்.

(334)

இதுவும் அதுபோலவே

343. தான்கோத் தணிந்த சரமுத்துத்
தன்முன் மாற்றாள் அணிந்து வர,
மான்நோக் கியள்முன் சிவன்கழுத்து
மாலைப் பாம்பாய் மருட்டியதே!

தான்அக்கறையுடன் தலைவனுக்குத் தன் கையினாலே ஒரு முத்து மாலையைக் கோத்து அணிவித்தாள் தலைவி. அதனையே அவன் காமக்கிழத்தி செருக்குடன் அணிந்து வந்து காட்ட, அது சிவன்கழுத்து மாலையாக இருக்கும் பாம்புவடம் போல் தலைவி கண்ணுக்கு மருட்சியை உண்டாக்கியது. (350)

வெளியூர் பிரிந்துசெல்ல எண்ணிய காதலனைத் தடுத்தல் — அதனாலும் கஷ்டம்

344. காதலன் வெளியூர் செல்வானைத்
தடுக்க 'அவளை' வேண்டினளே;
மாதவள் தடுக்கக் காதலனும்
மகிழ்ந்தான், இருவரும் கிட்டியதால்.

காதலன் வெளியூர் செல்ல எண்ணினான். தலைவி எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. தலைவி அவன் ஆசை நாயகியை விட்டுப் பிரிந்து போவதைத் தடுக்கக் கோரினாள் தலைவி. அவளும் தான் முன்னம் அவனுடன் பழகிய பழைய சுவை தூண்டியதால் அவனைத் தடுத்து நிறுத்தி விட்டாள். இப்பொழுது தனக்கு இருவர் கிடைத்துள்ளனரே என்ற களிப்பால் கணவன் மிக மகிழ்ந்தான். (335)

கூடா ஒழுக்கமுள்ள தலைவனை வெறுத்தது

345. அழகன் காதலை ஆனாலும்
வேகாக் கருணைச் சுவையேபோல்,
முழுதும் மனத்தைக் காருது, நீ
நடந்ததை மூடி மறைத்ததுவே.

"தலைவ! நீ அழகன்தான்; என்மேல் காதல் உள்ளவன் தான். ஆனால் வேறு ஒரு பெண்ணுடன் கூடி வந்து விட்டு, அந்த நடந்த உண்மையை மூடி மறைத்துவிட்டாய். இது வேகாத கருணைக்கிழங்கு நாக்குமுதல் நெஞ்சுவரை காரல் சுவை அரிப்பது போல் என் நெஞ்சை அரிக்குது" என்கிறாள் தலைவி. (430)

புது மனைவி பருவமடைதலால் பழைய மனைவிகள் வருத்தம் — தோழி கூற்று

346. சிற்றிளஞ் சிறுபெண் பருவம் போய்
சிற்றிடைதேய தளதளத்து,
முற்றிய கொங்கை குவிந்தவுடன்
மூத்த மனைவியர் மூச்சிரைப்பர்.

ஏ பெண்ணே! உன் சிறுபெண் பருவம் போய் இப்பொழுது இளம்பெண் பருவம் வந்துள்ளது. உன் உடல் வாளிப்படைந்து இடை சிறுத்து, உன் கொங்கைகள் பருத்துக் குவிந்து அழகிய தளராத உருவம் கொண்டு விட்டன இதைப் பார்த்த உன் கணவனின் மூத்த மனைவி மார்கள் வருந்தி (கணவன் உன்வசமாகிவிடுவானே என்று) பெருமூச்சு விடுகிறார்கள். (356)

மாற்றான் மனைவி கணவனிருக்கவும் அவனறியாமல் கள்ளக் காதலுக்கு இணங்கும் சேதி சொல்லியது

347. நேரிழை கணவனுடன் நானு
மிருந்தேன் மிகவும் நெருக்கமுடன்;
நேரிழை கணவன் அறியாமல்
கடைக்தண் பார்த்தெனை நகைத்தாளே.

என் கள்ளக் காதலி, அவள் கணவன், நான் ஆகிய மூவரும் நெருங்கி உடம்பும் உராய அருகில் அருகில்

அமர்ந்திருந்தோம், அப்படி இருந்தும் அவள் தன் கணவன் அறியாமல் என் கண்ணில் படும்படியாய்க் குனிந்து கடைகண்ணால் பார்த்து, உடன்பட்ட செய்தியைத் தன் முறுவல் புன்னகையால் தெரிவித்து விட்டாள். கைகாரி.

(பி.ர. 467)

தலைவன் சொன்ன பொய் நஞ்சானது

348. ஆயிரம் பொய் நீ சொன்னாலும்
அதனால் நீ செய் தவறெல்லாம்
மாய மாக மறைந்திடுமோ?
மற்றுன் முறுவல் நஞ்செனக்கே.

''தலைவ! நீவேறு பெண்ணுடன் கூடிவந்ததைச் சாக்கு போக்குச் சொல்லி, ஆயிரம் பொய் சொல்லி, வீணே மறைக்கின்றாய். உன் அசட்டுச் சிரிப்பு எனக்கு விஷமாகக் கசக்கிறது'' என்கிறாள் தலைவி. *(394)*

கூடா ஒழுக்கத் தலைவனைப்பற்றித் தலைவி சாடல்

349. நெஞ்சு தழுவி என்நெஞ்சில்
நெருப்பாய்ச் சுடுவீர்; நேற்றிரவு
கொஞ்சிய பூங்கொடி நானல்லேன்;
உன்கண் கோவைப் பழமாச்சேன்?

''தலைவ! ஏன் பொய் யொழுக்கத்தை மறைத்து என் கழுத்தைத் தழுவிச் சரசம் பேசுகிறீர். என் நெஞ்சில் அது நெருப்பாய்ச் சுடுகிறது. நேற்றிரவு நீர் கூடிக்குலவிய பொன்னிறமேனி இளம்பெண் நானல்லன். நேற்றிரவு முழுவதும் அவளுடன் விழித்ததால் உன் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்துள்ளனவே. இதுவே இதற்கு அத்தாட்சி'' என்கிறாள் தலைவி, *(396)*

மாற்றாள் பாதச்சாயத்தைப் பார்த்து தலைவன் தவறை அறிந்து சாடல்

350. பாவை பாதச் செம்பஞ்சு
சிதறிக் காண அவள் கண்டாள்;
நீவைத் திவளுக் கிதுசெய்தாய்,
நின்கை உதறல் இதனாலோ?

தான் தன் புதிய காதலிக்குச் காலில் செம்பஞ்சு பூசினான், பழக்கமில்லாததால் அழகாயில்லாமல் அது சிதறிக் காணப்பட்டது. தலைவி இவன்தான் இதைச் செய்தான் என்றறிந்து கொண்டாள். இவள் பாதத்தில் நீ தான் செம்பஞ்சு பூசியது தெரிகிறது. அது அழகாய் இல்லை. உன்கை இப்பொழுது ஏன் இப்படி நடுங்குகிறது. இதுவே போதும் உண்மை அறிய'' என்கிறாள் தலைவி. (357)

பல பெண்களை ஏய்த்துத் திரியும் தலைவனை ஏசல்

351. காதல் புனிதம் இழந்திடவே
காணும் பெண்கள் அனைவரையும்
காதல் புரிந்து திரிகின்றாய்!
கள்வன் நீயிதுன் கண்ணியமோ?

''தலைவா, நீ காம இச்சை ஒன்றே தூண்ட காணும் பெண்களையெல்லாம் காதல் புரிந்து திரிகின்றாய். இதனால் தெய்வீகக் காதல் தன் புனிதத்தை இழந்து விட்டது. நீ கண்ணிய முள்ளவனில்லை. கள்ளன் தான், போ'' என்கிறாள் தலைவி. (398)

பல பெண்களை அனுபவிக்கும் தலைவனைச் சாடும் தலைவி

352. வீடு வீடாய், வகைவகையாய்,
விரும்பி மங்கையர் பலசுவையால்,
கூடச் செல்வாய்; வாராதே!
குமுறுமென் உளந்தான் கொதிக்குதடா!

தலைவ! உன் ஒழுக்கம் மிகவும் கெட்டுவிட்டது. உனக்குக் காம இச்சை அதிகமாகிவிட்டது. வீடு வீடாய், பலவகைப் பெண்களை எவள் கிடைப்பாளென்று தேடிச் சென்று பல படச் சுவைக்கின்றாய். இனி இங்கு வாராதே என் உள்ளம் கொதிக்கின்றது. (409)

தலைவன் குறைகள் தாங்காத தலைவி

353. மாதுளை முத்து நிறைவதுபோல்
மனத்துன் குறைகள் குவியுதடா!
மாதுளை கனிய வெடித்து விடும்;
வெடிக்கா தென்மனம் மறுகுதடா!

''தலைவ! மாதுளைக் கனியில் நிறைய முத்துக்கள் நிறைவது போல் உன் குறைகளால் என் மனம் நிறைந்து வெம்புகிறது. மாதுளை முற்றினால் வெடித்து முத்துக்கள் கொட்டிவிடும் ஆனால் உன் குறைகள் அதிகமாக அதிகமாக என் மனம் வெடிக்க முடியாமல் குமுறுகிறது. கொதிக்கிறது. என் செய்வேன்'' என்கிறான் தலைவி. (48)

பரத்தை பெயரால் தன்னை அழைத்த தலைவனை ஏசும் தலைவி

354. உள்ளத் திருப்பாள் அவள் பெயரால்
என்னை அழைப்பாய்! உன் மனத்தில்
உள்ளது வெளிவரும், உண்மைதான்;
பார்த்தவர் என்னை எள்ளுவரே!

தலைவ! உன் மனத்தில் நிலைத்துவிட்ட உனக்குப் பிடித்த பரத்தையின் பெயரால் வெட்கமின்றி என்னை அழைக்கிறாய், ஆம், உள்ளத்தில் உள்ளது தானே வெளி வரும்? அவள்தானே உன் உள்ளத்தில் இருக்கிறாள்? நீ அவள் பெயரால் என்னை அழைப்பதைப் பார்த்து என்னை ஊராரெல்லாம் எள்ளி நகைக்கின்றார்களே! தெரியவில்லையா? (408)

பஞ்சணையில் பரத்தையுடன் தலைவன் கூடியுள்ளதை உணர்ந்த தலைவி வருத்தம்

355. பஞ்சணை பார்த்தாள் மான்கண்ணாள்;
அழுதாள் பரத்தை குழல்கண்டே;
நெஞ்சு வெடித்து நிலைகுன்றி
நின்றாள், நித்திரை செய்யாளே.

தலைவி வெளியூர் போய் வந்தாள். தன் வீட்டில் தன் மஞ்சத்தில் பரத்தையின் தலைமயிர் விழுந்து கிடப்பதைக் கண்டாள். இதனால் கணவன் வேறு ஒருத்தியுடன் கூடி மகிழ்ந்திருப்பதை அறிந்து கொண்டாள். நெஞ்சு வெடித்து நிலை குலைந்து போனாள். நித்திரையும் செய்யாமல் நின்று கொண்டே இருந்தாள். (390)

பரத்தை வீட்டிலிருந்த தலைவனை அழைக்கத் தோழியைத் தூதுவிட, அவளும் பரத்தையானாள்

356. பரத்தை பரவசப் பட்டானை
அழைக்கத் தோழியைத் தூதுவிட்டாள்;
பரத்தை அவளும் ஆய் அவனைப்
பற்ற இவளும் முகந்தாராள்.

வேறு பெண் வசமாய் இருப்பவனைத் தன் தலைவனை அழைத்துவரத் தன் தோழியைத் தூது விட்டாள். அவளோ தானும் அவனை விரும்பிக் கைக்குன் போட்டுக் கொண்டாள். இருவரும் ஒன்றாக வந்த கோலத்தைக் கண்ட தலைவி சினந்து முகத்தைத் திருப்பிக் கொண்டாள். (387)

தலைவன் பிரிவு எண்ணி வருந்தியவள் பின்மகிழ்தல் ஏன்?

357. பிரிவான் வெளியூர் எனக்கணவன்
அழுதாள், பேதை; அயல்வீட்டான்
உரிமைக் காவல் அவன் செய்ய,
உடனே சிரித்தாள், கன்னியவள்.

கணவன் வெளியூர் செல்கின்றான் என்பதை அறிந்த தலைவி மிகவும் வருந்தினாள்; அழுதாள். ஆனால் அவன் தன் வீட்டைப் பாதுகாக்கும்படி (தான் வரும் வரை) அடுத்த வீட்டுக்காரனிடம் ஒப்படைக்க, இவள் உடனே சிரித்தாள் ஏன் என்றால் இவனே அவளுடைய கள்ளக் காதலி தனக்குச் சௌகரியமாய்ப் போயிற்று. *(336)*

தலைவியை அணைத்த தலைவன், அவளை வேறு பெயர் இட்டு அழைக்க, அவள் ஊடல்

358. கட்டி அணைப்பாய் என்னை நீ;
காரிகை அவள் பெயர் அழைக்கின்றாய்;
விட்டெனை அவளை இனி என்றும்
அணைப்பாய், உன்னடி வீழ்வேனே.

''தலைவ! என்னைக் கட்டி அணைக்கின்றாய்! ஆனால் உன் காமக் கிழத்தியின் பெயரை இட்டு என்னை அழைக்கிறாய். அவள்தான் உன் நினைவில் இருக்கின்றாள். என்னை விட்டுவிடு. இனி அவளையே என்றும் அனைத்துக்கொள். உன் அடியில் வேண்டு மானாலும் விழுந்து வணங்குகிறேன்'' என்கிறாள் தலைவி. *(419)*

மைத்துனன் திருமணம் - தலைவி வருந்தக் காரணம்

359. மற்றவர் சிரித்து மகிழ்ந்திருக்க
மைத்துனன் மணத்தில் மனங்கொள்ளாள்;
குற்ற மனத்தாள் கொழுந்தனொடு
குலவிய காதல் கொடியோளே.

மற்றவர் அனைவரும் அவன் திருமணத்தில் கோலாகலமாகப் பங்கு கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தனர். தலைவி மட்டும் வருந்துகிறாள். ஏன் என்றால், இவள் தன் கொழுந்தனின் கள்ளக் காதலி, அவன் இனி வேறு ஒருத்திக்கு உரிமையாகி விடுவானே என்று வருந்தி அவனொடு கள்ளத் தனமாகக் கொஞ்சிக் குலாவியதெல்லாவற்றையும் எண்ணிக் குமுறுகிறாள் கொடியவள். (325)

தலைவன் மாற்றாளுடன் கூடிவந்ததை அறிந்த தலைவி ஏசல்

360. நெற்றியில் பாதச் செம்பஞ்சைப்
பதித்த பாவை செவ்விதழின்
வெற்றிலைச் சாற்றின் சாயத்தை
விரும்பியுன் கண்ணில் பதித்தாளே.

தலைவ! நீ அந்த மாற்றாளை இணங்க வைக்க அவள் காலடியில் வீழுந்து தொழுதாய். அதனால் அவள் பாதத்திருந்த செம்பஞ்சுப் பூச்சு உன் நெற்றியில் இன்னும் தெரிகிறது. வெற்றிலை மென்ற சாற்றின் சாயத்துடன் உன்னை ஆசையுடன் முத்தமிட அந்த சாயம் உன் கண்களில் பதித்துள்ளது. இந்தக் கூடா ஒழுக்கத்தை நீ என்னிடம் மறைக்க முடியாது. (417)

கண்ணனின் ஆசைக் காதலியும் மற்றவரும்

361. கண்ணன் உன்னை மறவாத
 மனத்தன்; மற்றக் காதலியர்
புண்ணாய் அவர்மனத் தம்புமுனை
 புகுந்தபின் ஒடிந்த நோயினரே.

தலைவி! நீ கண்ணனுக்கு மிகவும் வேண்டியவள். அதனால் அவன் உன்னை மறக்கவில்லை. அவன் மனத்தில் நிலைத்து விட்டாய். ஆனால் அவனுடைய மற்றக் காதலியர் இதைக் கண்டு நெஞ்சில் பாய்ந்த அம்பு உள்ளேயே முனையொடிந்து ஏற்படும் துன்பத்தை அடைந்து வருகின்றனர் (அம்பு தைத்த இடம் நெஞ்சு; வருந்து மனமும் நெஞ்சு) (628)

இளங்காதலியைத் தோழி தேற்றல்

362. அஞ்சேல், அவருனக் கிணையாகார்;
 அணிகலன் அழகைக் கூட்டிடுமோ?
கொஞ்சு கிளியே கண்பெருகா;
 கூந்தல் நீளும் குறிக்கொள்ளே!

'கொஞ்சும் கிளி போன்ற இளையவளே! அழகியே உன் இளமையே உனக்கு அணிகலன். அதனால் அஞ்சாதே. உனக்கே அவன் வசப்படுவான். அணிகலன் அணிந்ததால் உன்னைவிட வயதான அவர்கள் அழகு கூடுமா என்ன! தங்கள் கூந்தலை வேண்டுமானால் தைலம் முதலியவற்றால் நீட்டலாம். ஆனால் கண் நீளாது. அதாவது அவன் கண்ணை உன் கவனத்திலிருந்து தம் பக்கம் இழுக்க முடியாது. அதனால் கண்ணன் உனக்குத்தான்; கவலைப்படாதே'' என்கிறாள் தோழி. (127)

பக்கத்து வீட்டுப் பருவ மங்கையால் வந்த ஆபத்து-தோழி கூற்று

363. பல்கால் விழிப்புடன் காத்தாலும்
பக்க மனையாள் பருவத்தாள்;
வெல்வாள் அவனையும் வெகு எளிதாய்;
பருந்துக் கூட்டின் கறிபோல.

தலைவி! நீ உன் கணவனைப் பலபடியும் கஷ்டப் பட்டுக் காத்து நிறுத்த முயன்றாலும் பயனில்லை. பக்கத்து விட்டுப் பெண் இளஞ்சிட்டு; பருவமங்கை. உன்னை விட மிக இளையவள். அதனால் இவன் அவள் வசமாவது உண்மை. பருந்துக்கூட்டில் கறித்துண்டு (ஊன் துண்டம்) தங்குமோ? இதுபோல் உன் கணவனும் பக்கத்து வீட்டு அழகி என்னும் பருந்தால் கவரப்பட்டு விடுவான். (631)

வெளிநாட்டிலிருந்து காதலன் வந்து விட்டான் எனக்கேட்ட இருவர் மகிழ்தல்

364. வெளிநாட் டிருந்தவன் வந்தனனே
வந்தது கேட்டனர் இருவருமே;
களித்தனர் காரணம், இருவருமே
காதலன் காமக் கிழத்தியரே.

தலைவன் வெளிநாட்டிலிருந்து திரும்பிவந்து விட்டான் என்ற சேதியை அடுத்தடுத்து நின்று கொண் டிருந்த இரு பெண்களும் கேட்டனர். இருவருமே மிகவும் களித்தனர். ஏனென்றால் இருவருமே அவன் விரும்பிப் பழகும் காமக்கிழத்தியரே. (இதை இவர்கள் ஒருவர்க் கொருவர் அறியாதவர், இப்பொழுது புரிந்துவிட்டதால் மகிழ்ந்தனர்.) (337)

குளித்துக் கரையேறும் பெண் கண்ணனைக் கண்டு குறிப்புக் காட்டி நகர்தல்

365. குளித்துச் சேலை சுற்றிடுவாள்;
குங்குமம் நெற்றிக்கிடுவாள் போல்,
களித்துக் கண்ணன் உளங்கொள்ள
குறிப்பது காட்டி நடந்தனளே.

கண்ணனின் காதலி குளித்துக் கொண்டிருந்தாள். கண்ணன் கரையில் இருந்தான். இவள் கரை ஏறி அவசமாக அரைகுறையாய்ச் சேலையைச் சுற்றினாள். நெற்றிக்குக் குங்குமம் இடுவாள் போல் ஒரு கையில் குங்குமத்தையும், மற்றொரு கையால் கண்ணாடியையும் உயரத் தூக்கினாள். அதனால் அவள் கொங்கைகள் வயிறு முதலிய மேல் உடல் முழுவதும் தெரியக் கண்ணன் பித்தானான். இந்த நிலையில் அவனுக்குக் கண்ணால் செய்தி சொல்லிவிட்டு நடந்தாள். அவனும் பின்னால் ஓடினான். (அவள் தனியாக முன்னாடியே இதற்காகவே நீராட வந்தாள். காலம் தாழ்த்தினால் இன்னும் வேறு பெண் யாராவது வந்துவிட்டால் இவன் போய்விடுவானே என்ற பயத்தால் இந்த உபாயத்தைச் செய்து அவனை இழுத்துக் கொண்டாள் என்பது நயம். (236)

6. ஊடல் மகளிர் - தலைவியர்

காதலன் கணவனுடன் கோபம் கொண்டுபிணங்குதல் ஊடல் எனப்படும். காதலன் வேறு ஒருத்தியின் தொடர்பு கொண்டுள்ளான் என்ற ஐயமே பெரும் பாலும் ஊடலாக உருவெடுக்கிறது. இது நயமாகவும் நுணுக்கமாகவும் காதலில் உயர்ந்தநிலை—உணர்ச்சி நிலைகளை வெளிப்படுத்தும் போது, உயர்ந்த இலக்கியப் பண்பு அமைந்து விடுகிறது. சிறுபான்மை வீண் சந்தேகத்தால், காதலனுக்கும் வெறுப்புத் தோன்றி ஊடல் கொள்வதும் உண்டு.

இவர்களுக்கிடையில் பெரும்பாலும் தோழியே பாலமாக அமைந்து, ஊடலைத் தணிப்பதாகக் கூறப்படும். தமிழ் இலக்கிய மரபில் தோழியே யல்லாமல் பாங்கன், பாணர், விறலியர் (ஆடல் மகளிர்) போன்றார் ஊடல் தணிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாகச் சொல்லப்படும். இந்தவகையில் பற்பல நயங்களை பிஹாரிலால் இங்கு வெளிப்படுத்தியுள்ளார். அறிந்து சுவைக்க. சில சமயம் திருவள்ளுவர் காமத்துப் பாலையும் சங்க இலக்கியம் முதலானவற்றையும் நாம் படிக்கிறோமோ என்ற ஐயம் நமக்கு ஏற்படும் அளவுக்குத் தமிழ் இலக்கியக் கருத்தோட்டங்கள் இவர் நூலில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

தலைவியின் உடைலைத் தணித்த தோழி தலைவனுக்குக் கூறியது

366. நெரிந்த புருவமும் சுடு நோக்கும்
நெகிழ அவளைப் பலபேசி,
நெருங்க வைத்தேன் நீ அவளை
அணைவாய்; பயனில பேசுவதேன்?

''தலைவ! உன்மேல் கோபங்கொண்டுள்ள உன் தலைவியை நயமாகப்பேசி மிகவும் முயன்று தூக்கிவைத்த புருவத்தையும் உன் மேல் சுடுநோக்கத்தையும் போக்கி, உன்னிடம் நெருங்கச் செய்துள்ளேன். இது தெரியாமல் பழைய 'பிகு'வில் வீண் வார்த்தைகள் பேசிக் காலங் கழிக்காதே. உடனே சென்று அவளை அணைத்துக்கொள் என்கிறாள் தோழி, (369)

கண்ணனிடம் தோழி பேசி, அவனைத் தலைவிக்குத் உடன்பட வைத்தல்

367. கண்ணா சினந்தவள் பேசுவதை
கருத்தில் கொள்ளேல்; உற்றுப்பார்.
கண்ணால் காதல் மொழிபேசி,
கருகி உனக்கே கரைகின்றாள்.

''கண்ணா இவள் உண்மையில் இப்பொழுது உன்னிடம் கோபம் கொள்ளவில்லை. பழைய பிடிப்பை விட்டுக் கொடுக்க மனமில்லாமல் சினந்து பேசுகின்றாள். இதை மனங்கொள்ளாதே. அவள் கண்களைப் பார். உன் மேல் அவள் கொண்ட காதல் ஆசை எல்லாம் பொங்கி வழிகிறது. உன் நினைவாகவே அவள் கருகிக் கரைகின்றாள். சென்று அவளை அணைத்துத் துன்பம் துடைப்பாயாக ''என்கிறாள் தோழி. (39)

தலைவியைத் தோழி ஊடல் தணிவிப்பது

368. தேடி அவனை மிகவேண்டி,
திருவடி தனிலும் விழவைத்தேன்;
கூடி மகிழ்ந்து குலவாமல்,
கொல்லும் சினமேன்? மதியிலியே!

''ஏ பெண்ணே! நான் உனக்காக அவனிடம் சென்று மிகவும் வேண்டி உன் திருவடியிலும் விழ வைத்தேன். மதிகெட்டவளே! இன்னும் பழைய சினத்தையே மனத்தில் வைத்துக் கறுவிக்கொண்டிருக்கிறாயே? இன்னும் நேரம் தாழ்த்தினால், அவன் நம்மை மீறிப்போய் விடலாம். ஆகையால் விறைந்து சென்று அவனுடன் கூடி இன்பம் தந்து குலவி, அவனை மகிழ்விப்பாயாக!'' என்கிறாள் தோழி.

தலைவி ஊடல் கொண்டாள் - கண்ணனைக் கண்டவுடன் அவள் ஊடல் காற்றில் கரைந்து விட்டது

369. சினத்து பேசிச் சிடுசிடுப்பேன்;
சீ, சீ,! என்பேன்; கண்ணனவன்
இனிக்க முன்னே வரும்போதில்,
இனித்தென் கண்வசம் இழந்தனவே!

"கண்ணன் எதிரில் வரும்வரை அவனைச் சினந்து பேசுவேன்; சிடுசிடுப்பேன். வரும்போதே "சீ, சீ!" என்று விரட்டுவேன். ஆனால் அவன் எதிரில் வரும்போதே இனிப்புத் தட்டும். சிரித்துக் குறுகுறுக்கும் கண்ணால் என்னை அவன் பார்ப்பான். என் கண்கள் வசமிழந்து நானும் என்னை அவனுக்கு இழந்துவிட்டேன்" என்கிறாள் தலைவி.

காணுங்கால் காணேன் தவறாய, காணாக்கால்,
காணேன் தவறல் லவை. —திருக்குறள்

அவரை நேரில்பார்க்கும் போது அவர் தவறு தெரிவதில்லை. பார்க்காத போது தவறுகள்தான் தெரிகின்றன. (707)

தலைவன் தலைவியின் ஊடலைத் தணித்தல்

370. கண்ணே! பெண்ணே! கனியமுதே!
கணங்கணம் சினந்து கடுத்தாலும்
உண்ணும் சுடுபால் சுவைபோல,
உன்மேல் காதல் பெருகுதடி!

"என் கண்ணே! அழகிய பெண்ணே! என் கனியமுதே! நீ ஒவ்வோர் கணமும் என்மேல் விதவிதமாகக் கோபம் கொள்ளுகின்றாய். உன் சினத்திலும் புதுப்புது அழகு பளிச்சிடுகின்றது. பால் காய்ச்ச காய்ச்ச ஏடு படிந்து சுவை கூடுவது போல், உன் கோபம் மீற மீற உன்மேல் என் காதல்தான் பெருகுதடி!" என்கிறான் தலைவன். பால் சூடேறச் சுவை. இவள் கோபம் சூடேறக் காதல் சுவை. (563)

தோழி தலைவியின் ஊடலைத் தணித்தல்

371. முட்டாள் பெண்ணே! மூளை இலார்
உரையைக் கொள்ளேல்; உனையன்றி
விட்டினி யாரையும் விரும்புவனோ'
திராட்சை இன்றி வேம்பாமோ?

''முட்டாள் பெண்ணே! மூளை இல்லாத (உன் சக்களத்திகள் உன்னைக் கெடுக்க வேண்டுமென்றே) பெண்கள் பயனற்ற பொய்யுரைகளை மனத்தில் வையாதே. உன்னைவிட்டால் அவன் வேறு யாரை விரும்புவான்? திராட்சையை விட்டு விட்டு யாராவது வேப்பம் பழத்தை விரும்புவார்களா? எனவே காலத்தை வீண் போக்காமல் அவனை ஏற்றுக் கொள். (373)

தலைவியின் பொய்த் தூக்கமும் கணவன் அதிர்ச்சியும்

372. காதலன் வந்தான், மெதுவாக;
பொய்த்துயில் காரிகையுடன் துயில,
மாதவள் தீராக் காதலினாள்
கனவென மருவித் தழுவினளே!

சினம் கொண்ட தலைவி பொய்த்துயில் செய்தாள். கணவன் வந்து பார்த்து இவள் தூங்குகிறாள்; எழுப்ப வேண்டாம் என்று எண்ணி மெதுவாக அவள் பக்கத்தில் படுத்தான். அவன் வந்தவுடன் இவள் பொய்த்தூக்கம் போச்சு. சினம்போய் திடீரென்று ஏதோ கனவு கண்டவள் போல நடித்து, உடன் திருமபி அவன்மேல் கையைப் போட்டுக் கட்டித் தழுவிக் கொண்டாள். (374)

தலைவிக்குத் தோழியின் அறிவுரை

373. மதிமுக அழகும், மதிமுகத்தில்
மறுவெனச் சிறுநகை; அதுசரியே;
சதிரிள மகளே! கண்வீசும்
கண்ணே அவனைச் சாடிடுமே!

''பெண்ணே! கோபம் தவிர்த்து இம்முறையாவது உன் தலைவனைத் தக்கவைத்துக் கொள் என்று எவ்வளவோ உனக்குச் சொல்லியுள்ளேன். உன் முகத்தைச்

சுருக்காமல் பூரண நிலவுபோல் வைத்துக் கொண்டுள்ளாய். அதில் தோன்றும் களங்கம்போல் சிறு புன்னகையும் வந்துள்ளது. இதுவும் சரியே. ஆனால், கெட்டிக்காரியான நீ (சதிரிளமகள்.) அந்த முகத்தின் மலர்ச்சிபாழாகும்படி இன்னும் கண்கள் மூலம் கனல் கொட்டுகிறாயே? இந்தக் கோபம் ஆகாது. தலைவன் மீண்டும் உன்னை விட்டுச் சென்று விடுவான்'' என்கிறாள் தோழி. (375)

தலைவியின் மென்மை-சினத்தால் வந்த சிறுமை

374. துயிலில் ஊடி எதிர்முகமாய்ப்
புரளேல் என்றேன்; கேட்டிலையால்:
மயிலே! மலர்முனை கீறியதால்,
மாதுளைக் கன்னம் புண்ணாச்சே!

''தலைவீ! நீ கோபத்தை விடு என்று சொல்லியும் நீ கேட்கவில்லை. இனி ஊடல் வேண்டாம். ஊடலில் அவன் அருகே துயிலும்போது கோபித்துக் கொண்டு சடக்கெனத் திரும்பாதே என்று சொல்லியும் நீ சினத்து முகத்தைத் திருப்பிக் கொண்டாய். இதனால் மயில் போன்ற அழகியே! உன் தலையணையில் தூவிய மலர் முனைகள் ஒன்று உன் மாதுளைக் கன்னத்தில் கீறியதால் புண்ணாகி விட்டதே!'' என்றாள் தோழி. தலைவி அவ்வளவு மென்மையழகி.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம் —திருக்குறள்

உறுதியான உள்ளங்காலே இவளுக்கு மென்மையானது. அது மெல்லிய அனிச்ச மலரும், மெத்தென்ற அன்னத்தின் அடி இறகும் இவள் உள்ளங்காலுக்கு நெருஞ்சி முள்ளாகத் தைக்கும், (310)

கண்ணனை வசப்படுத்தத் தோழி உபாயம்

375. கண்ணன் உன்னிடம் சொன்னதெது?
கடுத்துச் சினந்து வழிகின்றாய்;
கண்ணால் சிரித்து நோக்கிடுவாய்!
கண்ணன் உன்வசம் ஆவானே!

''பெண்ணே! கண்ணன் ஏதோ சொல்லிவிட்டான் என்று ஏன் இப்படி முகத்தை கடுகடுக்க வைத்துக் கொண்டாய்? இப்படி இருந்தால் அவனை நீ முழுவதும் இழப்பாய். ஒரு முறை மகிழ்ச்சி பொங்க அருள் நோக்க மாக அவனைப் பார். உன் பார்வை வீச்சாலேயே அவன் உன் வசம் ஆகிவிடுவான் இது திண்ணம்'' என்கிறாள் தோழி. (198)

பொய்ச் சினம் ஆகாது எனல்—தோழி

376. கண்ணனைக் கண்டாய் வசமானாய்;
அவன்மேல் பொய்ச்சினம் இனியேனோ?
பெண்ணே! தானே வசமான
பேதைமை மயலை மறைத்திடவோ?

''பெண்ணே! கண்ணனிடம் ஈடுபட்டு நீயே வசமாகி விட்டாய். இனி ஏன் பொய்க்கோபம் கொண்டுள்ளாய்? தானே எளிதில் வசமாகி மயலாகி விட்டோம் என்ற சுயகௌரவம் தான் உன்னை இப்படிச் செய்கிறது. அதனால் இந்த நடிப்பு வேண்டாம்; அப்புறம் கண்ணனை இழந்து விடுவாய்.'' (378)

ஊடல் தவிர்க்கும்படி தோழி தலைவிக்குத் தேற்றல்

377. சுடுசொல் நோக்கமும் நிலைகெட்டான்
ஊடல் போதும் உடனெழுவாய்;
முடுகி நெருங்கி முகமலரச்
சிரித்தவன் மகிழ முயங்கிடுவாய்!

''அசட்டுப் பெண்ணே! உன் கோபம் போதும். உன் எரிக்கும் பார்வையாலும், சுடு சொல்லாலும் இப்போது அவன் நிலை குலைந்து தவிக்கின்றான். நீ இப்படியே இருந்தால் அவன் உன்னை விட்டு ஓடி விடுவான். அதனால் உன் முறுக்கை விட்டு உடலையும் உள்ளத்தையும் தளர்த்திக் கொள்! சீக்கிரம் முகக் கடுப்பை ஒழித்து, முகமலர்ந்து அவனை நெருங்கி, அவன் சற்றும் எதிர்பாராத வகையில் அவன் சிரித்து மகிழும்படி ஓடிச் சென்று கட்டித் தழுவிக்கொள். நழுவ மாட்டான்'' என்கிறாள் தோழி. (314)

ஊடல் கொண்டவள் உண்மையில் அப்படி இல்லை என்று தலைவனத் தோழி தேற்றுவது

378. இனியவள் ஊடல் என்செய்யும்?
ஏதும் தடையிலை இனிதே செல்;
கனியவள் கரும்பும் கணு இனிக்கும்;
கடுத்த போதும் தேனிவளே!

''தலைவ! பயப்படாதே; இவள் பொய்க்கோபம்தான் கொண்டிருக்கிறாள். இனி அவள் ஊடல் உன்னை ஒன்றும் பண்ணாது; தடை ஏதும் இல்லை. அவளிடம் இனிது செல். அவள் முரட்டுத்தனமும் கரும்பின் கணு முரடானாலும் இனிப்பது போல் நீ சென்று அணைத்த வுடனே கரும்பு போலவும் தேன் போலவும் உனக்கு இவள் இனிப்பாள்'' என்கிறாள் தோழி. (இனியவள்-இயல் பாகவே இனிப்பானவள், இனி அவள் இப்பொழுது முதல் அவள் இயல்பாகி விட்டாள். ஊடல் இல்லை என்று நயம் தோன்றுகிறது.) (380)

இது குளிர்காலம். அவளுக்கு அணைப்பு தேவை நீ செய்; சரியாகி விடும் என்கிறாள் தோழி தலைவனிடம்

379. குருதி உறையும் குளிரிதுதான்;
போர்வையும் வெய்யிலும் போதாதே;
அருகில் சென்று அணைத் திடுவாய்;
இருவர் தமக்கும் உடலிதமே.

"தலைவ! நம் குருதியும் உறைந்து போகும் அதிகக் குளிர் வீசும் கார்காலம் இது. இக்காலத்தில் போர்வையும் அதன் மேல் வெய்யில் காய்ந்தாலும் பகலிலேயே குளிர் போகாது. இரவில் சொல்ல வேண்டுமா? இப்பொழுது அவளுக்குத் தேவை இதமான வெம்மையான உன் அணைப்புத்தான். ஆகையால் அருகில் சென்று அவளை அணைத்துக்கொள். இருவருக்கும் இது இதம் தான் (இனி ஊடல் இருக்காது)" என்கிறாள் தோழி (71)

வலுவில் ஊடல் நீங்கித் தானே வரும் தலைவியைக் கண்டு தலைவனின் அச்சம்

380. ஊடிக் கூட வருகின்றாள்;
உண்மையில் நெஞ்சம் அஞ்சுதடா!
காடி முடிச்சாம் சுக்கே போல்
இனிப்பும் இவளிடம் நஞ்சாமோ?

"தோழ! இவ்வளவு நாள் கோபத்தால் பிணங்கி, இப்பொழுது திடீரெனக் கோபம் நீங்கி என்னுடன் கூடத் தானே வருகிறாள். இவளுடைய திடீர்த் திருப்பம் எனக்கு ஐயத்தை ஏற்படுத்துகிறது. முரட்டுத் தனமுள்ள முடிச்சு கொண்ட சுக்கு இனிக்கும். ஆனால் அது உடலுக்கு நஞ்சு. அது போல் இவளும் ஏதோ திட்ட முள்ளவள் போலத் தெரிகிறது" என்கிறான் தலைவன் தோழனிடம். (463)

ஊடல் தீரத் தலைவன் தலைவியைக் கெஞ்சுவது

381. விழியும் பாராய்; மொழி பேசாய்;
விரும்பும் புன்னகை தான் வீசாய்;
எழிலே! சினமேன்? மெல்லிய என்
மனமே உனக்காய் ஏங்குதடி!

''தலைவி, அழகிய என் நாயகி! இனிக் கோபத்தை விடு. என்னோடு ஒரு சொல்லும் பேச மாட்டேன் என்கிறாய். கண்ணால் இதமான ஒரு காதல் பார்வை கூடப் பார்க்க மாட்டாயா? என்னைப் பார்த்து உனக்கு என்மேல் உள்ள ஆசையைத் தெரிவிக்கும் விருப்பமான ஒரு சின்னச் சிரிப் பாவது சிரிக்கக் கூடாதா? மெல்லிய என்மனம் இனித் தாங்காது. இதோ பார்! உனக்காகவே என் மனம் ஏங்கு கிறது'' என்று தலைவியைப் பார்த்துக் கெஞ்சுகிறான் தலைவன். **(608)**

''மொழி ஒன்று புகலாயாயின்
முறுவலும் புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின்
விரகமுற் றுழல்லேன்'' —கந்த புராணம்

தலைவியின் ஊடல் இனி நியாயமில்லை என்று தோழி தலைவிக்கு அறிவுரை

382. முருட்டு மகளே! உன் ஊடல்
முட்டாள் தனமென அஞ்சுகிறோம்;
வருத்தித் தானும் வருந்துவரோ?
வகையாய்க் காதல் புரிவாரே!

ஏதடிப் பெண்ணே! இந்த முரட்டுத்தனம் இனி உனக்கு ஆகாது. உன் ஊடல் இனிமேல் அறிவின்மை யைத் தான் குறிக்கும். அதனால் நானே அஞ்சுகிறேன்; வகையாய் இணை கிடைத்தபின் காதல் புரிகின்றவர் தம்மைத் துன்புறுத்துவதோடல்லாமல் பிறரையும் வருத்து வதுண்டோ? **(57)**

பராமுகமான தலைவியிடம் தலைவன் கெஞ்சல்

383. எனக்கினி யாய்நீ எனக்காக
நின்னை நேசித்திருக்கின்றேன்;
உனக்கினி யன் நான் இலையோதான்?
உனக்கிது பெரிதோ? உணரேனே!

என் அருமைக் காதலியே! நீ எனக்கு மிகவும் இனிமையானவள். என் சுயநலத்திற்காக என் இன்பத்திற்காகவே நான் உன்னை நேசிக்கிறேன். நான் உனக்கு இனிமையாகத் தோன்றவில்லையா? ஆனால் என்மேல் சிறிது அருள் தன்மை காட்டினால் உனக்கு என்னை நேசிப்பது பெரிய காரியமில்லை என்று தலைவியிடம் சொல்லுகிறான் தலைவன். (445

தலைவியின் பொய்க் கோபம்

384. புருவம் நெரித்துச் சினக்கின்றாள்;
பொரிந்து சுடுசொல் வீசுகிறாள்.
மருளும் விழியாள் நேர்நோக்காள்;
வசப்படுதற்கே அஞ்சுகிறாள்.

இந்தத் தலைவி தன் மிடுக்கைக் குறைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே வீண் கோபம் கொண்டுள்ளாள். புருவத்தை உயர்த்திக் கோபம் கொள்ளுகிறாள். சுடு சொற்களை அள்ளி வீசுகிறாள். இவளுடைய மருளும் அழகிய பார்வையால் என் பார்வையை நேருக்கு நேர் சந்திக்கும் தைரியம் இல்லை. அப்படிப் பார்த்து விட்டால் வசமிழந்து என்னிடம் மயல் மயக்கம் வந்துவிடுமோ? நாம் பணிந்து விடுவோமே என்று அஞ்சுகிறாள் இந்தத் தலைவி. (392)

தலைவனின் தீய ஒழுக்கத்தால் அவனுக்குத் தான் இழப்பு என்று தலைவனுக்குத் தோழி புத்திமதி

385. வெண்ணெய் குளிரால் உறைவதுபோல்,
வேண்டா ஒழுக்கம் உளதாலே
பெண்ணிவள் மென்மனம் கல்லானாள்;
பேசின் குற்றம் உனதன்றோ!

"தலைவ! உன் வேண்டா ஒழுக்கத்தால் உன்னிடம் இவளுக்கு ஏற்பட்ட வெறுப்பு இவள் மனத்தில் குளிரால் உறைந்த வெண்ணெய் போல் ஈரமில்லாமல் போய் விட்டது. பெண்மையின் மென்மையை நீ அறியாய் போலும். எனவே குற்றம் உன்னுடையது தான்" என்கிறாள் தோழி. (382)

"மழைக் காலக் குளிர் உன்னால் தாங்க முடியாது போ, தலைவனை அணைத்துக் கொள். ஊடல் வேண்டாம்" எனத் தலைவியைத் தோழி தேற்றல்

386. நரம்பும் நடுங்கும் குளிர்காலம்;
நங்கையர் முது பெண் நாயகரைக்
கரம்புகக் கட்டித் தழுவுகிறாள்;
உனக்கேன், ஊடல் ஓடவன்பால்!

"அசட்டுப் பெண்ணே! இது நரம்பும் நடுங்கும் அளவுக்குத் தண்ணிய குளிர் காலம். மழைக் காலம். இளம் பெண்களும் ஏன் முது பெண்களும் கூட இந்தக் குளிரைத் தாளாமல் தங்கள் தங்கள் காதலரைத் தேடிச் சென்று அவர்கள் கரங்களில் தாமாக விழுந்து கட்டித் தழுவுகிறார்கள். உனக்கேன் வரட்டுக் கௌரவம், ஊடல். இப்படிக் குளிரால் கஷ்டப்படாதே. ஓடு. உடனே உன் காத்திருக்கும் காதலனிடம். கட்டி அணைத்துக் கொள்; இதமாக இருக்கும்" என்கிறாள் தோழி. (59)

தலைவன் குற்றமெலாம் அவனைக் கண்டவுடன் மறந்துவிடும் தலைவி நிலை—தலைவி கூற்று

387. கருதேன் காணேன் என இருந்தும்
அழகன் அவனைக் கண்டவுடன்,
திருடிக் கொண்டான் என் மனத்தைச்
சினக்க இயலேன்; என் செய்வேன்!

''தோழி! என் தலைவன் செய்த தவறுகளை எண்ணும் போது (பரத்தையுடன் பழகியது முதலியவை) அவருடன் பேசக் கூடாது, அவரை நினைக்கவே கூடாது, அவரை இனிப் பார்க்கவே கூடாது என்று எண்ணி யிருந்தேன். ஆனால் அவர் என் எதிரே வந்து நின்றவுடன், அவரைப் பார்த்தவுடன், அவரைக் கோபித்துக் கொள்ளவே முடிவதில்லை. என் மனம் மயலாகிவிடு கிறது. அவர் அழகைக் கண்டு மனம் பறி கொடுத்து விடுகிறேன். என் மனத்தைத் திருடிக் கொண்டே போய் விட்டான். என் செய்வேன்!'' என்றாள் தலைவி.

(பி.ர. 548)

ஊடிய காதலர் இருவரின் செய்கை

388. ஊடிக் காதலர் இருவருமே
அருகில் அமர்ந்தனர், உரையாடார்;
நாடி முதலவர் நயக்கட்டும்
என்றே வாளா இருந்தனரே.

தலைவன் தலைவியர் இருவருமே சினம் கொண்டு பேசாமல் இருந்தனர். அருகருகே அமர்ந்தும் இருந்தனர். ஆனால் முதலில் அவர் பேசட்டும் என்று அவளும், அவன் பேசட்டும் என்று அவனும் நெடு நேரம் சும்மாவே இருந்துவிட்டனர். இருவரும் பேசவில்லை; ஊடலும் தணியவில்லை. (பி.ர. 559)

மழைக் குளிர் அதிகம் - அதனால் ஊடல் நீங்கிக் காதலனைக் கட்டித் தழுவிக்கொள் என்று தோழி தலைவிக்கு உணர்த்தல்

389. உள்ளம் குளிர மழை குளிரும்;
ஊடல் தருமோ? காதலனை
அள்ளி அணைப்பாய், கரும்புமுடிச்
சேறும்; காதல் அவிழ் காலம்

"தோழி! இது உடலைத் தாண்டி உள்ளத்தையும் நடுங்கச் செய்யும் குளிருள்ள மழைக்காலம். இந்த நேரத்தில் ஊடல் கொள்ளாதே! உடனே சென்று அவனை அள்ளி அணைத்துக் குளிரைத்தவிர்; சுகம்பெறு. ஏனென்றால் இது காலம் கரும்பின் கணு முற்றும். ஆனால் காதல் முடிச்சு அவிழ்ந்துவிடும் காலமாகும்."

(பி.ர. 562)

சினம் கொண்ட தலைவி காதலனைக் கண்டவுடன் கோபம் எல்லாம் காற்றில் பறந்தது

390. காதல் பசியால் அங்கங்கள்
கட்டித் தழுவத் துடிக்குதடி;
காதலன் வந்ததும் தழுவுகிறேன்;
கடுப்பும் காற்றில் பறந்ததடி!

"தோழி! உண்மையில் தலைவர் மீது எனக்குக் கோபம் தான். ஆனால் அவர் பிரிவைத் தாளாமல் என் அங்கமெலாம் அவனைக் கட்டித்தழுவத் துடிக்கின்றன. இப்பொழுது அவரைக் கண்டவுடன் ஓடிச்சென்று வெட்கத்தை விட்டுத் தழுவுகிறேன். என் கோபமும் காற்றில் பறந்துவிட்டது. என் செய்வேன்" என்கிறாள் தலைவி.

(பி.ர. 566)

தலைவனுடன் கூடிய தலைவியைக் கண்கள் காட்டிக்கொடுத்தல் - தலைவி கூற்று

391. காட்டிக் கொடுத்த கண்களிவை;
கட்டுக் கடங்கா அழகனவன்;
வீட்டில் வரவும் விருப்பமுடன்
கடுப்பு நீங்கிச் சிரித்தனவே!

''தோழி! அவன் மேல் எனக்குக் கோபம்தான். ஆனால் இந்த என் மானம் கெட்ட கண்கள்தான் என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டன. எனக்கு அடங்க வில்லை. அவன் நுழையும் போது அவனை விருப்பமுடன் பார்த்தன, சினம் போயிற்று. என் கண்களே சிரித்து மகிழ்ந்தன. என் செய்வேன்!'' என்றாள் தலைவி.

(பி.ர. 568)

தலைவன் மேல் வெளியில் கோபம்: உள்ளே காதல் - தோழி கூற்று

392. ''நடிப்புக் கோபம் போதுமடி!
நாயகன் உந்தன் உள்ளத்தில்
அடித்த ளத்தில் இருப்பதை உன்
ஆசைப் பார்வை காட்டுதடி!

''தோழி! வெறும் நடிப்புத் தான் உன் கோபம். உண்மையில் தலைவன் மேல் உனக்குக் கொள்ளை ஆசை. இது உன் மனத்தின் அடித்தளத்தில் இருப்பதை அவன் உன் எதிரில் வரும்போது அவனைப் பார்க்கும் உன் பார்வையில் ஆசை எவ்வளவு இருக்கிறது. என்பதி லிருந்தே இது தெரிகிறது'' என்கிறாள் தோழி. (பி.ர.631)

ஊடல் கொண்ட தலைவி தலைவனைக் கண்டவுடன் அவன் குற்றங்கள் எல்லாம் மறைத்தல்

393. கணம்கணம் தோறும் காதலனின்
குற்றம் காண்பேன்; கறுவுகிறேன்,
குணமே அவனைக் காண்தோறும்
பெருகும்; குற்றம் மறையுதடி!

"தோழி தலைவன் குற்றங்களை ஒவ்வொரு கணமும் யோசித்துப் பார்த்து அவற்றை வரிசைப்படுத்தி மனத்தில் வைத்துக் கொள்கிறேன். அதற்காகச் சினத்தால் அவரைக் கறுவிக் கொண்டிருக்கின்றேன். ஆனால் அவனைக் கண்டுவிட்டால் அவனிடம் உள்ள குணங்கள் தான் தெரிகின்றன. குற்றமெல்லாம் மறைந்து விடுகின்றன. என் செய்வேன்" என்கிறாள் தலைவி.

(பி.ர. 453)

வசந்த காலம்—ஊடல் தவிர் என்கிறாள் தோழி

394 வசந்தம் சோலையும் காடெல்லாம்
செழித்தது மகளிர் மிகவாடக்
கசந்த ஊடல் இனி வேண்டாம்;
காதலன் இருகைப் புகுவாயே.

"தோழி வசந்த காலத்தால் காடு சோலை எல்லாம் செழித்துக் குளிரும் காற்றும் இதமாகி இளம் உள்ளங் களைக் கிளர்ச்சி அடையச் செய்சின்றன. பிரிந்த பெண்கள் வாடுகின்றனர். உனக்கு மட்டும் என்ன வந்தது? இனிக் கசப்பான ஊடல் வேண்டாம். உடனே ஓடிச் சென்று காதலனின் இருகைகளின் அணைப்புக்குள் அடைக்கலம் புகுந்துவிடு" என்கிறாள் தோழி.

(பி.ர. 476)

தோழி தலைவியிடம் ஊடல் வேண்டாம்— கார்காலம் வந்தது என்கிறாள்

395. மேகம் மழையால் மண்மகளை
மேவும் காலம் காதலர்கள்
மோகம் கொள்வர் நீ மட்டும்
பிரிந்து வாழ முடித்திடுமோ?

''அசட்டுப் பெண்ணே! இது மழைக்காலம். இதில் எதிர்பாலின் இதமான அணைப்பு உனக்குத் தேவை. எல்லா மகளிரும் இப்பொழுது மோகம் கொண்டு துணையை நாடுகின்றனர். நீ மட்டும் காதலனைப் பிரிந்து வாழ முடியுமா? போ! கோபம் நீங்கி அவனுடன் சேர்ந்து கொள்'' என்கிறாள் தோழி. (பி.ர. 484)

''குளிர்காலக் கடுமை அறிந்து தலைவனை அணைந்து கொள்'' என்கிறாள் தோழி

396. உள்ளம் விள்ளும் மழைக் குளிரில்,
ஓடுவர் காதலர் தழுவிடுவர்;
கள்ளி ஊடல் உனக்காமோ?
காமனும் தொழிலை விட்டானே?

''பெண்ணே! இது உள்ளம் உடல் இரண்டையும் விள்ளச் செய்யும் குளிர்காலம். மற்றப் பெண்களெல்லாம் தங்கள் காதலர்களைத் தேடிச் சென்று அணைத்துக் கொள்கிறார்கள். நீ மட்டும் வீண் கோபத்தால் தனியாகக் குளிரில் ஏன் நடுங்கிக் கொண்டிருக்கிறாய்? காமனே குளிர்தாளாமல் தன் தொழிலை விட்டு விட்டு ரதியைத் தேடிச் சென்று விட்டான். போ, நீயும் கோபம் நீங்கி உன் காதலனை அணைத்துக் கொள்'' என்கிறாள் தோழி தலைவியிடம். (பி.ர. 495)

ஆறறிவுயிர் அல்லாதவையே இன்பம் காணும்-நீயும் காதலனைத் தேடிச்செல் என்கிறாள் தோழி

397. வசந்த காலம் கருவண்டு
மாம்பூத் துணரில் தேன்மாத்தும்;
கசந்த தனிமை தாளுவையோ?
காதலன அணைப்பில் மகிழ்வாயே!

''பெண்ணே! வசந்த காலம் குளிர்ச் சூழல் எல்லாமே உன்னைத் தூண்டும். கருவண்டுகள் கூடத் தேன் நாடி மாம்பூக்களில் சென்று தேன் உறியும். உன்னால் இந்தக் கசந்த தனிமையைத் தாள முடியாது. போ. சென்று காதலனை அணைத்துக்கொள்'' என்கிறாள் தோழி.

(பி. ர. 436)

ஊடலால் வந்த இழப்பு—தோழி கூற்று

398. கண்டபோது கடுகடுத்தாய்;
காதலன் போன பின்னாலே,
மண்டும் துயரால் வாடுகிறாய்;
மதியாய், எங்கள் உரையினையே!

''பெண்ணே! அவர் நேரில் இருக்கும் போது அவர் மேல் சிடுசிடுத்துக் கோபம் கொண்டாய். நாங்கள் 'அப்படிச் செய்யாதே' என்று சொன்ன அறிவுரை எல்லாவற்றையுமே கேட்கவில்லை. இம்பொழுது அவர் பிரிந்தபின் அதிகம் வாடுகிறாயே'' என்கிறாள் தோழி.

(பி. ர. 509)

ஊடல் இருவரும் கொள்ளத், தாளாமல் சிரித்தல்

399. ஒருவரை ஒருவர் எதிர்நோக்கார்
இவனோ பரத்தை ஒழுக்கத்தான்;
இருவரும் ஊடல் தாளாமல்
இருவரும் வெடித்துச் சிரித்தனரே.

''காதலர் இருவரும் ஒருவரை ஒருவர் நேராகப் பார்த்துக் கொள்ளத் தயங்குகிறார்கள். ஊடல் எல்லை கடக்கும் போது அவர்களால் தாள முடியவில்லை. இருவரும் பெரிதாகச் சிரித்து விட்டனர். ஊடல் போயிற்று'' ஒன்றுபட்டு விட்டனர். (பி. ர. 649)

காதலன் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் தலைவி ஊடல் தவிராமை

400. காலில் விழுந்து கும்பிட்டும்
காதல் வேண்டி நிற்கின்றான்;
நீலி! சற்றும் நிலைதளராய்;
மென்மையில் வன்மை எவ்வளவோ?

''பெண்ணே! உன் காதலன் காலில் விழுந்து கும்பிட்டும் நீ எதற்கும் நிலை தளராமல் இருக்கின்றாய். நீயோ மிகவும் மென்மையானவள். உன்னிடத்தில் இவ்வளவு வன்மை எங்கிருந்து வந்தது?'' என்றாள் தோழி. (பி. ர. 675)

தலைவியின் பொன் மூக்குத்தி பற்றித் தோழி

401. மூக்கில் அணிந்த பொன்வளையம்
முகத்தைக் கடுப்பாய்க் காட்டுதடி!
நீக்கி, நோக்கு; இல்லைஎனில்
ஊடலை நீட்டிக் காட்டுதடி!

''அடி பெண்ணே! நீ அணிந்துள்ள மூக்குத்திப் பொன் வளையும் உன் முக அழகை மாற்றி எப்பொழுதும் நீ சினம் கொண்டவள் போலே முகத்தைக் கடுப்பாகக் காட்டுதடி. எனவே அதை நீக்கு. இல்லைஎனில் அது உன் ஊடல் நிலையை நீடித்துக் காட்டுதடி; புரிந்து கொள்'' என்கிறாள் தோழி. (பி. ர. 685)

7. கூட வருதல்

பலநாள் பிரிந்திருந்த காதலர் மீண்டும் கூட வருதல். இதைச் சந்திப்பு எனலாம். இது சந்தித்தல் மாத்திரமே யன்றி கூடும் கலவி அல்ல.

'ஊடலை விட்டுத் தலைவனைக் கூடச் செல்' என்று தலைவிக்குத் தோழி அறிவுறுத்தல்

402. நட்ட மரத்தை நீர்வார்க்க
வளரும்; அதுபோல் நீயுமுடன்
விட்டுச் சினத்தைக் காதலனை
விடாமல் அணைவாய், வசமாவான்.

அடி பெண்ணே நட்ட மரத்துக்கு நீர்வார்க்க வளரும். அதுபோல் உன் சினத்தை விட்டு அவனை நீயே அடிக்கடி சென்று பார். கவனித்துக் கொள். உனக்கு வசமாவான். உன்னையே சுற்றி வருவான். *(366)*

தோழி தலைவனுக்குத் தலைவியின் அழகைச் சொல்லி அவளிடம் அவனைக் காண விரட்டல்

403. வான நிலவும் நிலவாமோ?
மங்கை வதன மதியைப்பார்!
தேனைத் தெளிக்கும் திருமுகந்தான்;
மழைநாள் மூன்றாம் பிறையாமே

தலைவ! உன் தலைவியின் அழகை நீ அறிய மாட்டாய். வானின் நிலவு ஒரு நிலவாமோ? உன் தலைவியின் முகத்தைப்பார் அவள் முக ஒளியே இனிய தேனை இனிக்க அள்ளி வீசுவது போன்று இருக்கிறது. தவிரவும்

அவள் முகம் மழைக் கால மூன்றாம் பிறை போல் ஒளி வீசுகிறது.

(மழைக் காலத்தில் மூன்றாம் பிறை காணல் அரிது. அது போன்று இவளும் பெற முடியாத அரிய நிதி போன்றவள். இப்படிப்பட்டவள் கிடைத்தற்கரிய வளாவாள்.) (107)

கனவில் கண்ட கண்ணன் மறைய தலைவி வருந்தல்

404. கனவில் கண்ணன் கட்டிஎனைக்
கையால் தழுவக் கலைந்ததடி!
கனவைத் தந்த துயிலதுதான்
கரைந்த தெங்கே? கரைகின்றேன்.

''அடியே நான் கனவில் கண்ணன் என்னை இரு கையாலும் கட்டித் தழுவ வருவதைக் கண்டேன். பாழாய்ப் போன தூக்கம் விழித்துக் கனவும் போய் விட்டதடி. இந்தத் தூக்கம் எங்கே போச்சு? அந்தக் கனவும் எங்கே போச்சடி! நானும் இதனால் கரைந்து விட்டேனடி'' என்கிறாள் தலைவி.

(557)

நடு வெயிலில் இருண்ட சோலையில் கூடிச் செல்ஃவாம் என்று தலைவி தலைவனிடம் சொல்லல்

405. மாலதி மங்கை தமாலத்தைத்
தழுவும் அழகை அங்கேபார்!
நீல நிழலில் இளைப்பாறி
போவோம் சற்றே நிற்பாயே!

''அன்பே! அங்கே பார். இந்த வெய்யிலில் நாம் வெளியில் இந்தச் சோலையை விட்டுப் போக முடியாது.

அந்த மாலதிக் கொடியைப் பார்; தமால மரத்தைத் தழுவிக் கொண்டுள்ளது (நானும் கொடிதானே? உன்னைத் தழுவிக் கொள்ள வேண்டாமா? என்பது உட்பொருள்.)

இந்தச் சோலையில் நீல இருண்ட நிழலில் யாரு மறியாமல் கூடி மகிழ்ந்து இளைப்பாறிச் செல்வோம் வா'' என்று வலியவந்து தலைவி அழைத்தால், யாருக்குத்தான் இனிக்காது? (வலிய அணைத்த சுகம்போலே, ஒரு மலடி வயிற்று மகன் போலே!)

தோழி தலைவிக்குத் தலைவனைக் கூடும் இடத்தைச் சுட்டிக் காட்டுதல்

406. பருத்தி கரும்பும் பறித்தென்ன?
துவரைச் சோலை உனதடியே!
வருத்த மேனோ அவன் வருவான்;
கூடிக்கலந்து மகிழ்வாயே!

காதலர்கள் பிறரறியாமல் சோலை வயல் முதலிய இடங்களில் கூடுவது வழக்கம். இப்பொழுது பருத்தி வயலும் கரும்பு வயலும் அறுவடை ஆகிவிட்டதால் இடமில்லை என்று வருந்துகிறாள் தலைவி. அதற்கு தோழி ''போடி பைத்தியக்காரி! அவை போனால் என்ன? இன்னும் துவரை அறுவடையாகவில்லை. அங்கே உன்தலைவனை வரச்சொல்லிக் கூடி. மகிழலாம் போ'' என்று அவனிடம் அனுப்புகிறாள். (துவரை பசுமையாக ஆளுயரம் இருக்கும் வயல் மறைப்புக்கு வாய்ப்பாக இருக்கும்.) (325)

பருத்தி வயல் அறுவடைகண்டு தலைவி வருந்தல்

407. நரைத்த கிழவன் நரைமயிரை
நீக்குவது போல் வெண்பஞ்சை
விரைந்து பறிக்க அலமந்தாய்
வெகுநாள் கலந்த நினைவிதுவோ?

தோழி கூறுவாள்: ''நரைத்த கிழவன் வெள்ளை மயிரைப் பிடுங்கி எறிவதுபோல், பருத்தியிலிருந்து வெண்பஞ்சுக் கொட்டைகளை பறிக்கும் நீ வருத்தப்படும் காரணம் எனக்குத் தெரிகிறது. இப்படிப் பருத்தி அறுவடையாகிவிட்டால் இனித் தலைவனுடன் கூட வேறு மறைப்பிடம் இல்லையே என்ற ஏக்கம் ஒருபுறமும், அந்தக்காலத்தில் பருத்தி வயலில் அவனுடன் பலமுறை மகிழ்ந்து கலந்த நினைவும் உன்னைவாட்டுதடி!''

(326)

தலைவியைக் காணத்தலைவன் வந்த ஆர்வம்

408. குதிரை ஏறிக் கணம் வந்தேன்,
குயிலீ! உன்னுடன் களித்திடவே;
எதிர்ந்த தொலைவோ ஒரு கல்லே;
ஆயிரம் காதம் ஆனதடி!

தலைவன் தன் இருப்பிடத்திலிருந்து குதிரையில் வந்து சொல்லுகிறான்: ''நான் மிக விரைவாகக் குதிரையேறி உன்னுடன் கூடிக்களிக்க வந்தேன். வந்த தொலைவு என்னவோ ஒரு மைல் (கல்) தான், ஆனால் அந்தச் சிறிது தூரமே எனக்கு ஆயிரம் காதம் போல நீண்டுவிட்டது. அதாவது அந்தத் தூரத்தை கடந்த அந்த ஒருகணமே யுகம் போன்று ஆகிவிட்டது. உன்னைக்காண அவ்வளவு துடிப்பு.'' (பி.ர. 145)

பலர் நடுவே உள்ள தலைவனுக்குத் தலைவி குறிப்புகளால் செய்தி சொல்லல்

409. களித்தான் பேசான் காதலன் தான்
பலர் நடு இருந்தான்; கண்ணாலே
விளித்துச் சிரித்தாள்; கைதலைமேல்
வைத்து நெஞ்சும் தொட்டனளே!

தலைவன் பிரிந்து நெடுநாள் கழித்து வந்தான். அவனைச் சுற்றிப் பலரும் இருந்தனர். அதனால் தலைவிக்கு அவனுடன் வெளிப்படையாகப் பேச முடியவில்லை. கண்ணால் பார்த்துக் கண்ணாலேயே ஜாடை காட்டி, கண்களினாலேயே சிரித்தாள், அழைத்தாள். தலைமேல் கை வைத்து, உன் காலடியில் விழுகின்றேன் என்கிறாள். தன் நெஞ்சைத் தொட்டுக் காட்டி, நீ இங்கே இருக்கிறாய் என்கிறாள். (அல்லது உனக்கு மிகவும் பிடித்தமான என் மார்பகங்கள் விம்மித் துடிக்கின்றன! என்று தொட்டுக் காட்டுகிறாள் நெஞ்சத்தை.) (பி. ர. 149)

தலைவிக்குப் பிறரறியாமல் தலைவனிடம் செல்ல வழி சொல்லுகிறாள் தோழி

410. மாலை மயங்கும் நேரமிது
பசுக்கால் தூளிப் படலத்தில்
வேலை மீண்டனர் இடையர்தாம்;
மேவச் செல்வாய் தலைவனையே.

பெண்ணே! மாலை நேரம் வந்துவிட்டது. இடையர்கள் மாடு மேய்த்து வீடு திரும்புகின்றனர். பசுக்களின் கால் குளம்புகள் தூளை எழுப்பும் படலமும் இருளும் சமயமும் சேர்த்து கொண்டதால் அதில் மறைந்து கொண்டு நீ யாரும் காணாமல் உன் தலைவனைச் சேரச் சோலையை நோக்கிச் செல்ல வாய்ப்பாகும்; விரைந்து செல்'' என்கிறாள் தோழி. (448)

''சொன்ன சொற்படி தலைவனைக் காக்க வைக்காமல் அவனை கூடச் செல்'' என்கிறாள் தோழி தலைவிக்கு

411. காமன் பிடித்த வெண்குடை போல்
ஐப்பசி நிலவும் காயுதடி!
நீமற் றவனுக் களித்திட்ட
நின்சொல் காக்கச் செல்வாயே!

''சந்திரோதயம் ஆனவுடன் வருகிறேன் என்று தலைவனுக்கு வாக்களித்த நீ இப்பொழுது காமன் பிடிக்கும் வெண்குடை போல் தண்ணிய ஒளி வீசி இந்த ஐப்பசி நிலவு, காயுதடி (கிளர்ச்சியடையச் செய்யுது என்பது குறிப்பு). அவன் காத்திருப்பான்; சோலைக்கு விரைந்து செல்'' என்கிறாள் தோழி. (456)

தலைவன் தலைவி இருளில் பரிசத்தால் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளல்

412. காரிருள் குறுகிய தெருவூடே
காதலர் எதிர் எதிர் உரசிடவே,
நாரியும் நம்பியைப் பரிசத்தால்,
மகிழ்ந்தாள், புரிந்து கொண்டனளே!

இருள் சூழ்ந்து இரவானது. குறுகிய அந்தத் தெருவிடையே காதலன் ஒரு பக்கமும் காதலி ஒரு பக்கமும் எதிர் எதிர் திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். இருளில் எதிரில் வருவது தெரியாததால் காதலன் காதலிமேல் உரசி விட்டான். அந்தப் பரிசத்தாலேயே அவன்தான் தன் காதலன் என்று காதலி உணர்ந்து கொண்டாள்.

குறிப்பு : தமிழுக்கு இது புதிதல்ல. இங்கே ஒருபடி மேல். பெண்களின் நான்கு குணங்களில் பயிர்ப்பு என்பது ஒன்று. இது தன் காதலன் அன்றி வேறு ஒருவன் அருகில் நெருங்கும் போதே மாறெதிர் உணர்ச்சி (Alergy) பெண்ணுக்கு ஏற்பட்டுவிடும். இங்குப் பரிசம் வரை வந்தது. இருப்பினும் உடல் பட்டுவிட்ட அந்த நிலையிலே மற்றவர் பரிசத்திலிருந்து பிரித்தறிந்த காதலியின் நுணுக்கம் இனியதுதான். (482)

காதலனுடன் கூடி வந்தவளை காட்டிக் கொடுக்காத கருவண்டு

413. களித்துக் கூடி மீளுகையில்
 கள்ளியும் முழுமதி வானேற
வெளிச்சத் தஞ்சி நெளிகின்றாள்;
 மேனி மறைத்தன கருவண்டே!

காதலி கள்ளத் தனமாக இருளும்போதே காதலனைச் சென்று கூடித் திரும்பினாள். ஆனால் பாதி வழியில் சந்திரோதயத்தில் வானில் முழுநிலவு பொழிந்தது. அவள் மேனி வெளிப்படுகின்றதே, பிறர் கண்டு விடுவார்களே என்று அவள் அஞ்சினாள். ஆனால் அவள் உடலில் உள்ள இயற்கையான மணத்திற்காக அவளைக் கருவண்டுகள் படலமாகச் சுற்றின. அதனால் அவள் உருவம் வெளியில் தெரியவில்லை; தப்பித்துக் கொண்டாள். (449)

மயில் ஆடுவதைக் கொண்டு கண்ணன் வரவறிதல்

414. கோல நெடுங்கண் மகளேபார்!
 வருவான் போலுமுன் கோபாலன்!
பீலி மயிலும் ஆடுதடி!
 பெய்யும் முகிலோ இல்லையடி!

''பெண்ணே! இங்கே பார். உன் கண்ணன் வந்து கொண்டிருக்கின்றான் என்று தெரிகிறது. மழைக்காலமும் இல்லை; மழை தூவும் மேகமும் இல்லை. இருந்தும் இந்த மயில் மகிழ்ந்து ஆடுவதற்குக் காரணம் என்ன? கோபாலன் கார்மேக நிறத்தைக் கண்டே மேகமென்று ஆடுகிறது. அவன்தான் வருகிறான்'' என்கிறாள் தோழி. (225)

''எங்கும் இருள் சூழ்ந்ததால் நீ யாருக்கும் தெரியாமல் காதலனை நாடிச் செல்லலாம்'' என்கிறாள் தோழி

415. மாரிமேகம் போர்த்ததடி!
மறைந்த துலகம்; மயங்காதே;
சேரக் கூவும் பெடையன்றில்:
சேரச் செல்வாய், தலைவனையே!

ஏ பெண்ணே! இன்னும் ஏன் தயங்குகிறாய்? மாரிக் கால மேகம் எங்கும் வானைக் கவிழ்த்து மூடிக் கொண்டு, யார் போகிறார்கள் வருகிறார்கள் என்றுகூடத் தெரியாமல் இருளாகிவிட்டது. ஏன் தயக்கம்? உன்னை யாரும் காண முடியாது. அதோ பார்; அன்றில் பறவை தன் இணைக்காகத் துன்பக் குரலில் கூவுகிறது. இன்னுமா, இதைக் கேட்டுமா, நீ கிளர்ச்சி அடையவில்லை? போ! காதலனைச் சென்று தேடி அணைத்துக் கொள்'' என்கிறாள் தோழி. (51)

''நான் உனக்கு ஒரு நல்ல அழகிய தலைவியைச் சேர்த்து வைத்து விட்டேன். இனி அவளைக் காத்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு'' என்கிறாள் தோழி

416. கொடுத்த வாக்கைக் காத்திட்டேன்:
கூட்டி வைத்தேன் குயிலாளை;
தொடுத்த சண்பக மாலை போல்,
தொட்டுப் பிரியா திருப்பாயே!

''தலைவ! உனக்கேற்ற இந்த இளங்குயிலியை உன்னுடன் சேர்த்து வைத்தேன். நீ வேண்டிக் கொண்ட படி என் வாக்கைக் காப்பாற்றிவிட்டேன். தொடுத்த சண்பக மாலையை இதயத்தைத் தொடும்படி தோளை விட்டுப்

பிரியாமல் வைத்துக் கொள்வது போல் நீயும் இவளை உள்ளும் புறமும் நீங்காமல் பிரியாமல் பாதுகாப்பாயாக!'' என்கிறாள் தோழி. (பி.ர. 544)

கண்ணன் குழல் கேட்டுப் போன தலைவி அவனைக் காணாமல் வருந்துதல்

417. ஊதும் குழல் கேட் டலமந்தேன்;
ஓடிச் சென்றேன், உடனே நான்;
மோதும் ஈட்டி பாய்வதுபோல்,
மோடிக் கிறுக்கன் போனானே!

''அடியே தோழி! கண்ணன் குழலோசை கேட்டு விரைந்தோடி, அவனைக் காணச் சென்றேன். அந்த மோகம் தந்து மயக்கும் கிறுக்கன் அதற்குள் ஏங்கேயோ ஓடி மறைந்தான். யாரைத் தேடிச் சென்றானோ? எவள் அழைத்துச் சென்றாளோ? என் இதயத்தில் ஈட்டி பாய்ந்ததுபோல் வேதனை ஆகிவிட்டது'' என்கிறாள் தலைவி. (446)

நெடுநாள் பிரிவின் பின் சேர்ந்த காதலர்

418. பிரிந்து வாழ்ந்த பேதைமையால்,
நாணிப் பேச முடியாமல்,
வரிந்த கைகள் பிணைப்பாலே
வாரி அணைத்து மகிழ்ந்தனரே!

நெடுநாள் பிரிவுக்குப்பின் காதலர் ஒருவரை ஒருவர் கண்டு இணைந்தனர். நெடுநாளானதால் தலைவிக்கு நாணத்தால் பேச நா எழவில்லை; கண்ணீர் தான் உகுத்தாள். அவனோ ஆசை அடக்க முடியாமல் இரு கரத்தாலும் அவளை வாரி அணைத்துக் கொண்டான். அவளும் அணைத்துக் கொண்டாள். அப்புறம் என்ன? சொர்க்கம் தான். (340)

நெடுநாள் பிரிந்த கணவன் (காதலன்) மீள மகிழ்ச்சி மிகுதியால் காதலியின் செயல்

419. காதலன் மீண்ட சேதியினைக்
காதால் கேட்டாள், கன்னியவள்;
மோத அலைந்தாள் முற்றத்தில்;
கச்சில் அடங்காக் கனதனமே!

நெடுநாளுக்குப் பின் வெளியூர் போன கணவன் மீண்டு விட்டான் என்ற செய்தியைத் தான் இவள் காதால் கேட்டாள். இன்னும் பார்க்கக் கூடவில்லை. அதற்குள் மகிழ்ச்சியால் அவள் உள்ளம் அலை மோதியது. நிலை கொளளளாமல் முற்றமெல்லாம் ஓடித்தவித்தாள். அவனைக் கட்டி அணைக்கப் போகிறோம் என்று பூரிப்பாள் அவள். இளைய பருத்த மார்பகங்கள் மேலும் பருத்து விம்மிக் கச்சுக்குள் அடங்காமல் பிதுங்கின. அல்வளவு விம்மிதம் அவளுக்கு. (341)

காதலன் வெளியூரிலிருந்து வந்து விட்டதை தலைவி மறைத்தாள் ஆனால் அவள் முகம் அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது

420. காதலன் மீண்டான்; மறைத்தாலும்,
கன்னி முகம்தான் ஒளிவீசி,
கோதும் மலரின் வாசம் போல்,
கோலம் காட்டிக் கொடுத்ததடி!

தலைவன் பலநாள் கழித்து வெளியூரிலிருந்து வந்து விட்டான். அவனுடன் தலைவியும் மிகவும் மகிழ்ந்து கூடிக் களித்தாள். ஆனால் தலைவன் வந்து விட்டதை யாருக்கும் சொல்லாமல் மறைத்தாள். இருந்தாலும் அவனைக் கூடியதால் அவளுடைய உடலில் ஏற்பட்ட மாற்றம், பளபளப்பு, கண்ணிலும் முகத்திலும் சிந்திய

மகிழ்ச்சிப் புத்தொளி எல்லாம் அவளைக் காட்டிக் கொடுத்து விட்டன. (339)

தலைவன் பிரிவால் தென்றலால் வருந்தும் தலைவி

421. மெல்லிய தென்றல் வீசுதடி!
மேனியை வாட்டும், குறுவழியில்
செல்லும் முரட்டுக் குதிரை போல்,
தனியளை மோதி மிதிக்குதடி!

''தோழி! தலைவரோ இன்னும் வரவில்லை. அவர் பிரிவால் இன்னமும் துன்பப்படுகிறேன். இந்த நிலையில் குறுகலான வழியில் செல்லும் ஒருவன் எதிரே ஒரு முரட்டுக்குதிரை வந்து, தான் எதிர் திக்கில் போவதற்காக அவனைப்போக விடாமல் மோதி மிதிப்பதுபோல், இந்த இளம்தென்றல் என்னை வாட்டி வதைக்குதடி!'' என்கிறாள் தலைவி. (பி.ர. 684)

தலைவனைக் கூடக் காலம் தாழ்த்தும் தலைவிக்குத் தோழி அறிவுரை

422. மாரிக் கால மேகத்தின்
மின்னல் ஒளிபோல், மானே! கேள்;
யாரும் காணார் சேரச்செல்;
ஏனோ காலம் கடத்துகிறாய்?

''ஏ பெண்ணே! இருள் சூழ்ந்து விட்டது. மாரிக் காலத்து மேகத்தின் இடையே ஒளி மின்னல் தோன்றி மறைவது போல், உன் பொன் மேனி இடை இடையே மெல்ல நகரும் போதெல்லாம் ஒளி வீசும். ஆனால் மீண்டும் மறையும். ஆதலால் உன்னை யாரும் காண முடியாது. அவன் காத்திருப்பான். அவனைக் கூட விரைந்து செல்வாய்'' என்கிறாள் தோழி. மின்னல்

நிலைத்து நிற்காமல் திடீரென்று தோன்றி மறையும். இவள் உடலோ மின்னல் போன்ற பொன்மேனி. மின்னல் நடப்பது போன்று நகர்கின்றாள். ஆனால் சோலை நடுவே செல்வதால் அவை மறைக்க இடை இடையே மின்னல் போன்று தோன்றுகின்றாள்.

8. பிரிவு

இதில் காதலர், அதிலும் பிரிவால் காதலி பெறும் துயரத்தைப் பல நிலைகளில் விளக்கும் பாடல்கள் இடம் பெறும். இது தமிழின் பாலைத் திணைக்கு ஒப்பாகும்.

தண்ணீர் நடுவில் இருந்தும் தாகத்தால் தவிப்பு

423. கண்ணீர்க் குளத்தில் மிதந்தாலும்,
கண்கள் தாகம் தணியாநோய்,
கண்ணன் ஏக்கம் வாட்டிடவே
கலங்குவ திதுதான் தீராதோ?

"கண்களோ கண்ணீர் பெருக்கி அந்தக் கண்ணீர்க் குளத்திலேயே மிதந்து கொண்டிருக்கின்றன. இப்படித் தண்ணீர் இருந்தும் தாகம் தணியாத விந்தை நோய் எங்கே உண்டு? கண்ணனைப் பிரிந்த ஏக்கம் வாட்டுவதே இதற்குக் காரணம். இந்த விந்தை நோய் தீராதோ?" என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள். (593)

தண்ணீர் விட்டு அணைத்தும் அணையாத நெருப்பு

424. கண்ணா! உன்தன் பிரிவதுதான்
கனலாய் எரிவ தறியாயோ?
கண்ணீர் பெருக்கி அணைத்தாலும்,
காட்டுத் தீப்போல் பரவுதடா!

'கண்ணா! உன்பிரிவு நெருப்பால் எரிகிறது. என் கண்ணீரை ஆறாய்ப் பெருக்கி, அந்தத் தண்ணீரைவிட்டு அணைத்தாலும் அது அணையவில்லையே. இதை நீ அறியாயோ? உடனே வாராய்; அல்லல் தீராய்' என்று ஓலமிடுகிறாள் தலைவி. (533)

பன்னீரை விட்டு அணைத்தும் தணியா நெருப்பு

425. பிரிவுத் தீதான் பன்னீரைப்
 பெய்தும் அணையா தவனழகும்
பரிவும் பெயரும் உரையாட,
 பட்டென் றணைந்து போகுதடி!

பிரிவுத்தீ இவள் உடலில் நெருப்பாய்க் கொதிக்கும் போது,பன்னீரை அவள் மேல் தெளித்துக் குளிரச்செய்தும் அணையவில்லை. ஆனால் அவன், அதாவது இவள் காதலன் அழகு, அன்பு, பெயர் இவற்றைச்சொன்னவுடன் தானே அணையுது அந்த நெருப்பு. இந்த நீருக்கணையா நெருப்பை என்னவென்று சொல்வது? (434)

பிரிவென்னும் எரிமலை

426. பிரிவுத் தீயவள் தலைக்கேறிப்
 பேதை உனக்கே ஏங்குகிறாள்;
எரிமலை போலே குமுறுகிறாள்;
 எல்லாம் உனக்கே ஆனாளே!

''தலைவ! இவளைப் பிரிந்ததால் இவள் படும் வேதனையை அறியாமல் இருக்கிறாயே? பிரிவுத் தீ இவள் தலைக்கேறிப் பற்றி எரிகிறது. உனக்குத்தான் ஏங்கித் தவிக்கிறாள். எரிமலை போன்று பிரிவுத் தீயால் குமுறிக் கொப்பளிக்கிறாள். உடல் ஆவி எல்லாம் உனக்காகவே அழிகின்றாள். விரைவில் சென்று அவள் துயர் தீர்ப்பாய்'' என்கிறாள் தோழி. (633)

பிரிவால் உயிர் போகும் நேரம் காத்துக்கொள்

427. உன்னைப் பிரிந்து வாடுமிவள்
உயிரே போகத் துடிக்கின்றாள்;
இன்னமும் தாமதம் செய்யாதே;
இருமி அடங்கும் தருணமித்தே!

"தலைவா! உன் பிரிவால் இவள் வாடுவது தெரிய வில்லையா? அதனால் மிகவும் வருத்தி மெலிந்து இப்பொழுது உயிர்போகும் நிலையில் இருக்கின்றாள். கடைசிக் காலத்தில் தோன்றும் இருமி இரைக்கும் தருணம் வந்து விட்டது. உயிர் அடங்கிவிடப்போகிறது. சீக்கிரம் சென்று அவனைக் காப்பாற்று. தாமதம் செய்யாதே" என்கிறாள் தோழி. (437)

உன் உயிர் என்கையில் இருக்கும்போது தனிமை நம்மை என்ன செய்யும்?

428. தனிமை எம்மை என்செய்யும்?
தங்கி என்தன் மனத்துள்ளாய்;
தனியாய்ப் பட்டம் பறந்தாலும்.
தனிநூல் விடுபவன் கையினிலே!

தலைவி தோழியிடம் சொல்லுகிறாள்; "பிரிவும் தனிமையும் காதலர்களாகிய எங்களை என்ன செய்ய முடியும்? ஏன் என்றால் தலைவன் என் மனத்திலே எப்பவும் இருக்கிறான். அவர் வெளியில் பிரிந்து சென்றாலும், பட்டம் வானில் பறந்தாலும் அதைக் கட்டிய நூல் விடுபவன் கையில் இருப்பது போல், அவர் நினைவும் வடிவமும் என் மனத்திலேயே நிலைத்துள்ளது" என்கிறாள். இதைத் தலைவி தலைவனுக்குச் செய்தி அனுப்புவதாகவும் கொள்ளலாம். (46)

கடிதம் எழுத முடியாமல் கண்ணீர் மறைத்தல்

429. கண்ணீர் மறைக்கும் கடிதத்தை;
காதலைப் பேசவும் நாணுகிறேன்;
பெண்ணென் மனமுன் மனமறியும்;
பெரிதாய்ச் சேதி வேறேதோ?

தலைவி தலைவனுக்குத் தோழி மூலம் கடிதம் எழுதி அனுப்ப எண்ணினாள். எழுதத் தொடங்கும் போதே மேலும் எழுத முடியாமல் பிரிவுத் துயரால் வடிக்கும் கண்ணீர் அதை மறைத்தது. ஆதலால் ''பெண்ணே உன்னிடம் என் காதலை வெளிப்படையாக பேசவும் நாண மாய் இருக்கிறது. நீயோ பெண். பெண்ணின் மனம் பெண்ணுக்குத்தான் தெரியும். எனவே என் துயரை அவரிடம் சொல்லிச் சீக்கிரம் வரச் சொல். இதைவிடச் செய்தி என்ன இருக்கிறது'' என்கிறாள்.

(558)

கண்ணை மூடினால் 'அவர்' உருவம் மறையும் அதனால் தலைவி துயிலாமை

430. பிரிவின் நினைவே எனைவாட்டும்;
பெருமான் உருவம் கண்களிலே,
வரிக்கண் மூடேன் துயில் கொள்ளேன்;
வடிவம் மறையும் என்பதனால்.

தலைவி தோழியிடம் சொல்லுவாள்: ''அவர் உருவம் என் கண் முன்னேயே இருக்கிறது. பிரிவுத் துயரோ என்னை மிகவும் வாட்டுகிறது. கண்ணை மூடிவிட்டால் கண்ணில் தெரியும் அவர் உருவம் மறைந்து விடும் என்ற அச்சத்தால், கண்ணை மூடாமலேயே இருந்து வருகிறேன். தூங்கினால் கண் மூட வேண்டுமே? அதனால் தூங்காமலும் இருக்கிறேன். என் செய்வேன்!'' என்கிறாள். விழித்துக் கொண்டே தூங்கும் வித்தை யாரே அறிவார்?

(535)

கார்கால மேகம் தலைவியை வாட்டல்

431. நான்படும் துயரை யார் கேட்பார்?
நம்பியும் என்னை மறந்திட்டான்;
வான்படும் மேகம் அவன் மனம்போல்,
வன்மை காட்டிக் குமுறுதடி!

''பெண்ணே! நான் அவரைப் பிரிந்து படும் துயரை யாரும் கேட்கவில்லை. அவரோ என்னை முழுவதும் மறந்துவிட்டார் என்று எண்ணுகிறேன். இந்த மழைக் காலமும் அவர் பிரிவுத்துயரை அதிகமாக்கி என்னை வாட்டுகிறது. அவர் மனம் இரக்கமற்றிருப்பது போலவே இந்தக் கார்கால மேகம் இடிஇடித்துக் குமுறி உறுமி எனைவாட்டுகிறது. என் செய்வேன்?'' என்கிறாள்.

(536)

தலைவன் வரவும் அவனைப் பார்த்த தலைவி நிலையும்

432. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
களிப்பும் மேலாம் என நினைத்தேன்;
கண்ணில் துரும்பாய் அவர் கொடுமை
கலக்கிக் கண்ணீர் வார்த்திடுமே!

தலைவன் பிரிந்து நெடுநாள் கழிந்து வந்தான். அவன் கண்களும் தலைவி கண்களும் சந்தித்தன. அதன் விளைவை அவள் கூறுகிறாள் : ''அவர் கண்களும் என் கண்களும் சந்தித்தால் களிப்பாக இருக்கும் என்று அவரை நேருக் நேர் பார்த்தேன். ஆனால் அவர் என்னைப் பிரிந்து செய்த கொடுமை என் கண்ணில் விழுந்த துரும்பு போல் உறுத்தியது. அதனால் பார்க்கவும் முடியவில்லை'' என்கிறாள் தலைவி. (634)

காதலை வெளிக்காட்ட முடியாமல் தடுக்கும் நாணம்

433. பத்து வகையும் நாணத்தால்,
பரிவைக் காட்டும் வகையறியாள்;
நித்தம் பிரிவின் நெருப்பாலே
நின்மேல் காதல் வெளிப்படுமே!

''தலைவ! நீ இவளுடன் சேர்ந்திருந்த போது பத்து வகையாகவும் உன்மேல் அவள் கொண்ட காதலைக் காட்ட முயன்றாள். ஆனால் நாணம் அதை வெளிப் படுத்த முடியாமல் தடுத்து விட்டது. இப்பொழுது நீ பிரிந்ததால், இங்கு இல்லாததால், பிரிவின் நெருப்பால் இவள் எரிந்து குமுறுகிறாள். இதுவே இவள் உன் மேல் கொண்ட காதலை வெளிப்படுத்த வில்லையா?'' என்று பிரிந்து மீண்ட தலைவனிடம் தோழி சொல்லுகிறாள். (376)

அவன் பின் சென்ற கண்கள் மீளாமை

434. வெல்லக் கட்டியில் பிள்ளை மனம்
களிப்பது போலே கணம் பார்த்தேன்;
மெல்லக் கண்களும் அவன் பின்னால்,
சென்றன, மீண்டும் மீளாவே!

தலைவி தோழியிடம் கூறல். ''வெல்லக் கட்டியில் சிறு பிள்ளை மகிழ்வது போல், ஒரு கணம்தான் அவ ரைப் பார்த்தேன். எல்லாம் இனிமை தான். ஆனால், அவர் பிரிந்த போது, அவர் பின்னாலேயே சென்ற கண்கள் திரும்பி என்னிடம் வரவில்லையே? என் செய் வேன்!'' என்கிறாள். (647)

இனிப்பவை எல்லாமே எரிகிறதே!

435 மாலையும் சந்தனம் மதியொளியும்
மற்றவை தன்மைக் கெதிராக
வேலை செய்யும் தென்றலுமே
மேனி கொளுத்த வீசுதடி!

''தோழி! மாலை, சந்தனம், இந்தத் தண்ணிய நிலவு எல்லாமே தங்கள் குளிர்ப்புத் தன்மைக் கெதிராகச் சதி செய்து, பிரிந்த துன்பத்தால் எனக்குக் கனலாய் மாறி விட்டன. சில்லென்ற தென்றலும் என் உடலைக் கொளுத்துவது போல வீசுகிறதே. என் செய்வேன்!'' என்கிறாள் தலைவி. (538)

தலைவி பிரிவால் கற்பூரம் போல் கரைகின்றாள்

436. வாடி மெலிவாள் கற்பூரம்
போலே கரைவாள் பிரிவாலே;
ஓடிச் சென்று காத்திடுவாய்;
உயிரும் விடுவாள் அறியாயோ?

தலைவனிடம் தோழி சொன்ன சேதி: ''தலைவா! தலைவியின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. உன் பிரிவுத் தீயால் கற்பூரம் போல் அவள் கரைந்து கொண்டிருக்கிறாள். (தெய்வத்திற்குச் சடப் பொருளான கற்பூரம் தன்னை அழித்துக் கொள்வது போல் உயிர்ப் பொருளான இவள் தெய்வத்திற்குங் கீழான உன்னையே தெய்வமாக எண்ணிக் கற்பூரமாய் உனக்காக அழித்துக் கொள்ளுகிறாள்.) இதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறாயே? என்ன கொடுமை! போ, அவள் உயிரை விடுவதற்கு முன்னால் ஓடிச் சென்று அவளைக் காப்பாற்று'' என்கிறாள். (595)

நீ அளித்த மாலையால் இவள் உயிர் பிழைத்தாள்

437. நெஞ்சில் அணிந்த மாலையினை
நேரிழைக் கிட்டாய் உயிர் பிழைந்தாள்;
விஞ்சி எரியும் கற்பூரம்
போலே கரைவாள்; உயிர்போமே!

தலைவனுக்குத் தோழி சொல்லுவது! "தலைவ! நீ பிரிந்து வரும் போது உன் நெஞ்சில் அணிந்த மாலையை இவளுக்குச் சூட்டினாய். இது ஒன்றால் தான் அவள் உயிர் இன்னும் உடலில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. இல்லையென்றால் உன் பிரிவால் கற்பூரம் போலக் கரையும் இவள் உயிர் எப்பொழுதோ போயிருக்கும். சீக்கிரம் சென்று அவளைக் காப்பாற்று" என்கிறாள். (618)

தீயாலும் எரியாத பசுங்கொடி

438. காதல் பைங்கொடி பிரிவென்னும்
காட்டுத் தீயால் வாடாமல்,
ஆதர வாகக் கணம்தோறும்
அன்பே உரமாய்த் தழையுதடி!

தோழி மற்றொரு தோழியிடம் கூறுவாள்: "இவள் தலைவனைப் பிரிந்த பிரிவென்னும் காட்டுத் தீயால் கூட இவர்கள் கொண்ட காதல் என்னும் பசுங் கொடியை எரிக்க இயலவில்லை. தலைவன்மேல் கொண்ட அன்பு—காதல் என்ற ஒன்றே இந்தக் கொடிக்கு உரமாக நீராக வளர்ந்து வருகிறது" என்கிறாள். (544)

சாவுக்கு ஆசி கூறுவாயோ?

439. இனிதே காதல்; இப்பொழுதோ
பிரிவால் எரிவாள்; கண்ணா கேள்!
இனியும் வாழாள்: உயிர் விடுவாள்;
இவைதாம் நீ தரும் ஆசிகளோ?

தோழி தலைவனிடம் கூறல்: ''தலைவ! கண்ணா! இவள் முதலில் உன்னைக் காதலித்தது இனிமையாகத் தான் இருந்தது. நீ பிரிந்த பின், இவள் எரிந்து கொண் டிருக்கின்றாள். இனி இவள் பிழைக்க மாட்டாள். உயிரை விட்டு விடுவாள். இது தான் நீ இவளுக்கு வழங்கும் ஆசிகளோ? யாராவது சாவுக்கு ஆசி கூறுவார் உண்டா?'' என்கிறாள். (597)

பிரிவாள் இளைத்தாள் எலும்புக் கூடானாள்

440. தனிமைப் பிரிவால் தசைவற்றி,
என்புக் கூடாய் இளைத்திட்டாள்;
கனிவாய் கண்ணா! பெயர் கேட்டால்,
அணையும் விளக்காய்ச் சுடர்கின்றாள்.

தோழி தலைவனிடம் கூறுகிறாள்; ''கண்ணா! உன்னைப் பிரிந்த துயரால் இவள் துரும்பாய் இளைத்துத் தசையெல்லாம் வற்றி, வெறும் எலும்புக் கூடாகி விட் டாள். இப்பொழுது உயிரையே விட்டு விடுவாள். உன் பெயரைக் கனிவாகச் சொன்னவுடன் திடீரென்று கண் திறந்து பார்க்கிறாள்; சுடர்கிறாள். விளக்கு அணை வதற்கு முன்னால் சுடர் விடுவது போல் இருக்கிறாள். சீக்கிரம் அவளைச் சென்று காப்பாற்று'' என்கிறாள்.

எந்த மருந்துக்கும் நீங்காத நோய்

441. அரி அரி யென்றே அரற்றுகிறாள்;
அளவில் மருந்தால் நோய் நீங்காள்;
தெரிவைக் கினியுன் சேர்க்கை தான்
அமுதாம், பிழைப்பாள் செல்வாயே!

''கண்ணா! உன் காதலி அரி! அரி! (ஹரி) என்று எந் நேரமும் உன் பெயரே கூறிக் கொண்டிருக்கின்றாள். எந்த மருந்தாலும் அவள் நோய் தீரவில்லை. உயிர்

போகும் நிலையில் இருக்கின்றாள். நீ விரைந்து சென்று அவளை அணைப்பதே அவளுக்கு அந்த நோய்க்கு அமிர்த மான மருந்தாகும். எனவே செல்; விரைந்து செயல் படு'' என்கிறாள் தோழி தலைவனிடம். (706)

பிரிவால் நலியும் அவளுக்கு நீ தான் மருந்து

442. மணிபோல் ஒளிரும் மங்கையினைப்
 பிரிவால் மரிக்கச் செய்வாயோ?
அணைவாய் அவளை இப்பொழுதே;
 அவளும் பிழைப்பாள், பேர் பெறுவாய்.

''சுடர் விடும் ரத்தினப் போன்ற அழகியான இவள் உன் பிரிவென்னும் நோயால் ஒளியிழந்த ரத்தினம் போல அணு அணுவாய் இறந்து கொண்டிருக்கிறாள். சீக்கிரம் சென்று அவளை அணைத்துக்கொள். அவள் நோய்க்கு அதுவே மருந்து. நீயும் அந்த நோயைத் தீர்த்த மருத் துவன் என்ற புகழைப் பெறுவாய்'' என்று தலைவனிடம் தோழி கூறுகிறாள். (542)

இளைத்த தலைவியைக் காலனுக்கும் அடையாளம் தெரியாமல் போனது

443. பிரிவால் நலிந்த மெலிவாலே
 பேதை வடிவம் மாறியதால்,
தெரியான், மூக்குக் கண்ணாடி
 அணிந்தும்; காலன் தேடுகிறான்.

தலைவனுக்குத்தோழி கூறியது; ''தலைவ! உன் தலைவி யின் நிலை உன் பிரிவால் மிகவும் மோசமாகி விட்டது. உன்னைப் பிரிந்த விரக நோயால் அவள் மெலிந்து அடை யாளம் தெரியாமல் போய் விட்டாள். சாகும் சமயம் நெருங்கி விட்டது. உயிரை வாங்க வந்த காலன், தன் கண்ணில் மூக்குக் கண்ணாடி அணிந்து நன்றாகத் தேடி

யும், இவளை அடையாளம் தெரியாததால் உயிரை வாங்க முடியாமல் இன்னும்தேடி அலைகிறான். சீக்கிரம் சென்று அவளைக் காப்பாயாக'' என்கிறாள். (பிஹாரிலால் ஆங்கிலேயர் வந்து குடியேறிய நிலையில் அந்தக் காலத்தில் வாழ்ந்தவர். அவர் காலத்திலேயே மூக்குக் கண்ணாடி வந்திருக்கலாம். அல்லது உருவத்தைப் பெரிதாகக் காட்டும் பூதக் கண்ணாடியை வைத்துத் தேடினான் காலன் என்றும் கொள்ளலாம்.) (541)

தலைவி இளைத்த நிலையால் உனக்கே அடையாளம் தெரியாது—சென்று பார்

444. உன்னைப் பிரிந்த துயராலே
ஓடாய் மெலிந்து நலிவாளை
என்ன ஆனாள்? என்றே நீ
அவளறியாமல் காண்பாயே!

தோழி தலைவனுக்குக் கூறியது: ''தலைவி உன்னைப் பிரிந்த துயரால் ஓடாய் மெலிந்து விட்டாள். அவள் என்ன ஆனாள் என்று கொஞ்சமாவது இரக்கங் காட்டி அவளறியாமல் மறைந்திருந்து அவளைப் பார். உனக்கே அடையாளம் தெரியாது. ஆதலால் அவளை அணைத்து அவலத்தைப் போக்கு'' என்கிறாள். (603)

மழையால் அவன் பிரிவைத் தடுத்தாள்

445. நாளை பணிமேல் பிரிவான்தன்
நாயகனென்றே தெரிந்தவளும்
வேளை யின்றித் தைமலாரி
வீணை மீட்ட, அடை மழையே!

தலைவன் தொழில் நிமித்தம் நாளை வெளியூர் செல்ல, அதனால் தன்னை விட்டுப் பிரிவான் எனத் தலைவி அறிந்து கொண்டாள். அவளே வீணை வாசிப்

பதில் தேர்ந்தவள். மழைக்கால வேளை இல்லாத போது வீணையை எடுத்து வைத்து மழை வரவழைக்கும் 'மலாரி' (மல்ஹார்) பண்ணை உருக்கமாக வாசித்தாள். தை மாதத்திலும் அடை மழை பெய்தது. அவன் பயணத்தை நிறுத்தி விட்டான். *(346)*

மரணத்தை விடக்கூடிய பிரிவுநோய்

446. மரணம் உயிரைத் தான் நீக்க
மரணத்தோடு துயரும் போம்;
மரணமும் வராமல் காதலரை
மாய்க்கும் 'பிரிவு' பெரு நோயே!

தோழி தலைவனுக்குக் கூறியது: ''தலைவ! மரணம் வந்தாலாவது உயிர் போகும். அதோடு இந்தப் பிரிவுத் துயரும் போய் விடும் என்று அதை எதிர்பார்த்து இவள் கிடந்து தவிக்கிறாள். மரணமே பயந்து இவளிடம் வர வில்லை. அதைவிடச் சாகவும் விடாமல் உயிரையும் எடுத்துக் கொள்ளாமல் இந்தப் பிரிவு நோய் அவளை பெரிதும் வாட்டுகிறது. போ! அவளை உடனே சென்று காப்பாற்று'' என்கிறாள். **(539)**

கண் பார்க்க மனமெரியும் காதல் நோய்

447. கண்கள் மோத மனமெரியும்
காதல் நெருப்பை யாரறிவார்?
பெண்ணே! உனக்குப் பேயாட்டம்
வேண்டாம்; அதனிடம் போகாதே.

தோழி (அனுபவப் பட்டவள்) தலைவிக்குக் கூறுவது; ''பெண்ணே! காதல் நோய் மிகவும் கொடிது. முதலில் பார்ப்பது என்னவோ கண்கள்தாம். ஆனால் அதனால் துன்பப்படுவது மனமே. உள்ளமே அந்தத் தீயால் பற்றி எரிகிறது. இது போராட்டத்தில் ஈடுபடுவது போன்று கொடுமையானது. ஆகையால் இது உனக்கு

வேண்டாம். அதனிடம் போகாதே. போனால் பிரிவின் பெருந் துன்பத்தால் அவதிப் பட வேண்டி வரும்'' என் கிறாள். (635)

தலைவன் வரும் சேதி கேட்டுத் தலைவியின் முகம் மலர்வது

448. உடலொளி இழந்தது; உடையெல்லாம்
உப்புப் பூத்தது; உதிருதடி!
உடன் அவன் வருவான் என்றவுடன்
ஒளியொடு முகமும் மலருதடி!

தலைவி செயல் பற்றி தோழி: ''அவன் பிரிந்தவுடன் தலைவி உடல் ஒளி இழந்து இளைத்துவிட்டது. குளித்தல் உண்ணல் எதுவும் செய்யாததால் உடையும் அழுக்காகி, வியர்வை உப்புப் பூத்து அதுவும் உதிர ஆரம்பித்து விட்டது. ஆனால் தலைவன் வரப் போகிறான் என்ற செய்தி காதில் விழுந்தவுடன் அவள் முகம் புத்தொளி பெற்று மலர்ந்து விட்டது'' என்கிறாள். (345)

காதலன் எழுதிய கடிதம்

449. கடிதம் காதலன் எழுதியதைக்
கட்டிக் கச்சோ டணைக்கின்றாள்:
வெடிக்கும் பிரிவு நோய்பிள ந்து
வேரோ டழிக்கும் வாளிதுவோ?

காதலன் வெளியூர் சென்றவன் பிரிவால் தவிக்கும் தன் காதலிக்குக் கடிதம் எழுதினான். அதைக் கண்ட காதலி அதைத் தன் கச்சோடு இறுக அணைத்து மகிழ் கின்றாள். அவள் பிரிவு நோயை வேரோடு பிளந்தெறியும் வாள் போன்றிருந்தது அது. (559)

பிரிவு நோய் செய்த கொடுமை

450. கணமும் விடாமல்காமன்தான்
கட்டழ கெழிலார் காதலியைப்
பிணமாய் வருத்தும் பிரிவென்னும்
நோயால் வாட்டி வதைக்கின்றான்.

தோழி தலைவனுக்குக் கூறியது: ''தலைவி நிலையை நீயே சென்று பார். காமன் கணம்தோறும் கட்டழகான எழிலான உன் காதலியைப் பிரிவென்னும் நோயால் வாட்டி வதைக்கின்றான். அதனால் அவள் பிணம்போல் செயலற்றுப் போனாள். சீக்கிரம் சென்று அவளைக் காப்பாற்று போ'' என்கிறாள். (பி. ர. 197)

மழைக்காலம் வெய்யிலாய் எரியும்

451. பிரிவான் பிரிவான் என்றதுமே
காதல் சுகமும் போனதடி!
எரியும் உடலும் என்னுளமும்
கார்மழை வெய்யிலாய்க் காயுதடி!

தலைவி தோழிக்குக் கூறியது: ''தோழி அவர் (காதலன்) பிரிந்து செல்லப் போகிறார் என்ற வார்த்தை என் காதில் விழுந்தவுடனே, என் காதல் சுகமும் போனதடி! உடலெல்லாம் பிரிவால் இப்பொழுதே கொதிக்குதடி. மனமும் வேகுது. கார்கால மழைகூட கடுவெய்யிலாய்க் காயுதடி! என் செய்வேன்?'' என்கிறாள். (354)

பூவாசமும் குளிர்தென்றலும் எரிதல்

452. மல்லிகை வாச மழைத்தென்றல்
மதர்த்த கொங்கை தடவுங்கால்,
அல்லல் செய்யும்; அவன்பிரிவோ
ஆவி அடங்க எரியுதடி!

தலைவி தோழிக்குக் கூறுவது: ''பெண்ணே! மாலை நேர மல்லிகையைத் தடவி அதன் மணத்தையும் சுமந்து வரும் மழைக்காலக் குளிர் தென்றல்கூட என் மார்பகத்தைத் தடவிச் செல்லும்போது அல்லல் (துன்பம்) மிக அதிகமாகுது. அவர் பிரிந்து சென்றதால் என் உயிரே அடங்கும் வகையில் எரியுது. என் செய்வேன்?'' என்கிறாள். (540)

பிரிவின் நெருப்பு

453. பிரிவால் உடலே நெருப்பாச்சு;
பெரிய குப்பிப் பன்னீரும்
தெரிவை உடலில் படவில்லை;
சேரா தாவி ஆச்சுதடா!

தோழி தலைவனுக்குச் சொல்லுவாள்: ''உன் தலைவியின் உடல் நீ பிரிந்ததால் கொதித்துச் சூடேறி நெருப்பாகவே ஆகிவிட்டது. அவளைக் குளிர்ப்படுத்த அவள் மேல் ஊற்றிய பெரிய குப்பிப் பன்னீர்கூட அவள் உடலின் கனலால் உடல்மீது விழுவதற்கு முன் ஒரு சொட்டுக்கூட மிச்சமின்றி ஆவியாகிவிட்டது. உடனே சென்று அவள் கஷ்டத்தைப் போக்கு'' என்கிறாள். (545)

தலைவன் வருவான் என்பதற்கான சுப சகுனங்கள்

454. இடைக்கண் துடிக்கும்; உளம்மகிழும்;
எழிலார் கொங்கை விம்மிஎழும்;
திடமாய்த் தலைவன் வருகின்றான்;
தெரிவை சொல்வாள் நற்குறியே.

தோழி சொல்வது : ''தலைவிக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அவள் இடைக்கண் துடிக்கும். மனத்தில் என்றும் இல்லாத புதுமகிழ்ச்சி உணர்வு ஏற்பட்டுள்ளது.

அவள் அழகிய கொங்கைகள் உள்ளத்தில் எற்பட்ட உணர்ச்சி மாற்றத்தால் விம்மிப் பருத்துள்ளன. எனவே இன்று பிரிந்து சென்ற தலைவன் கட்டாயம் வருகின்றான். என்கிறாள் தலைவி'' என்று மற்றொரு தோழிக்குச் சொல்லுகிறாள் இவள். (338)

காதலன் மீண்டும், அவன் கணம் காலம் தாழ்த்தினாலும் யுகமாய்த் தோன்றல்

455. வெளிநாட் டிருந்தும் அவர்வந்தார்;
வழியில் பெரியோருடன் பேசிக்
களித்தது கணமே யானாலும்,
பிரமன் யுகமாய் நீளுதடா!

தோழி தலைவனிடம் கூறுகிறாள்: ''தலைவன் (நீ) வெளிநாட்டிலிருந்து வந்து விட்டான். ஆனால் அவன் வீட்டுக்கு வரும் வழியில் பெரியோர்கள் உறவினர்களுடன் ஒரு கணமே பேசுகிறான். சுகம் விசாரிக்கிறான். அந்த ஒரு கண நேரமும் தலைவிக்குப் பிரமனின் யுகம் போன்று நீளுது; பொறுமை இன்றித் தவிக்கிறாள்'' என்கிறாள். (344)

''கீழை நாட்டினரின் காலக்கணிதம் மிகவும் நுண்ணியது. பிரம்மன் என்னும் படைப்புக் கடவுளின் 100 வயதை கீழ்க்கண்டபடி மனித செளரமான வருஷக் கணக்கில் கணித்துள்ளனர். (செளரமான—சூரியனைக் கொண்டு கணித்த நமது தமிழ் வருஷம்)

கிருத யுகம்	43 2000×4	=	1728000	வருஷம்
திரோதா யுகம்	43 2000×3	=	1296000	,,
துவாபர யுகம்	43 2000×2	=	864000	,,
கலியுகம்	43 2000×1		432000	,,
			....	
இது ஒரு சதுர் யுகம் (மாகாயுகம்)			4320000	,,
இதுபோல் 71 கொண்டது				
ஒரு மன் வந்தரம்			30 67 20000	,,

II. 14 மன்வந்தரமும் அதனுடன் ஒவ்வொரு மன்வந்திரத்தின் முன்னும் பின்னும் கிருத யுக கால அளவு இடைவெளியும் சேர்த்துக் கண்டது ஒரு கல்பம் எனப்படும்.

			வருஷம்
அதாவது 14 மன் வந்தரம்	=	306720000×14	,,
15 இடைவெளி கிருத யுக	=	25920000	
வருஷம்	=	4294080000	,,
		25920000	
	=	4320000000	,,

இதுதான் ஒரு கல்பம் எனப்படும்.

III. இனி 1000 மகா யுகம் அல்லது சதுர் யுகம் கொண்டது பிரம் மனுக்கு ஒரு தினமாகும் I பார்க்கவும். அதாவது 4320000×1000

= 4320000000

இதைப்போல் 360 நாள் கொண்டது பிரம்மாவுக்கு ஒரு வருஷம் = 4320000000×360

இதைப்போல் 100 வருஷம் கொண்டது பிரம்மாவின் ஆயுசு ஆகும். அதாவது

= 4320000000×360×100

= 1555 20000000000

இவ்வளவு வருஷங்களாகும் அதாவது 15 ஆயிரத்து 522, 100 கோடி வருஷங்களாகும்.

காதலன் வந்ததும் நேரே தன்னிடம் வராமல் உறவினருடனும், பெரியோருடனும் காலம் தாழ்த்தின ஒவ்வொரு கணமும் இவ்வளவு வருஷங்கள் போன்று

நீண்டது என்று கவிஞர் உயர்வு நவிற்சியாக அவள் பிரிவின் கஷ்டத்தையும், காதலனைப் பார்க்க அவள் படும் தவிப்பு ஆர்வம் இவ்வளவையும் இதன் மூலம் தெரிவிக்கிறார்.

தற்போது நம் கணிதப்படி பிரம்மாவுக்கு 50 வருஷம் முடிந்து 51 வது வயதில் முதல் நாளில் பகல் 11-30 மணி சுமாருக்கு மேலாகிறது.

மாலைக் கண்ணீர் வடிக்கும் இவள் துறவியோ?

456. மங்கை மோனத் தவம் செய்வாள்;
மாலைக் கண்ணீர் முத்தணியின்
தன்கை மாலை கையேந்தும்;
தவம்புரி துறவி இவளேயோ?

தோழி தலைவனுக்குக் கூறுவது: ''உன் தலைவி பிரிவுத் துயரால் செயலற்று விட்டாள். வாய் பேசுவதில்லை. அதனால் மௌனம் சாதிக்கும் துறவியாகி விட்டாள். முழங்கால்களைக் கட்டிக் கொண்டு வருத்தத்தால் மாலை மாலையாகக் கண்ணீர்த் துளிகள் வடிக்கிறாள். ஒவ்வொரு துளியும் ஒரு முத்து போன்று அவள் கை வழியாக வழியும் போது ஒரு முத்து மாலையை ஜெப மாலையாகக் கையிலேந்தி உன் பெயரை உருவேற்றும் துறவி போலவே இருக்கிறாள். சீக்கிரம்சென்று காப்பாற்று'' என்கிறாள். (547)

வெட்டி வேர்த்திரையும் எரியும் பிரிவு

457. கட்டி, மகிழ்ந்த காதலன் நீ;
கருணையின்றிப் பிரிந்த அனல்
வெட்டி வேரில் நீரேற்றி,
வேய்ந்த திரையும் எரியுதடா!

தோழி தலைவனுக்குக் கூறுவது; ''நீ இவளுடன் இவ்வளவு நாள் கூடிக் குலவி விட்டு இப்பொழுது பிரிந்து சென்று விட்டாய். மாளாத காதல் உள்ளவள் ஆகையினாலே உன் பிரிவு தீயாகி இவளைக் கவ்விக் கொண்டது. இவள் இருக்கும் இடத்திலேயே அனல் பறக்கிறது. இதை இறக்குவதற்காக இவளைச் சுற்றி வெட்டிவேர்த் திரைகள் அமைத்து அவற்றின் மேல் தண்ணீரைத் தெளித்துங் கூட இவள் உடல் பிரிவு நெருப்பின் சூடு தாள முடியாமல் அவைகள் எரிவதைப் பார். உடன் சென்று காப்பாற்று'' என்கிறாள். (638)

சக மனைவிகள் உபசாரம்

458. மனைவியர் பலருள் இவள் பிரிவால்,
முடிந்தால் அவனும் முடிவனென,
மனைவியர் பிறரவள் மனமுடலும்
பிழைக்கப் பணிவிடை செய்வாரே.

காதலனுக்குப் பல மனைவியர். அதில் இளைய அழகி மேல் அவனுக்குக் கொள்ளை ஆசை. இவளே அவன் பிரிவால் வாடி உயிர் போகும் நிலைக்கு வந்து விட்டாள். இவள் போய் விட்டால் அவனும் உயிர் போவான் என்று பயந்து, ''நமக்குக் கணவன்தான் முக்கியம்'' என்ற எண்ணத்தால் இவளுக்குப் பல வழியிலும் பணிவிடை செய்து பிழைக்க வைக்கும் முயற்சியில் அவனுடைய பிற மனைவிகள் ஈடுபட்டுள்ளனர். (521)

ஈரப் பட்டியும் வற்ற எரியும் பிரிவு

459. பிரிவுத் தீயவள் உடலெல்லாம்
கொதிக்கும், பெரிதாய் மாரியிலும்;
பரிவாய் ஈரப் பட்டி வற்ற
பணியே புரிவார் தோழியரே!

தலைவனுக்குத் தோழி கூற்று: ''தலைவ! உன் தலைவி உன் பிரிவு தாளாமல் அவள் உடலெல்லாம் பற்றி நெருப் பாய்க் கொதிப்பதாகும். அதைக் குளிரச் செய்ய அவள் தோழியர் துணியை நனைத்துப் பட்டிகளாக உடலெங்கும் பல இடங்களில் போடுகின்றனர். இருந்தும் அவை அப் பொழுதே வற்றி விடுகின்றன. அவ்வளவு கொதிப்பு அவள் உடம்பு. ஆதலால் அவளை உடனே சென்று காத்துக் கொள்'' என்கிறாள். (பி. ர. 283)

கண்ணின் விழி தலைவன் வரும் திசை நோக்கி ஆடும் திருநடம்

460. கண்விழி அசையக் காதலனின்
மீளும் திசையே திருப்புகிறாள்;
கண்விழி அசைவே திருநடனம்,
ஆடக் காரிகை அழிவாளே!

தோழி தலைவனுக்குக் கூறல்: ''தலைவ! உன் பிரிவால் தலைவி ஏங்கி நீ திரும்பி வரும்நாள் நெருங்கி விட்டதால், நீ வரும் திசையையே நோக்கிக் கண்மணியை அடிக்கடி திருப்பிக் கொண்டே இருக்கின்றாள். இதனால் அக் கண் ணின் விழிகள் முன்னும் பின்னும் நகர்ந்து நடனம் புரிவது போல் தோன்றுகின்றன. சீக்கிரம் சென்று காத்துக் கொள்'' என்கிறாள். (பி. ர 284)

மழைக்காலத்துப் வெப்பப் புயல்

461. வெய்யிற் காலப் புயலது தான்
மாரியில் ஆங்கே வீசுதென
ஐயன் ஒருவன் சொற்கேட்டான்;
அவளுயிர் வாழ்வதை அறிந்தானே!

தலைவன் பணியின் காரணமாக வெளியூரில் இருந் தான். அது மழைக்காலம். அவன் காதலியின் ஊரிலிருந்து ஒருவர் அவனைக் காண வந்தார். அங்கே அவள் இருக்கும் இடத்தில் வெய்யிற் கால புயல் வீசி ஒரே வேக்காடாக

இருக்குது என்று சொன்னான். இதிலிருந்து அவன் தன் பிரிவால் தலைவி உயிர் விடவில்லை. இன்னும் உயிரோடு தான் இருக்கிறாள்'' என்று ஊசித்து அவளைக் காக்க விரைந்தோடினான் ஊருக்கு. தலைவி உடலில் பிரிவால் ஏற்பட்ட பெரிய அனல் பறக்கும் நிலை மாரிக்காலப் புயலையும் உரசி வெய்யிற்காலப் புயலாக்கி விட்டது. அவள் இல்லை என்றால் இந்தக் கொதிப்பும் புயலும் இராது. ஆகையால் தன் தலைவி இன்னும் உயிரோடு தான் இருக்கிறாள் என்று புரிந்து கொள்கிறான் தலைவன். (பி. ர 285)

முலைமீது கொழுநன் நகமேவு குறி

462. பிரியு முன்னாள் பிணியவிழ்த்தே
இறுக்கிப் பிடித்து முலையிலவன்
எரியு நகக்குறிப் பொருக்கதனை
எடுத்து நீக்கி மகிழ்வாளே!

கணவன் வெளியூர் செல்லுவதற்கு முதல் நாள் தான் நெடுநாள் பிரியப் போவதால் (அவளை)த் தன் தலைவியைக் கச்சை அவிழ்த்து இரு கொங்கைகளையும் இறுக்கிப் பிடித்துப் பல வகையிலும் அணைத்து மகிழ்ந் தான். அப்படிச் செய்யும் போது அவன் கையின் நகங்கள் கீறிக் கொங்கைகள் மேல் புண்ணாய் வடுக்களை ஏற்படுத்தி விட்டன. இப்பொழுது அவன் பிரிந்த நிலையில் அவன்செய்த அந்த வடுப் பொருக்கை காயவிடாமல் பிய்த்து எடுத்து, அதை அவன் நினைவாகப் பார்த்துப் பார்த்து மகிழ்கிறாள் தலைவி.

முலைமீது கொழுநர்கை நகமேவு குறியை
முன்செல்வ மில்லாத அவர்பெற்ற பொருள்போல்
கலைநீவி யாரேனுமில்லாதவிடத்தே
கண்ணுற்று நெஞ்சம் களிப்பீர்கள் திறமின்'

—கலிங்கத்துப்பரணி
(பி. ர 298)

எழுத்தழித்த கடிதம்

463. கண்மை பட்டுக் கறையாகி
கசங்கிக் கீழ்மேல் வடிவிழந்து
பெண்ணவள் கடிதம் கண்டவனும்
பேதை படுந்துயர் அறிவாளே!

தோழி தலைவிக்குக் கூறியது; ''பெண்ணே! நீ கொடுத்த கடிதத்தை அவனிடம் கொடுத்தேன். பிரிவால் அழுது நொந்து எழுதிய உன் கடிதத்தில் உன் கண்ணீர் மையுடன் கலந்து பெருகிச் சுரந்து எழுத்துக்கள் மேலும் கீழும் அழிந்து கறைபட்டு வடிவிழந்தன. இதைக்கண்டே, நீ படும் துயரை அவன் அறிந்து கொண்டான்; விரைவில் வந்துவிடுவான்; கவலைப்படாதே'' என்கிறாள். (561)

பிரிவால் அழுத கண்ணீரைக் கொட்டாவியால் வந்ததெனல்

464. கண்ணாம் கணவன் பிரிவனெனக்
கேட்டாள் கண்ணீர் சொரிகின்றாள்;
பெண்ணியவள் பெரிதாய்க் கொட்டாவி
விடுவாள் அதனை மறைப்பாளே.

தோழி தலைவியின் நாகரிக நிலைபற்றித் தலைவனிடம் சொல்லல்; ''தலைவ! நீ பிரிவாய் என்ற செய்தியைக் கேட்டவுடன் அவள் மனந்தாளாது ஆறாய்க் கண்ணீர் சொரிகின்றாள். ஆனால் அதைப் பிறர் அறியக் கூடாது என்பதற்காக, பெரிதாகச் செயற்கையாகக் கொட்டாவி விடுகிறாள். அதனால்தான் கண்ணீர் வருவதாகப் போக்குக் காட்டுகிறாள். அவள் நாகரிக இயல்பையும் படும் துயரத்தையும் பார்த்து இப்பொழுது பிரிந்து செல்லும் முயற்சியைக் கைவிடுவாயாக'' என்கிறாள். (350)

கண்ணீரால் இதயம் பிழிந்த செந்நீரா?

465. கண்ணீ ரிதுவென எண்ணாதே
காரிகை பிரிந்த துயராலே
பெண்ணிவள் இதயம் பிழிவதனால்
கசியும் குருதிப் புனலன்றோ?

தோழி தலைவனுக்குக்கூறியது: ''தலைவ! நீ பிரியும் செய்தியால் இவள் பெருக்கும் கண்ணீரைக் கண்ணீராகக் கருதாதே. அவள்படும் துயரால் தன் உள்ளத்தையே அவள் பிழிந்து கொள்ளுகிறாள். அதில் கசியும் குருதிப்புனல்தான் இது எனவே பிரிவைக் கைவிட்டு அவளைச் சென்று காப் பாயாக'' என்கிறாள். (205)

கண்ணன் கலவை மாலை அணியாமை

466 கண்ணன் சந்தனம் புனுகுமணக்
கலவை மாலை அணியான்; உன்
வண்ண வடிவுள் வாடுமென
வாடு மவனைக் கூடச்செல்.

தோழி நப்பின்னைக்குக் கூறுவது! ''அடி இராதை! நீ எப்பொழுதும் கண்ணன் உள்ளத்தில் இருப்பதால்தான் நெஞ்சின் மேல் சந்தனம், புனுகு, வன மாலை இவற்றை அணிவதில்லை. காரணம் அந்தக் கலவையின் பளுவால் அவன் உள்ளத்திலிருக்கும் உன் உருவம் வாடுமென எண்ணியே, அப்படிச் செய்தான். தன்னை அலங்காரம் பண்ணிக்கொள்வதையே கைவிட்டு விட்டான். இப்படி இனியும் அவனைத் துன்பப்படவிடாதே; போய்ச் சென்று அவனைக் கூடிச் சுகம் கொடுப்பாயாக. (311)

மலையைத் தூக்கி ஊரைக் காத்தாயே!...இதை ஏன் செய்யவில்லை?

467. மலையைத் தூக்கி மழைகாத்தாய்!
இராதை கண்ணீர் மழை ஓடும்
முலையாம் மலையை எடுத்தவளை
முயங்கிக் காப்பாய் உலகினையே!

''கண்ணா! இராதை உன்னைப் பிரித்து மிகவும் வாடுகிறாள். மலையைத் தூக்கி மழையிலிருந்து மக்களை காப்பாற்றிய உனக்கு இது ஒரு பெரிய காரியமா? இவள் பெருக்கும் கண்ணீர் மழை இவள் இனங்கொங்கைகளாகிய மலைகள் மேல் விழுந்து மழை போல் பெருக்கெடுத்தோடுகிறது. எனவே இந்த மலைகளையும் தூக்கி அணைத்துக் கண்ணீர் மழையிலிருந்து இராதையையும் உலகையும் காப்பாயாக.''

இராதைவிடும் கண்ணீரே பெருக்கெடுத்து உலகையே அழித்துவிடும் போலிருக்கிறது என்று உயர்வு நலிற்சியால் சொல்லுகிறாா புலவர். (13)

எழுத்தில்லாக் கடிததைப் படித்த திறமை

468. கடிதம் எழுத முனைவாள்பின்
கலங்கிப் பிரிவின் துயராலே
விடுத்தாள் ஏதும் எழுதாமல்;
விரும்பிப் படித்தான் வெறுங்கடிதம்.

கவி கூற்று! காதலி கணவனுக்குக்கடிதம் எழுத ஆரம்பித்தான். ஆனால் பிரிவுத்துயரால், எதுவும் எழுத முடியாமல், எழுதாமல் வெறுங் கடிதத்தையே அவனுக்கு அனுப்பினாள். அவள் துயரம் தெரிந்த அவன், அதையும் (பாவனையால்) படித்து முடித்தான். (560)

தலைவியின் துயரைக் கிளி பேசுதல்

469. பிரிவால் கலங்கி மிகவாடிப்
பேசிய பேச்சைக் கிளிபேச,
பரிவால் கேட்டார், கண்ணீரால்
படுவார்; துயரம் இலராமோ?

தோழி தலைவனுக்குக் கூறியது: ''தலைவ! நீ பிரிந்த போது தலைவி துயரால் உன்மேல் ஆதங்கமாகவும் அந்தரங்கமாகவும் சொன்ன சொற்களையெல்லாம் அவள் வளர்க்கும் கிளிபேச, வெளியில் தெரியும்படி பேச,

அதைக் கேட்டார் யார்தான் கண்ணீர் வடிக்கமாட்டார்? எல்லோருமே வருந்துகின்றனர். அதனால் அவளை உடனே சென்று கூடிக்களித்துக் காப்பாற்று'' என்கிறாள். (523)

நெஞ்சில் தோன்றும் இனியவள் முகம்

470. காதலி பிரிவின் காரிருளால்.
கலங்குவ தில்லை என்நெஞ்சில்
மாதவள் சுடரொளி வடிவுளதென்
வனமார் புதையல் அதுவன்றோ;

தோழியிடம் தலைவன் கூறுகிறான்: ''பெண்ணே! காதலியின் பிரிவு விடியாத இருளாக உள்ளது உண்மை தான். ஆனால் பிரிவின் வருத்தத்தாலும் இயல்பாகவும் அவளை மறக்காததால் அவள் ஒளிவீசும் சுடர் உருவம் என் மனத்தில் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. அதன் ஒளியே பிரிவெனும் இருளைப்போக்கி விடுகிறது'' என்கிறான். இதைத் தோழி தலைவிக்குச் சொல்லி, ''விரைவில் அவன்பால் சென்று அவன் படும் துயரைப் போக்கு'' என்கிறாள். (523)

ஈரத்துணியால்தான் காய்ச்சல் தணியும்

471. கோடி முயன்றும் பிரிவென்னும்
கொதிப்புக் காய்ச்சல் போய்விடுமோ?
நாடி நனைந்த துணிபோலே,
நம்பி அணைக்கத் தணியாதோ?

தோழி தலைவனுக்குச் சொல்லுவது: ''தலைவ! உன் தலைவி சொல்லுவாள்; 'தோழி நான் கோடி முயற்சி செய்தும் தலைவன் பிரிவால் ஏற்பட்ட இந்தக் கொதிக்கும் காய்ச்சல் தீரவில்லை. ஈரத்துணியை மடித்து உடலில் போடுவது போல் அவன் வந்து என்னைக் கட்டி அணைத்தால்தான் தீரும்' என்கிறாள். அதனால் அவளை விரைவில், சென்று அணைத்துக் காப்பாற்று'' என்கிறாள். (480)

வெண்ணிலவும் வீசும் தென்றலும்

472. வீசும் தென்றல் நிழற்சோலை,
யமுனைப் படுகை வெண்ணிலவில்,
பேசி மகிழ்ந்து கூடியதை
எண்ணி மனமும் ஏங்குதடி!

தோழி தலைவி சொன்னதைத் தலைவனுக்குக் கூறுகிறாள்: ''கண்ணா! உன் ராதைப் புலம்புவதைக் கேட்டாயா? 'வெயிற்கால இரவில் வீசும் தென்றல் 'சில்' வென்று வீசும்போது நிழலாடும் நெருங்கிய சோலையின் அகத்தே, அதுவும் யமுனை ஆற்றின் கரையில், முழு வெண்ணிலவு வீசும் மனந்துள்ளும் அந்த வேளைகளில் கண்ணனுடன் பேசி மகிழ்ந்து கூடியதை எல்லாம் என் மனம் இப்பொழுது எண்ணி எண்ணி ஏங்குதடி' என்கிறாள். உடனே சென்று அவள் ஏக்கத்தைக் கூடிக் கலந்து போக்குவாயாக'' என்கிறாள். (650)

காமினியா பாமாவா?

473. காமினி பாமா என அழைப்பாய்;
கருணை இன்றிப் பிரிகின்றாய்;
நீமிகு அன்பிலை வெளிப்படையே;
நினக்கு நானே இழிந்தவளோ?

தலைவி கண்ணனை ஏசுகிறாள்: ''கண்ணா! என்னை காமனீ, பாமா! என்றெல்லாம் அன்போடு கூப்பிடுகிறாய்? ஆனால் உண்மையில் என்மேல் உனக்கு அன்பு சிறிதும் இல்லை. இல்லை என்றால் என்னை விட்டுப் பிரிவாயா? உன் உள்ளத்தில் என்னைப் பற்றி உனக்கு வேறு கருத்து உள்ளது என்பது தெளிவாகிறது. காமினி என்றால் காமம் பிடித்தவள், பாமா என்றால் பாமாவைப் போல் கர்வம் பிடித்தவள் என்று பொருள். என்னை அந்தப் பொருளில் தான் இழிவு படுத்துகிறாய் என்பது புரிகிறது'' என்றாள். தலைவன் ஒழுக்கத்தை—பிரிந்து தனிமை செய்வதையும் அவள் சாடுகிறாள். ''உனக்கு இழிவு செய்கிறவர்கள் வேறு. அவர்கள் தான் உனக்கு ஏற்றவர்கள்'' என்கிறாள். (56)

9. அறவுரைகள்

நீதியைச் சொல்லும் அறவுரைகள் போன்று பல செய்யுள்களைத் திருக்குறள் போலக் கூறியுள்ளார். இதிலும் இவர் காதல்—காமச்சுவை பற்றிய உவமை களையே கையாள்கிறார்.

கஞ்சனின் பொருளும் கன்னியின் கொங்கையும்

474. இளம்பெண் கொங்கை வீங்குதோறும்
இறுகும் கடினம் ஆவதுபோல்,
வளம் பொன் பெருகப் பெருகுதொறும்
கருமி மனமும் கல்லாமே!

உலகில் சிறுமியானவள் மங்கையாக மாறும் போது அவள் இளசான கொங்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக உருவம் பெரிதாகி. அதே சமயம் இளசான மென்மை குறைந்து பருத்துக் கடினமாக விண்ணென்று நிமிர்ந்து நிற்கும். அதுபோல் கருமியும் அவனுக்குப் பொருள் சேரச் சேர அவன் மனமும் கல்லாகி விடும். (இங்கே கொங்கை என்பது கணவன் ஒருவனே தீண்டி அனுபவிக்க முடியும். அந்த வகையில் பெண் இயல்பான பெருமைப் படத் தக்கக் கற்புக் கருமி, ஆனால் இந்தக் கருமியோ அந்தப் பொருள் தனக்கும் உதவாத கருமி, பிறருக்கு எங்கே?)
(91)

கூந்தலும் கொங்கையும்

475. இளம்பெண் கூந்தல் தாழ்தல்போல்
பெரியோர் பணிவர்; குணக்கேடர்,
இளம்பெண் கொங்கை நிமிர்ந்துபின்
தொய்தல் போலே இயல்கெடுவர்.

சிறுமி பருவம் வர வர அவள் கூந்தல் தாழ்ந்து கறுத்து வளர்கிறது. அதுபோலே பெரியவர்கள் தங்கள்

நிலைமை உயர உயரப் பணிவையே அடைவர். அலட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் கீழ் மக்கள் அவள் கொங்கை பருவம் அடைய அடைய நிமிர்ந்து பருத்து, பின் இளமை நீங்கிவிடவே தொய்த்து விழுதல் போல, செல்வம் வரும்போது கருவப்பட்டு அலட்டுவர். அது போனபின், கீழே ஒரேயடியாய் விழுந்துவிடுவர். *(93)*

எலியின் தோல் முரசுக் காகுமா?

476. பெரியோர் அருஞ்செயல் சிறியோர்தாம்
செய்தல் இயலார்; சிற்றெலிதோல்
முரசைப் போர்த்த முடிவதுண்டோ?
சிறியர் பெரியோர் ஆகாரே.

பெரியோர் செய்யும் செயற்கரியவற்றைச் சிறியவரால் செய்ய முடியாது. சிறிய எலியின் தோலால் முரசைப் போர்த்துத் தயார் செய்ய முடியுமா? (பெரிய எலித் தோலே ஆகாது. சிறிது எங்கே ஆகும்.) இதைப் போல் தான் சிறியவர். *(154)*

கற்பூரத்தால் பெருங்காயம் மணக்குமோ?

477. நல்லோர் நடுவில் இருந்தாலும்,
பொல்லார் நல்லோர் ஆகாரே;
இல்லில் காயம் கற்பூரம்
இட்டு வைத்தும் மணத்திடுமோ?

என்னதான் நல்லவர்கள் நடுவில் அவர்களுடன் பழகினாலும் பொல்லாதவர் சிறுமதியினர். இவர்கள் இயற்கைக் குணம் போகாது. வீட்டில் பெருங்காயத்தை கற்பூரக் குப்பியில் இட்டு வைத்தாலும் அதன் நாற்றம் போகுமா? அதுபோலத்தான் சிறியோர் திருந்தார்

(101)

காட்டுப்பூ மாலை

478. இளம்பெண் கொங்கை மீதாடும்
காட்டு மல்லிகை மாலைபோல்,
வளம்செய் பதவி போய்விட்டால்,
சிறியோர் வாழ்வும் சிதறிடுமே!

இளைய பருவ மங்கையின் கொங்கைகளின் மேல் அவள் அணியும் காட்டு மல்லிகை மாலை மிகவும் பெருமையுடன் ஆடும். ஆனால் அது வாடியவுடன் அதை அவள் தூக்கி எறிந்துவிடுவாள். அதுபோல் நல்ல வளம் தரும் பதவி போய்விட்டால், சிறியோர் வாழ்க்கையும் சிதைந்து விடுவதாகும்.

இளம்பெண் இங்கே கணிகை என்றும் கொள்ளலாம். அவளிடம் வருவோர் காசு கொடுக்கும் வரை தன் நெஞ்சோடு மாலையை அணிவதுபோல் அணைத்துக் கொள்வாள். அவர் கைவறண்ட பின் வாடிய மாலையைத் தூக்கி எறிவது போல் இவனையும் வெளியே தள்ளிவிடுவாள்.

கோணல்கள் ஒருமை

479. கோணல் உள்ளவை ஓரினமாம்;
உலகில் இதுவே காணுவதாம்;
நாணி வளைந்த புருவத்தாள்,
நங்கையின் விழியும் தடம்பாயும்.

உலகில் கோணல் தன்மை உள்ளவை எல்லாம் ஒன்றாகக் கூடி ஒரு இனமாகக் காண்கின்றன. இது இயற்கையே. இந்தப் பெண்ணும் அப்படித்தான். பார்வைக்கு நாணமுள்ளவள் போல் நடிக்கிறாள். இவள் புருவம் கோணல். அதை இன்னும் நெறித்து வளைக்கிறாள். விழிகளையும் நேராகப் பார்க்காமல் கோணலாகக் கீழ் வெட்டுப் பார்வையாகப் பார்க்கிறாள். ஆக இரண்டு கோணல்களும் ஒன்றாயின அல்லவா?

காலில் தைத்த முள்ளும் கயவரும்

480. கீழோர் திருந்தார்; நல்லோராய்
நடிப்பர்; வாய்ப்புக் கிடைத்தாலே
ஆழத் தைத்த அடிமுள்ளாய்
அல்லல் செய்வர் அறிவீரே!

கீழோர் இடத்தில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். என்னதான் திருந்த முயன்றாலும், அவர்கள் திருந்த மாட்டார்கள். நல்லவர் இணக்கமும் அவர்களை மாற்றாது. சமயம் வரும்போது அவர்கள் துன்பத்தையே கொடுத்துக் காலை வாரிவிடுவர். அடியில் உள்ளங்காலில் முள் தைத்து வெளியில் வராதபோது தீரா நோவு செய்வது போல் அவர்களால் நமக்குத் தொல்லையே.

(98)

ஆனி நிழலும் தை நிழலும்

481. இளமையின் ஊடல் ஏனடியோ?
இனிக்கும் ஆனி நிழலாக;
இளமை நீங்கின் தை நிழலாம்;
இனிதாம் கணவன் வேண்டானே.

''பெண்ணே! இப்பொழுதுதான் உனக்குத் திருமணம் ஆகி யுள்ளது. இப்பொழுது கணவனுடன் ஊடல் கொண்டு உன் யௌவன அழகை வீணாக்கி விடாதே. ஏன் என்றால் பெண்ணின் இந்த இளமை அழகு ஆடவர்க்கு வெய்யில் ஆனி மாத நிழல்போல இனிப்ப தாகும். இப்பொழுது அவனுடன் இனிக்க வாழ்ந்தால் தான் அந்த நினைவில் உன்னை நீங்காமல் இருப்பான். இப்பொழுது அவனுடன் ஊடல் கொண்டு வாழ்க்கையை வீணாக்கி விட்டால், இந்தத் தளதள வென்னும் இளமை அழகு உன்னை விட்டுப் போய்விட்ட போது, அதில் அவனுக்கு தை மாத நிழலில் சுகமில்லாதது போலக் கவர்ச்சி இராது. உன்னைவிட்டுப் போய் விடுவான். இப்பொழுதே இணைந்து வாழக் கற்றுக்கொள்'' என்று தன்னுடைய அழகில் கர்வம் கொண்ட ஒரு பெண்ணுக்குத் தோழி கூறுகிறாள்.

(319)

பாயும் நீரும் பெரியோரும்

482. பெருமை பணியும்; பெரியோரும்
 பெருமை பெறுதல் இதுவன்றோ?
பெருகும் மடைநீர் கீழ்பாயப்
 பெருகும் நீரின் பெருவலியே!

கீழ் நோக்கிப் பாயும் தண்ணீருக்குதான் வலிமை (Frze) அதிகம். அதுபோல் பணிவில் தான் பெருமை உண்டு. எனவே பெருமை என்றும் பணியும். பெரியோரும் அதனாலேயே உயர்வடைவர். (பி.ர. 321)

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. — திருக்குறள்

நீரளவாகும் தாமரை

483. நீரள வாகும் நீராம்பல்
 நீர்நிலை குறையக் குறையாதே;
வேருடன் வாடும்; பொருளுடனே
 விருப்பமும் வளரும் குறையாதே.

உலகில் தண்ணீர் அளவுக்குத் தாமரைத் தண்டு உயர்வதை யாரும் அறியலர். தண்ணீர் மட்டம் குறைந்தால் தண்டின் உயரம் குறையாது, வேருடன் வாடி அழியும். அதுபோல பணம் சேரச்சேர ஆசை வளரும். ஆனால் பணம் போய்விட்டால் ஆசை போகாது, வளர்ந்து கொண்டுதான் இருக்கும். (116)

இரு தலைவர் ஆட்சி

484. இருவர் ஆட்சி துயரம்தான்;
 இருவரும் வலியர் என்றாலும்,
இருசுடர் ஒன்றாப் போதன்றோ
 இருளில் மூழ்கும் இவ்வுலகே!

ஒரு நாட்டில் இரண்டு தலைவர் ஆண்டால் இருவரும் வலிமை பெற்றவரானாலும் மக்கள் எல்லோருக்கும் துயரம்தான். சூரியனும் சந்திரனும் அவர் அவர் நிலையில் ஒளி வீசினாலும் இருவரும் ஒன்றாய்ச் சேரும் நாளில் அமாவாசையாகி உலகை இருள் சூழ்ந்து விடுகிறதல்லவா?

குறிப்பு: தற்கால அரசியல் நிலை கவிஞர் காலத்தும் இருந்தது போலும். மத்தியில் ஒரு கட்சியும் மாநிலத்தில் ஒரு கட்சியும், ஒருவருமே நன்மை செய்யாத நிலையில் மக்கள் அவதிப்படும் நிலையும் இன்று கண் கூடு. (79)

மதிப்பறியா மாந்தர்

485. குடிஉயர் மேலோர் தமைஉலகம்
கொள்ளா தாகில் பேரிழவே;
அடிநீர் முத்தை அறியாதார்
ஆடி முத்துடன் அணிவாரே!

பெரியோரின் தகுதியை உலகம் புரிந்து கொள்வதில்லை. சில சமயம் அவர்களைத் தகுதியற்ற கீழ் நிலைக்குத் தள்ளி விடுகிறது. ஆழ்கடலடியில் குளித்து எடுத்துவந்த ஒளி முத்தின் மதிப்பறியாத கீழ் நிலையுள்ளவர் அதனைக் கண்ணாடி. மணிகளுடன் ஒன்றாகக் கருதிக் கோர்த்து மாலையாக அணிவார்கள். (முத்தின் மதிப்பு இரத்தின வணிகனுக்குத்தான் தெரியும். பாசிமணி விற்கும் குறத்தி அறிவாளோ? அதுபோலத்தான் நல்லோரை பெரும்பாலும் யாரும் இனங்கண்டு கொள்வதில்லை.) (151)

பதவி ஆசை

486. மண்ணில் பதவி ஆசையினால்,
மனிதன் எதையும் செய்வானே;
பெண்ணின் முலைமேல் கிடப்பதையே
முத்துப் பெருமை கொண்டிடுமே!

பதவி என்று ஏற்பட்டு விட்டால் அதன் தராதரம் அறியாமல் மனிதன் எப்படியோ அதை அடைய முயல்வான். நல்ல மதிப்புள்ள முத்து கடவுள் வடிவங்களுக்கு

அங்கியாகி எல்லோரும் கும்பிடும் மதிப்பை பெற முடியு மானாலும், ஒரு இளம் பெண்ணின் விம்மும் கொங்கை மேல் துள்ளுவதையே விரும்புகிறது. (மனிதனுக்கு மங்கை மேல் உள்ள கேவல இச்சை இதற்கும் உள்ளதோ? பதவி யின் மேன்மை தாழ்மை கருதாமல் ஏதாவது பதவி இருந்தால் போது மென்று சிலர் பாடுபடுவர் என்கிறார் புலவர்.) (பி.ர. 577)

பொல்லாருக்கே போற்றும் உலகம்

487. நல்லோர் தம்மை யார் மதிப்பார்?
நல்லா ரல்லார் பதம் பெறுவார்;
பொல்லாக் கோளின் நிலையஞ்சிப்
போற்றும் உலகம் வழிபட்டே,

ஜோதிட முறையில் நல்ல சுப பலன் தரும் கிரஹங்களை யாரும் பயந்து வழிபடுவது கிடையாது. சனி, செவ்வாய் போன்ற பொல்லாக் கோள்கள் தம்மை வருத்தக் கூடாது என்பதற்காகவே எல்லோரும் முக்கிய மாகச் சனிக்கே பரிகாரம் வழிபாடு முதலியவை செய்கின் றனர் அபோல நல்லவரை யாரும் மதிப்பதில்லை. பொல்லாதவரைக் கண்டு அவர்களுக்கே அஞ்சி நடக் கின்றனர். (121)

கண்ணன் கருணை ஒன்று போதும்

488. கண்ணன் கருணைக் கண்ணோக்கம்
ஒன்றே போதும்; காசேனோ?
மண்ணில் மற்றவை பயனாமோ?
மதியேன் எதையும் இனி நானே!

''எனக்குக் கண்ணன் அருள் நோக்கம் ஒன்றுதான் முக்கியம். அவன் கருணையும் கண்ணோக்கமும் இருந்தால் எல்லாம் இருந்ததுபோலத்தான். மற்றவற்றால் பயனென்ன? எல்லாம் மண்ணுலகில் அழிபவையே; அவற்றை நான் மதிக்கமாட்டேன்'' என்கிறார் புலவர். (143)

தீயோரை வாட்டும் மூன்று

489 அறன்வலி இல்லா எளியோரை''
அல்லல் வருத்தும் ஒரு மூன்றே :
மறனார் அரசன், மாறாநோய்,
தீவினை இவை தாம் பெருந்துயரே.

புண்ணியம் செய்யாத தீயவர்கள் மூன்றுவிதத்தால் கஷ்டப்படுகின்றார். இரக்கமில்லாத அரசன் அரசாட்சி அவர்களைக் கருணை காட்டாமல் வாட்டும், பாவத்தால் தீராத நோய் வாட்டும். எல்லாவற்றிற்கும் மேலாகச் செய்த பாவமே முன்நின்று பலவகைத் துன்பங்களையும் தரும். ஆகையால் இவைகளிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள நாம் நல்லவற்றை நாடி இறை உணர்வுடன் இருக்க வேண்டும். (100)

அழகு இருக்கும் இடம்

490. அழகும் அல்லதும் உலகத்தே
எதிலும் இல்லை; காண்போர்தம்
விழியில் உள்ளது கவர்ச்சியெனும்
விருப்பம் மேவுதல் அழகாமே.

உலகில் அழகு என்ற சொல்லுக்கு உண்மையான பொருள் காண முடியாது, ஒருவருக்கு அழகு எனக் காணுவது மற்றவருக்கு அழகற்றதாகக் காணும். அழகு என்பது பார்ப்போர் பார்வையில் தான் உள்ளது முன் வினைப்பயனால் தன் இயல்பால் மனம் செயல்பட்டு, எது கவர்ச்சியால் ஒருவன் விரும்புவதற்குநிலைக்களனாய் தோன்றுகிறதோ அதுவே அவனுக்கு அழகாகும். எனவே இளைஞர்களும் மற்றவர்களும் பெண்கள் விஷயத்தில் இப்படிப் பாகுபாட்டை பார்ப்பது முறையற்றதாகும். ஒருவனுக்கு விருப்பத்தால் இரதியாய் தோன்றியவள் மற்றவனுக்குக் கழுதையாகத் தோன்றலாம். எனவே மயக்கம் கொள்ளாமல் உண்மை அழகைத் தேட வேண்டும். உண்மையில் பார்க்கப்போனால் எல்லோரும் அழகுள்ளவர்களே. (140)

கழுதை வேண்டுமிடத்தில் யானை விற்றல்

491. தகுதிக் கேற்ற இடமிதுவோ?
வெற்றூர் யானை விலை போமோ?
மிகுதிக் குயவன் வண்ணாரும்
வினையோர் வேண்டுவர் கழுதையையே.

ஐயா! யானை வணிகரே! இங்கே உம் யானைவிலை போகுமா? இங்கே பெரும்பாலும், குயவர் வண்ணார், தொழிலாளர்கள் இவர்களே இருக்கும் சாதாரண கிராமமாகும். இவர்களுக்குத்தேவை கழுதையே. வாங்கும் தகுதி இடம் இவற்றிற் கேற்பப் பொருளை விலை கூற வேண்டும். மீன்வேண்டு வோரிடத்தில் பூவிற்க வந்த கதைதான். (139)

பணிவால் மேலுறும் பதவி

492. பணிவோர் பெரியோர் மேலுறுவர்;
பணம் பெருத்தாலும் கீழ் கீழே;
மணிமிடைச் சிலம்பு காலாடும்;
மங்கலக் குங்குமம் நெற்றியிலே.

உலகில் பணிவுள்ள பெரியோர்தாம் உயர்ந்திருப்பார்கள். மணி பவளம் இவை உயர்ந்த இரத்தினங்களானாலும் பெண்ணின் காலில் சிலம்பின் உள்ளே இருக்கும் (வெளியில் கூட தோன்ற முடியாமல்) பரலாக, அவள் காலில் கிடந்து, 'ஐயோ! நான் இங்கிருக்கிறேன் இங்கிருக்கிறேன்?' என்று புலம்பிக் கொண்டிருக்கும். ஆனால் சிறு மதிப்புள்ள மஞ்சளால் செய்யப்பட்ட குங்குமம் பெண்ணின் சிவந்த நெற்றியில் உயரத்திருந்து அவள் மங்கலத் தன்மையையும் அழகையும் அதிகரிக்கச் செய்யும்.

தகுதிக்கேற்ற முன்னேற்றம்

493. தகுதியில் சிறியோர் உயர்வாரோ?
தகுதியில் வருமே முன்னேற்றம்;
வகுத்த கருங்குழல் முதுகினிலே,
மணமலர் மாலை மார்பினிலே.

உலகில் தகுதிக் கேற்பத்தான் எல்லோருக்கும் முன்னேற்றம் கிடைக்கிறது. பெண்ணின் கூந்தல் அழகு தான். அதை வகுத்து வகைவகையாய்ப் பின்னினாலும் அது அவள் பின்னால் முதுகில் மேல்தான், புட்டபாகத் தின் மேல் தான் ஆடுகிறது. ஆனால் வெளியில் இருந்து வந்த வாசனை மலர்களால் தொடுத்த மாலை அவள் கழுத்திலும் மார்பிலும் ஆடுகிறது. அதுபோலத்தான் தகுதியற்றவர் பின்னால் கிடக்க வேண்டியதுதான். (136)

உலகில் எல்லோரும் சேற்றையே பூசிக்கொள்கின்றனர்

494. இளமைப் பருவப் பெருவெள்ளம்;
மூழ்கிப் பலரும் அலமருவர்;
அளவில் இழிவும் கேடுதரும்;
ஐம்புலச் சேற்றில் ஆழ்வாரே.

உலகில் பலரும் ஐம்புல இன்பத்திற்கு அடிமையாகி இளமைப்பருவத்தில் பெண்களின் சிற்றின்ப சுகத்திலே மூழ்கி உள்ளத்தையும் உடலையும் கெடுத்துக் கொள் கின்றனர். இதனால் அளவற்ற துன்பமும் இழிவும்தான் அடைகின்றனர். இவர்கள் தான் கட்டுப்பாடில்லாததால் குளிக்கப்போய்ச் சேற்றை வாரிப் பூசிக்கொள்கின்றனர். (133)

தேவைக்கு மேல் சேர்க்காதே

495. தேவையை மீறிப் பொருளீட்டித்
தேடித் தேடிப் பலகோடி
நீ வைத் தாலும் நினக்கென்னாம்?
உணவுடை உறையுள் போதாதோ?

உலகில் எல்லோருக்குமே வயிற்றுக்கு உணவும் உடலை மூட உடையும் இருக்க இடமும் இருந்தால் போதுமானது. ஆனால் எல்லோரும் தேவைக்கு மேல் ஓடித் தேடிக்

கோடிக் கணக்காய்க்கூட பணம் சேர்க்கிறார்கள். இதனால் என்ன பயன்? தேடிய பணம் முழுவதையும் அவர்கள் ஆயுட் காலத்தில் செலவழிக்கவும் முடியாது. அனுபவிக்கவும் முடியாது. இவர்கள் கஷ்டத்தைப் பிறர் தான் அனுபவிப்பார்கள். எனவே தேவைக்கு மேல் பொருள் தேடாதே; சாகும் போது அதை கொண்டு போக முடியாது. *(134)*

கீழ்மக்கள் எவ்வளவு அடக்கினாலும் அடங்கார்

496. கீழோர் அடக்க அடங்குவரோ?
கெடுமதி துள்ளிக் குதிப்பாரே;
ஆழ அமுக்கி விட்டாலும்,
ஆடும் பந்து துள்ளிடுமே.

ஆடும் பந்தை எவ்வளவுக்கெவ்வளவு கீழே அமுக்கி விட்டாலும் அவ்வளவுக்கவ்வளவு மேலே துள்ளுவதாகும். அதுபோல் கீழ் மக்கள் எவ்வளவு அடக்கினாலும் அடங்க மாட்டார்கள். துள்ளுவார்களே அன்றித் திருந்தி நல்லோராக மாட்டார்கள். *(97)*

களங்கமில்லா சந்திரன் அபசகுனம்தான்

497. மறுவில் மதியைக் காண்பதனால்,
மண்டும் தீமை உலகினிலே;
சிறுமைக் குணத்தர் சீரானால்,
தீமை பெரிதாய்ப் புரிவாரே.

உலகில் சந்திரன் களங்கமாகிய மறு இல்லாமல் உதயமானால் அப்போது அனேக கெடுதிகள் இயற்கை அழிவுகள் நடக்கும் என்பது நம்பப் படுவதொன்று. அது போல் கீழ் மக்கள் களங்கமற்ற நல்லவர்கள் போன்று நடித்தால் உண்மையில் திருந்தினவர் அல்லர். அவர்கள் ஏதோ பெரிய தீய கொடுஞ்செயல் புரியப் போகிறார்கள் என்று தான் கொள்ள வேண்டும். அவர்களை நம்பக் கூடாது. *(132)*

நுனிப்புல் மேய்பவர்கள் எதையும் சாதிக்க மாட்டார்கள்

498. நுனிப்புல் மேய்வோர் வானேறார்;
துணிந்து செயவரும் செயலறியார்;
தனிக்கண் அகல விழித்தாலும்,
தன்னக லத்தின் பெரிதாமோ?

நுனிப்புல் மேயும் ஆடுபோல் எதையும் முழுமையாகப் பயிலாதவர்களால் வானத்தில் ஏற முடியுமா? கண்தான் இருக்கும் அளவில் என்ன தான் பெரிதாக விழித்தாலும், அளவைவிட எந்த நிலையிலும் பெரிதாக முடியாது. அதுபோல் எளிமையுடையோரால் எதையும் சாதிக்க முடியாது. (130)

உணவு, உடை, வீடு, ஒரு காதல் பெண் இவை போதாதா?

499. உணவும், உடை, உறைவிடமும்,
உவக்க ஒரு பெண் போதாதோ?
அணியார் புறவம் சிறுகூடும்
அஞ்சிறைப் பெடையும் வாழ்வதைப்பார்.

ஒருவனுக்கு வேளைக்கு உணவும், உடுக்க உடையும், இருக்க வசிக்கச் சிறிய வீடும் உடன் இருந்து இன்பஞ் செய்ய ஒரு இளம்பெண் துணையும் இருந்தால் போதாதா? ஒரு புறா அழகிய தென்ற பஞ்சு போன்ற சிறகுள்ள தன் ஒரே பெண் புருஷடன் திருப்தியாக வசிக்கவில்லையா? எதையும் அளவுக்கு மீறி விரும்பி என்ன பயன்? திருப்தி தான் மகிழ்ச்சியின் எல்லையாகும். (128)

மனிதனின் குணம் மாறாது

500. கோடி புகழ்ந்தும் வைதாலும்
கொடுமை செய்தும் வாழ்வளித்தும்
நாடின் மக்கள் குணம் மாறார்;
நல்லார் அல்லவர் கெட்டவரே!

மிகவும் புகழ்ந்தாலும் வைதாலும் இல்லாதவரை நிறையக் கொடுத்து வாழவைத்தாலும் மக்கள் தங்கள் குணத்தை மாற்றிக் கொள்வதில்லை. நல்லவர் நல்லவ ராகத்தான் இருப்பர். கெட்டவர் திருந்தி நல்லவர் ஆவதும் இல்லை. (126)

கிழித்தாலும் சாயம் போகாத்துணி

501. கேட்டிலும் பிரியா நட்பதுதான்
கேண்மைக் கழகாம்; அவுரியிலை
போட்ட சாயம் துவைத்தாலும்
கிழியும் துணிநிறம் போகாதே.

நண்பர் என்பவர் நமக்குக் கெட்ட காலம் வந்தாலும் நீங்காதவர்களே உண்மையானவர். அவுரியிலைகொண்டு சாயம் தயார் செய்தால் அதை ஏற்ற துணி துவைத்தால் கிழியுமே அன்றிச் சாயம் போகாது. அதுபோல நம் கெட்ட காலத்திலும் நம்மை விட்டுப் பிரியாதவர்களே உண்மையான நண்பர்கள்.

கேட்டிலும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் —திருக்குறள் (92)

தோகை முடியே துள்ளாதே

502. தோகை முடியே துள்ளாதே
தோகையைக் கண்ணன் அணிந்தாலும்,
தோகை பின்னை ஊடுகிறாள்
தொட்டவள் காலில் விழுவானே.

''மயில் தோகையாலான மகுடமே! நாம் உயர்ந்த இடத்தில் இருக்கிறோம் என்று கிடந்து துள்ளாதே. கண்ணன் உன்னைத் தன் தலையில் அணிந்துள்ளான் என்பது உண்மைதான் ஆனால் அவன் தலை உனக்கு நிரந்தரமல்ல. நப்பின்னை (ராதை) இப்பொழுது கண்ணனுடன் பிணங்கி யுள்ளாள். அவள் ஊடலைத் தணிக்கக் கட்டாயம். அவன் அவள் காலில் தலைவைத்து வணங்கப்போகிறான். அப்பொழுது கண்ணன் திருமுடி யிலிருந்த உனக்கு கேவலம் ஒரு பெண்ணின் காலில்தான் விழும் கதி ஏற்படும்''

யாரும் தாம் இருக்கும் பதவி உயர்வைக் கருதி செருக்குக் கொள்ளக் கூடாது. எந்தச் சமயமும் சரிவு ஏற்படலாம்.

கண்ணன் கடவுள். அவன் திருமுடியில் இருப்பதைக் காட்டிலும் ராதை திருமகள், தாய். அவள் திருவடியில் கிடந்தால், எல்லா மங்கலமும் கிட்டும் என்ற உள் நயமும் தோன்றுகிறது. கண்ணனில் ஆரம்பித்து நூல் ராதையில் முடிகிறது. (672)

★

முல்லை நிலையம்
சென்னை

இந்நூல் பற்றி

ஆயர் பாடியில் கண்ணன் ராதையுடனும் கோபியர் களுடனும் கூடிக் குலாவி நிகழ்த்திய இன்பத் திருவிளை யாடல்களை எடுத்து இயம்புகிறது கண்ணனின் காதல் ஓவியம். கோகுலம், இடைப்பெண்கள், யமுனை, சோலை, பசுக்கள், பால், தயிர், வெண்ணெய் முதலியனவாகக் கண்ணனின் கதைப் பின்னணியில் இந்நூலில் கவிதைகள் மலர்ந்துள்ளன.

சிருங்கார ரசம் என்னும் இன்பச்சுவை இக் கவிதைகளில் பொங்கித் ததும்புகிறது. சேர்தல், பிரிதல், வருந்துதல் முதலிய காதலர்களின் நிலையில் காமச்சுவையே விஞ்சி நிற்கும் அளவில் இக் கவிதைகள் காட்சி தருகின்றன. காதலர்களின் இயற்கையான சேர்க்கை ஒரு புறமாக, கள்ளக்காதல், தகாத நிலைகளில் நின்று புரியும் விபரீதச் சேர்க்கைகள் எல்லாம் விவரிக்கப்பட்டுள்ளன. பெண் களின் அங்க வருணனைகளும், சிறப்பாக மாதர்களின் கண்வலை வீச்சு, கொங்கைகளின் அரும்பு நிலை, எழுச்சி நிலைகள், வயிற்றில் காணும் மும்மடிப்புக்களின் கவர்ச்சி, இடையழகு, தொடையழகு போன்றவையும் காம வுணர்வைத் தட்டியெழுப்பும் வகையில் சித்திரிக்கப் பட்டுள்ளன. இக்கவிதை நூல் தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு புது வரவாகும்.

கண்ணனின் காதல் ஓவியம்



புலிப்பாணி
சுந்தரவரதாச்சாரியார்